திரும்பிலே ஒரு இதயம்!

வெண்ணிலா சந்திரா



இரும்பிலே ஒரு இதயம்!



மாணவர்களின் கோஷங்களும், கூக்குரல்களும் அங்குமிங்கும் ஒலிக்க... அங்கிருந்த மாணவர்கள் அனைவரும் எதிர் எதிர் திசைகளில் ஓடிக் கொண்டிருக்க...

போலீஸ் வண்டியின் சைரன் ஒலிகளுடன், கல் வீச்சுகளும், புகைமூட்டங்களும் கண்களை மறைக்க... போலீஸ் அந்தக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருக்க...

அந்த இடத்தில் கலவரம் என்பதைச் சொல்லாமல் சொல்லியது.

அந்தக் கும்பலில் மற்ற போலீசுடன் போராடிக் கொண்டிருப்பவன்தான் ஏ.வெற்றிச் செல்வன், ஐ.பி.எஸ். டெபுட்டி கமிஷனர் ஆஃப் போலீஸ், கோயம்புத்தூர் சிட்டி.

பின்னாலிருந்து தாக்க வந்த ஒருவனைத் தடுத்து அவன் கைகளைப் பின்னால் திருப்பி, அவனின் நடு முதுகிலே ஒரு குத்து விட்டான்.

"அம்மாமாமா..." என்று விழுந்தான் அந்த தடிப் பயல்... அவனின் பின்னங் கழுத்தைப் பற்றி அருகில் இருந்த போலீஸ் வண்டியில் ஏற்றிக் கதவை அடைத்து கைகளைத் தட்டினான் வெற்றி.

புகழ்பெற்ற ஒரு கல்லூரியில் மாணவர்களுக்குள் நடந்த மோதலில் இருதரப்பினரில் ஒருவன் மாணவர் களுடன் ரௌடிகளைக் கொண்டு வந்து தாக்கத் துவங்க, அந்தக் கல்லூரி வளாகத்தில் ஒரு கலவரம் உருவாகியது.

மாணவர்கள் ஒருவரை ஒருவர் அடிக்க, கலவரம் முற்றியதால்... வெற்றிச்செல்வனின் தலைமையில் போலீஸ் அந்த இடத்திற்கு வரவேண்டியதாகி விட்டது.

நிலைமை கையை மீறிப் போக, வெற்றியின் கட்டளைப்படி போலீசும் தாக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டனர்.

ஒரு முரட்டு ரௌடி அங்கே ஓடிக் கொண்டிருந்த பெண்ணின் கையைப் பற்றி அவளைத் தாக்கத் துவங்கு முன், வெற்றி கீழே இருந்த ஒரு உருட்டுக் கட்டையை கால்களால் மேலே எடுத்து, அந்த முரடனின் தலையை

நோக்கி வீச, அது சரியாக அவன் தலையைப் பதம் பார்த்தது.

அவன் வலியால் தலையைப் பிடித்துக் கொண்டு பின்னால் நகர, அதற்குள் நெருங்கி வந்திருந்த வெற்றி அந்தப் பெண்ணைத் தன் கையில் பிடித்துக் கொண்டு, அவனைக் காலால் எட்டி உதைத்தான்.

அவனின் இடது புறமிருந்து மற்றொருவன் வர, வெற்றி வலது கையில் பிடித்திருந்த அந்தப் பெண்ணை மேலும் பாதுகாப்பாக இறுக்கி அவன் கைவளைவுக்குள் வைத்துக் கொண்டு அவனை அடித்துத் துவைத்தான்.

அதற்குள் அவனின் மேல் ஏதோ கனமாக விழ, திரும்பிப் பார்த்தவனுக்கு அந்தப் பெண் மயக்கம் அடைந்திருந்தாள்.

வெற்றி ஒரு நொடி அவளின் முகம் பார்த்து பிரமித்தான். ஆனால் அது ஒரு நொடியே... மறுகணம் அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டு அங்கிருந்த ஆம்புலன்சில் ஏற்றப் போக அவனின் பின்னால் இரண்டு பெண்கள் ஓடி வந்தனர்.

மயங்கிய பெண்ணைப் பார்த்து "ஹே மையூ... மையூ... என்னடி ஆச்சு..." என்று அவர்கள் அவள் கன்னத்தைத் தட்ட, அவளோ உணர்வின்றி வெற்றியின் கைகளில் அவனின் நெஞ்சினில் முகம் பதித்திருந்தாள்.

"உங்க ஃபிரெண்டா..."

"ஆமாம் சார்..." என்றனர் அந்த இரு பெண்களும்.

"ஓ.கே... நீங்களும் ஏறுங்க..." என்று கூறி விட்டு அவளை அந்த ஆம்புலன்சில் கிடத்தி அவன் கீழிறங்க,

"சீக்கிரமா ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போங்க... கமான் ஃபாஸ்ட் ஃபாஸ்ட்..." என்று அந்த ஆம்புலன்சில் தட்ட, வண்டி மின்னல் வேகத்தில் பறந்தது.

அவர்கள் சென்றவுடன் மீதி இருந்த கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து, உள் இருந்த ரௌடிகளைக் கண்டறிந்து அவர்களைப் போலீஸ் வண்டியில் ஏற்றி ஸ்டேஷன் நோக்கிப் பறந்தான் வெற்றிச் செல்வன்.

வெற்றிச் செல்வன், போலீஸ் என்றால் அது அவன் தான்... சீராக வெட்டப்பட்ட தலைமுடி... கண்களில் எப்பொழுதுமே தெரியும் அவன் நேர்மை... எதிரிகளுக்கு அந்தப் பார்வை ஒரு பயத்தையும், எச்சரிக்கையையும் தரும். எதிரிகளைப் பொறிவைத்து வீழ்த்துவதில் வல்லவன்... காக்கிச் சட்டையில் அவன் கம்பீரமும், நடையும் ஒரு சிங்கத்தின் வரவை உணர்த்தும்... எப்பொழுதுமே ஒரு இரும்பின் உறுதியும், இறுக்கமும் தெரியும் அவன் முகத்தில்... கைகளை மடக்கி அவன் ரேபன் கூலர்ஸ் போடும்போது தெரியும் அவன் புஜங்கள் சொல்லும் அவன் அடியின் பலத்தை...

சின்ன வயதில் தந்தையை ஒரு சாதிக் கலவரத்தில் இழந்தவன்... தன் தந்தையைக் கொன்றவனைப் பழி வாங்கக் கையில் கத்தியுடன் புறப்பட்டான் அந்த 12 வயதுப் பாலகன்... அவனைத் தடுத்து, தப்பு செய்பவனை எல்லாம் நீ தண்டிக்க வேண்டுமென்றால்

அதற்கு நீ ஒரு நேர்மையான போலீஸ் அதிகாரியாக வேண்டுமென்று அவனை அவர்கள் கிராமத்திலிருந்து கூட்டி வந்து படிக்க வைத்தவர் அவன் அன்னை தேவி.

கணவர் இழந்த துக்கத்தில் ஒரு மூலையில் ஒடுங்காமல் தன் மகனின் எதிர்காலத்திற்காக, கணவன் அணிவித்த தாலியை அடமானம் வைத்து அவருக்குத் தெரிந்த அளவில் சிறியதாக ஒரு உணவகத்தை ஆரம் பித்து தங்கள் பசியைப் போக்கிக் கொண்டு, மீதி வந்த பணத்தில் மகனை நல்ல முறையில் படிக்க வைத்தார்.

சிறு வயதில் தேவி சொன்ன ஒரு வார்த்தை அவன் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து போனது... அவன் அன்னையின் விருப்பப்படி நல்ல முறையில் படித்து, ஐ.பி.எஸ். தேர்வு எழுதி, அதில் முதல் முயற்சி யிலேயே தேர்ச்சி பெற்றவன்.

அவன் போலீஸ் ட்ரெய்னிங் நல்ல படியாக முடித்து சேலத்தில் போஸ்டிங் வாங்கிப் பணியில் அமர்ந்தான். அவன் பணியில் சேர்ந்தவுடன் செய்த முதல் வேலை அவனின் தந்தையைக் கொன்ற வெறிநாய்களை விரட்டி விரட்டிப் பிடித்து அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்ததுதான்.

அவனுக்கு இருந்த ஒரே உலகம் அவன் அன்னையே... அவரும் மகன், தான் நினைத்தபடி போலீஸ் ஆனதாலோ, இல்லை தன் கணவரின் மரணத்திற்குக் காரணமானவர்களை தன் மகன் தண்டித்த தாலோ... நிம்மதியுடன் கண்ணை மூடினார்.

அதுவரை தன் அன்னைக்காகவாவது சிரித்துக் கொண்டிருந்த வெற்றி, அவன் முகத்தில் முழுமையாக இறுக்கத்தை வைத்துக் கொண்டான்.

அவன் தனி மரமாய் இருந்தது அவனுக்கு நல்ல தாகத்தான் போனது... எதிரிகள் அவன் குடும்பத்தைக் காரணம் காட்டி அவனை மிரட்ட முடியவில்லை போலும். ஆதலால் அவனின் தாக்குதல் எப்பொழுதுமே அதிரடி யாகத் தானிருக்கும்.

அன்னையின் மறைவிற்குப் பின் ஐந்து வருடம் நேரம் காலம் தெரியாமல் நேர்மையாக உழைத்ததால் அவனுக்கு மக்களின் முன் நன்மதிப்பு கிடைத்தது. பதவி உயர்வும் கூட...

யாருக்கும் அடிபணிய மாட்டான்... ஆனால் அவனும் ஒருவரின் வார்த்தைக்கு மதிப்பு கொடுப்பான்... அது சந்திரசேகர், சூப்பரிண்டென்ட் ஆஃப் போலீஸ், கோயம்புத்தூர்.

சந்திரசேகர், வெற்றியின் உயர் அதிகாரி, அவனைப் போலவே ஒற்றைப் பனை மரம்... வெற்றியைப் பார்க்கும் போது எல்லாம் அவருக்கு சிறுவயதில் அவரைப் பார்ப்பது போலவே இருக்கும். 28 வயது இளைஞன் இத்தனை எளிதில் இவ்வளவு பெரிய உயரத்தை எட்ட முடியுமா என்று வியந்தவர். அவனின் நலனை விரும்புபவர்.

ஆனால் அன்பை அதிரடியாகத்தான் வெளிப் படுத்துவார். அவனைப் போலவே...! அள்ளிப் போட்டுக் கொண்டு வந்த அந்த ரௌடிகளை செல்லில் அடைத்து

அவன் மேலதிகாரியான சந்திரசேகரை சந்திக்கச் சென்றான் வெற்றி.

அவரின் அறையின் உள்ளே அனுமதி வாங்கிச் சென்று, அவருக்குத் திடமான ஒரு சல்யூட்டை அடித்து விட்டு, வெற்றிச் செல்வன், "ரிப்போர்டிங் சார்..." என்றான் நேர் பார்வையுடன்.

கையில் ஏதோ ஃபைலைப் புரட்டிக் கொண் டிருந்தவர் அவன் வருகை உணர்ந்து அதை டேபிளில் போட்டுவிட்டு, சேரில் நன்றாகச் சாய்ந்தவாறு அமர்ந்து கொண்டு "வாய்யா... வா... இன்னிக்கு எத்தனை பேரை ஹாஸ்பிடல் அனுப்பினே..." என்றார் அலட்சியமாக.

அதற்கு அவன் ஒன்றும் சொல்லாமல் இருக்கவும், "ஹ்ம்ம்... உக்காரு..." என்றார்.

பின் இருவரும் சற்று நேரம் கலவரத்தைப் பற்றி பேசி விட்டு, முதல் அறிக்கையை அவரிடம் ஒப்படைத்து விட்டு, ஹாஸ்பிடல் நோக்கிச் சென்றான்.

மேலும் சில மாணவர்கள் கலவரத்தில் காயம் அடைந்திருந்தனர். அவர்களைக் காண அவன் ஜெனரல் வார்டிற்குள் நுழைந்து ஒவ்வொருவராகப் பார்த்து வருகையில் திடீரென ஒரு சலசலப்பு...

என்னவென்று அவன் திரும்பிப் பார்க்கவும், அங்கு ஒரு 20 பேர் கொண்ட வெள்ளை வேட்டி கும்பலுடன் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்தவுடன் அவனுக்குத் தெரிந்துவிட்டது.

அவர்தான் அமைச்சர் திரு. செல்வமணி.

அமைச்சரின் வருகையை உணர்ந்து அவன் அவர் முன்னே வர,

அவரோ, "நீதான் அந்தக் கலவரத்தில் இருந்த டி.சி.யா... எங்கய்யா என் பொண்ணு.. அவளுக்கு என்ன ஆச்சு... ஒரு கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வராம என்ன வேலை பண்ணிட்டு இருக்கீங்க..." என்று கத்த ஆரம்பிக்க,

அவரின் கத்தலில் ஆத்திரம் அடைந்த வெற்றி அவருக்குப் பதில் சொல்லுமுன், அதற்குள் அங்கே கல்லூரியில் பார்த்த இரண்டு பெண்கள் செல்வமணி முன் வந்து, "அங்கிள்... மையூவை ஸ்பெஷல் வார்ட்ல அட்மிட் பண்ணியிருக்கு... அவளுக்கு ஏதோ அதிர்ச்சியில் தான் மயக்கம் வந்ததாம்.. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தாப் போதும்னு டாக்டர் சொன்னாங்க..." என்று கை காட்டிய திசையில்,

"அவளை ஏன் இங்க அட்மிட் செஞ்சீங்க... தனியார் ஆஸ்பத்திரில பண்ண வேண்டியதுதானே...! டே திரு... பாப்பாவை ஆம்புலன்ஸ்க்கு எடுத்துட்டுப் போங்க..." என்று பக்கத்திலிருந்த அவர் பி.ஏ.வை அவர் விரட்டவும்,

நிமிடத்தில் அந்த மையூ என்பவள், வெற்றியால் காப்பாற்றப்பட்ட பெண்ணை அங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

வெற்றியின் கோபத்திற்கு அளவில்லாமல் இருந்தது. "ஏன் இங்கே இருக்கும் மக்களைப் பார்த்தால் அவர்

கண்ணுக்கு மனிதர்களாகத் தெரியவில்லையா... இந்த மாதிரி அரசியல்வாதிகளால் தானே அரசு மருத்துவ மனை பராமரிப்பின்றி இப்படி இருக்கிறது. அவன் பெண் மட்டுமென்ன தங்கத்திலா செய்து வைத்தான்..." என்று மனதில்தான் திட்ட முடிந்தது.

அவன் என்னதான் எதிரிகளை எளிதில் வீழ்த்துப வனாக இருந்தாலும் பதவியிலிருந்து தப்பு செய்யும் அரசியல்வாதிகளை அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

2

ஹாஸ்பிடலில் மயக்கத்திலிருந்த மயூரி மெல்லக் கண் விழித்தாள். அருகில் அவள் அன்னை அவளின் தலையை வருடிக் கொண்டிருக்க, இந்தப் பக்கம் அவளின் தோழிகள் மீரா, மற்றும் ரீமா அமர்ந்திருக்க, அதே அறையிலிருந்த சோபாவில் செல்வமணி அமர்ந்து யாருடனோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தார்.

அந்தப் பேச்சு அவளின் காலேஜில் நடந்த கலவரத்தைப் பற்றியது.

"எவன் என் பொண்ணு மேல கை வெச்சான்... வெச்சவன் உயிரோடயே இருக்கக் கூடாது..." என்று செல்வம் இந்தப் பக்கம் உறும...

அங்கிருந்து பதில் வரவும், "ஓஹோ... இப்போ எல்லாம் கிளியர் ஆயிடுச்சு இல்ல... இனிமேல் இந்த

மாதிரி எதுவும் நடக்காம பார்த்துக்கோங்க..” என்று கூறி விட்டு செல்போனை அணைத்து பாக்கெட்டில் போட்டு மகளருகில் வந்தார்.

“என்ன கண்ணு... இப்போ எப்படி இருக்கு...?”

“இப்போ நல்ல இருக்குப்பா... எதுக்கு ஒரு சின்ன மயக்கத்துக்கு இவ்ளோ ஆர்ப்பாட்டம்...” என்று அவள் படுக்கையை விட்டு எழ முயல...

“அச்சோ மயூ கண்ணு... படுத்துக்கோமா... எதுக்கு எழுந்துக்குற...” என்று அவள் அம்மா ராஜி பரிவாகக் கூற,

“ஐயோ அம்மா... எனக்கு ஒண்ணுமில்லை.. விடுங்கம்மா...” என்று எழுந்து பக்கத்திலிருந்த தோழிகளைப் பார்த்தாள்.

“ஹே மீரா... என்னங்கடி இங்க இருக்கீங்க... உங்களுக்கு ஒண்ணும் ஆகலை இல்ல...”

“இல்ல மையூ.. எங்களுக்கு ஒண்ணும் ஆகலை... நல்ல வேளை... அந்த டி.சி. சார் உன்னைக் காப்பாத்திட்டார்... இல்லேன்னா நினைச்சுக் கூட பார்த்திருக்க முடியாது...” என்று மீரா கவலையாகக் கூற, ரீமாவும் அதை ஆமோதித்தாள்.

மயூராவிற்கு ஒரு நிமிடம் அங்கு அவளுக்கு நடக்கு விருந்த அசம்பாவிதம் கண் முன்னே தோன்றி மறைந்தது... கூடவே வெற்றியின் வீரமும்...!

“என்ன கண்ணுங்களா அப்படிச் சொல்லிட்டீங்க... இந்த செல்வமணி பொண்ணு மேல கையை வெச்சுட்டு எவனாச்சும் உயிரோட இருக்க முடியுமா...?” என்றார் கர்ஜனையாக,

“அப்பா... ப்ளீஸ்... ஏம்ப்பா எப்போ பாரு சினிமா வில்லன் மாதிரிப் பேசிட்டு இருக்கீங்க... போங்க... போய் நாட்டு நடப்பைக் கவனிங்க...” என்று அவள் நக்கலாகச் சொல்ல,

“அடிக் கழுதை... அப்பாவைக் கிண்டல் பண்றியா நீ...” என்று ராஜி அவளை அடிக்க வர,

“அட விடு ராஜி... என்னை என் பொண்ணு கிண்டல் பண்ணாம வேற யாரு பண்ணுவாங்க..” என்று மகளின் தலையை வருடியவாறு சொல்லவும்... டாக்டர் உள்ளே வந்தார்.

உள்ளே வந்த டாக்டரை, “என்ன அங்கிள், உங்க ஹாஸ்பிடல் பில்லுக்கு என்னைப் பலி கடா ஆக்கிட்டீங்களா... ப்ளீஸ் அங்கிள், என்னை வீட்டுக்கு அனுப்பி விடுங்க...” என்று மயூரி, அங்கு வந்த டாக்டர், வரத ராஜனைக் கேட்க,

“ஆமா மயூ... எனக்குத்தான் ஆசை, தொல்லையை தூக்கி வெச்சு கொஞ்ச... உங்க அப்பன் ஆடிய ஆட்டத்தில் தான் நீ இப்பொழுது இங்கே இருக்கிறாய்... நான் அப்பவே சொன்னேன்... உன் அருமை அப்பாதான் கேட்கல... நீ இப்போ கூட வீட்டுக்கு போகலாம்...” என்று பேசியவாறே

அவளின் பல்சைப் பிடித்துப் பார்த்து சொன்ன அவர் செல்வமணியின் பள்ளிப் பருவத் தோழன்.

இருவரும் சிறு வயதிலிருந்தே நல்ல நண்பர்கள். நடுவில் வரதராஜன் டாக்டருக்குப் படிக்கச் செல்ல, செல்வமணி அவரின் தந்தை வழியே அரசியலில் குதித்து விட்டார்.

"அங்கிள்... என்னையா தொல்லைனு சொல்றீங்க... நான் ஒண்ணும் உங்க பையன் அர்ஜுன் கொரங்கை விட தொல்லை இல்லை..." என்று வரதராஜனின் மகனை வம்புக்கு இழுத்தாள்.

"யாரது என்னைக் குரங்குன்னு சொன்னது... ஒரு குரங்கே இன்னொரு குரங்கை, குரங்குனு சொல்லுதே... மூன்று புள்ளி... ஒரு ஆச்சர்யக் குறி...!" என்று அர்ஜுன் அந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு அவள் அருகில் வந்து சொல்லவும், அங்கே மீரா மற்றும் ரீமாவின் கை தட்டல் ஒலித்தது.

"ஹே என்னங்கடி இளிப்பு... நீங்க எனக்கு ஃப்ரெண்டா இல்லை மங்கிக்கு ஃப்ரெண்டா?" என்றாள் கடுப்பாக.

ஒரு நொடி தயங்கிய இருவரும், "நாங்க அர்ஜுன் ஃப்ரெண்ட்ஸ்... அவன் தான் போன சண்டே எங்களுக்கு விவாண்டால ட்ரீட் கொடுத்தான்..." என்றனர் கோரசாக.

"அடிப் பாவிங்களா... என்கிட்ட அதுக்கு முன்ன வாரம் தானே டீ ட்ரீட்ல நல்லா ஃபுல் கட்டு கட்டுனீங்க..."

"அது போன வாரமா... இது இந்த வாரம்..." என்றனர் மூவரும்.

"உங்களை..." என்று அவள் பில்லோவை எடுத்து அடிக்க வரவும்,

"ஹே மயூ... என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி..." என்று ராஜி ஒரு அதட்டல் போடவும்,

"இருங்கடா... உங்களை அப்புறம் வெச்சுகிறேன்..." என்று முணுமுணுத்தாள்.

அவர்களின் செல்லச் சண்டையை ரசித்துக் கொண்டிருந்தனர் பெரியோர்கள்.

ராஜி, "வாப்பா... அர்ஜுன்... உனக்கு ஒண்ணும் ஆகலைதானே..." என்றார் பரிவாக.

"எனக்கு ஒண்ணும் இல்லை ஆன்ட்டி... நாங்க அப்போவே இந்த லூசை லேப்ல இருக்கச் சொன்னோம். இந்த லூசுதான் வெளிய ஓடி வந்துருச்சு..." என்றான்.

"சரி விடுப்பா... நடந்தது நடந்து போச்சு..." என்று வரதன் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து, "டே... செல்வா... மயூவை இப்போவே வீட்டுக்கு அழைச்சுட்டுப் போலாம்... ஷீ இஸ் பெர்ஃபெக்ட்லி ஆல் ரைட்..." என்று சொல்லவும்,

"ஓ.கே வரதா..." என்று செல்வா சொல்ல,

அதற்குள் அவரின் பி.ஏ. வந்து "சார், கலெக்டர் போன்.... மீட்டிங்குக்கு நேரம் ஆச்சு..." என்று கைபேசியைக் கொடுக்க,

ராஜியிடம் திரும்பி, "ராஜி! பாப்பாவை வீட்டுக்குக் கூட்டிட்டு போயிடு... நான் அப்புறம் கூப்பிடறேன்... அர்ஜுன் அவங்களை வீட்ல விட்டுட்டுப் போய்டு தம்பி..." என்று அவர் சேவையைச் செய்யப் புறப்பட்டார்.

"ஓகே அங்கிள்... டன்..." என்று அவன் கட்டை விரலைக் காட்ட,

"ஆமாம் தம்பி, தங்கக் கம்பி..." என்று மீண்டும் ஒரு சண்டைக்குத் தயாரானாள்.

வாங்க... அவங்க சண்டையை முடிச்சுட்டு வீட்டுக்குப் போறதுக்குள்ளே நாம மயூவைப் பற்றி பார்த்திடலாம்.

மயூரி. செல்வமணி – ராஜியின் ஒரே செல்லப் புதல்வி. அவர்களுக்கு மகள் என்றால் உயிர்... மகளுக் காக எதை வேண்டுமானாலும் செய்யத் துணியும் தந்தை.

செல்வமணி பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கிறார். அவரின் தாத்தா காலம் முதல் வழிவழியாக அவர்கள் குடும்பத்திலுள்ள ஆண் மக்கள் அரசியலில்தான் இருக்கின்றனர்.

அசையும் சொத்து, அசையாத சொத்து என்று கோயம்புத்தூரில் பூர்வீகமாகவே நிறைய சொத்துக்கள் இருக்கிறது... செல்வமணிக்கு அரசியலைத் தவிர ரியல் எஸ்டேட், சிமெண்ட் தொழிற்சாலை என்று தனியாக ஏராளமாக இருக்கிறது.

மயூரி இது அனைத்திற்கும் ஒரே வாரிசு. கோயம் புத்தூரில் இருக்கும் புகழ்பெற்ற கல்லூரியில் இப்பொழுது

பி.பி.எம். மூன்றாமாண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். அந்தக் கல்லூரியில் தான் அந்த ஊரின் முக்கால்வாசி வி.ஐ.பி.களின் பிள்ளைகள் படிக்கின்றனர். அதனால் தான் இந்தக் கலவரம்.

அவளின் உயிர் தோழர்கள்தான் இப்பொழுது நாம் பார்த்த இந்த வானரக் கூட்டம்.

மீரா, ரீமா, அர்ஜுன் போக நிர்மல் இருக்கிறான். இதில் அர்ஜுன் மயூரிக்கு ஸ்பெஷல்.

நிர்மல் இரண்டு நாள் முன்தான் அவனின் அக்காவிற்கு குழந்தை பிறந்திருக்கிறது என்று அவன் பெற்றோருடன் சென்னைக்குச் சென்றான். அதனால் அவன் இந்தக் கலவரத்திலிருந்து தப்பித்து விட்டான். அர்ஜுன்தான் இந்த ஜவரணி கூட்டத்தின் தலைவன் என்று சொல்லிக் கொள்வான் ஆனால், அவனை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள்.

மயூரி பேருக்கு ஏற்றார் போல் மயில் போன்ற அழகுடையவள். பால் வண்ண நிறத்தில், அழகான பெரிய கண்களும், அந்தக் கண்களுக்கு எப்பொழுதும் கண் மையும், ஐ லைனரும் தீட்டி இருப்பாள்... அது அவளுக்கு மேலும் அழகைக் கூட்டும்...

வெள்ளைப் பனியாரம் போன்று குண்டு குண்டு கன்னங்களும், அதில் விழும் குழியும், நேரான நாசி, ரோஜா இதழ்களை ஒட்டி வைத்தாற் போன்று இதழ்கள். இவள் பேசும்போது அவள் கண்களும் பேசும், அழகாக அதை மூடி மூடித் திறப்பாள்.

எப்பொழுதும் குறும்பாகப் பேசிக் கொண்டும் மற்ற வர்களை சீண்டிக் கொண்டும் சுற்றித் திரிவாள். எந்த நொடியும் அவள் ஒரு அரசியல்வாதியின் மகள் என்ற அலட்டலோ, திமிரோ சிறிதுமின்று அனைவருடனும் சரி சமமாகப் பழகுவாள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவள் ஒரு பயந்தாங்கோலி... ஒரு சின்ன பல்லிக்கும், கரப்பான்பூச்சிக்கும் ஊரையே கூட்டும் திறம் படைத்தவள்.

ஹாஸ்பிடலில் இருந்து மீராவும், ரீமாவும் கிளம்பி விட, அர்ஜுன் மயூவையும், ராஜியையும் அழைத்துக் கொண்டு ரேஸ் கோர்ஸில் இருக்கும் அவர்களது வீட்டை, ம்ம்...ஹும்ம்... அரண்மனையை நோக்கிச் சென்றனர்.

ஆம். அது அரண்மனை தான். கோயம்புத்தூரின் மையப் பகுதியில் கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் அளவிற்குப் பெரிய தோட்டத்துடனும், பல்வேறு அறைகள் கொண்டு பிரம்மாண்டமாக எழுந்து நின்ற அந்த வீட்டின் போர்டிகோவில் நின்ற அந்த ஆடி காரிலிருந்து மூவரும் இறங்கினார்.

உள்ளே சென்று மயூ சோபாவில் அயர்வாக அமர, அவளை விட சோர்வாக தொப்பென்று விழுந்து காலைத் தூக்கி அவளுக்கு நேரெதிரிலிருந்த டீபாயின் மேல் காலைப் போட்டு ஆட்டிக் கொண்டிருந்தது வேறு யாரும் இல்லைங்க... நம்ம அர்ஜுனேதான்...

"டேய் எருமை... காலை இறக்குடா..."

"முடியாது போடி..."

"எருமை எருமை... நீ இப்படியே சொல் பேச்சு கேக்காம சுத்திட்டு இரு... நாளைக்கு உன் பொண்டாட்டி கிட்ட நல்லா வாங்குவ..."

"நான் ஏன்டி ,என் பொண்டாட்டி கிட்ட அடி வாங்கணும்.. என்னோட அழகுக்கும் அறிவுக்கும் எனக்காகப் பொண்ணுங்க லைன்ல நின்னு சண்டை போடப் போறாங்க பாரு..." என்றான் காலரைத் தூக்கி விட்டு,

"ஆமா ஆமா... போடுவாங்க போடுவாங்க... உருட்டுக் கட்டையிலயே நாலு போடுவாங்க..." என்றாள் அவள் நக்கலாக.

"உனக்குப் பொறாமைடி..." என்றான் அவள் தலையில் தட்டி.

அவளும் அவனை அடிக்க துவங்க அங்கே மினி போர்க்களமே உருவாகியது.

"ஹய்யோ... என்ன மயூ இது... எப்போ பாரு சின்னப் பசங்க மாதிரி, ரெண்டு பேரும் சண்டை போட்டுகிட்டு... இந்தாங்க... ரெண்டு பேரும் இந் ஜூஸைக் குடிங்க..." என்று இருவரையும் விலக்கி விட்டார் ராஜி.

குடித்து விட்டு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந் தனர்.

அர்ஜுன் கிளம்புவதாகச் சொல்ல...

"ஹே என்னடா அதுக்குள்ள கிளம்பிட்ட... இருந்து சாப்பிட்டுட்டு போடா... எனக்கு இங்க போர் அடிக்கும்..." என்றாள் மயூ.

"இல்லடா... அம்மா தனியா இருப்பாங்க.. ரெண்டு வாட்டி எஸ்.எம்.எஸ். பண்ணிட்டாங்க... நான் நாளைக்கு வரேன்... நீ நல்லாப் படுத்துத் தூங்கி ரெஸ்ட் எடு..." என்று அன்பாகக் கூறிவிட்டு கிளம்பிவிட்டான்.

இதுதான். இவர்கள் இருவரும் அவர்களின் தந்தைகளை போலவே ஒன்றாகப் படித்து வளர்ந்த வர்கள். அர்ஜுனுக்கு ஒரு அண்ணன்... இவனை விட ஆறு வயது பெரியவர்... அவர் தந்தை வழியே டாக்டர் படித்துவிட்டு இங்கு இவர்களின் சொந்த மருத்துவ மனையில்தான் இருந்தார்... போன வருடம் தான் கல்யாணம் முடிந்து ஒரு ரிசெர்ச்சைத் தொடர அவர் மனைவியுடன் லண்டன் பறந்துவிட்டார்.

அர்ஜுனும், மயூரியும் எலியும் பூனையும் போல எப்பொழுதும் சண்டை போட்டுக் கொண்டுதான் இருப் பார்கள். ஒற்றைப் பெண்ணான மயூவிற்கு எப்பொழுதும் ஒரு சகோதரனைப் போல் இருப்பான் அர்ஜுன். இருவ ருக்கும் அப்படி ஒரு அன்பு இருக்கிறது. அதை சண்டை போட்டுத்தான் வெளிப்படுத்துவார்கள்.

அர்ஜுன் சென்றவுடன் அன்னையுடன் இரவு உணவை உண்டு விட்டு மேலே அவளது படுக்கை யறைக்கு வந்தாள் மயூரி.

அது அவளுக்குத்தான் படுக்கையறை... ஆனால் அந்த இடத்தில் ஒரு நடுத்தரக் குடும்பமே தங்கிவிடலாம்... அந்த அளவிற்குப் பெரியது...

சோர்வாகக் கட்டிலில் சரிந்தவளுக்கு இன்று நடந்த கலவரம் கண் முன்னே விரிந்தது. அவர்கள் டிபார்ட்மென்ட் பெண்கள் அனைவரும் காலேஜ் கம்ப்யூட்டர் லேபில் இருக்க, மயூரி அவள் பேகை கிளாசிலே விட்டுவிட்டு வந்து விட்டாள். அதை அப்புறமா எடுக்கலாம் என்று சொன்ன தோழிகளை சமாதானம் செய்துவிட்டு வெளியே வந்தாள்.

அதில் அவள் தினமும் எழுதும் டைரி இருந்தது... அது அவளின் பொக்கிஷம் போல... தினம் நடக்கும் நிகழ்வுகளை அதில் எழுதினால் தான் அவளுக்கு அன்றையப் பொழுது நிறைவடையும். அதை எடுக்கத் தான் அவள் அங்கிருந்து வந்ததே... ஆனால் அதற்குள் ஒரு ரவுடி அவளைத் துரத்த அவள் கிரௌன்டிற்கு ஓடி வந்தாள். அங்குதான் வெற்றியைப் பார்த்தாள்.

அவன் அவளைக் கைகளில் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருந்தபோது, அவள் அவன் முகத் தையே தான் பார்த்துக் கொண்டிருந்தாள். அத்தனை கம்பீரம் உடையவனை அவள் அன்று தான் சந்தித்திருக் கிறாள். ஒரு வேளை அவள் கண்ணுக்கு இவன் மட்டும் தான் அப்படித் தெரிந்திருப்பானோ என்னவோ...?

அவனின் கை வளைவுக்குள் இருந்தவளுக்கு அந்த நிமிடம் ஏதோ 100 காவலர்களைக் கொண்ட கோட்டையில் இருப்பதை போல் பாதுகாப்பாக உணர்ந் தாள். அந்த உணர்வு ஏன் முதல் முதலில் பார்க்கும் இந்த ஆணிடம் வருகிறது என்பதைப் பற்றியான ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தாள் மயூரி.

அந்த ஆராய்ச்சியைப் பற்றி தவறாமல் அர்ஜுன் கொண்டு வந்து கொடுத்த அவள் நாளேட்டில் குறிப்பிட்டாள்.

3

பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த அந்த ஷாப்பிங் மாலில் ஒரு குழந்தை வீரென்று அழும் சத்தம் அனைவரின் கவனத்தையும் கலைத்தது.

சத்தம் வந்த சில நொடிகளிலே ஒரு அழகிய பெண்ணின் குரல் அந்தக் குழந்தையை சமாதானம் செய்வது தெரிய, வெற்றியின் மனது ஏனோ அந்த இடத்தை உடனே பார்க்குமாறு கட்டளையிட்டது.

மனதின் கட்டளையை மீறாமல் பார்வையை அந்தப் பக்கம் திருப்பிய வெற்றியின் கண்கள் ஒரு நொடி, வெறும் ஒரு நொடி மட்டும் அந்தப் பெண்ணின் அழகில் மயங்கியது. ஆனால் அந்த ஒரு நொடி சலனத்தை அவன் கவசமிட்டு மூடிவிட்டான்.

"என்னம்மா... என்னடா குட்டி..."

"முத்துக்குட்டி ஏன் அழறீங்க... அம்மா வந்துரு வாங்கடா செல்லம்... என் கண்ணு..." என்று அக் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தவள் மயூரி.

அது அவள்தானே...! அன்று பார்த்த அவளே தான்... மனம் ஏனோ துள்ளிக் குதித்தது. குத்தாட்டமிட்ட இளகிய மனதை வழக்கம் போல் அவனின் இறுக்கமான

மனம் அதட்டி அடக்கியது. அவளைக் கண்டு கொள்ளாமல் அவன் வேலையைப் பார்க்கத் திரும்பவும், அதே குரல் இப்பொழுது அருகில்... அவன் அருகில்... "ஹலோ டி.சி.பி சார்..." என்றது.

அவள் இப்படி அழைக்கவும், அவன் திரும்பிப் பார்க்காமல் இருந்தால், அவன் இளகிய மனது எப்படியும் அவனிடம் மல்லுக்கு நிற்கும்... ஆனால் கண்களில் எந்தவித எதிர்பார்ப்பையும் காட்டாமல் சாதாரணமாக இருப்பது போல் திரும்பினான். அது ஒன்றும் அவனுக்கு அவ்வளவு கடினமான விஷயம் இல்லையே...!

அழுது கொண்டிருந்த அக்குழந்தை அவள் கையிலிருக்க... அது இப்பொழுது சமத்தாக அவள் தோள் வளைவில் சாய்ந்து அழகாக சிரித்துக் கொண்டிருந்தது.

"ஹப்பா... என்ன பொண்ணுடா..." என்று வழிந்த அவன் மனதை, கூல் பண்ணிவிட்டு "யா... எஸ்..." என்றான் அவன் கெத்தாக.

"சார் என்னைத் தெரியலையா...?"

கொஞ்சம் யோசித்து விட்டு "ம்ம்... சாரி... நோ ஐடியா... மே ஐ நோ ஹூ யூ ஆர் ப்ளீஸ்..."

'அடப் பாவி... இப்படி வாய் கூசாம இப்படியாடா டான்ஸ் விடுவ...' மனது சண்டைக்குத் தயாரானது.

"சார்... என்னைத் தெரியலையா... அன்னிக்கி... காலேஜ்ல கலவரம் நடந்தது இல்லையா... அப்போ நீங்க என்னைக் காப்பாற்றினீங்க இல்ல. என் ஃப்ரெண்ட்ஸ்

கூட என்னை ஹாஸ்பிடலுக்கு அனுப்பி வைத்தீங்க இல்லையா...?"

அவள் இப்படிச் சொன்னவுடன்... அன்று ஹாஸ்பிடலில் இவளின் தந்தை ஆடிய ஆட்டம் கண் முன்னே தோன்றி அவனின் இளகிய மனதை ஒரே உதையாக உதைத்துப் பின்னுக்குத் தள்ளி இறுகிய மனம் முன்னுக்கு வந்து... அவன் முகத்தில் ஒரு கடினத்தை உண்டாக்கியது.

"ஓஹோ... எனக்குச் சரியாக ஞாபகம் இல்லையே..." என்ற பொய்யை உண்மை போலச் சொன்னான்.

சொன்ன அவனுக்கே கஷ்டமாக இருந்தபோது, அவன் சொன்னதைக் கேட்டு சோர்ந்த மயூரியின் மனதைக் கேட்கவா வேண்டும்?

"சரி... சொல்லுங்க... இப்போ எதுக்கு என்னை கூப்பிட்டீங்க...?"

சோர்ந்த முகத்தை மாற்றி "அது... சார்... அன்னிக்கி நான் இருந்த நிலைமையில உங்ககிட்ட ஒரு தேங்க்ஸ் கூடச் சொல்ல முடியல... அதுக்கு அப்புறம் உங்களை நான் பார்க்கும் சந்தர்ப்பமே அமையல... எப்படியோ மூன்று மாதம் கழித்து இன்னிக்கித்தான் பார்த்தேன்... அதான்... தேங்க்ஸ் சார்... தாங்க் யூ சோ மச்... அன்னிக்கி மட்டும் நீங்க இல்லைனா..." அவள் கண்ணை மூடிச் சொன்ன விதத்தில் அவன் இரும்பு மனது தடுமாறியது.

"இட்ஸ் ஓகே... தட்ஸ் மை டியூட்டி..." என்று அவளுடன் பேசுவதைத் தவிர்க்க முயற்சி செய்தான்.

ஏனோ அவளால் தடுமாறுகிற அவன் மனதை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவளைத் தவிர்க்க பட்டு கத்திரித்தார் போல் பேசினான்.

"சார்... ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... குட் யூ ப்ளீஸ் ஜாயின் வித் மீ... நான் உங்களை என் ஃப்ரெண்ட்ஸ்க்கு இன்ட்ரோ பண்றேன்... இங்கதான் பூட் கோர்ட்ல... ஜஸ்ட் ஒரு 10 மினிட்ஸ்... இப்போ நீங்க டியூட்டில கூட இல்லையே... ப்ளீஸ்..."

"ஹே... நோ... நோ... தேங்க்ஸ்... நீங்க என்ஜாய் பண்ணுங்க..." என்று அவளைத் தவிர்க்க முயன்றான்.

"சார் ப்ளீஸ்... ஜஸ்ட் 10 மினிட்ஸ்... ப்ளீஸ்..." மீண்டும் அவள் கண்களால் அவனை வசியம் செய்ய, ஒரு கட்டத்திற்கு மேல் அவனால் தவிர்க்க முடியவில்லை.

"ஓகே..." என்றான்.

அவன் உதடு மெல்லியதாக ஒரு புன்னகையை உதிர்த்தது. அவனுடன் இருப்பவர்கள் இதைப் பார்த் திருந்தால் சத்தியமாக இவன் வெற்றி என்று நம்பி யிருக்க மாட்டார்கள்.

"சார்... தாங்க் யூ சார்.... இருங்க ஒரு நிமிஷம்..." கையில் வைத்திருந்த அக்குழந்தையை அருகில் துணி யைத் தேர்வு செய்து கொண்டிருந்த அதன் அன்னை யிடம் கொடுத்தாள்.

குழந்தையும் அவளின் இடுப்பிலிருந்து அவள் அன்னையின் இடுப்பிற்குத் தாவி அவள் பட்டுக் கன்னத்தில் அதன் மென் உதடுகளால் புள்ளி வைத்தது.

"செல்லக் குட்டி... அம்மா கிட்ட சமத்தா இருங்க... உம்மா... டாட்டா செல்லோ..." கை அசைத்து விட்டு இவன் அருகில் வந்தாள்.

இங்கு இப்பொழுது நடந்த இந்நிகழ்வில் வெற்றி மொத்தமாகத் தடுமாறினான்.

"சார்... வாங்க போலாம். சார்... சார்..."

"ஒஹ்... யா... போலாம்..." ஆவலுடன் நடக்க ஆரம்பித்தான்.

நடக்கும்போது அவனுக்கு ஏதாவது அவளுடன் பேச வேண்டுமென்று தோன்றியது. அதனால் "ம்ம்... உங்க அப்பா மினிஸ்டர்தானே..." என்றான் அலட்சியமாய்.

"ம்ம்... ஆமா..." அவள் அதைச் சொல்லும் போது அவள் கண்களில் எந்தவிதத் திமிரோ, பந்தாவோ சுத்தமாக இல்லை.

"என்ன... ஒரு மினிஸ்டரோட பொண்ணு இப்படி எந்தப் பாதுகாப்பும் இல்லாம இருக்கீங்க... படத்தில் காட்டுவாங்களே, அந்த மாதிரி உங்களுக்கு எந்த கம்மாண்டோஸும் இல்லையா..." என்றான் நக்கலாக,

"சார்... மினிஸ்டர் எங்கப்பாதான்... நான் இல்லை..." என்றாள், புன்னகைத்தவாறே.

அந்த ஒற்றை வார்த்தையில் அவனுக்கு அவளது குணம் புரிந்துவிட்டது. வெற்றிக்கு செல்வமணியைப் பற்றி எல்லாம் தெரியும்... அரசியலைத் தவிர அவர்களின் பூர்விகச் சொத்தே பல கோடிகள் இருக்கும். இவை அனைத்திற்கும் ஒரே வாரிசான அவள் சாதாரண ஒரு காட்டன் குர்தியும், லேக்கிங்க்ஸும் அணிந்திருக்கிறாள்.

அவள் கழுத்தில் மெல்லிய தங்கச் செயின், காதில் அந்தச் செயினைப் போலவே சிறிய கல்பதித்த தோடுகள். இடது கையில் ஃபாஸ்ட் ட்ராக் வாட்ச். இடுப்புவரை நீண்ட அடர்ந்த கருங்கூந்தலை சிறிய கிளிப்பிற்குள் அடக்க முயற்சித்து அது அடங்காமல் அவள் முன்நெற்றியில் காற்றில் ஆடியது. இவை அனைத்திற்கும் மேல் மாசு மருவற்ற பளிச்சென்ற முகம். சத்தியமாக புதிதாகப் பார்ப்பவர்கள் இவள்தான் மந்திரியின் பெண்ணென்று சொன்னாலும் கூட, யாரும் நம்ப மாட்டார்கள்.

இவ்வளவும் இருந்தும் அதை வெளிக்காட்டாமல் இருக்கும் இவளின் இயல்பு வெற்றியைக் கவர்ந்தது.

அவளையே பார்த்துக் கொண்டு நடந்து வந்த அவனை "அதோ சார்... என் ஃப்ரெண்ட்ஸ் அந்தப் பக்கம் இருக்காங்க..."

அவள் குரலில் கலைந்தான்.

"ஹலோ கய்ஸ்... யாரு வந்துருக்காங்கனு பாருங்க..." நண்பர்களை அழைத்தாள்.

முதலில் அர்ஜுன் தான் வெற்றியைப் பார்த்தான். "ஹலோ டி.சி.பி. சார் நீங்களா...?"

"சார்... திஸ் இஸ் அர்ஜுன்... இவள் மீரா, ஷீ இஸ் ரீமா அண்ட் நிர்மல்... நாங்க எல்லாரும் ஒரே கிளாஸ்... இப்போ பி.பி.எம். ஃபைனல் இயர்..." என்று தன் நண்பர்களை அறிமுகப்படுத்தினாள்.

"ஹாய் ஆல்... ஏன் இவ்ளோ ஷாக் அர்ஜுன்... நான்தான்..." என்றான் இயல்பாக அர்ஜுனின் கை பற்றி.

"சார்... நிஜமாவே நம்ப முடியல... நீங்களா... ஐயோ சார்... நீங்கதான் என்னோட இன்ஸ்பிரேஷன் தெரியுமா... ஐ அட்மைர் யு எ லாட்..." என்றான் உண்மையான உணர்வோடு.

"ஆமா சார்... இவன் எப்பவுமே எங்க கிட்ட சொல்லுவான்... உங்களை மாதிரி தானும் ஒரு ஐ.பி.எஸ். ஆகணும்னு..." என்றான் நிர்மல், நண்பனின் விருப்பம் அறிந்து,

"ரொம்ப தேங்க்ஸ்... என்னை ரொம்ப இம்ப்ரஸ் பண்ண வைக்காதீங்க...?" என்றான் வெற்றி.

"இதுதான் சார் உண்மை..." என்றது மீரா.

இதை எல்லாம் பார்க்கும்போது மயூவின் மனதில் அவள் நண்பரின் மேலே சற்று பொறாமை தோன்றியது.

ஆனால் தோன்றியதை வெளிப்படுத்தாமல் "சார்... உக்காருங்க... ஒரு கப் காபி சாப்பிடலாம்..."

அவன் மற்றவர்களுடன் பேசுவதைத் தற்காலிக மாக தவிர்த்தாள்.

அவன் உட்கார்ந்த பிறகும் யாரும் காபி வாங்க நகராமல் அவனுடன் பேசிக் கொண்டிருக்க, மயூவிற்குச் சற்று கோபம் கூட எழுந்தது.

அர்ஜுன் தான் தொடர்ந்து வாய் அடித்துக் கொண்டிருக்கவே, "டே அர்ஜுன்... போய் எல்லாருக்கும் காபி வாங்கிட்டு வாடா..,"

"ஹே... என்னடி.... என்னை வாடா, போடானு சொல்ற... கொழுப்பா... நீ இங்க வெட்டியாத் தானே இருக்க... நீ போடி..." அவன் ஒரு சண்டைக்குத் தயாராக,

"நான் அப்படித் தான்டா சொல்லுவேன் டா டா... போடா. போய் காபி வாங்கிட்டு வாடா..." என்று மேலும் அவனைக் கடுப்படிக்கவும்,

"ஹே வேணாம்டி.. அப்புறம் உன் பட்டப் பேரை பப்ளிக்ல சொல்லிடுவேன்..."

"எங்க சொல்லுடா பார்க்கலாம்..." என்று அவள் இடுப்பில் கை வைத்து முறைக்க,

இந்த முறைப்பிற்கெல்லாம் பயப்படுகிற ஆளா நம் அர்ஜுன்... "நீ போடி முட்டக் கண்ணி..." என்று சொல்லியே விட்டான்.

அவன் சொல்ல மாட்டான் என்று நினைத்திருந்த மயூரி அவன் சொன்னவுடன், "ஹய்யோ... இப்படி பப்ளிக்ல இந்த எருமை மானத்தை வாங்கிட்டானே..." என்று கண்ணை உருட்டவும்,

அங்கிருந்த அனைவரும் சிரிக்கத் துவங்கினர். இதில் பெரிய அதிசயம் என்னவென்றால் வந்த சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கி கொண்டிருந்தான் வெற்றி.

இத்தனை நாட்களில் இவன் இந்த மாதிரி ஒரு நண்பர்கள் பட்டாளத்தை சந்தித்ததில்லை. அதன் வெளிப் பாடாக அவன் இயல்பை மறந்து சிரிக்கவும்,

'ஹய்யோ... இவன் வேற இங்க இருக்கானே... நம்மைப் பற்றி என்ன நினைத்திருப்பான்...' என்று அவள் தப்பு செய்த குழந்தையைப் போல் காலை உதைத்துக் கொண்டு அர்ஜுனிடம் பார்வையைச் செலுத்தினாள்.

அவள் மூஞ்சி சுருங்கிப் போவதைப் பார்த்த அர்ஜுனுக்கு உருகி விட்டது, "உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி..." என்று அர்ஜுன் பாசமலர் ரேஞ்சிற்கு அவளைப் பார்க்கவும்.

"ஹே சாரி மயூ... சும்மா விளையாட்டுக்குடா..." என்று அவள் தோள்களைப் பற்றி சமாதானக் கொடியைப் பறக்கவிட்டான்.

இத்தனை நேரம் இவர்களின் சண்டையில் தன் இயல்பை மறந்து புன்னகைத்துக் கொண்டிருந்த வெற்றி அர்ஜுனின் செயலில் அவன் முகம் மீண்டும் கடின முற்றது.

"ஹய்யோ... இதுங்களோட தொல்லை தாங்க முடியல... எப்போ பாரு டாம் அண்ட் ஜெர்ரி போல சண்டை போட்டுகிட்டு... அப்புறம், பாசமலர் சிவாஜி

சாவித்திரி போல கொஞ்சிக்குங்க... இதுங்களை வெச்சு கிட்டு..." என்று ரீமா சலித்துக் கொள்ளவும், வெற்றியின் காதுகள் கூர்மையானது.

"இப்போ இந்தப் பொண்ணு என்ன சொல்லுச்சு... பாசமலரா..." என்று அவர்கள் இருவரின் கண்களைப் பார்த்தான்.

போலீஸ்காரனின் பார்வை கூர்மையாக அவர்களை நோக்க, அப்பார்வையில் எந்த வித கல்மிஷமும் இல்லை, அப்பார்வையில் காதல் இல்லை... அதையும் மீறிய ஒரு நட்பும் அன்பும் பாசமும் தெரிந்தது.

வெற்றிக்கு இப்போதுதான் மனதிற்குள் 'ஹப்பாடா...' என்று நிம்மதியானது.

இந்தச் சிந்தனைகளில் இருந்தவனுக்கு சற்று திடுக்கிட்டது. 'இது என்ன டீனேஜ் பையனைப் போல... ஏன் நம் மனது இப்படி எல்லாம் சிந்திக்கிறது... இவள் எப்படி இருந்தால் நமக்கு என்ன... இவள் யாருடன் பேசினால் நமக்கு என்ன... முதல்ல நாம் எப்படி ஒரு பெண்ணை மனதில் நினைத்தோம்... இது தவறு... இது சரி இல்லை... நம் வாழ்க்கையில் ஒரு பெண்ணிற்கு இடமே இல்லை...' என்று நினைத்தவன், சில நொடிகள் கூட தாமதிக்காமல், "ஓகே கய்ஸ்... எனக்கு நேரமாச்சு... சீ யூ லேடர்..." எனவும்,

"சார், என்ன சார் அதுக்குள்ள கிளம்பிட்டிங்க... ஜஸ்ட் ஒரு 10 மினிட்ஸ்..." என்றான் அர்ஜுன்.

"இல்ல அர்ஜுன்... இன்னொரு நாள் பார்க்கலாம்..." என்று கிளம்பியே விட்டான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த மயூராவிற்கு அவன் முகம் வெளிப்படுத்திய உணர்ச்சிகள் மகிழ்ச்சியைத் தந்தது. சாதாரணமாக பார்க்கும் யாருக்கும் அவனின் இந்த முக மாறுதல் தோன்றாது. அவனின் இத்தனை வருட வேலையில் அவன் கற்றுக் கொண்டது.

ஆனால் ஆசை கொண்ட மயூராவின் பார்வை அவனின் முக மாறுதல்களைக் கண்டு கொண்டது.

ஆம். மயூரா அவனை விரும்புகிறாள்... அவனைப் பார்த்த அன்று... அவன் கைவளைவிற்குள் தான் அடைக்கலமாக இருந்த அத்தருணம்... அவனின் பாது காப்பை உணர்ந்த அந்நொடி.... அவள் அவனின் காதலில் விழுந்தாள்... இவ்வுணர்வை அவள் அன்றே ஆராய்ந்து பார்த்துப் புரிந்து கொண்டுதான் இருந்தாள்.

ஆனால் இன்று நடந்த நிகழ்வுகளில் அது முற்றிலுமாக உறுதி செய்யப்பட்டது.

4

சில்லென ஒரு மழைத் துளி,
என்னை நனைக்குதே பெண்ணே...!!!
சிறகுகள் யார் கொடுத்தது?
நெஞ்சம் பறக்குதே பெண்ணே...!!!

பாட்டிற்கேற்ப அந்த மாலை மங்கும் நேரத்தில் விண்ணிலிருந்து தூறிய அம் மழைத்துளிகள் மண்ணில்

கோலம் போட, சாலையில் கவனம் வைத்திருந்த மயூரி அப்பாட்டை மெல்ல முணுமுணுத்துக் கொண்டு வந்தாள்.

ஒரு திருப்பத்தில் போலீஸ் வண்டி ஒன்று நிற்க, யோசனையுடன் அவ்வண்டியின் அருகே தனது ஆடி காரை நிறுத்தினாள் மயூரி.

அவள் நினைத்தது போல அது வெற்றிச்செல்வன் தான், அவன் ஜீப்பின் பானெட்டில் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

அவள் காரை ஓரமாக நிறுத்திவிட்டு கதவைத் திறந்து ஒரு குடையுடன் அவன் அருகில் சென்று அவனுக்கும் சேர்த்துக் குடை பிடித்துக் கொண்டு, "ஹாய் சார்... அங்கே என்ன தேடிட்டு இருக்கீங்க...?" என்றாள்.

"என்னடா இது நமக்கு மட்டும் மழை வரவில் லையே..." என்று சின்னபிள்ளைத் தனமாக நினைத்தவன் மிக அருகில் தனக்குப் பரிச்சயமான ஒரு பெண்ணின் குரல் கேட்கவும், சட்டென திரும்பிப் பார்த்தான்.

அவனுக்குள் மீண்டும் அதே தடுமாற்றம், ஆனால் அதை வழக்கம் போல் மறைத்துக் கொண்டான்.

"ஹய்யோ சார்... ரிலாக்ஸ் ரிலாக்ஸ்... நான் தான்..."

"ஓஹ்... ஹாய்..." என்று புன்னகைக்க முயற்சி செய்தான்.

"இங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க... அதுவும் இந்த மழைல...?"

"இல்லை... ஜீப் திடீர்னு ஸ்டாப் ஆயிடுச்சு... அதான் என்ன ப்ராப்ளம்னு பார்த்துட்டு இருக்கேன்..." இப்பொழுது அவன் குரலில் பழைய கம்பீரம் இருந்தது.

"இந்த மழையிலயா... சரி... அதை அப்புறம் பார்த்துக்கலாம்... எங்க போகணும்... வாங்க நானே கொண்டு போய் விடறேன்..."

"ஓஹ்.. நோ நோ... ஐ கேன் மனேஜ்..." என அவளைத் தவிர்க்க முயன்றான்.

"சார்... மழை ரொம்ப வருது... இந்த மழையில எப்படிப் போவீங்க...?"

"மிஸ். மயூரி... இந்த ரோட்ல ஒரு ஆட்டோ டாக்ஸி கூட வராதா...?" என அவன் கேள்வியாகக் கேட்கவும்,

"வரும்தான்... பட் இப்போதைக்கு எந்த ஆட்டோவும், டாக்ஸியும் வரல... வேணா என் வண்டியை டாக்ஸின்னு நினைச்சுக்கோங்க... கம்மான் சார்..." அவள் விடாப் பிடியாகக் கேட்கவும், அவனால் மறுக்க முடியவில்லை.

ரொம்ப அடம் போல! அன்றைக்கும் ஷாப்பிங் மாலில் இப்படித்தான் அடம் பிடித்தாள். "ரொம்ப கஷ்டம்...!" என்று நினைத்த மனதை அதட்டினான்.

அன்று இரவு தான் தன் மனதைப் பலவாறு சமாதானப்படுத்தி இருந்தான்.

அன்று ஷாப்பிங் மாலில் நடந்த உரையாடலுக்குப் பின், தன் வீட்டை அடைந்தவனுக்கு அவன் மேலே

பயங்கரமாகக் கோபம் எழுந்தது. தன் மனதின் எண்ண ஓட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்றான்.

இத்தனை நாட்கள் அவன் மனதில் ஒரு வேலியிட்டு காத்து வந்தவனுக்கு, மயூரியின்பால் சாயும் தன் சிந்தனையைக் கலைக்க முயன்றான்.

'இது சரியில்லை... அவள் தனக்கு சரிப்பட்டு வர மாட்டாள்... அவள் உயரம் வேறு, நம் உயரம் வேறு... நமக்கு இது வேண்டாம்... என் வாழ்க்கையில் இனி யாருக்கும் இடமில்லை... நானே எனக்கு ராஜா... இனி தான் மனதால் கூட அவளை நினைக்க கூடாது...' என்று எவ்வளவு கட்டுப்படுத்தி வைத்திருந்த அவன் மனதை நான்கு மாதங்கள் கழித்து அவளைப் பார்த்ததில் சந்தோஷத்தில் மீண்டும் அவன் பார்வையும், மனமும் ஒருசேர சஞ்சலம் அடைந்தது.

அவளின் அழைப்பில் தன் சிந்தனைகளில் இருந்து வெளிவந்த வெற்றி மீண்டும் அவளைத் தவிர்க்க முயற்சிக்க அவளோ, "நீங்க வந்துதான் ஆகணும்..." என்று பிடிவாதமாக அவனுடன் மழையில் நிற்க, அவன் அமைதியான ஒரு பார்வையை அவள் மேல் வீசிவிட்டு தன் ஜீப்பைப் பூட்டிவிட்டு அவளுடன் நடந்தான்.

அவள் கார் அருகில் வந்ததும் "இந்தாங்க...?" என்று சாவியை நீட்டினாள்.

அவன் என்னது என்பது போன்ற பார்வையை அவளிடம் வீச "நீங்களே ட்ரைவ் பண்ணுங்க..." என்று

சாதரணமாக அவன் கை பற்றி சாவியை திணித்து விட்டு, சுற்றிச் சென்று மறுபக்கம் ஏறிக் கொண்டாள்.

அவன் யோசனையாக காருக்குள் ஏறி ஸ்டார்ட் செய்து வண்டியை கவனமாகச் செலுத்தினான்.

"உங்களுக்கு எந்தப் பாட்டு பிடிக்கும் சார்...?" என்று அவள் ப்ளேயரில் பாட்டை மாற்ற, அவன் அமைதியாக வந்தான்.

உதட்டை பிதுக்கித் தோள்களை குலுக்கிவிட்டு, வேண்டுமென்றே ஒரு பாடலை ஒலிக்கச் செய்தாள்.

"என் அன்பே நானும் நீயின்றி நானில்லை...
என் அன்பே யாவும் நீயின்றி வேறில்லை...
நான் உன்னில் உன்னில் என்பதால்,
என் தேடல் நீங்கிப் போனதே...
நீ என்னில் என்னில் என்பதால்
என் காதல் மேலும் கூடுதே...
காணவேண்டும் யாதும் நீயாகவே...
மாறவேண்டும் நான் உன் தாயாகவே...!!!

என்ற பாடலை ஓட விட்டு, அதை உடன் பாடிக் கொண்டு வந்தாள், பார்வை ஒரு நொடி, சாலையிலும், மறுநொடி இவன் பக்கமும் பாய்ந்தது.

வெற்றிக்கு இது ஏதோ தவறென்று பட்டது. அவன் யோசனையில் ஆழ்ந்தான். யோசனையில் பதில் அவனைத் திடுக்கிடச் செய்தது.

'இது சரி இல்லை... இது சரிவராது... இனிமேலும் இதை வளரவிடக் கூடாது...' என நினைத்த வண்ணம், வண்டி ஓட்டிக் கொண்டு வந்தான்.

"ஈவினிங் ஆச்சு இல்ல சார்... வீட்டுக்கா...?" என்றாள் மயூரி.

"ஹ்ம்... யா..."

"ஓஹோ... உங்க வீடு எங்க...?"

"ராமநாதபுரம்..." என்றான். எல்லாம் ஒரு சொல் பதிலாகவே இருக்க,

"என்ன சார் எல்லாம் ஒன் வேர்ட் ஆன்சர் சொல்லிட்டு இருக்கீங்க..." எனச் சிரித்தாள்.

அதற்கு அவன் பதில் மௌனமாகவே இருந்தது.

"ஹய்யோ என்ன சார் ஆஃப் ஆயிட்டிங்க... நீங்க எப்பவுமே இப்படித் தானா... கஞ்சி போட்ட சட்டை போல..." என்று அவள் அபிநயங்களுடன் சொல்லவும்... அவன் முகம் மென்மையாய் ஒரு புன்னகையை உதிர்த்தது.

ஏனோ... அவன் கட்டுப்பாட்டையும் மீறி அவளுடன் பேச வேண்டுமென அவன் மனம் உந்த, "காலேஜ் லைஃப் எப்படிப் போய்ட்டு இருக்கு...?" என்றான்.

'ஹப்பாடி... இப்போவாவது என்கிட்ட பேசுன்னு தோணுச்சே... மன்டூஸ் மன்டூஸ்...' என்று மனதில் நினைத்து விட்டு,

"ஹா... காலேஜ் முடிந்தது... ஃபைனல் எக்ஸாம்ஸ் நடந்துட்டு இருக்கு..."

"ஓஹோ... அப்போ படிப்பு முடிஞ்சதும், என்ன பண்ணப் போறீங்க... கல்யாணமா...?" என்றான் கிண்டலாக. அதை வெளியில் கிண்டலாகக் கேட்டாலும், உள்ளே மனதுக்கு உதறல் எடுக்க ஆரம்பித்துவிட்டது.

அவள் ஒன்றும் பேசாமல் அவனை முறைத்து விட்டு "ஹ்ம்... ஆமா கல்யாணம்தான்..." என்றாள் அவனிடமே பார்வையை வைத்துக் கொண்டு.

அவள் தெரிந்து சொன்னாளோ... இல்லை தெரியாமல் சொன்னாளோ... உண்மையில் அதுதான் நடக்கப் போகிறது என்று விதி சொன்னது...

அவன் ஒன்றும் சொல்லாமல், "ம்ம்..." மட்டும் போட்டான். அவன் மனதில் ஏதோ இனம் புரியாத வலி. அந்த வலியை உணர்ந்தவனுக்கு அது காதலின் வலி என்று தெள்ளத் தெளிவாக விளங்கியது.

அவன் அகத்தின் வலியை முகத்தில் காட்டியதை மயூரி நன்கு புரிந்து கொண்டாள். அவளுக்கு முந்தைய சந்திப்பிலே நன்கு விளங்கிவிட்டது.

அவன் மனதில் தான் இருக்கிறோம் என்று. ஆனால் அதை அவன் எளிதில் ஒத்துக்கொள்ள மாட்டான் என்பதையும் அவள் நன்கு புரிந்து வைத்திருந்தாள். அதன் விளைவாக அவன் மேல் தான் கொண்டுள்ள அன்பை வெளிப்படையாகத் தெரிவிக்க விரும்பினாள்.

ஆனால் அவள் நினைத்ததைப் போல், அவனிடம் நெருங்க அவளுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. கிடைத்த இவ்வாய்ப்பை அவள் தவற விட விரும்பவுமில்லை.

என்று அவள் அவனை விரும்புகிறாள் என உறுதி செய்தாளோ, அன்றே அவனைப் பற்றி அனைத்தையும் தெரிந்து கொண்டாள். அவனின் பல சாதனைகளைப் பற்றியும், அவனின் வாழ்க்கையைப் பற்றியும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தெரிந்து கொண்டாள்.

அதையும் மீறி அவனுள் ஏதோ வலி இருக்கிறது. அந்த வலியே அவனை இவ்வாறு இறுகி இருக்கிறது என்பதையும் அறிந்திருந்தாள். மற்றவர் கண்களில் படாத அவனின் உணர்வுகளை மயூரி உணர்ந்தாள்.

பார்த்தவுடன் அவனின் மேல் தனக்கு எழும் உணர்விற்குப் பெயர் காதல். அந்தக் காதலால் அவனின் வலியைப் போக்கி, தான் அவனுக்கு உற்ற சொந்தமாக இருக்க வேண்டுமென்று விரும்பினாள்.

தன் யோசனையில் இருந்தவளுக்கு கார் நின்றதும் தன் சிந்தனையிலிருந்து மீண்டாள். அவன் அவள் பக்கம் திரும்பி, "தேங்க்ஸ் ஃபார் யுவர் ஹெல்ப்..." என்று காரில் இருந்து இறங்க, அவளும் அவனுடன் இறங்கினாள்.

இரு புருவங்கள் முடிச்சிட, அவன் அவளையே பார்க்கவும், "என்ன சார், இப்படியே வாசலோட அனுப்பிடப் பார்க்கிறிங்க... இந்த க்ளைமேட்க்கு சூடா காபி சாப்பிட்டா எவ்ளோ நல்லா இருக்கும் தெரியுமா...?" என்று

கைகளைத் தேய்த்துக் கொண்டு கண்ணை விரித்துச் சொல்லவும்,

வெற்றியின் மனது 'ஹய்யோ... அப்படி பார்க்காதடி ராட்சசி... இந்தப் பார்வையாலே என்னைக் கொல்றாளே... என்னால என்னையே கட்டுப்படுத்த முடியல...' என்று சிணுங்கியது.

மனதின் சிணுங்கலை ஒதுக்கி விட்டு, "சரி... உள்ளே வாங்க..." என்று கதவைத் திறந்து விட்டான்.

கவனமாக வலது காலை எடுத்து வைத்தவள், வீட்டை நோட்டம் விட்டாள். அதது அங்கங்கு இருக்க, இரண்டு படுக்கையறைகளுடன் பார்க்க மிகவும் எளிமையாகச் சுத்தமாக இருந்தது.

"சார்... உங்க வீடு ரொம்ப குட்டியா, காம்பக்டா அழகா இருக்கு... எனக்கு ரொம்பப் பிடிச்சுருக்கு... எனக்கு டபுள் ஓ.கே..." என்றாள் குதூகலமாக,

கடல் போலிருக்கும் அவளின் வீட்டை விட தீப்பெட்டி சைசிலிருக்கும் இந்த வீட்டைப் போய் பிடித்திருக்கு என்கிறாள்... என்னது அவளுக்கு ஓகே வா... எதுக்கு ஓகே... என்று வியப்பாக அவளைப் பார்க்க,

அவள் அவனை நோக்கி ஒரு குறும்புப் பார்வையுடன் கண்ணடித்துப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

அவன் மீண்டும் அவளை வியப்பாகப் பார்க்க, 'இப்போ இவள் என்ன பண்ணா... கண் அடிச்ச மாதிரி இருந்துதே... மூஞ்சியத் திருப்பிட்டா.. இல்லை எனக்குத்

தான் அப்படி தோணுச்சா... ஹய்யோ இது சரியில்லை... இது வேண்டாம் நமக்கு...' என்று மீண்டும் மீண்டும் அவன் இரும்பு மனம் ஆணையிட்டது.

அவன் இரும்பு மனம் சொன்ன பேச்சைக் கேட்டு "மிஸ். மயூரா... இது சரி இல்லை... நீங்க கிளம்புங்க..." என்றான் இறுக்கத்துடன்.

"என்ன சார் சரி இல்லை..." என்றாள் அவள் அப்பாவியாக.

அவள் இப்படிக் கேட்டால் அவனால் என்ன சொல்ல முடியும்.

'நீ என்னைப் பார்த்து கண்ணடித்தது போல் இருந்தது... உன் பார்வையும் பேச்சும் சரி இல்லை என்றா சொல்ல முடியும்... அவள் பாட்டுக்கு நான் சாதாரணமா தான் சார் பார்த்தேன்... உங்களுக்குத் தான் அப்படி தெரியுது போல இருக்கு...' என்றால் அவன் என்ன செய்வான் பாவம்.

"என்ன சார் இப்படியே பார்த்துட்டு இருக்கீங்க... காபி கேட்டேனே...! உங்க வீட்ல வேற யாரும் இல்லையா...?" என்றாள் கேள்வியாக,

"எனக்கு யாரும் இல்ல... நான் மட்டும் தான்... நீங்க உட்காருங்க..." என்று கூறி விட்டு அவன் உள்ளே சென்று விட்டான்.

அவன் சொன்னது மயூவிற்கு மிகவும் வருத்தமாக இருந்தது. சுற்றிப் பார்த்தவள் அங்கே ஹாலில் ஒரு

ஓரத்தில் ஒரு தம்பதியரின் போட்டோ மாலையோடு மாட்டப்பட்டிருந்தது. அதில் வெற்றியின் கண்களில் தெரியும் வலியை உணர்ந்து கொண்டாள்.

இப்பொழுது அவன் மேல் உள்ள காதல் வலுப் பெற்றது. வரும்போது ஒலித்த பாடலின் வரியைப் போல தான் அவனுக்கு ஒரு தாயாக இருக்க வேண்டுமென்ற நினைப்பு அவள் ஆழ்மனதில் பதிந்து போனது.

சிறிது நேரம் கழித்து கையில் காபியுடன் வெற்றி வந்தான். உடை மாற்றியிருந்தான். எப்பொழுதும் டிவியிலும் நேரிலும் இவனை யூனிபார்முடன் தான் பார்த்திருக்கிறாள். அன்று ஷாப்பிங் மாலிலும் ஃபார்மல் பேண்ட் ஷர்டுடன் தான் பார்த்திருக்கிறாள்.

ஆனால் இன்று அவன் கையில்லாத டி-ஷர்டும், முக்கால் பேண்டுடன் பார்க்க சாதாரணமாக இருந்தான்.

அவனது முன்நெற்றி முடி கலைந்திருக்க, அதை அவள் கைகளால் அளக்க எழுந்த ஆவலை அடக்க அவள் பெரும்பாடு பட வேண்டியதாக இருந்தது.

"எடுத்துக்கோங்க..." என்று காபியை அவள் முன்னாலிருந்த டேபிளில் வைக்க,

"தேங்க்ஸ்!" சொல்லி எடுத்துக் கொண்டவள், "அயாம் சாரி..." என்று அவன் தாய் தந்தையின் போட்டோவைப் பார்த்தாள்.

அவள் பார்வை சென்ற திசையைப் பார்த்தவன் "இட்ஸ் ஓகே... விடுங்க..." என்றான்.

அவள் காபி சாப்பிட்டு முடிக்கவும், யோசனையாக சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்க்க, அவளும் பார்த்தாள்.

"ஹ்ம்ம்... கிளம்புன்னு சொல்லாம சொல்றீங்க... இதோ கிளம்பிட்டேன்..." என்று அவள் சொல்லவும் அவள் மொபைலில் கால் வந்தது.

"அச்சோ அம்மா..." என்று அவளது ஐ-போனை ஸ்வைப் செய்து "இதோ அம்மா... வந்துடறேன்... ஃப்ரெண்ட் வீட்டுக்கு வந்தேன்மா... இப்போ கிளம்பிட்டேன்... இன்னும் 15 மினிட்ஸ்ல வீட்ல இருப்பேன்..." என்று போனை அணைத்து,

"ஓகே சார். கிளம்புறேன்..." என்று அவள் கிளம்பி வாசலுக்கு வர, அவனும் அவள் பின்னாலே சென்றான்.

வேகமாகச் சென்றவள் சடர்ன் பிரேக் போட்டு நிற்க, அவன் அவள் மேல் விழப் பார்த்தான். அதற்குள் அவன் சுதாரித்து நிற்க, அவள் வேண்டுமென்றே அவன் மேல் விழுந்து எழுந்தாள். அவனுக்கு மல்லிகைப் பந்து தன் மேல் விழுந்ததை போல் உணர்ந்தான்.

"அச்சோ சாரி சார்... எனக்கு உங்க பர்சனல் நம்பர் தரீங்களா...?" என்றாள்.

அவன் "எதுக்கு..." என யோசனையாகப் பார்க்க,

"அது ஏதாவது எமெர்ஜென்சிக்கு கூப்பிடலாம் இல்லையா... ஜஸ்ட் ஒரு செக்யூரிட்டிக்கு... கொடுங்க..." என்று அவள் போனை எடுக்கவும்,

"உங்க அப்பாகிட்ட இல்லாத செக்யூரிட்டியா..."

"சார்... அந்த செக்யூரிட்டி என்னோட மினிஸ்டர் அப்பாவிற்கு... என்னை மாதிரி பப்ளிக்குக்கு உங்கள மாதிரி போலீஸ்தான் சார் செக்யூரிட்டி... இப்போ நம்பர் கொடுக்கப் போறீங்களா இல்லையா..." என்றாள் மிரட்டும் தொனியில்.

அவனுக்கு அவள் கேட்ட பாவம்... சிரிப்பை வர வழைத்தது. மேலும் அவளையும் அவள் அப்பாவையும் பிரித்துச் சொன்னது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

சிரிப்புடனே "நோட் பண்ணிக்கோங்க... 9....."

"ஹா ஒரு நிமிஷம்... என்று அவன் போனுக்கு ஒரு மிஸ்ட் கால் கொடுக்கவும், அது வீட்டிலிருந்து ஒலித்தது... ம்ம்... கரெக்டான நம்பர்தான் கொடுத்திருக்கீங்க... குட்... சேவ் பண்ணிக்கோங்க... அப்புறம் இந்த மிஸ் வாங்க போங்க எல்லாம் கட் பண்ணிட்டு, மயூன்னு கூப்பிடுங்க..." என்று சொல்லிவிட்டு, அவள் காரில் ஏறி சென்றுவிட்டாள்.

வெற்றிக்கு ஒரு நிமிடம் புயல் அடித்து ஓய்ந்தது போல் இருந்தது. ஆனால் ஒன்றை மட்டும் அவன் நன்கு புரிந்து கொண்டான். அது 'அவளால்தான் தன் இயல் பிலிருந்து முற்றிலுமாக மாறுபடுகிறோம்' என்று.

5

வெற்றியிடம் தன் காதலை உணர்ந்த நொடியிலிருந்து, இனி அவனுக்குத் தான் வெறும் காதலியாக மட்டுமல்லாது ஒரு

தாயாக, உற்ற உறவாக இருக்க வேண்டுமென்று மனதினில் உறுதி பூண்டிருந்தாள் மயூரா.

மனதின் உறுதி அவளின் செயலிலும் பிரதிபலித்தது. அதற்கு முதற்கட்ட நடவடிக்கை எடுக்க, அவளுக்கு பரிட்சை முடியும்வரை காத்திருந்தாள். இதோ இன்றுடன் பரிட்சை முடிந்து ரெண்டு நாள் ஆகிறது.

சூரியன், சந்திரனை விரட்டியடித்து விட்டு, தனது வெளிச்சத்தால் குயில்களையும், பூக்களையும் விழிக்க வைக்க, காலையில் படுக்கையில் இருந்து மயூராவின் மொட்டு விழிகளும் மெல்ல மலர்ந்தது.

கண் விழித்ததிலிருந்தே மனதில் ஏதோ ஒரு இனம் புரியாத பரபரப்பு.

இன்று அவனுடன் பேசியே ஆக வேண்டுமென்ற உந்துதல். மனதின் அலைப்புறுதலால் முதல் வேலையாக அவளின் மொபைலை எடுத்தாள்.

அதில் 'அயர்ன் மேன்' என்று பதிந்திருந்த வெற்றி யின் நம்பரை எடுத்தாள். ஆனால் விரல்கள் கால் செய்யவா வேண்டாமா என்ற எண்ண ஓட்டத்தில் இருந்தது.

'இவ்வளவு காலையிலே அழைக்கிறாயே அவன் என்ன நினைப்பான்!' என்று மூளை அறிவுறுத்த, காதல் கொண்ட மனதோ, மூளையின் கேள்விகளைப் புறம் தள்ளிவிட்டு அவனின் நம்பரை அழுத்தியது.

இடது கை கட்டை விரலின் நகத்தைக் கடித்தவாறு, குப்புறப் படுத்து, அந்தப் பக்கம் போன் எடுக்கப்படுவ தற்காக மிகுந்த படபடப்புடன் காத்திருந்தாள்.

அடித்து ஓய்ந்த ஒவ்வொரு மணி ஓசையிலும், இவளது இதயத்தின் ஓசை அதிவேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

காலையில் வழக்கமான ஜாகிங்கை முடித்துவிட்டு அவனது வீட்டு மொட்டை மாடியில் சிறிது உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த வெற்றியின் மொபைல் சிணுங் கவும், வேர்த்திருந்த முகத்தை பூத் துவாலையால் துடைத்துக் கொண்டே, அங்கு வைத்திருந்த அவனது மொபைலை எடுத்து, அழைப்பது யாரென்று பார்த்த வெற்றிக்கு மீண்டும் முகம் குப்பென்று வேர்க்க ஆரம் பித்து விட்டது.

ஏனோ எதிரிகளை எளிதில் வீழ்த்திவிடும் வெற்றிக்கு, மயூராவின் கண்கள் மிகுந்த சவாலாக இருந்தது. அனை வராலும் இரும்பு மனிதன், உணர்ச்சிகள் அற்றவன், காட்டு மிராண்டி, என்று பல பெயர்களை வாங்கிய வெற்றி மயூவின் முன்னால் தன் பலத்தை முற்றிலுமாக இழந்து விடுகிறான். அதற்குப் பெயர் காதல் என்று உணர்த்திய அவன் மனதைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தான்.

அவனுக்குத் தெரியும் அவனது மனதின் ஆசை நிறைவேறக்கூடிய சாத்தியக் கூறுகள் மிகவும் குறை வென்று. அதனால் அவளிடமிருந்து விலகியே இருக்க வேண்டுமென்று நினைக்கிறான்தான். ஆனால் அவளைப்

பார்த்த மாத்திரம் அவனின் மன உறுதி அவனின் அனுமதி இல்லாமலே தடுமாறுகிறது.

அவனின் எண்ண ஓட்டத்திலிருந்த வெற்றிக்கு மீண்டும் அழைப்பு மணி நடப்பிற்கு கொண்டு வர, ஸ்க்ரீனில் வந்த அவளின் நம்பரை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அன்று அவள் நம்பரை மொபைலில் பதிக்குமாறு சொல்லியதை அவன் மனதில் பதித்து வைத்திருந்தான். பல பல யோசனைகளுக்கு பின் அழைப்பு மணி நிற்கும் தறுவாயில் எடுத்து ஒரு நொடி மௌனத்திற்குப் பின், "ஹலோ..." என்ற வார்த்தையை உதிர்க்க,

அந்தப் பக்கம் அவனின் கம்பீரமான குரலில் படுக்கையை விட்டு சட்டென எழுந்து அமர்ந்த மயூவிற்கு கால் செய்து விட்டோம். ஆனால் என்ன பேசுவது எப்படி ஆரம்பிப்பது என்று எண்ணவோட்டத்தில் இருந்தவளுக்கு மீண்டும் வெற்றியின் "ஹலோ..." நிகழ்விற்கு கொண்டு வர,

"ஹா... ஹல்... ஹலோ... வெற்றி..."

"யா..." என்றான், ஒற்றை வார்த்தையாக.

மயூவின் மனது ஏகத்திற்கு அடிக்க ஆரம்பித்தது, மிகவும் ஏமாற்றமாக உணர்ந்தாள். எடுத்தவுடன் அவன் உருகி வழிவான் என்றெல்லாம் அவள் நினைக்கவில்லை தான். ஆனாலும், தன் எண்ணைப் பார்த்து தன் பெய ரையாவது விளிப்பான் என நினைத்திருந்தாள்.

"வெற்றி, அயாம் மயூரா..." என்றாள். அவளுக்கு இப்பொழுது சார் எல்லாம் காற்றில் கரைந்து போனது.

"ஓஹ்... மிஸ். மயூரா... சொல்லுங்க... என்ன இவ்வளவு காலையில... எதாவது பிரச்சனையா..." என்றான் போலீஸ்கார தோரணையுடன்.

ஆசை கொண்ட மனது அவளின் வெற்றி என்ற அழைப்பில் காதல் மழையில் நனைத்திருந்தது. மற்றவர்கள் அழைத்த பேர்தான், ஆனால் அதைத் தன்னவளின் வாய் மொழியாகக் கேட்க, மிகவும் உற்சாகமாக உணர்ந்தான். ஆனால் மனதின் உற்சாகத்தை குரலில் காட்டினால் அவன் வெற்றிச்செல்வன் அல்லவே...!

ஆனால் இந்தப் பக்கமிருந்த மயூவிற்கு அவன் தலையில் நாலு போடு போடலாம் போலிருந்தது, மொபைலைக் காதிலிருந்து எடுத்தவள் அதைப் பார்த்தவாறு தலையிலே அடித்துக் கொண்டு மீண்டும் காதில் வைக்க, "பிரச்சனை எல்லாம் எதுவும் இல்ல..." என்று இழுக்கவும்,

வெற்றிக்கு மனதில் திகில் பரவியது, "அப்புறம்... இவ்வளவு காலையில கால் பண்ணியிருக்கீங்க..."

"அது வந்து... நா... நான் உங்ககிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும்..." என்று சொல்லியே விட்டாள்.

வெற்றியின் பாடுதான் திண்டாட்டமாகி போனது. ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு, "என் கிட்ட நீங்க தனியாப் பேச என்ன இருக்கு மிஸ். மயூரா..." என்றதும்,

மயூவிற்குக் கோபம் உச்சிக்கு ஏறியது. முதலில் அவனிடம் பேசத் தயங்கியவளுக்கு, இப்பொழுது சொல்ல நினைத்ததை ஏதோ பாதி அளவிலாது சொல்லி முடித்த நிம்மதியில்... அவளுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது.

அந்தத் துணிவில் "என்ன மிஸ்... உங்க கிட்ட சொல்லியிருக்கேன் இல்ல... இந்த மிஸ் போட்டுக் கூப்பிடாதீங்கனு..."

"அது இல்ல..." என்று அவன் ஆரம்பிக்கக் கூட இல்லை...

"உங்களுக்கு நான் எதுக்கு கூப்பிட்டேனு தெரியலையா... இதோ பாருங்க, நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும். நாம அன்னைக்கு பார்த்த ஷாப்பிங் மால்க்கு ஆப்போசிட்ல ஒரு ரெஸ்டாரண்ட் இருக்கு... இன்னிக்கி ஈவினிங் அஞ்சு மணிக்கு அங்க வந்துடுங்க..." என்று பொரிந்துவிட்டு, அவனின் பதிலைக் கூட எதிர் பார்க்காமல் அழைப்பைத் துண்டித்து,

'ஹே மயூ... உனக்கு இவ்வளோ தைரியமா... முன்னேறிட்ட மயூ முன்னேறிட்ட...' என்று அவளையே தட்டிக் கொடுத்து, மேலும், அவனிடம் தன் மனதில் இருப்பதை கோடிட்டுக் காட்டியதால் எழுந்த உற்சாகத்தால் சந்தோஷத்துடன் எழுந்து குளிக்கச் சென்றாள்.

அவள் பொரிந்துவிட்டு அழைப்பை வைக்க... காதிலிருந்து போனை எடுத்து அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த வெற்றிக்கு ஒன்றுமே புரிய

வில்லை. நீண்ட ஒரு பெருமூச்சை வெளியிட்டு, தலையைக் குலுக்கிவிட்டு தன் பணிக்குப் புறப்படச் சென்றான்.

ஆனால் உற்சாகமாக இருந்த மயூவிற்கும் சரி, சலனத்திலிருந்த வெற்றிக்கும் சரி அன்று மாலை தங்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது என்பதை இருவரும் அறியவில்லை.

மாலை ஒரு கேஸை முடித்துக் கொண்டு கோர்ட்டிலிருந்து நேரே அவள் சொன்ன இடத்திற்கு ஐந்து நிமிடம் முன்னமே வந்து காத்திருந்தான் வெற்றி.

அவனுக்கு ஏனோ மனம் பறப்பதைப் போல் இருந்தது. தன் அன்னைக்குப் பின் தன்னிடம் நேசப் பார்வை வீசி, தன்னிடம் உரிமையாக அதட்டி, உருட்டி பேசும் மயூவின் வரவிற்காக மனம் முழுக்க எதிர் பார்ப்புகளுடன் காத்திருந்தான்.

ஆனால் அவள் சொன்னதிலிருந்து 15 நிமிடம் கடந்திருக்க, இன்னும் அவள் வந்த பாடாக இல்லை. இருந்தாலும், அவளுக்காகக் காத்திருந்தான். அவனது துறையில் நேரம் என்பது மிகவும் சக்தி வாய்ந்தது. இது வரையிலும் யாருக்காகவும், எதற்காகவும் அவசியம் இல்லாமல் காத்திருக்காதவனுக்கு, இன்று காத்திருப்பு மிகவும் சுகமானதாக இருந்தது.

'காதலில் காத்திருப்பு ஒரு சுகமான உணர்வு' என்று ஏதோ கவிஞன் சொன்னதை இவன் கேள்விப்பட்டிருக் கிறான். அதை இன்று உணர்வால் உணர்ந்தவனுக்கு காதலின் அருமை புரிய ஆரம்பித்தது.

அதே உற்சாக உணர்வுடன் பார்வையைச் சுழல விட்டவனுக்கு எதிரிலிருந்த அந்த மாலின் வாசலில் அர்ஜுன் நிற்பது கண்ணிற்குப் பட, தன் உள்ளம் கவர்ந்த வளின் அன்புத் தோழனைக் கண்டதில் மகிழ்ச்சி உண்டாக.. அவனுடன் பேச வேண்டுமென, ரோட்டைக் கடந்து அவனிடம் சென்றான்.

"ஹலோ அர்ஜுன்..." என அழைக்க,

கையில் ஏதோ பார்சல் வைத்திருந்த அர்ஜுனுக்கு அருகில் குரல் கேட்க, திரும்பிப் பார்த்தான்.

"ஹலோ சார்... எப்படி இருக்கீங்க... உங்களை நான் இங்க எதிர்பார்க்கவே இல்லை..." என்றான் அவனும், புன்னகையுடன் அவனுக்கு கை கொடுத்தவாறு.

"ம்ம்... ஒரு ஃபிரெண்டைப் பார்க்க வந்தேன்..."

"ஓஹோ... நமக்கு இந்த மால் ராசி போலிருக்கு சார்... இங்கேயே ரெண்டாவது வாட்டி மீட் பண்றோம்..."

"ம்ம்... ஆமாம் அர்ஜுன்... இந்த மால் நமக்கு ரொம்ப ராசியான இடம்தான்..." தன்னவளை இங்கே பார்த்து காதலில் விழுந்த உணர்வில் அவன் சொல்ல,

"அப்புறம் என்ன இந்தப் பக்கம்... யாருக்காவது வெயிட் பண்றீங்களா..." என்று வெற்றி கேட்க,

"ம்ம்... ஆமாம் சார்... நிர்மல்-க்காக வெயிட் பண்றேன்... வந்து கூட்டிட்டு போறேன்னு சொன்னான்... மயூரா தெரியும்தானே சார்... அவளுக்கு இன்னிக்கு மேரேஜ் என்கேஜ்மென்ட்... அதான் கிஃப்ட் வாங்கலாம்னு

வந்தேன்...” என்று எதிரில் இருப்பவனின் மனநிலை தெரியாமல் அர்ஜுன் பேச,

கேட்டுக் கொண்டிருந்த வெற்றிக்கு, அவனின் இரும்பு இதயத்தில் யாரோ பழுக்கக் காய்ச்சிய கம்பியை விட்டுக் குடைந்ததைப் போல் உணர்ந்தான். இது வரையிலும், பல சோதனைகளையும், தடைக் கற்களையும் தாண்டி உயரத்தை அடைந்திருந்த வெற்றிக்கு இந்தச் செய்தியை காதில் கேட்கக் கூடத் தெம்பில்லை.

முகம் இருண்டு போனது, ஏமாற்றத்தை முகத்திலிருந்து மறைக்கப் பெரும் பாடுபட்டுப் போனான்.

ஆனால் இதை ஏதும் அறியாத அர்ஜுனோ தன் பாட்டுக்குப் பேசிக்கொண்டே போனான்.

அவன் மொபைலுக்கு கால் வரவே, “எங்கடா நிர்மல் இருக்க... எவ்வளோ நேரம் வெயிட் பண்றது...” என எரிச்சலாகக் கேட்க,

“....”

“உன்னோட அந்த ஓட்ட பைக்கைக் கொண்டு போய் காய்லாங்கடையில போடு... நீ வரேன்னு சொல்லித்தானே நான் என் பைக்கை எடுக்காம வந்தேன்...” என்று பொரிய,

“...”

“ம்ம்... ம்ம்... வாங்கிட்டேன். வெச்சு தொலை. நான் எதாவது ஆட்டோ பிடிச்சு வந்துடுறேன்...” என்று கோபமாக கூறி முடிக்கவும், அந்த நேரத்திற்குள்ளாகவே வெற்றி தன்னை அதிர்ச்சியிலிருந்து மீட்டெடுத்தான்.

இப்பொழுது அவனது முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை... பழைய இறுக்கம் கூடிக் கொண்டிருந்தது.

ஒரு நிமிர்வுடன் நின்று கொண்டிருந்தான். குரலில் கம்பீரத்தைக் கொண்டு வந்து, “எங்க அர்ஜுன் போக முடும்... நான் ட்ராப் பண்றேன்...” என்றான் அவனுக்கு ஒரு நண்பனாக.

“இல்ல சார் பரவாயில்ல... உங்களுக்கு எதுக்கு சிரமம்...” என்று அவன் தயங்க,

உதட்டில் மெல்லியதான புன்னகையைக் கொண்டு வந்து, “இதுல என்ன சிரமம் இருக்கு... வாங்க... எங்கே? உங்க ஃப்ரெண்ட், மினிஸ்டர் பொண்ணு வீட்டுக்குத் தானே...”

அவன் தோள்களில் கை போட்டு, ரோட்டைக் கடந்து அவனின் வண்டி நிற்கும் இடத்திற்கு அழைத்து வந்தான். அவன் ‘மினிஸ்டர் பொண்ணு!’ என்றபோது மயூராவிடமிருந்து ஒரு ஒதுக்கம் வெளிப்பட்டது.

அர்ஜுனோ, தான் பிரமிப்புடன் பார்த்து வியந்த மனிதன் இயல்பாக தோழமையுடன் பழகும் பாங்கைக் கண்டு இதுவரை, அவனைப் பற்றி தான் அறிந்ததையும், அவனின் சாதனையைப் பற்றியும் உளமாரப் பாராட்டி சலசலத்துக் கொண்டு வந்தான்.

வெற்றியின் உதட்டில் இருந்த புன்னகை இயல்பாக வந்ததா, இல்லை விரக்தியின் புன்னகையா என்பதை எதிரில் இருப்பவன் அறியாத வண்ணம் வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

15 நிமிடப் பயணத்திற்குப் பின், வெற்றியின் போலேரோ அந்தப் பிரமாண்டமான வீட்டு கேட்டின் முன் நிற்க, வண்டியிலிருந்து இறங்கிய அர்ஜுன், "சார் உள்ள வாங்க சார்... உங்களை மயூ பார்த்தா ரொம்பச் சந்தோஷ படுவா..." என்று அவன் அழைப்பு விடுக்க,

ஏற்கெனவே மனதில் ஏமாற்றத்துடன் இருந்த வெற்றி மறுப்பாகத் தலை அசைத்து "இல்ல அர்ஜுன்... வேலை இருக்கு..." என்று மறுத்ததும்,

அர்ஜுன் அவனிடம் விடை பெற்று திரும்பி நடக்க,

"ஒரு நிமிஷம் அர்ஜுன்..." என அழைக்க,

திரும்பிப் பார்த்த அவனிடம் கண்களில் உணர்ச்சி துடைத்த பார்வையுடன் "உங்க ஃப்ரெண்ட் கிட்ட, என்னோட வாழ்த்துகளை மறக்காமச் சொல்லிடுங்க..." என்று கூறி விட்டு, வண்டியை வேகமாக கிளப்பிக் கொண்டு சென்றே விட்டான்.

இத்தனை நேரம் அவனின் முகபாவத்தை கண்டிராத அர்ஜுனுக்கு இப்பொழுது மூளை எதையோ உணர்த்தியது, குழப்பமான மனதுடன் வீட்டினுள்ளே நடந்து சென்றான்.

அர்ஜுனை விட்டுவிட்டு, வீட்டிற்கும் செல்ல மனமில்லாமல் வண்டியை இலக்கில்லாமல் ஓட்டிக் கொண்டிருந்தான் வெற்றி. வெகு தூரம் சென்று ஆள் அரவமற்ற சாலையின் ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு சீட்டில் தலை சாய்த்து இருளை வெறித்துக் கொண்டிருந்தான்.

மனம் முழுவதும் ஏமாற்றம். இது நடக்காது என்று அவன் மூளை பல முறை அறிவுறுத்தியது. இருந்தாலும், மனது, மூளையின் சொல் பேச்சுக் கேட்காமல் அவளின் மேல் ஆசை வைத்ததற்கு பெருத்த தண்டனையல்லவா கிடைத்திருக்கிறது. இந்தத் தண்டனை பெரும் வலியை அவனுக்குக் கொடுத்திருக்கிறது.

பலமுறை உடலாலும், தன் தாய் தந்தை இறந்த போதும் கிடைத்த வலியை விட, இந்தக் காதல் வலி அவன் உடல் முழுக்க ரணத்தை ஏற்படுத்தியது.

வேதனையுடன் கண்ணை மூடியிருந்த வெற்றியின் கண்களிலிருந்து கண்ணீர் சுரக்க, அதிர்ந்து கண் விழித்தான். கன்னங்களில் வழிந்த கண்ணீரைக் கைகளால் ஒற்றி எடுத்த வெற்றிக்கு, 'இது தானா...' என்ற சந்தேகம் எழுந்தது.

'சே... ஒரு பெண்ணுக்காக, அதுவும் தன் காதலை வெளிப்படுத்தாத ஒரு பெண்ணுக்காக எதற்கு இப்பொழுது அழுது கொண்டிருக்கிறோம். தான் என்ன அவ்வளவு பெரிய கோழையா... இது சரி வராது என எத்தனை முறை நிராகரித்தோம்... நடக்கப் போகாத ஒன்றுக்காக எதற்கு இப்பொழுது தான் வேதனைப்படுகிறோம்...' என்று பலவாறு தன்னையே திட்டி, மனதை சமாதானம் செய்து வண்டியைக் கிளப்பி தன் இல்லம் நோக்கிப் புறப்பட்டான்.

வீட்டில் தன் அன்னையின் படத்தின் முன் சில நொடிகள் நின்று கொண்டிருக்க, அவன் அன்னையின் சிரித்த முகம் எதையோ உணர்த்தியது.

ஆனாலும், மீண்டும் மனதைத் தேவை இல்லாத சலனத்துக்குள்ளாக்காமல் உணவைக் கூட மறந்து உறங்க முயன்று அதில் வெற்றியும் அடைந்தான்.

மயூவின் நினைவோடு தூங்கி, காலையில் கண் விழித்தவனுக்கு அவளின் நினைப்பு சற்றுமில்லை. மனதில் பழைய இயல்புடன் அவனின் நாளைத் துவங்கினான்.

வழக்கமான அவனின் காலை வேலைகளை முடித்து விட்டு, பணிக்குப் புறப்பட்டான். வேலையில் தன்னை தொலைத்திருந்தவனின் செல்போன் ஒலி எழுப்பவும், அதை யாரென்றே பார்க்காமல் உயிர்ப்பித்து காதில் வைத்தான்.

"ஹலோ... வெற்றி... நீங்க இப்போ எங்க இருக்கீங்க...?" என்றது வேறு யாருமில்லை மயூராவே தான்.

அவள் குரல் கேட்டு, அதற்குப் பதிலாக வெற்றியின் குரலில் எந்த உணர்ச்சிகளையும் காட்டாமல் தான் அலுவலகத்தில் இருப்பதாகச் சொன்னதும் அவளின் அழைப்பு துண்டிக்கப்பட்டது.

6

அன்று காலை வெற்றியுடன் பேசி தனது மனதில் இருப்பதை ஒரு அளவிற்கு அவனுக்குப் புரிய வைத்து விட்டோம் என்ற திருப்தியுடன் சந்தோஷமாகக் குளித்து விட்டு கீழே வந்தவளுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது.

அதை அறியாமல் அவள் கீழே உணவு மேஜைக்கு வர, அங்கே அவளது சொந்தங்கள் அத்தை, மாமா... சித்தி, சித்தப்பா... அவர்களது பிள்ளைகள் என அனைவரும் கூடியிருக்க, ஆச்சரியமடைந்து, "ஹே சிந்து... நீங்க எல்லாம் எப்போ வந்தீங்க...? யாரும் நீங்க வரதா சொல்லவே இல்ல..." என்று குதூகலித்து அவர்களிடம் நெருங்கினாள்.

"எங்களுக்கு ஸ்கூல் லீவ் விட்டாச்சு... அதான் உன்னைப் பார்க்க ஓடி வந்துட்டோம்..." என்று அவளின் முன்றுவிட்ட சித்தப்பா மகள் 12 வயது அனன்யா அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டு சொல்ல,

"ஹய்யோ என் செல்லக் குட்டி... அக்காவ பார்க்க ஓடி வந்துட்டாங்களே... வாங்க மாமா, வாங்க சித்தப்பா... சித்தி, அத்தை எல்லாம் எங்க காணோம்... ஹே சிந்து, வா வா..." என்று அனைவரையும் வரவேற்க,

"எல்லாரும் கிச்சன்ல இருக்காங்க மயூக்கா... வாங்க நாம அங்க போலாம்..." என்று பதினொன்றாம் வகுப்பு படிக்கும் சிந்து சொல்ல,

"எங்க அந்த அறுந்த வாலு மனோஜைக் காணோம்..." என்று மயூ அவளிடம் கேட்க,

"அவனுக்கு டென்த் ஸ்பெஷல் கிளாஸ் ஸ்டார்ட் ஆயிடுச்சு மயூக்கா! அதான் பாட்டிகிட்ட விட்டுட்டு வந்துட்டோம்..." என்ற சிந்துவுடனும், அனுவுடனும் கிச்சனுக்கு நடந்தவாறே கேட்க,

அதற்குள் "அவளுக்கு இது தெரியாது... அவங்கப் பாவே சொல்லட்டும்... நீங்க யாரும் சொல்லாதீங்க...." என்று சமையலறையிலிருந்து பெண்கள் மூவரும் பேசிக் கொண்டு வர, அவர்கள் பேசியதைக் கவனிக்காமல் "ஹய்யோ புஷ்பா அத்தை, மல்லி மா... ஏன் நீங்க வர்றதா என்கிட்ட சொல்லவே இல்ல..." என்று அவர்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவள் செல்லம் கொஞ்ச,

"உனக்கு ஒரு சர்ப்ரைஸ் கொடுக்கலாம்னு தான் சொல்லல..."

"ஹப்பாடா... எப்படி என்னோட லீவை ஸ்பென்ட் பண்றதுன்னு யோசிச்சுட்டு இருந்தேன். ஹே அனு, சிந்து ரெண்டு பேரும் ஸ்கூல் ஆரம்பிக்கும்வரை இங்கயே இருங்க.. நாம குற்றாலம், சிறுவாணி டேம் எல்லாம் போலாம்..." என்று ஆசை காட்ட,

"ஓஹோ போலாமே..." என்று அனன் குதூகலித் தாள்.

"ஹா, போலாம் போலாம்... எல்லாரும் இப்போ சாப்பிட வாங்க..." என்று ராஜி விரட்ட, அப்பொழுது செல்வமணியும் வந்து சேர அனைவரும் உணவு மேஜைக்குச் சென்றனர்.

அனைவரும் அமர்ந்து உணவுண்ண, செல்வமணி முதலில் ஆரம்பித்தார்.

"மயூ கண்ணு..." அவர் ஆழ்ந்த குரலில் அவளை அழைக்க,

"என்னப்பா..."

"இன்னிக்குச் சாயந்திரம் உன்னைப் பொண்ணு பார்க்க வராங்கம்மா..." என்றார்.

வாயில் வைத்திருந்த உணவு அவளுக்கு தொண்டையில் சிக்க, புரை ஏறி அவள் இரும ஆரம்பிக்க, பல கைகள் அவள் தலையைத் தட்ட எழுந்தது, அதில் குட்டி அனன்யாவின் கை உட்பட.

ஒரு நொடி, அனைவரின் அன்பையும் கண்டு அவள் உள்ளம் நெகிழ்ந்து போனாள். ஆனால் அப்பா இப்பொழுது சொன்ன செய்தி, ஒரு வேளை நாம் சரியாகக் கேட்வில்லையோ என்னமோ... தண்ணியைக் குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "என்னப்பா... என்ன சொன்னீங்க... எனக்குச் சரியா கேட்கல..." என ஒருவேளை அவர் ஏதோ தெரியாமல் சொல்லியிருப் பாரோ என்ற நப்பாசையில் கேட்க,

"இன்னிக்கி சாயந்திரம் விநாயகா மில்ஸ் ஓனரோட பையனுக்கு உன்னைப் பெண் பார்க்க வராங்கடா... நீ படிக்கும் போதே என்கிட்ட கேட்டாங்க... நான்தான் நீ படிப்பை முடிச்சதும் பார்த்துக்கலாம்னு சொன்னேன்.. உனக்குப் பரீட்சை முடிஞ்சுது... நல்ல பெரிய இடம்மா... பையன் வெளிநாட்ல படிச்சு முடிச்சுட்டு, இப்போ நம்ம நவஇந்தியால ஒரு பெரிய 5 ஸ்டார் ஹோட்டல் கட்டிட்டு இருக்கான்... குடும்பத் தொழிலையும் கவனிச்சுகிறான்... உனக்கு ரொம்ப நல்ல பையன். நான் சில தடவை அவன்கிட்ட பேசியிருக்கேன்... உனக்குப் பொருத்தமா

இருப்பான்.. அது மட்டுமில்லாம, நம்ம தகுதிக்கும், குடும்பத்துக்கும் ஏத்த இடம்... அதான் உன்னைப் பார்க்க வரச் சொல்லிட்டேன்..." என்று அவர் பாட்டுக்குப் பேசி முடிக்க, மயூரா பேச்சற்று சமைந்திருந்தாள்.

இப்பொழுது அவள் மனதில் அவர் சொன்னது எதுவும் ஏறவில்லை. மனம் முழுக்க "வெற்றி... வெற்றி... வெற்றி..." என்ற பேரை மட்டும் ஜபித்துக் கொண்டிருந்தது.

அவள் தந்தை சொன்னதுக்கு மறுப்பு சொல்லக் கூடத் தோன்றாமல் அவன் நினைவின் ஆதிக்கத்தில் மௌனமாக அமர்ந்திருக்க... பெண்ணின் மௌனத்தை அவர் தனக்கு சாதகமாக நினைத்துக் கொண்டு சாப்பிட்டு விட்டு, அவரின் தம்பி சம்பத்திடமும், ராஜியின் தம்பியிடமும் மாலை நடக்கப் போகும் விசேஷத்திற்கு ஏற்பாடுகள் செய்யும்படி சொல்லிவிட்டு அவர் கிளம்பிச் சென்று விட, பெண்கள் இவளைச் சூழ்ந்து கொண்டனர்.

அவளின் சித்தி மல்லிகா அவளை "சீக்கிரம் சாப்பிட்டு முடி. பார்லர் போய்ட்டு உனக்குக் கொஞ்சம் திங்க்ஸ் வாங்கிட்டு வரலாம்..." என்றார்.

அவளின் அன்னையும் அத்தையும் மாலை டிபனுக்கு மெனுவை இப்பொழுதிருந்தே தயார் செய்யக் கிளம்பிவிட்டனர்.

சிந்துவும், அனுவும் அவளைச் சுற்றியே இருக்க மயூவிற்கு மூளை யோசிப்பதை நிறுத்தி விட்டது.

"அக்கா.. மயூக்கா..." என்று அவளை அனு உலுக்கவும் தான் அவள் சுயநினைவடைந்தாள்.

கடவுளே இதை எப்படியாவது நிறுத்தியே ஆக வேண்டும். அதற்கும் முன் வெற்றியிடம் நாம் பேசியே ஆக வேண்டும் என்று நினைத்தவளால் பேசத்தான் முடியவில்லை.

சிறிது நேரத்திற்குள் மீனா, ரீமாவும் வந்து சேர, "உங்களுக்குக் கூடத் தெரியுமா...?" என்று அவள் ஆச்சரியமாக கேட்க,

"ஆன்ட்டி காலைல தான் சொன்னாங்க..." என்ற அவர்கள் பதிலில் மிகவும் சோர்ந்து போனாள்.

அவளைச் சுற்றி ஒரு கூட்டமிருக்க அவளால் அவளுடைய மொபைலைக் கூடத் தொட முடியவில்லை.

"சரி எதாக இருந்தாலும் தன்னை மீறி எதுவும் நடக்க முடியாது. இப்போது வெறும் பெண் பார்க்கும் படலம் தானே... எப்படியும் தன்னிடம் அப்பா சம்மதம் கேட்பார்... மாலை அவர்கள் சென்றதும் அப்பாவிடம் வெற்றியை பற்றிச் சொல்லி விடலாம்..." என்று அவள் நினைத்திருக்க, அவளின் நினைப்பு தலைகீழாகிப் போனது.

மாலை வந்த அவர்கள் பெண்ணை அவர்களுக்கு மிகவும் பிடித்திருப்பதாகவும், அதனால் இப்பொழுதே நிச்சயம் பண்ணிவிடலாம் என்று சொல்ல... செல்வ மணியும் ராஜியும் மிகுந்த சந்தோஷமடைந்து சரி என்றார்கள். அங்கே அவளின் சம்மதமின்றி நிச்சயமே முடிந்துவிட்டது.

இவை அனைத்தையும் ஒரு அதிர்ச்சியுடன் பார்த்திருந்த அவளால் இதை எப்படித் தடுப்பது என்று தெரியவில்லை. அப்பாவிடம் வெற்றியைப் பற்றி சொல்லுமுன் அவனிடம் தன் காதலைச் சொல்லியாக வேண்டும், ஆனால் இப்பொழுது எல்லாம் கைமீறிப் போய்விட்டது.

அவர்கள் வந்ததிலிருந்து அர்ஜுன் மயூராவின் முகத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். அதில் சிறிது அளவுகூட சந்தோஷமில்லை. மாறாக ஒரு தவிப்பு, குழப்பம், ஏமாற்றம் என எல்லா எதிர்மறை உணர்வுகளும் போட்டி போட்டுத் தெரிந்தது. இதே தவிப்பை இப்பொழுது ஒரு சில நிமிடங்களுக்கு முன் அவன் வெற்றியிடமும் பார்த்து வந்தானே...! அவன் மூளை மின்னல் அடிக்க, மூளை சொன்ன செய்தியில் அதிர்ந்து போனான்.

விருந்தினர்கள் சென்றபின் அர்ஜுன் இவள் அறைக்கு வர, அங்கே மீனா, ரீமா, சிந்து மற்றும் அனு உடன் இருக்க, அவர்களை கீழே அனுப்பிவிட்டு "மயூ..." என அவளை அழைக்க,

அவளோ இதைக் காதில் வாங்காமல் அவள் யோசனையில் இருக்க, "மயூ... இங்க பாரு... நான் கூப்பிடறேன் இல்ல..." என்று அவள் கைகளைப் பற்றி உலுக்க,

"ஸ்... சொல்லு அர்ஜுன்..." என்றது அவளுக்கே கேட்கவில்லை. அவளுக்குத் தன் நண்பனைப் பார்த்ததும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

"உனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லையா மயூ..."

அவள் மறுப்பாகத் தலை அசைக்க, "ஏன்...?" என்றான் ஒற்றை சொல்லில்.

அவள் மௌனம் சாதிக்க,

"எனக்குத் தெரியும். வெற்றி..." என்றான்.

அவள் அதிர்ச்சியும், ஆச்சரியமும் கலந்து அர்ஜுனைப் பார்க்க,

"உ... உனக்கு... எப்படித் தெரியும்... எப்போ தெரியும்... நான் யார் கிட்டயும் சொல்லலையே..." என்று அவள் யோசனையாகச் சொல்ல,

"இப்போ தான்... கொஞ்சம் நேரம் முன்னாடி... நீ எதுக்குச் சொல்லணும்... அதான் உன் மூஞ்சியே காட்டிக் கொடுக்குதே..." என்றான்.

"இருந்தாலும் அது வெற்றிதான் என்று உனக்கு எப்படி..."

"ம்... இப்போ வரும்போது அவர் தான் என்னை இங்க கொண்டு வந்துவிட்டார்... முதலில் நான் கவனிக்கலை... அப்புறம்... இதோ உன் கண்ணுல தெரியுதே தவிப்பு... அதை அவர் கண்ணுலயும் பார்த்தேன்..." என்று அவளிடம் சொல்ல,

"ஏன் மயூ... இது எல்லாம் நடக்கும்னு நினைக்கிறியா... உங்கப்பாவுக்கு இது தெரிஞ்சா என்ன ஆகும்னு கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தியா..." என்றான்.

"தெரியல அர்ஜு... நான் வெற்றியை முதல் தரம் பார்த்தப்போவே அவர்தான் என்கின்ற மாதிரி ஃபீல் பண்ணேன்... இதுவரைக்கும், நான் எந்த ஆண் கிட்டயும், நான் அதை உணர்ந்ததில்ல..."

"நீ இதை அவர் கிட்ட சொன்னியா...?"

"இல்ல அர்ஜு... அதை சொல்லத்தான் இன்னிக்கு ஈவினிங் மீட் பண்ணலாம்னு வரச் சொன்னேன்... ஆனால்... நான் நினைத்ததுக்கு மாறா எல்லாம் தலை கீழா நடந்துட்டு இருக்கு..." என்று வெறுப்புடன் கூற, சட்டென "ஹே அப்போ அவர் எனக்காக அங்க ரெஸ்டாரன்ட் வந்தாரா..." என சந்தோஷத்துடன் கேட்க,

"ம்ம்... உனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டு இருந்தாரு போல. ஆனால் நான் உனக்கு எங்கேஜ் மெண்ட்னு சொன்னதும் அவர் கண்களில் அப்படி ஒரு வலி மயூ... அதை நான் அப்போ கவனிக்கல... இங்க நம்ம வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம்தான் அவர் கண்ணைப் பார்த்தேன்.. பட் மயூ, அவர் உன்னை அவ்ளோ சீக்கிரமா ஏத்துப்பாரா... எனக்குத் தெரிஞ்சவரை அவர் யாருக் காகவும், எதுக்காகவும் தலை வணங்க மாட்டார்...

"உங்கப்பா இதுக்கு நிச்சயம் சம்மதம் சொல்ல மாட்டார்... அவரும் கண்டிப்பா உங்கப்பாகிட்ட பேச மாட்டார்... நீ அவரை மறந்துடு மயூ..." என்று அவன் தோழிக்காகப் பேச,

"என்னது மறக்கிறதா... ஹ்ம்ம்... என்னால அது நிச்சயமா முடியாது அர்ஜுன்... அவரை எப்போ என் மனசுல நினைச்சேனோ, அன்னிக்கே அவர் தான் என்னோட மூச்சுன்னு நான் முடிவு பண்ணிட்டேன் அர்ஜு..." என்று அவள் தீர்மானமாகச் சொல்ல,

"அப்போ நீ என்ன பண்ணப் போற...?" என்றான்.

"தெரியல... நான் கொஞ்சம் யோசிக்கணும்..." என்றாள்.

"நல்லா யோசிச்சு முடிவு எடு மயூ... இது உன்னோட வாழ்க்கை... ஆனால் நீ முடிவு எடுக்கும் முன்னாடி வரப் போற பிரச்சனைகளை மனசுல வைச்சுக்கோ..." என்றான் ஒரு நல்ல நண்பனாக.

"தேங்க்ஸ் டா..." என்றாள் உள்ளத்திலிருந்து.

"ஹே லூசு... நமக்குள்ள என்ன தேங்க்ஸ்... சரி நான் வீட்டுக்குக் கிளம்பவா... அம்மா என்னைத் தேடு வாங்க..." என்றான்.

"ம்ம்... சரி..."

"எதா இருந்தாலும் எனக்குப் போன் பண்ணு மயூ..." என்று கனிவாகச் சொல்லிவிட்டு அவன் சென்று விட,

காலையிலிருந்து கிடைக்காத தனிமை இப்பொழுது அவளுக்குக் கிடைக்க யோசனையில் ஆழ்ந்தாள்.

முதலில் அவள் கட்டியிருந்த புடவை, நகைகளை கழற்றி எறிந்து, சாதாரண உடை அணிந்து கட்டிலில் சரிந்தாள்.

அர்ஜுன் சொன்னது போல் தன் தந்தை இதற்கு சர்வநிச்சயமாக ஒப்புக் கொள்ளமாட்டார்.

அதே போல் வெற்றியும் தன் தந்தையைத் தேடி வரமாட்டான், ஆனால் அவன் கண்களில் அவளுக்குத் தெரிந்த காதல் பொய்யில்லை என்று அவள் மனது அடித்துச் சொல்ல, அவனின் மேலுள்ள காதலின் தைரியத்தில் சில அதிரடி முடிவுகளில் இறங்கினாள்.

அந்த முடிவின்படி காலையில் எழுந்து அவனுக்கு கால் செய்து எங்கிருக்கிறான் என்பதை அறிந்து கொண்டு அங்கே செல்ல கீழே வர,

அவள் அன்னை "எங்க போற மயூ... நிச்சயமான பொண்ணு இனிமேல் முன்ன மாதிரி ஊர் சுத்தாத... ஒழுங்கா வீட்ல இரு..." என்றார்.

ஏற்கெனவே வீட்டில் தன் தாய் மேலும், தந்தை மேலும் கொலை வெறியில் இருந்தவள், எதுவும் பேசாமல் "சின்ன வேலை இருக்கு... போறேன்..." என்று அவள் கிளம்ப,

"அடியே போறேன்னு சொல்லாதடி.. போய்ட்டு வரேன்னு சொல்லு... எப்போ தான் உனக்குப் பொறுப்பு வருமோ..." என்று அவர் அங்கலாய்க்க,

"மயூக்கா... எங்க போறீங்க... என்னையும் கூட்டிட்டுப் போங்க..." என்று அவள் சுடியைப் பிடித்துக் கொண்டு அனு கேட்க,

"நான் வேற வேலையா போறேன் அனு மா... இப்போ முடியாது..." என்று சொல்லிவிட்டு அவள் நடக்கத் துவங்க,

"பார்த்து போய்ட்டு வா மயூ மா..." என்று அவள் சித்தியும், அத்தையும் கனிவாகச் சொல்ல,

மயூவிற்குக் கண்களில் கண்ணீர் வரவா, வேண்டாமா என்றிருந்தது. இத்தனை அன்பான உள்ளங்களை இன்னும் ஒரு சில மணி நேரங்களில் நாம் நோகடிக்கப் போகிறோம் என்று குற்ற உணர்ச்சியில் தளர்ந்து போனாள்.

ஆனால் அவள் மனதில் நமக்காவது சொந்தங்கள் இத்தனை பேர் இருக்கிறார்கள், ஆனால் அவளது வெற்றிக்கு அவள் மட்டுமல்லவா உயிர்...! இந்த நினைப்பு எழ, எடுத்த முடிவின்படி அவனைக் காண விரைந்தாள்.

மனதில் பல எதிர்மறை உணர்ச்சிகள் போட்டி போட்டுக் கொண்டிருந்தாலும், தன்னவனை அடைந்தே தீர வேண்டுமென்ற வெறியில் மயூ எடுத்திருக்கும் முடிவு யாரை அதிகம் பாதிக்கப் போகிறது...?

7

உறுதியான முடிவுடன் வீட்டிலிருந்து கிளம்பிய மயூரா நேராக எஸ்.பி அலுவலகத்துக்கு வந்தாள்.

அவள் ஒரு மந்திரியின் மகள் என்பதால் அவளுக்கு எஸ்.பியை பார்க்க எந்தத் தடையும்

எழவில்லை. ஆனால் ஒரு மினிஸ்டரின் பெண் காலை வேளையில் மாநகர ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்தால், அது அங்கிருக்கும் பத்திரிகையாளர்களுக்கு சுடச்சுட செய்தி அல்லவா...!

அவள் நேராக சந்திரசேகரை பார்க்கச் சென்றாள். அவரிடம் தனியாக ஒரு அரை மணி நேரம் உரை யாடினாள். அதன் பின், ஒரு கான்ஸ்டபிள் அவரின் அறைக்குள் அழைக்கப் பட்டார். அவரிடம் டி.சி.பி வெற்றிச்செல்வனை அழைத்து வரும்படி பணித்தார்.

வெற்றிக்கு, மயூரா வந்தது அவள் சந்திரசேகரிடம் பேசிக் கொண்டிருப்பது எதையும் அறியாமல் அவனது மேலதிகாரியின் அழைப்புக்கு இணங்கி அவரைக் காண சென்றவனுக்கு கண்கள் ரெண்டும் ஆச்சர்யத்தில் விரிந்தது.

அவன் வருவதை உணர்ந்தும் அவள் அவன் பக்கம் திரும்பாமல் இருக்க, அவன் நேராக சந்திரசேகரிடம் வந்து நிற்க,

அவர் "என்னய்யா இது...? நீ இந்த மாதிரி ஒரு காரியத்தைப் பண்ணுவனு நான் கொஞ்சம் கூட எதிர் பார்க்கல...?" என்று அவர் அவனுக்குப் புரியாததைப் பேச,

அவனோ குழப்பத்துடன் "சார்... நீங்க சொல்றது எனக்குப் புரியல...?" என்றான்.

"ம்ம்... உனக்கு எப்படிப் புரியும்...? ஒரு பெண்ணை காதலிச்சு ஏமாத்தின உனக்கு எப்படி நான் சொல்றது புரியும்...? என்ற நக்கலாக அவர் வினவ,

"வாட்...?" என்றான் அவன் அதிர்ச்சியாக.

அந்த அதிர்ச்சி ஒரு சில நொடிகளே! அதன் பின் "நான் காதலிச்சு ஏமாத்தினதா யார் உங்க கிட்ட சொன்னது...?" என்று அவன் மயூராவை தீனமான பார்வை பார்த்துக் கேட்க,

"அதான் உன்னால் ஏமாற்றப்பட்ட பொண்ணே இங்க இருக்கு இல்ல...?" என்றார்.

"நான் அவங்களைக் காதலிச்சு ஏமாத்தினதுக்கு என்ன சாட்சி சார்...? என்றான், இம்முறை அவன் குரல் சற்றே உயர்ந்து வந்தது.

"பாதிக்கப்பட்ட பொண்ணு, அதுவும் ஒரு மினிஸ்ட ரோட பெண்ணே நேர்ல வந்து கம்ப்ளைண்ட் தருது... இதை விட வேற என்ன வேணும்...?" என்றார்.

"சார்... உங்களுக்குத் தெரியாதா... நம்ம துறைல பாதிக்கப்பட்டவங்கள விட, சாட்சிதான் சார் செல்லு படியாகும்..." என்று அவன் சொல்ல,

இத்தனை நேரம் அமைதியாக இருந்த மயூரா, "சார் அவர் என்னைக் காதலிச்சது உண்மை சார்... நாங்க ரெண்டு பேரும் உயிருக்கு உயிராக் காதலிச்சோம், இவர் கூட என்னை அவர் வீட்டுக்கு எல்லாம் கூட்டிட்டு போயிருக்காரு... ஆமாவா, இல்லையான்னு கேளுங்க..." எனவும்,

"இந்தப் பொண்ணு சொல்லறது உண்மை யாய்யா...?" சந்திரசேகர் கேட்க,

"சார்... இவங்க என்னோட வீட்டுக்கு வந்தது உண்மை. ஆனால் நான் காதல் எல்லாம் பண்ணலை... அது மட்டுமில்லாம ஒரு பெண்ணை வீட்டுக்கு அழைத்துப் போனால் அதற்கு பேர் காதல் தானா...?" என்று அவன் ஒரு போலீசாகக் கேட்க,

அவன் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று மயூரா முழித்துக் கொண்டிருக்க, அதற்குள் விஷயம் பத்திரிக்கையாளர்களுக்கு தெரியவர அனைவரும் கேமரா மைக்குடன் அலுவலகத்திற்கு முன் கூட்டமிட்டனர்.

இவ்விஷயத்தை ஒரு கான்ஸ்டேபிள் வந்து சந்திர சேகரிடம் முறையிட அவரைப் போகச் சொல்லிவிட்டு "இதோ பாரு வெற்றி, விஷயம் வெளியே தெரிஞ்சுடுச்சு... நீ ஒரு பெண்ணை, அதுவும் மினிஸ்டர் பெண்ணைக் காதலிச்சு ஏமாத்தியிருக்க... இதுக்கு நீ என்ன பதில் சொல்லப் போற... தேவை இல்லாம ஒரு பெண்ணோட வாழ்க்கையில் விளையாடாதே...

"நீ சொல்லப் போற பதில் இந்தப் பெண்ணுக்கு சாதகமா இருக்கணும்... அதை மனதில் வெச்சு ஒரு முடிவெடு..." என்று அவர் அவனைத் துரிதப்படுத்த,

ஏற்கெனவே அவன்தான் இவளை ஏமாற்றியதாக சொன்னதில் கோபம் கொண்டிருந்த வெற்றி, இப்பொழுது அவர் சொன்ன அந்த மினிஸ்டர் பெண் அவனை கோபத்தின் உச்சியில் ஏற்ற,

"சார்... அது என்ன மினிஸ்டர் பொண்ணு மினிஸ்டர் பொண்ணுன்னு சொல்றீங்க... நான்தான்

அவளைக் காதலிக்கவே இல்லன்னு சொல்றேன் இல்ல..." என்றான்.

மௌனமாக இருந்த மயூரா சட்டென அவள் அமர்ந்திருந்த இருக்கையை விட்டு எழுந்து அவன் கண்களை நேருக்கு நேராகப் பார்த்து "நீங்க என்னைக் காதலிக்கவே இல்லையா...?" என்றாள் தீனமான பார்வையுடன்.

அந்தப் பார்வையில் தடுமாறிய வெற்றி அமைதி காக்க...

சில நிமிடங்கள் அவனின் அமைதியைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரசேகர் உடனே வெளியிலிருந்த கான்ஸ்டபிளை அழைத்து எதையோ அவரின் காதில் சொல்லி அனுப்பி வைத்தபின் அவன் அமைதியைச் சாதகமாக எடுத்துக் கொண்டு "நீ பொய் சொல்றனு, உன்னோட அமைதி சொல்லுது வெற்றி... நீ இப்போ இந்தப் பெண்ணுக்கு பதில் சொல்லியே ஆகணும்..." என்றார்.

"இப்போ நான் என்ன பண்ணணும்னு சொல் றீங்க...? என்று அவன் சலிப்பாகக் கேட்க,

"நீ அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோ!" என்றதில் வெற்றி அதிர்ச்சியாக அவரைப் பார்க்க,

அதற்குள் "என்ன நடக்குது இங்கே..." என்ற கணீர் குரலில் எல்லாரும் திரும்பிப் பார்க்க, அங்கே செல்வமணி பெண்ணை தீப் பார்வையுடன் எரித்துக் கொண்டிருந்தார்.

விஷயத்தை அவரின் அல்லக்கைகள் மூலம் அறிந்த செல்வமணி உடனே எஸ்.பி ஆபீஸ்க்கு விரைந்து வந்தார்.

வேக நடையிட்டு சந்திரசேகரின் அறையில் நுழைந்தவர் கர்ஜனையாய் முழங்க...

அவரின் குரலில் பயந்து நடுங்கிய மயூரா வெற்றியின் பின்னால் மறைய...

அந்தச் செயல் செல்வத்திடம் மேலும் கோபத்தை உண்டாக்க...

வெற்றியின் பின்னால் நின்றிருந்த மயூவின் கையைப் பிடித்து முன்னே இழுத்து அவளின் பட்டுக் கன்னத்தில் அவரின் கை தாரையைப் பதிக்க,

அவரின் அறையில் சுருண்டு அவள் வெற்றியின் மேலே விழ, அவளைத் தாங்கிப் பிடித்தவனுக்கு நரம்பு புடைத்து நெற்றி தெறித்தது.

அவரை நோக்கி ஒரு அடி முன்னெடுத்து வைக்க,

அதற்குள் சந்திரசேகர் "சார்... என்ன பண்றீங்க... இது போலீஸ் அலுவலகம்... வெளில பத்திரிக்கைக்காரங்க வேற இருக்காங்க... கொஞ்சம் பொறுமையா இருங்க..." எனவும்,

"என்னத்தய்யா பொறுமையா இருக்கிறது... ஒண்ணும் இல்லாத இந்த அனாதைப் பயலை நம்பி இத்தனை நாள் நானும், என் குடும்பமும் இவ மேல

வெச்சிருந்த நம்பிக்கை, என் மானம், குடும்ப கௌரவம் எல்லாத்தையும் ஒரு நொடியில் நாசம் பண்ணிட்டு இங்க நிக்கிறாளே...!

"இவளைக் கொன்னாத்தான் என் ஆத்திரம் தீரும்..." என்று அவர் மீண்டும் அவளை அடிக்கக் கை ஓங்க,

அவரைத் தடுத்து "சார்... கொஞ்சம் பொறுமையா இருங்க... இது உங்க பொண்ணோட வாழ்க்கை... கொஞ்சம் நிதானமா இருங்க..." என்று அவரை சமா தானப்படுத்த முயல,

"என்னது இவ என் பொண்ணா... எப்போ இந்த அனாதையை நம்பி என் வீட்டு வாசல்படியை விட்டு வந்தாளோ, அப்பவே அவள் செத்துட்டா... இவனுக் காகத் தானே எங்க எல்லாரோட முகத்திலேயும் கரியைப் பூசிட்டு வந்த... இனிமேல் அப்பா, அம்மான்னு என் வீட்டு வாசல் படியை மிதிச்ச.. கொன்னு எரிச்சுடுவேன்..." என்று அவர் சூளுரைக்க,

"சார்... என்ன சார் நீங்க இப்படி எல்லாம் பேசறீங்க..." என்று சந்திரசேகர் கேட்க,

"விடுய்யா... என்னை... எங்க எல்லாரின் மனதை யும் சாகடிச்சுட்டு இவன் பின்னாடி வந்த இவள் கெட்டு நாசமாத்தான் போவா..." என்று அவர் கையை உதறி விட்டுத் திரும்பி நடந்து சென்று விட்டார்.

அவர் வெளியே வரவும், பத்திரிக்கையாளர்கள் அவரைச் சூழ்ந்து கொள்ள, அவர் இருந்த கோபத்தில்

எதையாவது வாயை விட்டுவிடுவாரோ என்று பயந்து சந்திரசேகர் அவர் பி.ஏ.வை உடனே அவரை அங்கிருந்து அழைத்து செல்லுமாறு பணிக்க, செல்வமணியைக் கூட்டிக் கொண்டு அவர்கள் சென்றுவிட்டனர்.

செல்வமணி சென்ற பின்னும் மயூரா அப்படியே இருக்க அவள், இதுவரை கடுமையாக ஒரு வார்த்தை, ஏன் ஒரு பார்வை கூடப் பார்த்திராத தன் தந்தை இன்று அவளை கை நீட்டி அடித்திருக்கிறார். மேலும் தன்னை அவர் பெண்ணே இல்லை என்ற அவர் வார்த்தையில் மனமுடைந்து அழுது கொண்டிருக்க,

வெற்றியோ அவரின் அனாதை என்ற வார்த்தையில் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தான்.

மீண்டும் இவர்களிடம் வந்த சந்திரசேகர், "இதோ பாரு வெற்றி... இப்போ எல்லாம் கையை மீறிப் போச்சு... நீ இப்போ இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணித் தான் ஆகணும்..." என்றார்.

அவன் அவர் சொல்வதைக் காதில் வாங்காமல் தன் நினைவுகளில் மூழ்கியிருக்க... அதற்குள் சந்திரசேகர் அனுப்பியிருந்த கான்ஸ்டபிள் மாலை, தாலியுடன் வர, சந்திரசேகர் அதை வாங்கி வெற்றியிடமும், மயூராவிடமும் கொடுக்க,

"மாலையைப் போடு வெற்றி..." என்ற அவரின் குரலுக்கு மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவன் போல் மாலை அணிய, மயூராவும் போட்டபின்...

"தாலியை அவள் கழுத்தில் கட்டு..." என்றதற்கு அவன் அசையாமல் நிற்க, அவன் தோளைத் தட்டியவர், சுயநினைவு மீண்ட வெற்றி மறுப்பாக தலை அசைக்க,

"என்ன வெற்றி இது... தாலியைக் கட்டு..." என்று மீண்டும் அவர் சொல்ல, தலை குனிந்திருந்த மயூரா அவன் கண்ணைப் பார்க்க, இப்பொழுது மறுப்பு சொல்லாமல் அவள் கழுத்தில் மூன்று முடிச்சிட்டான்.

அவன் நினைத்திருந்தால் அவனால் இது முடியவே முடியாது என்று மறுத்திருக்க முடியும். இப்படிப்பட்ட பழியை அவனால் ஒரு சில மணி நேரங்களில் இல்லை என்று நிரூபித்திருக்க முடியும்தான்.

ஆனால் ஒரு பெண், அதுவும் சொத்துகள் பலவும், சொந்தங்கள் பலரும் இருக்கும் மயூரா அவளின் தந்தை சொல்படி ஒரு அனாதையான தனக்காக இப்படி ஒரு பொய் நாடகமாடி தன்னை அடையக் காரணம் அவள் தன் மேல் கொண்டுள்ள காதலுக்காக அல்லவா...!

அவனும் அவளைக் காதலிக்கிறான்தான். இது சரி வராது என்றுதான் அவன் ஒதுங்கிப் போனான். ஆனால் அவளின் இச்செயல் வெற்றியை மனதளவில் மிகவும் பாதித்துவிட்டது.

உடலால் எத்தனை வலியையும் தாங்கிக் கொள்ளக் கூடிய அவனுக்கு மனதின் வலி பெரும் காயத்தை ஏற்படுத்தியது. இக்காயம் ஏற்படுத்திய மயூராவை அவன் மன்னிக்க முடியாது என்று நினைத்தான்.

சந்திரசேகரின் தலைமையில் திருமணம் முடித்த வர்களுக்கு மயூராவின் மனதில் நிம்மதி உண்டானது. ஆனால் வெற்றியின் உள்ளத்தில் அவள் மேல் கோபம் கனன்று கொண்டிருந்தது.

"சரி வெற்றி... அந்தப் பெண்ணை உன் வீட்டுக்கு அழைச்சுட்டுப் போ..." என்ற சந்திரசேகரிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவன் முன்னே நடக்க,

"நீயும் போம்மா..." என்று மயூவை விரட்ட,

மயூ அவரிடம் மெதுவான குரலில் "தேங்க்ஸ் சார்..." என்றதற்கு,

கண்களை மூடித் திறந்து அவளை வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

வெளியே மாலையும் கழுத்துமாக வந்த வெற்றியை பத்திரிக்கையாளர்கள் பிடித்துக் கொள்ள, அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை... பாவம் அவர் களுடைய வேலையை அவர்கள் செய்ய அவனுக்கு இவை அனைத்திற்கும், இப்படி ஒரு சூழலை உண்டாக்கிய மயூராவின் மேல் தான் கோபம் எழுந்தது.

"சார்... நீங்க மினிஸ்டர் பெண்ணைக் காதலிச்சு ஏமாத்திட்டதா சொல்றாங்களே... அப்படியா..." என்று ஒருவன் கேட்க,

"சார் இத்தனை நாள் நீங்க பண்ணின சாதனைகள் எல்லாத்திற்கும், இப்போ நடந்த இந்த விஷயம் ஒரு பெரிய கரும்புள்ளி தானே... அதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க..." என்று மற்றொருவன் கேட்க,

"சார் நீங்க மினிஸ்டர் பெண்ணை ஒரு ஆதாயத் துக்காகத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டிங்களா... அவங்களால உங்களுக்குப் பதவி உயர்வு, சொத்து இது எல்லாம் கிடைக்கவா...?" என்று இன்னொருவன் கேட்க,

அவர்கள் அனைவரையும் பார்த்து "இத்தனை நாள் மயூரா மினிஸ்டரோட பொண்ணு... ஆனால் இந்த நொடியிலிருந்து இவள் மிசஸ். மயூரா வெற்றிச் செல்வன்... எனக்கு இவளோட அப்பாவோ, அவரோட சொத்தோ, பதவியோ எதுவும் தேவை இல்லை... என் மனைவியாகிய அவளும், அவள் தந்தையைத் தேடிப் போகமாட்டாள்..." என்ற அவர்களின் கேள்விக்கு ஒரு பதிலில் அடக்கி விட்டு, மயூராவிற்கும் மறைமுகமாக ஒரு கட்டளையைப் பிறப்பித்துவிட்டு, அவர்களை விலக்கி நடந்து அவன் வண்டிக்கு வர,

அவன் கழுத்தில் இருந்த மாலையைக் கழற்றி, பின் சீட்டில் தூக்கி எறிந்து அவனின் போலேரோவை ஸ்டார்ட் செய்து, ஆக்சிலரேடரை உறும, மயூரா அதில் ஏறவும் வண்டி சீறிக் கொண்டு பாய்ந்தது.

வரும் வழியில் சொல்லமுடியாத ஒரு அமைதி இருவருக்குள்ளும் நிலவ, மயூராவிற்கு அப்பத்திரிகை யாளர்கள் கேட்ட கேள்வி தற்பொழுது யோசிக்க யோசிக்கத் தான் செய்தது பிழையோ என்ற எண்ணம் எழுந்தது.

தன்னுடைய காதலுக்காக அவனின் நேர்மையையும், தன்மானத்தையும், இத்தனை நாள் அவன் வாங்கியிருந்த நற்பெயரையும் பலி கொடுத்து விட்டோமோ என்ற எண்ணம் எழுந்தது.

நாம் செய்திருக்கும் பிழையினால் அவன் கண்டிப்பாக தன்னிடம் கோபம் கொண்டிருப்பான். அதை மறந்து உடனே தன்னிடம் இழைய வேண்டுமென்று அவள் நினைக்கவில்லை.

இருந்தாலும் தான் எதற்காக அவனை இத்தனை பாடுபட்டு மணந்தாலோ, அதேபோல் அவனுக்கு ஒரு நல்ல துணையாக இருக்க வேண்டுமென்று உறுதி பூண்டாள்.

கார் வெற்றியின் வீட்டில் நிற்க அவன் வேகமாக இறங்கி மறுபக்கம் கதவைத் திறந்து அவளின் கைகளை இறுக்கமாக பற்றி உள்ளே இழுத்துக் கொண்டு போனான். அவன் பிடியில் மயூவிற்குக் கை எலும்புகள் முறிந்துவிடும் போல் இருந்தது.

"வெற்றி, கையை விடுங்க... ரொம்ப வலிக்குது..." என்ற அவள் கெஞ்சலுக்கு அவன் செவி சாய்க்காமல் அவளைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் ஹால் சோபாவில் தள்ளிக் கதவை அடைத்தான். அவன் கண்கள் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

"நான் உன்னைக் காதலித்து ஏமாத்தினேனா...?" என்றான், அவளை நேருக்கு நேர் பார்த்தவாறு.

அவனின் இந்த நேரடித் தாக்குதலில் அவள் தலை குனிந்தாள். அவள் முகவாய் பற்றி "என்னைப் பார்த்து பதில் சொல்லு...?" என்றான்.

தலையை நிமர்த்தி "ஏமாத்தல... ஆனால் நீங்க என்னைக் காதலிக்கலைன்னு மட்டும் சொல்லாதீங்க..." என்றாள், அவளும் அவனுக்கு இணையாக.

"நான் உன்னைக் காதலிச்சேன் தான்... ஆனா இன்னைக்கு நீ பண்ணி வைச்ச இந்தக் காரியத்துக்கு உன்னை நான் முழுசா... அடியோட வெறுக்கிறேன்..." என்று தன் குரலை உயர்த்திக் கத்தினான்.

"வெற்றி, நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க... உங்க கிட்ட நான் என் மனதிலிருப்பதைச் சொல்லி, அதுக்கு அப்புறமா ஒரு முடிவு எடுக்கலாம்னுதான் நேத்து நான் வரச் சொன்னேன்... ஆனால் எங்கப்பா... எனக்கே தெரியாம, என்னைக் கேட்காமலயே நேத்து நிச்சயதார்த்தம் பண்ணிட்டார்... எனக்கு என்ன பண்றதுன்னு புரியல... அதான்..."

"அதுக்கு... அப்படி என்ன உனக்கு என் மேல காதல்... நாம என்ன வருஷக் கணக்காவா லவ் பண்ணிட்டு சுத்திட்டு இருக்கோம்... ஒரு ரெண்டு மூணு தடவை சந்திச்சிருப்போம்... அதுக்குள்ள உனக்கென்ன பொல்லாத காதல்... மறந்துட்டு உங்கப்பா சொன்ன எவனையாவது கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... நீ பண்ணின இந்தக் காரியத்துக்கு நான் கொடுத்தது பெரிய விலைடி...

"ச்சு... இதுவரைக்கும் என் முன்னாடி நின்னு எவனும் கேள்வி கேட்டதில்ல... இன்னிக்கி... இன்னிக்கி... உன்னால உங்கப்பன் என்னமோ என்னை அனாதைங் கிறான்... எவன் எவனோ மைக்கைக் கையில் வெச்சுட்டு கேள்வி கேட்கிறான்... இது... இது எல்லாம் உன்னால தான்டி..." என்று அவளை நெருங்கி வர,

அவள் கன்னத்தில் அவள் தந்தையின் கை விரல்கள் பதிந்திருந்தது.

அவனுக்கு வந்த ஆத்திரத்தை கட்டுக்குள் கொண்டு வந்து தன்னைச் சமாதானப்படுத்தினான்.

"இப்படி எல்லாரையும் நோகடிச்சுட்டு உனக்கு எதுக்குடி இந்த வேலை எல்லாம்... போ... என் முன்னாடி நிக்காதே... போய்டு..." என்று அவன் கண்ணை மூடிக் கொண்டு சோபாவில் சரிந்தான்.

மயூராவிற்கு அவனின் தோற்றம் நெஞ்சில் வலியைக் கொடுத்தது.

ஆனால் காயம் சரியாக வேண்டுமென்றால் கசப்பான மருந்தை உண்டு தான் ஆக வேண்டும். அவளுக்கு நன்றாகவே தெரியும், அவன் தன் மேல் உள்ள பிரியத்தினால்தான் இப்படிப் பேசியது.

தன்னால் அவனுக்கு உண்டான வலியைத் தான்தான் குணப்படுத்த வேண்டுமென்ற நினைப்புடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

8

வெற்றி, நேரம் போனதையே அறி யாமல் நடந்தவைகளை எண்ணி அமர்ந்த நிலையில் அவன் சிந்தனையில் மூழ்கி யிருந்தான்.

வெகு நேரம் அவன் அப்படியே அமர்ந்திருக்க, மயூராவிற்கு 'தன்னால்தானே...!' என்ற குற்ற உணர் வினால் அவள் நெஞ்சம் வலித்தது.

அவன் யோசனையைக் கலைக்க எண்ணி அவன் அருகில் வந்து கையைத் தொட்டாள். அவளின் சூடான கைகள் அவனின் இறுகிய மேனியைத் தொட, சிலிர்த்துக் கொண்டு எழுந்தான்.

அவள் தொட்ட கையை உதறி விட்டு, "என்ன...?" என்று எரிந்து விழுந்தான்.

அவனின் செய்கையில் மயூரியின் கண்கள் மருண்டு விழிக்க, "என்னன்னு கேட்டேன்..." என்று மீண்டும் எரிச்சலை வெளிப்படுத்த,

"ப... பசிக்குது வெற்றி... நேத்து நைட் சாப்பிட்டது..." என்றாள் பாவமான குரலில்.

அவளின் குரலில் அவனுக்குச் சுருக்கென்று இருந்தது. அவனுக்கு அவள் மேல் அளவுக்கு அதிகமான கோபம்தான். என்ன கோபம் இருந்தாலும் இப்பொழுது அவள் இவன் மனைவி ஆகிவிட்டாள். இனி அவளின் சுகமும் துக்கமும் தன்னைச் சார்ந்தது என்ற நிதர்சனம் உரைக்க, "சே... சாரி... கொஞ்சம் இரு. ஏதாவது வாங்கிட்டு

வரேன்..." என்று உள்ளே எழுந்து சென்று உடை மாற்றிக் கொண்டு, "கதவை லாக் பண்ணிக்கோ..." என்றதுடன் வெளியே புறப்பட்டான்.

அவன் அவர்களுக்கான இரவு உணவை வாங்கிக் கொண்டு வீட்டுக் கதவை தட்ட, மயூரா வந்து கதவைத் திறந்தாள்.

அவள் நின்றிருந்த கோலம் வெற்றியை தடுமாறச் செய்ய "எ... என்ன... இப்படி நின்னுட்டு இருக்க..." என்றான்.

அவள் மேல் இருந்த கோபம் அந்நொடியில் மறந்து அவன் தடுமாறி நிற்க காரணம், அவள் மனைவி குளித்த ஈரத்தலையுடன் அவனின் சட்டையும், ஒரு கைலியையும் கட்டியிருந்தாள்.

அவளின் மேனியிலிருந்து வந்த வாசம் அவனின் சோப்பின் மணம்.

எண்ணம் ஜெட் வேகத்தில் பறக்க, பறந்த எண்ணங் களை சிரமப்பட்டு அடக்கினான்.

தடுமாறிய அந்நொடியை மறைக்க "ஹே... இப்போ எதுக்கு என்னோட டிரெஸ்ஸைப் போட்டுருக்க..." எனவும்,

"என்கிட்ட வேற எந்த ட்ரெஸ்ஸும் இல்ல மச்சான்... சாரி சாரி வெற்றி..."

"என்னது மச்சானா... இந்த மாதிரி எல்லாம் கூப்பிடாத...!" என்றான் கண்டிப்புடன்.

அவள் அப்பாவியாக, "சரி..." என்றாள்.

அவளின் அப்பாவித்தனம் எதையோ உணர்த்தியது. அவளின் இந்தக் கள்ளத்தனத்தை அவளுடன் பழகியவர்கள் உடனே அறிந்து கொள்வர். ஆனால் நமது அயர்ன் மேன் அவளின் குறும்புத்தனத்தை அறியாத பச்சை மண்ணாயிற்றே...!

"வழியை விடு..." என்று அவன் உள்ளே வந்து டைனிங் டேபிளின் மேல் உணவுப் பொட்டலத்தை வைக்க, "சாப்பிடு..." என்றதுடன் அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

"நீங்க சாப்பிடலையா..." என்று அவள் உண்மை யான கரிசனையுடன் கேட்க,

அவளை ஒரு மாதிரிப் பார்த்தவாறு, "நான் சாப்பிட் டாச்சு..." என்று அவன் டிவியில் ஒரு நியூஸ் சேனலை போட்டு உட்கார, மயூராவின் கெட்ட நேரம் அவர்களின் திருமணத்தைப் பற்றிய செய்தி ஒளிபரப்பாக...

வெற்றிக்கு மறந்திருந்த கோபம் இப்பொழுது மீண்டும் வர மயூவிற்கு, "ஹய்யோ... திரும்பவும் வேதாளம் முருங்க மரம் ஏறிடுச்சே...!" என்று சலித்துக் கொண்டது.

வெற்றி கடுப்புடன் டிவியை அணைத்து விட்டு இவளை முறைத்துக் கொண்டு அவனின் அறைக்குள் செல்ல, "சே... கல்யாணமாகி முதல் நாள் அவனுடன் அமர்ந்து சாப்பிட முடியலையே என்று கவலை

கொண்டிருந்த மனம், இப்பொழுது அவனின் கோபத்தினால் மேலும் கவலை கொண்டது.

இன்னொரு மனமோ, 'என்னமோ ரெண்டு பேரும் ஆசைப்பட்டுக் கல்யாணம் பண்ணின மாதிரி இப்போ எதுக்கு இப்படி ஏங்குற...? நடக்காததை நினைத்து வருந்தாமல் வேதாளத்தை மீண்டும் முருங்கை மரத்திலிருந்து கீழே கொண்டு வர வழியைப் பாரு...' என்று குமட்டில் இடிக்க, வேகமாக உணவை முடித்துக் கொண்டு அவனின் அறைக்குச் சென்றாள்.

அவன் உறங்குவதற்காகப் படுக்கையை சரி பண்ண, இவள் வந்து அறை வாசலில் நின்றதும், "என்ன..." என்றான்.

"தூங்கணும்..." என்றாள்.

"தூங்கு... அதுக்கு எதுக்கு இங்க வந்து நிக்கிற..." என்றான் தன் எரிச்சலை அடக்கிய குரலில்.

"ம்ம்... பின்ன வேற எங்க தூங்குறது..." என்றாள் அவளின் வழக்கமான கீண்டல் குரலில்.

காலையில் இவள் செய்து வைத்த வேலையைச் சுத்தமாக மறந்துவிட்டு அவனிடம் குறும்பு பேசுவதை அவள் மிகவும் ரசித்தாள்.

"ஹே... லூசு... அதான் பக்கத்துல அவ்வளோ பெரிய ரூம் இருக்கு இல்ல... அப்புறம் என்ன.... சும்மா என் முன்னாடி நின்னு என்னோட எரிச்சலைக் கிளப்பாமல் போ..." என்றான்.

"அங்க என்னால தனியாப் படுக்க முடியாது... நான் இங்கயே படுத்துகிறேன்..." என்று விறுவிறுவென அவன் கட்டிலின் மறுபுறம் வந்து படுத்துக் கொள்ள, அவன் தலையில் அடித்துக் கொண்டு அந்த அறைக்குச் செல்ல எத்தனிக்க, "ப்ளீஸ்... ம்ம்... வெற்றி... இங்கயே படுங்க... புது இடம்... எனக்குப் பழக்கமாகும் வரை... என் கை கூட உங்க மேல படாது... உங்க கற்புக்கு நான் கேரண்டி..." என்று அவள் சொல்லிய விதத்தில் அவனுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "லூசு பேசாம தூங்கு..." என்று அந்தச் சிறிய படுக்கையில் அவர்கள் இருவரின் நடுவே ஒரு தலையணையைப் போட்டுக் கொண்டு படுத்தான்.

அவளோ படுத்த வினாடியில் மனதில் எந்த சஞ்சலமும் இல்லாமல் உறங்கி விட்டாள்.

"பண்றது எல்லாம் பண்ணிட்டு எப்படி வாயை விடறா பாரு..." என்று அவன் காதல் மனது அவளைக் கொஞ்ச, என்னதான் அவள் செய்தது தப்பென்றாலும், நேற்று இரவு தனக்கு கிடைக்காது என்று நினைத்தவன் இன்று தன் படுக்கையில் தன் மனைவியாக படுத்திருந்த திருப்தியில் அவனும் உறங்கி விட்டான்.

நடு இரவில் ஏதோ தொப்பென்று கீழே விழும் சத்தம் கேட்கவே வெற்றி பதறி அடித்துக் கொண்டு இரவு விளக்கைப் போட்டுவிட்டு எழுந்து சுற்றுமுற்றும் பார்க்க,

அருகிலிருந்த மனைவியைக் காணாமல் தேட, அவளோ அந்தப் பக்கம் கீழே விழுந்திருந்தாள்.

அவனுக்குச் சிரிப்பு பிறீட்டுக் கொண்டு வர, அதை அடக்க வழி தெரியாமல் அவன் வாய் விட்டு சிரித்து வைக்க, இடியே விழுந்தாலும் நான் எழமாட்டேன் என்ற கொள்கையுடன் உறங்கிக் கொண்டிருந்தாள் அவன் மனையாள்.

மனம் விட்டு சிரித்தவன், "எப்படி விழுந்து வச்சு ருக்க... ஏதாவது அடி பட்டிருந்தா என்ன ஆகியிருக்கும்..." என்று அவளுக்காக நினைத்துவிட்டு கட்டிலிலிருந்து கீழ் இறங்கி அவளைத் தூக்கிப் படுக்கையின் நடுவில் கிடத் தியவன், மேலேறியிருந்த அவள் உடைகளைச் சரி செய்துவிட்டு, ஒரு குழந்தைக்கு வைப்பது போல, அவள் தலைக்கு ஒரு தலையணையை வைத்துவிட்டு, மறுபுறம் படுத்துக் கொண்டான்.

இந்தச் செயல்கள் யாவும் அவனுக்கொரு புது உணர்வைக் கொடுக்க அதை ரசித்தவாறு உறங்கி விட்டான்.

மீண்டும் பாதி இரவில் ஏதோ கை தன் மேல் படவும் திரும்பிப் பார்க்க, மயூராவின் கையும் காலும் அவன் மேல் படர்ந்திருந்தது. அவனுக்கு இப்பொழுது சந்தேகம் வந்துவிட அவளை உற்றுநோக்கியவன் அவளின் சீரான மூச்சைக் கண்டு "உண்மையாலுமே தூங்குறா போல..." என்று நினைத்துக் கொண்டவன் அவளின் தீண்டல் தந்த சுகத்தில் உறங்கிப் போனான்.

வழக்கம் போல் நேரமே விழித்த வெற்றிக்கு ஏதோ மார்பின் மேல் கனமாக இருப்பதை உணர்ந்தவன் கீழே பார்க்க... அவனின் மார்பெனும் மஞ்சத்தில் குழந்தையாக உறங்கிக் கொண்டிருந்தாள் அவன் மனையாள்.

அவனுக்கு இந்த நிலையைக் கண்டு உதட்டில் புன்னகை தோன்ற, மெல்ல அவளை விலக்கி கட்டிலில் சாய்த்துவிட்டு அவன் காலை வேளை ஜாகிங் செல்ல ரெடியாகி வர,

மெல்ல அவள் தாமரை விழிகளைப் பிரித்தாள் மயூரா, கூடவே "அம்மா... பால்..." என்ற கொஞ்சலுடன்.

அவ்வளவுதான்... வெற்றிக்கு இரவு... ம்ஹ்ம்ம்... ஏன் சற்று முன்னர்வரை இருந்த மனநிலை முற்றிலுமாக மறந்து போக, இப்பொழுது அவன் மனம் முழுவதும் கோபம் குடி பெயர்ந்தது.

"உங்க வீட்டு சொகுசு எல்லாம் இங்க கிடைக்காது...." என்ற அவன் குரலில் அடித்துப் பிடித்து எழுந்த மயூரா தான் எங்கிருக்கிறோம் என்று உணர்ந்து,

"சாரி சாரி... அயாம் வெரி சாரி..." என்று மன்னிப்புக் கேட்க,

அவன் அவளை முறைத்துவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். அதற்குள் எழுந்து அவள் முகம் கழுவி விட்டு மெல்ல அவன் முன்னால் வந்து "எனக்கு ப்ரஷ்... அப்புறம் பால், அப்புறம் கொஞ்சம் காய் எல்லாம் வாங்கிட்டு வரீங்களா....? நானே சமைச்சுடுறேன்..." என்று கேட்க,

"என்னை என்ன உங்க வீட்டு வேலைக்காரன்னு நினைச்சியா...?" என்றான்.

"ஏங்க இப்படி எல்லாம் சொல்லறீங்க... என்னால எப்படி இந்த டிரெஸ்ஸோட போக முடியும்...?" என்று அவள் அப்பாவியான முகத்துடன் கேட்க,

வெற்றி எதுவும் சொல்லாமல் வெளியேறிவிட்டான்.

அவன் போவதையே பார்த்திருந்தவள் "ரொம்பக் கஷ்டம்..." என்று மனம் சோகமாகி விட, 'தளர்ந்து போகாதே மயூ... விடா முயற்சி... விஸ்வரூப வெற்றி...' என்று அவள் அவளையே தேற்றிக் கொண்டாள்.

அவனது வழக்கமான ஜாகிங்கை முடித்தவன், அவன் பல்சரை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வர, வரும் வழியில் ஒரு மளிகைக் கடையைப் பார்த்தவன்... மனைவி சொன்னது ஞாபகம் வந்து, வண்டியை நிறுத்திவிட்டு கடைக்குச் செல்ல, அவனின் கம்பீரமான உடற்கட்டும், அவனின் முடி வெட்டும் அவன் ஒரு போலீஸ் என்று சொல்லாமல் சொல்ல, அந்தக் கடைக்காரர் அவன் ஏதோ விசாரணை பண்ண வருகிறான் என்று பீதியில் நின்றிருக்க வெற்றி அவனிடம் "ஒரு லிட்டர் பால் கொடுங்க... அப்புறம் எல்லாக் காய்களிலேயும் ஒவ்வொரு கிலோ கொடுத்துருங்க..." எனவும்,

பயந்திருந்த அந்தக் கடைக்காரன் இவன் லிஸ்ட் போடவும் "சார்... என்ன உங்க வீட்டம்மா உத்தரவா..." என்று கிண்டலடிக்க,

"யோ... கேட்டதைக் குடுய்யா..." என்று அவனிடம் எரிந்து விழுந்தான்.

"எல்லாம் அவளால... என்னை எவன் எவனோ கிண்டல் பண்றான்..." என்று அதற்கும் அவளை வசைபாடிக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அவளிடம் வாங்கியதைக் கொடுத்து விட்டு, அவளை முறைத்தவாறே மொட்டை மாடிக்குச் செல்ல எத்தனிக்க,

"அச்சோ... எதுக்கு இவ்ளோ காய். இது என்ன நம்ம ரெண்டு பேருக்குமா, இல்லை இந்தத் தெருவுக்கேவா..." என்று மேலும் அவனைக் கடுப்பேற்ற,

"சும்மா என் வாயைப் பிடுங்காதே..." என்று அவளைக் குதறாத குறையாகச் சென்றுவிட,

'ஹய்யோ... மச்சான் ரொம்ப கூடா இருக்காரு போல...' என்று மனதில் நினைத்து விட்டு அவள் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள்.

அவன் தன் உடற்பயிற்சியை முடித்துக் கொண்டு கீழே வர, "என்னங்க... உங்களுக்கு டீயா? காபியா?" என்றதும் அவன் பற்களை நறநறவெனக் கடிக்கும் சத்தத்தில், "சாரிங்க... எனக்குத் தெரியாதில்ல. அதான்... இப்போ காபி போட்டிருக்கேன். இன்னிக்கு இதைக் குடிச்சுக்கோங்க..." என்றதும் அவன் தலையில் அடித்துக் கொண்டு நகர்ந்தான்.

அவன் குளித்து முடித்து வரவும், "என்னங்க... எனக்கு எந்தெந்த திங்க்ஸ் எங்க இருக்குனு தெரியலை.

அதனால இன்னிக்குத் தக்காளி சாதம் பண்ணி யிருக்கேன். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க. வாங்க சாப்பிடுங்க...” என்று அவனுக்கு டைனிங் டேபிளில் தட்டு எடுத்து வைக்க, அவனோ அவளை மதிக்காமல் அவனின் சட்டை பட்டனை மாட்டிக் கொண் டிருக்க...

“என்னங்க... வாங்க ப்ளீஸ்...” என்று கையைப் பிடித்து அமர வைத்தாள்.

அவளின் இச்செயல் அவனை உண்மையான கோபத்திற்கு ஆளாக்கியது.

அவள் பற்றிய கையை எடுத்தவன், பொறுமையாக, “என்ன பண்ண ட்ரை பண்ற மயூரா?” என்றான், அமைதியான குரலில்.

அவன் குரலில் இருந்த ஏதோ ஒன்று மயூராவைத் தாக்க அவள் அமைதியாக நின்றாள்.

“சீ... நடந்ததை எல்லாம் என்னால ஒரு நாள்ல மறந்துட்டு உன் கூட உறவாட முடியாது...” என்று அவன் பட்டெனச் சொல்ல, அவளுக்கு முகத்தில் அறைந்தது போல் மனம் வலித்தது.

அவளைப் பொறுத்தவரை இதுதான் அவள் இயல்பு. அவளின் இயல்பை மாற்றிக் கொண்டு, இவனைப் போல் இறுக்கமாக இருக்க அவளால் முடியாது. அவன் இப்படிக் கேட்டபின் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அமைதியாக அவ்விடத்தை விட்டு நகர்ந்து அறைக்குள் புகுந்து விட்டாள்.

அவன் கிளம்பி மீண்டும் அவளைத் தேடி அறைக்கு வர, அவளோ காலை மடக்கி, அதில் அவளின் முகத்தை மறைத்துக் கொண்டு அமர்ந்திருந்த கோலம் அவனுக்கு, ‘கொஞ்சம் அதிகமாப் பேசிட்டோமோ...’ என்று எண்ணத் தோன்றியது.

ஆனாலும் அவள் பண்ணி வைத்த வேலைக்கு நாம் பேசியதில் எந்தத் தவறுமில்லை என்று அவன் செய்த செயலை நியாயப்படுத்தி விட்டு, அவள் அருகே வந்து, “மயூரா...” என்றதற்கு, அவளிடம் எந்தப் பதிலும் இல்லாமல் போக,

“மயூரா...” என்ற அழுத்தமான அழைப்பில் முகம் நிமிர்த்திப் பார்த்தாள். அழுதிருப்பாள் போல... அவள் கன்னங்கள் நனைந்து, அவளின் குண்டுக் கண்கள் சிவந்திருந்தது.

அதைக் கண்டுகொள்ளாமல், “இந்தா...” என்று ஒரு கார்டை நீட்டியவன்,

அதை வாங்கியவள், அது ஏ.டி.எம். கார்டாக இருக்க... “இது எதுக்கு எனக்கு?” என்றாள் கம்மிய குரலில்.

“தெருமுனையில இருக்கிற ஆட்டோக்காரரை வரச் சொல்றேன். போய் உனக்கு டிரஸ், அப்புறம் உனக்குத் தேவையானது எல்லாம் வாங்கிட்டு வந்துக்கோ. இந்தா இதுதான் ஏ.டி.எம். பின்...” என்று அத்துடன் அவளுடன் பேச்சு முடிந்து விட்டது என்று அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் பின்னாலே சென்றவள், "நீங்களும் வாங்க... ரெ..." என்று அவள் தொடங்கவும்,,

"உனக்கு வேணும்னா போய் வாங்கிக்கோ. இல்லன்னா இப்படியே இரு..." என்று அவன் கோபமாச் சென்று விட்டான். அவள் செய்த உணவை அவன் பெயருக்குக் கூடத் தொட்டுப் பார்க்கவில்லை. அவன் சென்றது, மனம் வலித்தாலும் தான் செய்ததற்கு இது தேவைதான்... என்று தன்னையே திட்டிக் கொண்டாள்.

'ஹ்ம்ம்.. கடைசியில எனக்கு டிரஸ் வாங்கித் தரணும்னு தோணுச்சே... அதுவரைக்கும் நல்லதுதான்...' என்று அவனின் சிறு செயலில் தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டாள்.

ஆனால் பாவம், அவளுக்கு என்ன தெரியும்... ராத்திரி இவள் செய்து வைத்த கூத்தில்... இவள் ஆடை விலகியதில் அவனின் மனம் தறிகெட்டு ஓடியதன் விளை வால்தான் அவளை உடை எடுக்கச் சொன்னதென்று...

9

அவளுடன் சண்டையிட்டு விட்டு அலுவலகத்திற்கு வந்த வெற்றியை நேற்றையச் சம்பவத்தின் மிச்சம் மீதியிருந்த கேள்விகளைக் கேட்க வேண்டி பத்திரிகை யாளர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

அவர்களின் சராமாரியான கேள்விகளை எதிர் கொண்டவன்... ஒற்றைப் பதிலாக, "என்னோட பர்சனல்

பற்றிய கேள்வியைத் தவிர்த்து விட்டு, நமது நகரின் பிரச்சனையைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன்," என்று அவன் முடிக்க, அதற்கு மேல் அவர்களால் எதையும் கேட்க முடியவில்லை.

ஒரு வழியாக அவர்களைச் சமாளித்து விட்டு, அலுவலகத்தினுள் செல்ல...

அங்கே பெரிய அதிகாரி முதல் சிறு கான்ஸ்டபிள் வரை அவனைக் கேலி முகத்துடன் பார்க்க... அவனுக்கு எரிச்சலாக வந்தது.

இவை எல்லாவற்றிற்கும் காரணமானவளை நினைக்க... நினைக்க... அவளின் மேல் கட்டுக்கடங்காத கோபம் பெருகி வழிந்தது.

வெற்றியின் சொல்படி அந்தத் தெருமுனை ஆட்டோக்காரன் இவளை அழைத்துச் செல்ல வந்து விட்டான்.

மயூரா முந்தின நாள் அணிந்திருந்த உடையை அணிந்து கொண்டு அவனுடன் அவளுக்குத் தேவையானதை வாங்க காந்திபுரம் கடைத்தெருவுக்கு வந்தாள்.

கடைக்குள் வந்தவளுக்கு ஒரு சந்தேகம் வரவே, மீண்டும் வெளியே வந்து ஒரு பி.சி.ஓ.விலிருந்து வெற்றியின் நம்பருக்குப் போன் செய்ய, அவன் வேலை யாக இருந்தவன் ஏதோ அன்நோன் நம்பரிலிருந்து போன் வரவே யோசனையாக அதை எடுத்தான்.

எடுத்தவுடன், "ஹலோ வெற்றி..." என்ற அவள் குரல் ஒலிக்கவும்,

அவளுக்கு ஏதோ ஆபத்தோ என்று நினைத்தவன் சற்றுப் பதறி, "மயூரா... என்னாச்சு? ஏன் அன்நோன் நம்பரிலிருந்து கால் பண்றே... உன்னோட மொபைல் என்னாச்சு?" என்று அவன் முடிக்கும் முன் அவனின் பதட்டம் குரலில் நன்கு வெளிப்பட்டது.

அவன் பதட்டத்தை மயூவின் மைண்ட் எனும் கம்ப்யூட்டர்ஜி மனது எனும் ஃபோல்டரில் ஸேவ் செய்து கொள்ள.. அவள் பேச்சைத் தொடர்ந்தாள்.

"என்னோட மொபைல் என்கிட்ட இல்லை வெற்றி. அதை நான் வீட்லயே வைச்சுட்டு வந்துட்டேன். சரி இப்பா எனக்கு ஒரு டவுட்..." எனவும்,

அவளுக்கு ஏதோ என்று பயந்தவன்.. . இப்பொழுது ஒன்றுமில்லை என்று அறிந்தவுடன், குரலில் வலுக்கட்டாயமாகக் கடுமையைக் கொண்டு வந்து, "என்ன டவுட்?" என்றான்.

"அது... நீங்க என்னை ஷாப்பிங் போகச் சொன்னீங்க இல்ல. நான் இங்க காந்திபுரம் வந்துட்டேன். பட் உங்க அக்கவுண்ட்ல எவ்ளோ பாலன்ஸ் இருக்குன்னு தெரிஞ்சுக்கணும். அப்போதான் என்னால ஷாப்பிங் பண்ண முடியும்..." என்று சீரியசாகச் சொல்ல, இவனுக்கு இந்தப் பக்கம் கடுப்பேறியது.

"இவளை... என்ன சொன்னாலும் திருந்தவே மாட்டா..." என்று மனதில் நினைத்தவன்,

"ஹே லூசு... உன்னை..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவன், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "அது என்னோட சேலரி அக்கவுண்ட். இந்த மாசம் சம்பளம் முழுசா அப்படியே இருக்கு. உனக்கு வேணுங்குறதை வாங்கிக்கோ..." என்று அவன் பொறுமையாகச் சொல்ல,

அப்படி எல்லாம் உன்னைப் பொறுமையாக இருக்க விடுவேனா... என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் நம் கதாநாயகியோ, "எவ்ளோ செட் டிரஸ் எடுக்கட்டும்? அப்புறம் உங்க சேலரி ஃபுல்லா காலி ஆயிடுச்சுன்னா இந்த மாதம் நாம எப்படிச் சமாளிக்கிறது... பட்ஜெட்ல துண்டு விழுந்துடுச்சுன்னா கஷ்டமில்லையா?" என்று அவள் பொறுப்பான குடும்பத் தலைவியாகக் கேட்டு வைக்க,

"அடியே... என் பொறுமையை ரொம்பச் சோதிக்கிற. நான் ஒண்ணும் அவ்வளவு கஷ்டத்துல இல்லை. இத்தனை நாள் சம்பாதிச்சது வேற ஒரு அக்கவுண்ட்ல இருக்கு. அதை வெச்சு நீ உன் குடும்பத்தை நடத்திக்கோ..." என்று அவன் அங்கு பற்களைக் கடிப்பதைக் கண்டு கொள்ளாமல்,

"ஹ்ம்ம்... அப்போ சரி..." என்று சமாதானம் அடைந்தவள், "சரி. நான் வைக்கிறேன்," என்றவளை,

"ஒரு நிமிஷம்..." என்று தடுத்தது, அவன் குரல்.

"ம்ம்... சொல்லுங்க வெற்றி!" என்று அவன் தன்னை அழைப்பதில் ஆனந்தம் அடைந்தவள்,

"ஒரு செல்போன் வாங்கிக்கோ...." என்றதும்,

"ஹைய்... என்ன பிராண்ட்?" என்று குதூகலித்தாள்.

"ஹலோ... உங்க அப்பன் மாதிரி என்னால ஐ-போன் எல்லாம் வாங்கித் தர முடியாது. நல்லதா ஒரு போன் விலை கம்மியா வாங்கிக்கோ..." என்றான்.

"ஹய்யோ வெற்றி... நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். நான் எவ்ளோ பணத்தை மிச்சம் பண்ணிக் கொண்டு வர்றேனு பாருங்க. நீங்களே என்னைப் பாராட்டுவீங்க..." என்று சவால் விட்டவள், "ஓ.கே. பை... வெற்றி. சீக்கிரமா உங்க வேலையை முடிச்சுட்டு வீட்டுக்கு வந்துருங்க..." என்று அவள் ஆசை மனைவியாகச் சொல்ல, அவன் பட்டென போனை டிஸ்கனெக்ட் செய்தான்.

"என்ன பொண்ணுடா இவ... இப்படிப் போட்டுப் படுத்தி எடுக்குறா... பூவென்று தொட்டுப் பார்க்கவும் முடியவில்லை. விஷமென்று ஒதுக்கவும் முடியவில்லை..." என்று தலையில் கை வைத்துக் கொண்டான்.

அங்கே அவளோ அவனை, "முசுடு..." என்று செல்லமாகக் கொஞ்சியவள், கடைக்குள் சென்றாள்.

அவளுக்குத் தேவையானவைகளை வாங்கிய பின் வெற்றிக்கும் ஏதாவது வாங்க வேண்டுமென்று நினைத்தவள், அந்தக் கடையில் மென்ஸ் செக்ஷனுக்குள் சென்று ஆடையைத் தேர்வு செய்ய, அவள் பின்னால் இருந்த ஒரு குரல், "மயூ..." என்று அழைக்க, அந்தக் குரலுக்குச் சொந்தக்காரன் யார் என்று அறிந்தவள்,

புன்னகை முகத்துடன் திரும்பி, "ஹே அர்ஜுன்... சொல்லுடா. உன்னை இங்க எதிர்பார்க்கவே இல்லை... ஷாப்பிங்கா" என்று சாதாரணமாகக் கேட்க,

அவனோ அவளை எரித்து விடும் பார்வையுடன் அவள் கைகளைப் பற்றித் திருப்பி, "செய்யறது எல்லாம் செஞ்சுட்டு, எப்படி உன்னால இவ்ளோ சாதாரணமாப் பேச முடியுது மயூ...." என்று கோபமாகக் கேட்டான்.

"என்ன செஞ்சுட்டேன்... எதுக்கு இப்போ இப்படிக் கோபப் படற அர்ஜுன்..." என்றாள் அதே குரலுடன்.

"நீ என்ன செஞ்சேனு அதுக்குள்ள மறந்துட்டியா மயூ... இப்படி ஒரு முடிவை எடுக்கும் முன்னாடி, பின்விளைவுகளைப் பற்றிக் கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தியா... அங்கிள், ஆன்ட்டி எவ்ளோ கஷ்டப்படுறாங்க தெரியுமா... ராஜி ஆன்ட்டி நேற்றுக் காலையில் நியூஸ் பார்த்துட்டு உன்னை நினைச்சு அழ ஆரம்பிச்சாங்க. இன்னும் நிக்கலை.

"அங்கிள் என்னடான்னா இனிமேல் நீ அவரோட பொண்ணே இல்லைன்னு கத்திட்டு இருக்காரு. ஏன் இப்படிப் பண்ணின மயூ..." என்று கோபமாக ஆரம்பித்தவன், ஆற்றாமையுடன் முடித்தான்.

அவள் மௌனத்தையே அவனுக்குப் பதிலாகக் கொடுக்க, "ஏதாவது பேசு மயூ... ஏன் இப்படி ஊமை மாதிரி இருக்க..." என்றான்.

"என்னை என்ன பண்ணச் சொல்ற அர்ஜுன்... நீதான் சொன்ன... எப்படியும் என்னோட விருப்பத்திற்கு

எங்க அப்பா ஒத்துக் கொள்ள மாட்டார்னு. வெற்றியும் பிடிவாதக்காரர். நிச்சயமா இதற்குச் சம்மதிக்க மாட்டார்னு சொன்ன. அதுதான் உண்மையும் கூட. எனக்கு வேற வழி தெரியலை. அதான்..." என்று தலை குனிந்தவாறு சொல்லியவளைப் பார்த்து,

"சரி. அடம் பண்ணி வெற்றியைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட. நீ என்ன சந்தோஷமாவா இருக்க... எனக்கு நிச்சயமா தெரியும். வெற்றி கண்டிப்பா இந்தக் கல்யாணத்தை ஏத்துக்க மாட்டார். அவரை எப்படிச் சமாளிக்கப் போற...

"அட்லீஸ்ட் நீ அவரையாவது கன்வின்ஸ் பண்ணிட்டு கல்யாணம் பண்ணிக்கலாம்தானே. அவர் மேலயும் அபாண்டமா பழியைப் போட்டு... இது எல்லாம் தேவையா மயூ... இது அவரோட கேரியர்ல எவ்ளோ பெரிய ப்ளாக் மார்க் தெரியுமா... ஏதும் பண்ணும் முன் யோசிச்சுச் செய்ய மாட்டியா...?" என,

"எனக்கு இது எல்லாம் தெரியாமலா இருக்கும் அர்ஜு... நான் நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவை எடுத்தேன். எனக்கு அவரைப் பற்றி நல்லாத் தெரியும். இந்த விஷயத்தை மனசுல வெச்சுட்டு முடங்கிப் போக மாட்டார். இந்த விஷயத்தை எல்லாரும் சீக்கிரமா மறக்கிற மாதிரி பெருசா ஏதாவது அச்சீவ் பண்ணுவார்..." என்று அவனைப் பற்றிப் பெருமையாகச் சொல்ல,

"அது ஓ.கே. பட், உன்னோட மேரேஜ் லைஃப் எப்படி இருக்கப் போகுது. எனக்கு உன்னோட லவ்

லைஃப் பற்றி நினைச்சாலே ரொம்பக் கஷ்டமா இருக்கு மயூ..." என்று நல்ல நண்பனாக அவளுக்காகக் கவலைப்பட்டான்.

"ஹே கமான் அர்ஜு... நீ அதைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டாம். அவரைப் பற்றி எனக்குத் தெரியும். சீக்கிரமே அவரை என் வழிக்குக் கொண்டு வந்துடுவேன்..." என்றாள், அவனுக்குச் சமாதானமாக.

பின், "அவர் கூட பழகின இந்த நாள்ல எனக்கு ஒரு விஷயம் நல்லாப் புரிஞ்சுது அர்ஜு... அவர்... அவர் வேலையில்தான் பெரிய புலி, சிங்கம் எல்லாம்... ஆனால் இயல்பாக அவர் ஒரு குழந்தை மாதிரிடா. என்னைப் பார்க்கும்போது எல்லாம் அவர் கண்களில் வழியும் காதலை நான் பார்த்திருக்கிறேன் அர்ஜு... அந்த நம்பிக்கையில்தான் நான் இது எல்லாம் செஞ்சேன். இப்போ என் மேல கோபமாத்தான் இருக்கார். ஆனால் போகப் போக என்னால அவரை மாற்ற முடியும்..." என்றாள் நண்பனின் கவலை அறிந்து.

"என்னமோ மயூ... நீ சந்தோஷமா வாழணும். அதுதான் எனக்கு முக்கியம். நீ நல்லா இருந்தா... உன் மேல கோபப்பட்ட அப்பா கூடச் சமாதானமாகிடுவார்...." என்று அவள் தலையை வருடிச் சொல்ல...

"கண்டிப்பா அர்ஜு... நான் வெற்றியோட சந்தோஷமா வாழ்ந்து காட்டுவேன். வேணா பாரேன். நெக்ஸ்ட் இயர் எங்களோட குட்டிப் பாப்பாவை எங்க

அப்பாவும், அம்மாவும் மடியில வைச்சுக் கொஞ்சுவாங்க..." என்று உறுதியாக உரைத்தாள்.

"அது சீக்கிரமே நடந்தா என்னை விட அதிகமா சந்தோஷப்படப் போறது யாரு மயூ..." என்றான், அவள் தலை கோதியவாறு.

"சரி அர்ஜு... எனக்கு டைம் ஆச்சு. என்னோட ஹப்பி எனக்குப் பர்சேஸ் பண்ண கார்டு எல்லாம் கொடுத்திருக்கார் பார். இதுவே எனக்கு ஒரு பெரிய முன்னேற்றம்தான்..." என்று கண்ணடித்துச் சொல்ல,

"பெரிய சாதனைதான் போ..." என்று வியந்தான்.

"அம்மாவைப் பார்த்துக்கோ அர்ஜு..." என்று சொல்ல,

"ஹே லூசு. நீ இதைச் சொல்லணுமா! கண்டிப் பாடா... நான் பார்த்துக்கிறேன். யூ டேக் கேர்...." என்று அவளை அனுப்பி வைத்தான்.

அர்ஜுனிடமிருந்து விடைபெற்று, தேவையான பொருட்களை வாங்கி, மயூ வீட்டிற்கு வர மாலையாகி விட்டது.

குளித்து உடை மாற்றியபின், இருவருக்கும் இரவு உணவைத் தயார் செய்தாள்.

கூடவே மனதில், 'அவன் மட்டும் இதைச் சாப் பிடாமல் இருக்கட்டும். இனி நோ அகிம்சா... ஒன்லி ஆக்ஷன்தான்...' என்று கறுவியவாறு செய்து முடித்தாள்.

வெற்றிக்கு நேரம் காலம் தெரியாத பணி என்பதால் சமைத்து முடித்து விட்டு, அவனுக்காக அவள் வெகு நேரம் காத்திருக்க வேண்டியதாகி விட்டது.

இரவு 8.50க்கு வீட்டின் வாசல் மணி அடிக்க, ஆவலாகக் கதவைத் திறக்க ஓடினாள் மயூரா.

கதவைத் திறந்து, "உள்ள வாங்க வெற்றி..." என்றாள் புன்னகை முகத்துடன்.

இது எல்லாம் வெற்றிக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. அவன் மனைவி அவனுக்காக வெகு நேரம் காத்திருந்து கதவைத் திறப்பாள் என்றதை எல்லாம் அவன் கனவில் கூட நினைத்ததில்லை. ஏன்? அவன் அன்னைக்குப் பின், தன் வாழ்வில் ஒரு பெண்ணுக்கே இடமில்லை என்றுதானே நினைத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் ஒரே பகலில் அவன் நினைப்பு எல்லாம் தலைகீழாக மாறிப் போனதை நினைத்துச் சந்தோஷம் அடைந்தான்.

அவன் நினைப்பில் மூழ்கியிருந்த வெற்றியை, "அங்கேயே ஏன் நின்னுட்டு இருக்கீங்க வெற்றி... உள்ள வாங்க..." என்ற மயூவின் குரலில் நடப்பிற்கு வந்தவன், அப்பொழுதுதான் அவளை நன்றாகப் பார்த்தான்.

மீண்டும் அவன் மனதில் கோபம் வந்தடைய, "ஹே பேக்கு... நீ டிரஸ் எடுக்கத்தானே போன இன்னிக்கு. அப்புறம் எதுக்குத் திரும்பவும் என்னோட சட்டையைப் போட்டிருக்க...?" என்றான்.

அவளோ தலையைக் குனிந்து, தன்னைப் பார்த்தவள் சிரித்துக் கொண்டே, "எனக்கு உங்க சட்டை ரொம்ப கம்ஃபர்டபிளா இருக்கு வெற்றி... பாருங்க. கடைக்குப் போனதற்கு அடையாளமா கீழ மிடி போட்டிருக்கேன் இல்ல..." என்று அந்தக் குட்டை மிடியைக் குழந்தை போல் இரு பக்கம் பிடித்துச் சுற்றிக் காட்டினாள்.

அவள் செய்த அழகில் அவன் மதிமயங்கிப் போனான்.

"சரி. நீங்க வெளிய நின்னு என் கூட சண்டை போடாம உள்ளே வந்து போடுங்க..." என்று அவனுக்கு வழி விட்டு நின்றாள்.

அவன் மௌனமாகச் சென்று குளித்து விட்டு வர,

"வாங்க வெற்றி... சாப்பிடலாம்!" என்று தட்டுகளை எடுத்து வைக்க...

"எனக்கு வேண்டாம். நான் வெளியவே சாப்பிட்டு விட்டேன்..." என்று டி.வி.யைப் போட்டுக் கொண்டு அமர,

"என்னது சாப்பிட்டாச்சா? உங்களுக்காக நான் இங்க சாப்பிடாம வெயிட் பண்ணிட்டு இருக்கேன் வெற்றி... ஏன் இப்படி எல்லாம் செய்றீங்க?" என்றாள்.

அவனோ, "நான் உன்னை வெயிட் பண்ணச் சொன்னேனா?" என்று சாதாரணமாகச் சொல்ல,

"ஓஹோ... அப்படியா! காலையிலிருந்து நான் சாப்பிடாமல் உங்களுக்கு வெயிட் பண்ணிட்டு இருந்தேன்

இல்ல... என்னைச் சொல்லணும். காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிடல. எனக்கு எவ்ளோ பசிக்குது, தெரியுமா!" என்று புலம்பியவாறு மேஜையில் வைத்த உணவுப் பாத்திரங்களை மீண்டும் சமையலறைக்குள் எடுத்து வைக்க, அவளைத் தடுத்தான் அவள் மணாளன்.

ஆச்சரியமாகப் பார்த்த அவளை, "பெருசா ஒண்ணும் கற்பனை பண்ணாத... உட்கார்ந்து சாப்பிடு!" என்றான்.

"நான் மட்டுமெல்லாம் சாப்பிட முடியாது. நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்க..." என்று அடம் பண்ண,

"ஸாசு... ஸாசு..." என்று அவளை வாய் விட்டே திட்டியவன், "உட்கார்ந்து தொலை..." என்று அவள் பரிமாற... இருவருமாக உணவை உட்கொண்டனர்.

ஒரு வாய் வைத்தவன், "ம்ம்... பரவாயில்ல. நல்லாத்தான் சமைக்கிற..." என்று மனைவியை மெச்சிக் கொண்டான்.

உணவை விழுங்கும் நொடியைத் தவிர மற்ற நிமிடங்கள் எல்லாம் சளைக்காமல் பேசிக் கொண்டு வெற்றியின் காதில் ரத்தத்தை வரவழைத்தாள் மயூரா.

உணவை முடித்ததும், அவன் மடிக் கணினியோடு ஏதோ செய்து கொண்டிருக்க... அவன் மனையாளோ சமையலறையைச் சுத்தம் செய்கிறேன் என்ற பேரில் வெற்றியைத் தடுமாறச் செய்து கொண்டிருந்தாள்.

அவள் அணிந்திருந்த அந்தக் குட்டை மிடியில் அவள் இங்குமங்கும் நடக்க... அவன் கண்கள் அவனின் கட்டுப்பாட்டையும் மீறி அவள் கணுக்காலைச் சுற்றி வந்தது.

அதை எல்லாம் அவள் கண்டுகொள்ளாமல் அவள் வேலையை முடித்துக் கொண்டு, "வெற்றி... இங்க பாருங்க. நான் எவ்ளோ பணம் மிச்சம் பண்ணிக் கொண்டு வந்திருக்கேனு..." என்று பெருமையாகக் காட்ட, அதை எல்லாம் அவன் கவனிக்கவே இல்லை.

மெல்ல மெல்ல... அவனைத் தன்னையறியாமல், வசியம் செய்து கொண்டிருந்தாள் மயூரா.



வெற்றி இப்பொழுது ஒரு சவாலான கேசைப் பற்றிய விசாரணையில் இருந்தான். நகரில் தனியாக வசித்து வந்த ஒரு வயதான தம்பதி வீட்டில் அவர்களைக் கொலை செய்து வீட்டிலிருந்து நகை, பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற கும்பல்... அடுத்தடுத்து ஒரே மாதிரியான விதத்தில் கொள்ளையும், கொலையும் நடத்தியிருந்தது.

கிடைத்தத் தடயங்களும், சாட்சியங்களும் அது ஒரே கோஷ்டி என்ற முடிவுக்கு வந்திருந்தனர், வெற்றியின் குழுவினர். தொடர்ந்து ஒரு வாரமாக அவர்களைக் கண்டுபிடிக்கும் மும்முரத்தில் இருந்ததால் அவனுக்கு மயூராவுடன் நடந்த சம்பவங்கள் ஏதும் மனதில் இல்லை.

ஒவ்வொரு தடயங்களை வைத்து செல்போன் சிக்னலையும் வைத்து ஐந்து பேர் கொண்ட அந்தக் கொலைகாரர்களைப் பொறி வைத்துப் பிடித்தனர் வெற்றியின் குழு.

பிடித்த குற்றவாளிகளைக் கோர்ட்டில் ஆஜர் செய்ய வெற்றி கோர்ட்டிற்கு வர, அவனைப் பத்திரிகையாளர்கள் படை சூழ்ந்து கொண்டது.

அவனைப் பல்வேறு கேள்வியால் குடைய, அனைவருக்கும் சரியான பதிலைச் சொல்லி விட்டு, குற்றவாளிகளைப் பிடித்ததையும், அவர்கள் கொலை செய்தவர்களைப் பற்றிய விவரத்தையும், கொள்ளையடித்த பொருட்களின் மதிப்பைப் பற்றி அனைத்தையும் விளக்கினான்.

அன்றைய சம்பவம் அனைத்து மீடியாக்களிலும், பேப்பர்களிலும், நகரின் தலைப்புச் செய்தியாக மாறியது. அவனின் இந்தச் செயலால் அவனுடைய திருமணம் பற்றிய செய்தி மறைந்தே போனது.

இதுதானே உலகம். இன்று பெரியதாகத் தெரிந்த விஷயத்தைப் பேசிக் கொண்டிருப்பவர்கள், நாளை அதைவிடப் பெரிய விஷயம் கிடைத்தால் நேற்றையதை மறந்து விட்டு, இன்றைய விஷயத்தைப் பற்றிப் புரளி பேசும் உலகம். அதை நல்ல விதத்தில் புரிந்து கொண்டான் வெற்றி.

தொலைந்து போனதாக நினைத்த அவன் மரியாதை மீண்டும் வந்தடைய, இப்பொழுது அவனுக்கு

மயூரா, தன் கை பிடிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான். அத்தனை உறவுகளையும், சொத்துக்களையும் தனக்காக... தன் காதலுக்காகத் தூக்கி எறிந்து விட்டு, தன்னையே நம்பி வந்திருக்கும் ஒரு உயிரைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான்.

அவள் வந்த பிறகுதான் அவன் முகத்தில் சிரிப்பின் சாயலே வெளிப்படையாகத் தெரிகிறது என்பதை உணர்ந்தான்.

இந்த இரண்டு வாரங்களில் தான் அவளை எவ்வளவு ஒதுக்கி வைத்தாலும், தன் காலையே சுற்றிக் கொண்டு திரியும் மயூராவை இப்பொழுது நினைக்கும் போதும், உதட்டில் புன்னகை உதிர்ந்தது.

தான் அவளை மச்சான் என்று அழைக்க வேண்டாம் என்று சொல்லிய பிறகும்... ம... என்று ஆரம்பித்து, பின் அவளே அவள் பின்னந்தலையில் அடித்து வெற்றி என்று மாற்றி அழைக்கும் வெகுளித்தனம் அவனுக்குப் பிடித்தது.

அன்று தான் உடை வாங்கி விட்டு வந்ததை பில்லுடன், மீதிப் பணத்தின் பட்டியலை அவனிடம் ஒப்படைக்கும்போது அவளின் பொறுப்பு பிடித்தது.

என் கற்பிற்கு அவள் கேரண்டி என்று உறுதி அளித்து விட்டுத் தினமும் குழந்தை போல இரவில் தன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவன் நெஞ்சில் தலை சாய்த்து உறங்கும் அவளை அவனுக்கு ரொம்ப ரொம்பப் பிடித்தது.

தான் உண்கிறோமோ இல்லையோ, தனக்காகச் சமைத்து விட்டு, வெகு நேரம் காத்திருந்து தான் கதவைத் தட்டியதும் ஆசையாக ஓடி வந்து, சிரித்த முகத்துடன் கதவைத் திறக்கும் அக்கறை அவனுக்கு மிக மிகப் பிடித்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, என்க்கு அப்பா, அம்மா, ஆஸ்தி எதுவும் வேண்டாம். எனக்கு நீதான் வேண்டுமென்று பொய் சொல்லித் தன்னையே மடக்கித் திருமணம் செய்து கொண்ட அவளின் துணிச்சலும் தைரியமும் பிடித்தது.

இரவின் நிசப்தத்தில், ஸ்டேஷனில் அமர்ந்து கொண்டு தன் மனதுக்கு இனியவளைப் பற்றி நினைக்கும்போது அவளைக் காண வேண்டுமென்ற ஆவல் பொங்கியதை... கடமை அடக்கியதால் இரவு ரோந்துப் பணிக்குச் சென்று விட்டு, சோர்ந்த முகத்துடன் வீட்டிற்கு வந்தடைந்தான்.

அவளின் அதிகாலைத் தூக்கத்தைக் கெடுக்காமல், தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு கதவைத் திறந்து அறைக்குச் சென்றான்.

அங்கு அவள் முழுக் கட்டிலிலும் குறுக்கே காலை நீட்டிக் கொண்டு, தான் பயன்படுத்தும் தலையணையை இறுக்கிக் கட்டிப் பிடித்துக் கொண்டு உறங்கும் அவளை அள்ளி எடுத்து, நெஞ்சில் சாய்த்துக் கொள்ளும் ஆவலை அவனால் தடுக்க முடியவில்லை.

தலையைக் குலுக்கி விட்டு மாற்றுடை அணிந்து கொண்டு, அவன் ஜாகிங் செல்லப் புறப்பட்டான். என்ன தான் நெட்டி முறிக்கும் வேலை இருந்தாலும், அவனால் இந்தக் காலை ஓட்டத்தை நிறுத்தவே முடியாது.

காலை ஓட்டத்தை முடித்துக் கொண்டு, வீட்டிற்குள் வேர்த்த முகத்துடன் நுழைந்தவுடன், காதில், "ஆஹாஹா...." என்ற மயூராவின் குரல் அவனைப் பதறச் செய்ய... பாய்ந்து அறைக்குள் நுழைந்தவனைப் புயல் போல் ஓடி வந்து, நீண்டிருந்த அவன் கழுத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு அவனிடம் ஒட்டிக் கொண்டாள்.

"ஹே மயூ... என்னாச்சு? என்னாச்சுனு கேட்கிறேனுல்ல... பதில் சொல்லுடா... என்னாச்சும்மா?" என்று அவள் முகத்தை அவன் நெஞ்சிலிருந்து பிரித்தெடுக்க முயல, அவளோ கண்ணை மூடிக் கொண்டு அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

"சொல்லு மயூ..." என்று அவன் சற்றே குரலை உயர்த்திக் கேட்க,

பயந்து கொண்டு கண்ணைத் திறக்காமல், "அங்கே... அங்கே..." என்றதற்கு மேல் அவள் வாய் பேசவில்லை.

அவளையும் கையில் பிடித்துக் கொண்டு அவள் காட்டிய திசையில் பாத்ரூமிற்குள் நடந்து செல்ல, அவளோ மேலும் மேலும் அவனுள் புதைந்தாள்.

ஒரு வழியாக பாத்ரூமிற்குள் சென்று பார்த்தவன்... அங்கு அவள் குளித்ததற்கான அடையாளத்தைத் தவிர

ஒன்றுமில்லாமல் இருக்க... குழப்பத்துடன் அவளைக் கஷ்டப்பட்டு தன்னிடமிருந்து பிரித்து என்னவென்று கேட்க,

அவள் பயந்தவாறே சுவரில் ஒட்டிக் கொண்டிருந்த பல்லியைக் கைகாட்டினாள்.

அவள் காட்டியதைப் பார்த்தவனுக்குச் சிரிப்புப் பொங்கி வர, அவளைத் தள்ளி நிறுத்திக் கொண்டு, கைதட்டி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான்.

சிரிப்பிற்கிடையில், "ப...ப... பல்லியைப் பார்த்து... ஹா..,ஹா... பல்லியைப் பார்த்தா இந்தப் பயம்... பயந்தே..." என்று அவன் கண்ணில் நீர் வர மீண்டும் சிரிக்க, அவள் உதட்டைப் பிதுக்கிக் கண்ணைக் கசக்கிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அவனுக்கு அச்சோ... பாவமென்று தோன்றவே, அவளை நெருங்கி அவள் கன்னங்களை கைகளில் ஏந்தி, "ஹே... அயாம் சாரிடா குட்டிம்மா. இனி சிரிக்க மாட்டேன்," என்றவாறே, அவன் சிரிப்பை அடக்கப் பெரும் பாடும் பட்டான்.

அப்பொழுதுதான் அவன் கவனித்தான்... அவள் குளித்து முடித்ததும், பல்லியைக் கண்டதில் வெறும் டவலை உடம்பில் சுற்றி நின்று கொண்டிருந்ததை... சரியாகத் துடைக்காமல் இருந்ததால் நீர்த் திவலைகள் அவள் உடம்பில் கோலம் போட, அவளை அந்த மாதிரிப் பார்த்தவுடன் அந்த 28 வயது ஆண்மகனின் இளமை

விழித்துக் கொள்ள... அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனின் பார்வை மாற்றம் அவளுக்குக் கூச்சத்தைக் கொடுக்க... அவள் வெட்கத்தால் இமைகளைத் தாழ்த்திக் கொள்ள... அவனுக்கு அவளின் வெட்கம் மேலும் தாபத்தை உண்டு பண்ணியது.

அவளை மேலும் நெருங்கிக் குனிந்திருந்த அவளின் முகவாயை விரலால் பற்றி மேல் நிமிர்த்தி, மூடியிருந்த அவளின் மயூரக் கண் இமைகளில் அவனின் முதல் முத்தத்தைப் பதித்தான்.

அவனின் முத்தத்தில் சிலிர்த்து, அவனின் மேலே சாய்ந்து கொண்டாள் அவனின் இனியவள்.

"மயூ... ஐ லவ் யூ டா. ஐ லவ் யூ ஃப்ரம் பாட்டம் ஆஃப் மை ஹார்ட்..." என்று அவள் காதில் உதட்டை உரசியவாறு, நேற்றிலிருந்து அவன் மனதில் இருந்ததைச் சொல்ல, அதற்கு மேல் அவன் மனம் கவர்ந்தவளுக்கு வேறு என்ன வேண்டும்.

சட்டென முகம் நிமிர்த்தி, அவன் கண்களைப் பார்க்க... அவன் கண்களில் தெரிந்த கரை காணா காதல் அவளைச் சிறை பிடிக்க, "ஐ லவ் யூ டூ வெற்றி... ஐ லவ் யூ சோ மச்... இதை நீங்க சொல்லணும்னுதானே நான் இத்தனை நாள் காத்துக்கிட்டிருந்தேன். ஐ லவ் யூ... ஐ லவ் யூ..." என்று அவன் நெஞ்சில் சாய்ந்து மிகுந்த மகிழ்ச்சியில் கண்ணீரைச் சொரிந்து மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவளின் உணர்வுகளைத் தெளிவாகப் புரிந்து கொண்ட வெற்றி சிறிது நேரம் அவளின் உணர்வுகளை வெளிப்படுத்தட்டும் என்று விட்டுவிட்டான்.

சிறிது நேரம் அவளை அழவிட்டுப் போதுமென்று நினைத்தவன்... அவளை நிமிர்த்தி, "அயாம் சாரி மயூ... இவ்ளோ நாள் நான் உன்கிட்ட ரொம்பக் கடுமையா நடந்துக்கிட்டேன். அயாம் ரியலி சாரி ஃபார் தட்..." என்றான்.

"நீங்க எதுக்கு சாரி சொல்றீங்க? நான்தான் சொல்லணும்..." என்றாள்.

"இல்ல. நான்தான் சொல்லணும்..." என்று இவன் கூற,

"நோ நோ... ம்ம்ம்... வெற்றி... நான்தான் சாரி..." என்று இருவரும் மாற்றி மாற்றி... சாரி சொல்ல... ஒரு கட்டத்தில் அவள் சாரி சொல்லிக் கொண்டே போக, அவளைக் கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் அவள் உதட்டைச் சிறை செய்தான்.

நீண்ட நேரம் தொடர்ந்த அம்முத்தத்தில் மயங்கி நின்றனர் இருவரும். வெகு நேரம் கழித்து அவளின் உதட்டை விடுவித்த வெற்றிக்கு அதற்கு மேல் தாங்காது என்று தோன்றவே, "மயூ... ஐ நீட் யூ..." என்றான், அவள் கழுத்தில் முகம் பதித்து.

தன் காதல் கணவன் கேட்டதை, கொடுப்பதை விட அக்காதலிக்கு வேறென்ன முக்கியமான வேலை இருக்கப் போகிறது.

"எடுத்துக்கோங்க வெற்றி... நான் உங்களுக்குத் தான்..." என்று அவளை இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

மனைவி அனுமதி தந்தபின், ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் கணவனின் கடமையைச் செவ்வனே செய்ய கட்டிலை நோக்கி நடை போட்டன அந்தக் காதல் காவலாளி.

காமம் என்னும் யுத்த களத்தில் காதல் எனும் ஆயுதத்தை வீசித் தன் மனையாளை வீழ்த்திக் கொண் டிருந்தான் வெற்றி.

அவள் மட்டும் அவனுக்குச் சளைத்தவளா என்ன! அவன் தன்னை வீழ்த்துகிறான் என்று தெரிந்தும் மீண்டும் மீண்டும் அவனின் முத்தம் எனும் ஆயுதத்தைத் தாங்கி, மீண்டும் அதையே அவனுக்குத் திருப்பிக் கொடுத்தாள்.

இந்த யுத்தக் களத்தில் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் யார் ஜெயித்தார்கள், யார் தோற்றார்கள் என்று முடிவுக்கு வராமல் இருவருள் ஒருவராய்க் கலந் தனர், அக்காதல் போராளிகள்.

பல மணிநேரங்கள் கழித்து யுத்தத்தில் களைத்து கண்ணுறங்கிக் கொண்டிருந்த அக்காதல் பறவைகளின் தூக்கத்தைக் கலைக்கவென தொல்லைபேசி ஒலிக்க...

மெல்லிய சிணுங்கலுடன் முகம் சுழித்துத் தன் மார்பினுள் முகம் புதைத்துப் படுத்திருந்த தன் மனைவி யின் நெற்றியில் இதழ் பதித்தவாறு... மெல்ல எழுந்து,

பேசியில் இருந்தவருக்கு உற்ற பதில் தந்து விட்டு, மீண்டும் தன் மனைவியைக் கொஞ்ச வந்தான்.

ஆயிரம் சிப்பாய்கள் காவல் இருந்தாலும், ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பைத் தருவது தன் கணவனின் மார்பல்லவா!

அதேபோல், மயூரா கணவனின் கைகள் தன்னை அரணாக வளைத்திருக்க... நிம்மதியாக அவனின் மார்பின் மேல் பள்ளிகொண்டிருந்தாள்.

பட்டப்பகலில் இருவரும் இந்நிலையில் இருக்க... வெற்றி தான் மெல்ல அவள் துயில் கலைய முயற்சித் தான்.

அவள் தலையைத் தடவி, "டே... குட்டிம்மா... எழுந்துக்கோடா. நல்லாவே விடிஞ்சுருச்சு..." என்றான்.

அவளிடம் பதில் இல்லாமல் போக, மெல்ல அவள் காது மடல்களில் அவன் விரலை வைத்து குறுகுறுப்பு மூட்டினான். சிணுங்கியவாறு, "சும்மா இருங்க வெற்றி..." என்று அவன் கைகளைத் தட்டி விட்டு மீண்டும் அவள் உறக்கத்தைத் துவங்க,

"அம்மு... எனக்கு ரொம்பப் பசிக்குதுடா..." என்றான்.

கணவன் பசி என்று சொன்னதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தவள், "அச்சோ... அயாம் சாரி... ம... வெற்றி.... இதோ இப்போ டென் மினிட்ஸ்ல ரெடி பண்ணிடுறேன்..." என்றவளை, கையைப் பிடித்து நிறுத்தி,

"நீ மெதுவாவே பண்ணு... அதுக்கு முன் என்னை மச்சான்னு கூப்பிடு..." என்றான்.

"ம்ம்... உங்களுக்குத்தான் நான் அப்படிக் கூப்பிட்டா பிடிக்காதில்ல..." என்று முகத்தைச் சோகமாக வைத்துச் சொல்ல,

"இப்போ நீ அப்படிக் கூப்பிடலைன்னா... அப்புறம் பார். நான் உனக்குப் பனிஷ்மெண்ட் தர வேண்டியதா இருக்கும்..." என்று அவள் உதட்டைச் சிறை செய்ய,

"ஐயோ லூசு மச்சான்... இது உங்க ஊர்ல பனிஷ்மெண்ட்டா?" என்று அவனிடமிருந்து நழுவி நின்று கொண்டு சொல்ல,

"அடிப் பாவி. கேப்ல என்னை லூசுன்னு சொல்லிட்ட..." என்று அவன் எழுந்து வர, அதற்குள் வெளியே சென்று கதவை அடைத்தவள்...

"நீங்க சீக்கிரமா குளிச்சுட்டு வாங்க. நான் சமைச்சுடு றேன்..." என்று ஓடியே விட்டாள்.

"அழகு ராட்சஷி..." என்று அவளைக் கொஞ்சிய வாறு குளிக்கச் சென்றான்.

குளித்து விட்டுத் தலையில் ஈரத்துடன் வந்தவனை டைனிங் டேபிளில் உட்கார வைத்து, அவன் தோளில் கிடந்த டவலால் தலை துவட்டி விட்டவள், "என்ன வெற்றி... தலையைக் கூட ஒழுங்காத் துடைக்காமல்... நான் எவ்வளவு தடவை நல்லாத் தொடைங்கன்னு சொல்லியிருக்கேன்..." என்று கடிந்து கொண்டாள்.

அவன் முகம் திருப்பிக் கொண்டிருந்த போதும் சளைக்காமல் அவனைச் சுற்றியே வந்தவள் மயூரா, இப்பொழுது அவள் செய்கை அவனுக்கு அவன் அன்னையை ஞாபகப்படுத்த... அவள் இடுப்பை இறுக்க மாகக் கட்டிக் கொண்டான்.

இடுப்பில் ஏதோ ஈரத்தை உணர்ந்த மயூரா, பதறி அவனை நிமிர்த்த... வெற்றியின் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீரைப் பொழிந்தது.

11

வெற்றியின் கண்களில் கண்ணீரைப் பார்த்த மயூரா பதறி அவன் கன்னங்களைப் பிடித்து, "வெற்றி... என்னாச்சு? எதுக்கு அழறீங்க?" என்று பதறவும்,

அவன் உதட்டில் புன்னகைத்து, "இதுக்குத்தான் மையூ..." என்று அவளைச் சுட்டிக் காட்டினான்.

"நான் உன் மடியில படுக்கட்டுமா மையூ..." என்று இறைஞ்சிய குரலில் கேட்க, அவனைக் கட்டி அணைத்து எழுப்பி சோபாவிற்கு அழைத்துச் சென்று தன் நெஞ்சில் படுக்க வைத்தாள்.

அவள் காட்டிய அன்பில் மேலும் மேலும் நெகிழ்ந்து அவள் மார்பினுள் முகம் புதைத்தான்.

சிறிது நேரம் கழித்து அவள் நெஞ்சிலிருந்து மடிக்கு இடம் பெயர்ந்தவன்... "நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும் மையூ..." என்று அவள் தலை வருடிய கையை எடுத்து அவன் நெஞ்சில் வைத்துக் கொள்ள...

"பேசுங்க வெற்றி... அதுக்கு ஏன் அனுமதி கேட்கிறீங்க?" என்று அவள் மறுகையால் அவன் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

அவள் அனுமதித்ததும்... இத்தனை நாள் தன் மனதில் இருந்ததைச் சொல்ல ஆரம்பித்தான்.

"சின்ன வயசுல என்னோட வாழ்க்கை ரொம்ப அழகானது மையூ... நான் இப்போ இருக்கற மாதிரி இல்ல. எல்லாக் குழந்தைகளைப் போலவும், உன்னைப் போலவும் சிறகு முளைத்த பறவை போல் எங்கும் சுற்றித் திரிவேன்.

"எங்கப்பாவும் அம்மாவும் நம்மளை மாதிரித்தான் காதலிச்சுத் திருமணம் பண்ணிக்கிட்டாங்க. ஆனால் எங்கப்பா உயர்ந்த ஜாதியாம். என் அம்மா தாழ்ந்த ஜாதியாம். அதனால எங்கப்பாவை அவங்க காதலுக்குப் பெற்றோர்கள் எதிர்த்தாங்களாம். ஆனால் அவர் அவங்க எல்லாரையும் எதிர்த்துட்டு என் அம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. அதுக்கு அப்புறம் உறவுகள் எங்களை ஒதுக்கி வைச்சுது. அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாம என் அப்பா வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ்ந்த துக்கு... நான் அவங்களுக்குப் பிறந்தேன்.

"நான் பிறந்ததும் அவர்கள் வாழ்வில் வளம் சேர்க்க வந்ததாக நினைத்து என் மேல் இருவரின் அன்பையும் எல்லை இல்லாமல் பொழிந்தனர். எனக்கும் அவங்களை விட்டா வேற உலகம் இல்லை தெரியுமா, மையூ...

"எங்கப்பா எனக்கு ஒரு ஃபிரெண்ட் மாதிரி மையூ... என்னை எப்பவும் நடக்க விடமாட்டார். அவர் தலைக்கு மேல் தூக்கி உட்கார வெச்சுட்டு ஊர் ஃபுல்லா என்னைச் சுத்திக் காட்டுவார். நான் எங்க கீழே விழுந்துடுவே னோன்னு சொல்லிப் பயத்தில் அவர் தலையை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வேன். ஆனால் இப்போ பாரு..." என்று அவன் இதைச் சொல்லும் போது சிரித் தான்.

"எங்கம்மா பற்றிச் சொல்லவே வேண்டாம். நீ இப்போ பண்ணின இல்ல மையூ... அதைப் போல நான் தலை குளித்து விட்டு விளையாட ஓடிப் போகும்போது என் கையைப் பிடித்து நிறுத்தி என் தலையைத் துவட்டி விடுவாங்க தெரியுமா! ஒவ்வொரு நாள் நைட்டும் அப்பா எவ்வளவு லேட்டா வந்தாலும் என் முகத்தைப் பார்க்காமல் அப்பா தூங்க மாட்டார் மையூ...

"எல்லாம் நல்லாப் போய்கிட்டு இருந்தது. கடவுள் இவங்களுக்கு ரொம்ப சந்தோஷத்தைக் கொடுத்துட்டோம். இனி போதும். கொஞ்சம் அழட்டும் என்று நினைச்சார் போல. ஊர் திருவிழாவின் போது எங்க அப்பா, அம்மாவைப் போல இன்னொரு ஜோடியும் காதலால் சேர, இரண்டு ஊர்களுக்கும் பெரிய சண்டை.

"ஹ்ம்ம்... இந்தக் காதலை ஆரம்பித்து வைத்தது என் அப்பாதானாம். அதனால அந்தக் காதல் ஜோடி களுடன் சேர்ந்து எங்கப்பாவை வெட்டிட்டாங்க பாவிங்க..." என்று அவன் இதைச் சொல்லும் போது கண்களில் ரௌத்திரம் தெரிந்தது.

"எங்கப்பாவை என் கண் முன்னாடியே வெட்டுனாங்க தெரியுமா, மையூ... எங்கப்பாவை அடிக்கும்போது நான் அவர்கள் காலைப் பிடித்துக் கெஞ்சினேன் தெரியுமா. ஒருத்தனும் காதில் வாங்கல. அவங்களுக்கு ஜாதிதான் பெருசாத் தெரிஞ்சுது. மூணு உயிரை அநியாயமாக் கொன்னுட்டாங்க..." என்றான், கண்களில் கண்ணீருடன்.

"எங்கம்மா, எங்கப்பாவின் உடலைப் பார்த்துட்டு எப்படி அழுதாங்க தெரியுமா... நெஞ்சுலேயும் தலையிலேயும் அடிச்சுட்டு அழுதாங்க மையூ... என்னால அதை எல்லாம் பார்க்க முடியலை..." என்று அச்சம்பவம் இப்பொழுது கண் முன் நடப்பது போல் மையூவின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டான்.

"ரிலாக்ஸ் வெற்றி... ரிலாக்ஸ்!" என்று அவன் நெஞ்சை நீவிக் கொடுத்தாள் அவன் மனையாள்.

தன்னை நிலைப்படுத்திக் கொண்டு மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"எங்கம்மாவின் அழுகையைப் பார்க்க முடியாம, கையில் அரிவாளை எடுத்துக் கொண்டு நான் அவங்களைக் கொல்லப் புறப்பட்டேன் மையூ... எங்கம்மா என் கையைப் பிடித்துத் தடுத்து, இந்த மாதிரி அக்கிரமம் செய்கிறவர்களை எல்லாம் நீ தண்டிக்க வேண்டுமானால் நீ ஒரு பெரிய போலீஸ் அதிகாரி ஆகணும்னு சொல்லி, என் அப்பாவோட இறுதிக் காரியத்தை முடிச்சுட்டு அந்த ஊரை விட்டே வந்துட்டோம்...

"ஊரை விட்டு வந்த பிறகு என்ன செய்வது... ஏது செய்வது என்று தெரியாமல் இருந்தபோது எங்கப்பா, அம்மாவுக்கு அவரோட முதல் சம்பாத்தியத்தில் வாங்கிப் போட்ட தாலியை அடகு வெச்சு எங்க வாழ்வாதாரத்திற்கு வழி செஞ்சாங்க. அதன் பிறகு நாங்க ரொம்பச் சந்தோஷமா எல்லாம் இல்லை மையூ... எங்கம்மா பகல் முழுவதும் மாடு போல் உழைப்பாங்க. இரவில் அப்பாவின் படத்தைக் கையில் வைத்துக் கொண்டு கண்ணீர் சிந்துவாங்க.

"அவங்களோட ஒவ்வொரு துளி கண்ணீருக்கும் என் ரத்தம் கொதிக்கும் மையூ... எதைச் செஞ்சாவது அவங்க கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்று தோன்றும். ஆனால் அந்த வயதில் என்னால ஒண்ணும் செய்ய முடியலை. சரி, அவங்களின் ஒரே சந்தோஷம் என் படிப்புதான் என்று நினைத்துக் கொண்டு முழு மூச்சாகப் படித்தேன் மையூ...

"எங்கே நண்பர்களின் சேர்க்கை என் கவனத்தைத் திசை திருப்புமென்று யாரிடமும் பேசாமல், அந்த வயதில் இளமைக்குத் தேவையான அனைத்து சந்தோஷங்களையும் மறந்து, எனக்குள்ளே ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு என் குறிக்கோளை அடையக் கஷ்டப்பட்டு உழைச்சேன்.

"உழைத்ததுக்குப் பலனும் கிடைத்தது. நான் ஐ.பி.எஸ். கேடரில் செலக்ட் ஆகி நம்ம ஊர்லயே வேலை கிடைச்சது. நான் வேலைக்குச் சேர்ந்ததும் ரொம்ப

வருஷமா இழுத்தடிச்சுட்டு இருந்த எங்கப்பாவோட கேஸின் குற்றவாளிகளை வேறொரு கேஸில் சேர்த்து விட்டுப் பல வழிகளில் முயன்று, அந்த நான்கு பேரை என்கவுண்டரில் கொன்னுட்டேன்.

"நான் செய்தது தப்புன்னு தெரியும். ஆனால் என் அப்பாவின் மரணத்திற்கு அது தான் நியாயம் என்று கருதி அதைச் செய்தேன்.

"அவங்களை நான் கொன்னுட்டேன்னு சொன்னதும்... என் அம்மாவின் முகத்தில் அப்படி ஒரு மகிழ்ச்சி மையூ... அன்று நைட் ஃபுல்லா எங்கப்பாவின் படத்தைப் பார்த்துக் கொண்டு சிரித்த முகத்துடன் எதையோ மனதுக்குள் பேசிட்டு இருந்தாங்க. அவங்களோட சந்தோஷத்தை நான் அவங்க கண்களில் பார்த்தேன் மையூ.

"காலை நான் கண் விழிச்சுப் பார்க்கும்போது உதட்டில் புன்னகை உறைந்திருக்க... என் அப்பாவின் படத்தைக் கட்டிக் கொண்டு அவங்க மூச்சை அடக்கிட்டாங்க, மையூ..." என்று அவள் நெஞ்சில் சாய்ந்து அழுதான்.

குழந்தை போல் அழும் தன் கணவனை எப்படிச் சமாதானம் செய்வது என்று யோசித்தவள்... அவனைச் சமாதானம் செய்யும் முயற்சியைக் கைவிட்டாள். எத்தனை நாள் இதை மனதிற்குள் வைத்துப் புழுங்கியிருப்பானோ... சின்ன வயதில் எத்தனை எத்தனை துன்பங்கள் அனுபவித்திருக்கிறான். பாவம்... அவன் வருத்தம் தீரும்வரை அழட்டும்... என்று விட்டு விட்டாள்.

அத்தனை நாள் மனதிற்குள் வைத்து மறுகிக் கொண்டிருந்த வெற்றி, இன்று சாய்ந்து அழ தோள் கிடைத்ததும் தன் துன்பம் தீரும்வரை அழுது கரைந்தான்.

நேரம் செல்ல... அவன் அழுகை ஓய்ந்து அவள் முகத்தைப் பார்க்க... அவள் கண்களில் தெரிந்த தாய்மை அவனை வசியம் செய்ய... அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, "எங்கிருந்து மையூ நீ வந்த? உன்னாலதான் நான் மறந்ததாக நினைத்த சிரிப்பு எனக்கு நினைவில் வந்தது. நீ... நீதான் மையூ எனக்கு இனி எல்லாமே... நீ எனக்கு ஒரு பெரிய பொக்கிஷம் மையூ... கடவுள் கொடுத்த வரம். இனி வாழ்க்கையில ஒண்ணும் இல்ல... என்று நினைத்த எனக்கு ஒரு பிடிப்பைக் கொடுத்திருக்க மையூ நீ... என்னை விட்டு நீ எங்கேயும் போயிடாத மையூ... எனக்கு நீ வேணும்டா அம்மு... நீ வேணும்..." என்று அரற்றிக் கொண்டிருந்தான்.

அவனைச் சமாதானப்படுத்த வழி தெரியாமல் அரற்றிக் கொண்டிருந்த அவன் உதட்டைச் சிறை செய்தாள் மயூரா.

ஒரு நொடியோ, பல நொடியோ தொடர்ந்த அம்முத்தத்தில் வெற்றிக்குப் பழைய துன்பங்கள் மறந்து போயின.

சில நிமிடங்கள் கழித்து அவனை விடுவித்தவள், அவன் மூக்கைப் பிடித்து, "விட்டுட்டுப் போகவா அவ்ளோ டிராமா பண்ணி இந்தக் கஞ்சிச் சட்டையைக் கை பிடித்தேன். இனி உங்களுக்குப் பிடிக்குதோ இல்லையோ

உங்க வாழ்க்கை இனி என்னோடதான். அதை ஞாப கத்துல வெச்சுக்கோங்க..." என்று மிரட்டினாள்.

"என் செல்ல ராட்சஷீ நீ..." என்று அவனும் அவளுக்கு இணையாகப் பரிசுகளை வழங்கினான்.

"ஆனாலும் உனக்கு ரொம்பத் தைரியம் மையூ.... எப்படி என்னையே பொய் சொல்லி லாக் பண்ணின? எதுக்காக மையூ நீ உன் பெயரைக் கெடுத்துக்கிட்டு என் கைபிடிச்ச...? நான் அப்படி என்ன உன்னைப் பண்ணினேன்... உங்க அப்பா சொன்ன மாதிரிதான் நான் ஒரு அநாதை தானே... என்கிட்ட அப்படி என்ன இருக்கு? எனக்கு இது சுத்தமாப் புரியலை?" என்று அவன் குழப்பமாக அவளைப் பார்க்க,

அவளோ கோபத்துடன், "இனிமேல் நீங்க அனாதைன்னு சொன்னீங்க. அப்புறம் நான் ஜென்மத் துக்கு உங்களோட பேச மாட்டேன்..." என்று அவள் ஒரு விரல் நீட்டி மிரட்ட,

"இல்ல... இல்ல... இனி சொல்ல மாட்டேன்..." என்று உறுதியளிக்கவும்,

"ஹ்ம்ம்... அது..." என்றதும்,

"உங்கப்பாவுக்கு, அம்மா மேல எதனால காதல் வந்ததுன்னு தெரியுமா?" என்றாள்.

"ம்ம்... நான் அம்மாவிடம் கேட்டிருக்கேன். ஆனால் அவங்க இதுதான்னு ஒரு காரணம் சொன்னதில்ல..." என்றான்.

"அது மாதிரிதாங்க... காதல் யாருக்கு யார் மேல எப்போ வரும்னு சொல்ல முடியாது. எனக்கும் அப்படித்தான். உங்க மேல உண்டான உணர்வு இதனாலதான் வந்ததுன்னு என்னால வரையறுக்க முடியாது..." என்று அவனுக்கு விளக்கினாள்.

"என்னாலேயும் சொல்ல முடியாது மையூ... உன்னோட கண் இருக்கே, அது நிஜமாவே மேக்னெட் மையூ. நான் என் மனது இரும்பு போல உறுதியானது. என்னைத் தவிர அதை யாராலும் நெருங்க முடியாதுன்னு கர்வமா இருந்தேன். ஆனால், எப்போ இந்த முட்டக் கண்ணைப் பார்த்தேனோ... அப்போவே இந்த இரும்பு, உன்னோட ஈர்ப்பு விசையில பச்சக்குன்னு ஒட்டிக்கிச்சு..." என்று அவன் சொல்லிய விதத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

சிரித்த அவள் உதடுகள் அவனை மீண்டும் ஈர்க்க... அவள் தலையைத் தன்னை நோக்கி கீழே இழுத்தான்.

அவன் கடமையைச் செவ்வனே முடித்தவன்... அவள் அணிந்திருந்த சட்டை வழியே அவன் கட்டிய மஞ்சள் கயிற்றுடன் மஞ்சள் கிழங்கு அவன் முகத்தில் உரச, வெடுக்கென எழுந்து,

"மையூ கிளம்பு. வெளியே போகலாம்..." என்ற வனைக் கேள்வியாகப் பார்த்து, "ஏங்க?" என்றாள்.

அவன் வெடுக்கென எழுந்தது அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

"நான் சொல்றேன். நீ முதலில் கிளம்பு...." என்றான்.

"சரி. போகலாம்... முதல்ல சாப்பிடுங்க..." என்று எழுந்து சென்று தட்டில் உணவுடன் வந்தவள்... சோபாவில் அமர்ந்து கொண்ட அவனுக்கு ஊட்டிவிட்டாள்.

அவள் செய்கையில் மனம் மகிழ்ந்தவன், "மையூ... நீ இப்படி எல்லாம் செய்யாதடி... என்னால கண்ட்ரோல் பண்ண முடியலை..." என்று அவளை இறுக்கக் கட்டிக் கொண்டான்.

"உங்களை யாரு இப்போ கண்ட்ரோல் பண்ணச் சொன்னது... டி.சி.பி. சார்?" என்று அவள் கேட்க,

"ஓஹோ... அப்படியா! அப்போ அனுபவி..." என்று உதட்டில் வைத்திருந்த உணவை அவள் உதட்டிற்கு மாற்றினான்.

"ஹப்பா... சரியான காட்டான் மச்சான் நீங்க..." என்று அவள் செல்லமாகத் திட்டினாள்.

"நீதானே அம்மு கண்ட்ரோல் பண்ண வேண்டாம்னு சொன்ன..." என்று கண்ணடித்துக் கொண்டு கேட்க,

"அது என்ன அம்மு... பெட் ரூம்லேயும் அப்படித்தானே கூப்பிட்டீங்க?" என்று கேட்க,

"ம்ம்... நீதான் இனிமேல் எனக்குத் தாய், தாரம் எல்லாம். அதுதான் அம்மாவை அம்மு என்று ஷார்ட் பண்ணிட்டேன்..." என்றான்.

அவள் நெகிழ்ச்சியில் அவனை இறுக்கக் கட்டிக் கொண்டாள்.

அந்நொடி அவனுக்கு, இனி தான்தான் எல்லாமுமாக இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

கெஞ்சலும் கொஞ்சலுமாக உணவை முடித்தார்கள் இருவரும்.

"ஹ்ம்ம்... காலை உணவை முடிப்பதற்கே மதியம் ஆகிவிட்டது மையூ..." என்று அவன் சரசமாக அவள் காதில் சொல்ல...

கிச்சனில் அவர்கள் உண்ட பாத்திரத்தை கழுவிக் கொண்டிருந்தவள், "ம்ம்... இப்படி உரசிட்டே என் மிடியைப் பிடிச்சுட்டு சுத்திக்கிட்டு இருந்தா லேட்தான் ஆகும். கொஞ்சம் தள்ளி நில்லுங்க மச்சான்... எங்கயோ போகணும்னு சொன்னீங்க. சீக்கிரமா வேலையை முடிச் சாத்தான் போக முடியும்..." என்று மிரட்ட,

"ஆமா... ஆமா. நீ சீக்கிரமா முடி. நான் சமத்தா தள்ளி இருக்கேன்..." என்று கூறிவிட்டு, அவள் அருகிலே கிச்சன் மேடையில் அமர்ந்து கொண்டான்.

"இதுக்குப் பேர்தான் தள்ளி இருக்கிறதா?" என்று சிரித்துக் கொண்டே வேலையைத் தொடர்ந்தாள்.

இப்பொழுது மயூவிற்கு ஈடாக அவனும் வாயடித்துக் கொண்டிருந்தான். அவனுக்கே இது ஆச்சரியமாகத்தான்

இருந்தது. தானா இப்படி எல்லாம் வம்பளந்து கொண்டிருப்பது என்று வியப்பில் இருந்தான்.

அதை மையூவிடம் வெளிப்படையாகவே சொல்லி விட்டான்.

"அம்மு... நீ என்னை ரொம்ப மாத்திட்டடா... நான் இந்த மாதிரி எல்லாம் இருந்ததே இல்ல தெரியுமா..." என்றான்.

"நான் உங்களை ஏதும் மாத்தலை வெற்றி... இதுதான் உங்க இயல்பு. இத்தனை நாள் உங்க இயல்பைக் கடுமை எனும் திரையைப் போட்டு மறைச்சு வச்சுருந்தீங்க. என்கிட்ட அந்தத் திரை விலகி சகஜமா இருக்கீங்க. அவ்ளோதான்..." என்று எடுத்துச் சொல்ல,

"ம்ம்... ஆமாம் மையூ... நீ கரெக்டா என்னைப் புரிஞ்சு வச்சுருக்கடா..." என்றான் உண்மையாக.

"சரி. உன் வேலை எல்லாம் முடிஞ்சுது இல்லை. வா, நான் உனக்கு டிரஸ் பண்ணி விடறேன்..." என்று மேடையிலிருந்து குதித்தவாறே சொல்ல...

"அடிங்க... காலையில இருந்து பண்ணினது பத்தாதா...?" என்று மிரட்டி விட்டு அறைக்குள் சென்றாள்.

சென்ற சில நிமிடங்களில் அவள், "மச்சான்... மச்சான்..." என்று கத்த, அதிகாலை நினைவில் அவன் உற்சாகமாகச் செல்ல,

"என்னடா அம்மு... பல்லியா?" என்று கிண்டலடிக்க,

"இந்தக் குசும்புக்கு ஒண்ணும் குறைச்சலில்லை. இந்தாங்க... அன்னைக்கு உங்களுக்கு நான் வாங்கின டிரஸ் இதைப் போட்டுக்கோங்க..." என்று அவள் எடுத்த உடையை அவனிடம் கொடுத்தாள்.

"டே... அம்மு! நான் இந்த மாதிரி ஜீன்ஸ் எல்லாம் போட்டதே இல்லடா. எப்பவும் ஃபார்மல்ஸ்தான். உன்னோட செலக்ஷன் ரொம்ப நல்லா இருக்கு. தேங்க்யூ..." என்று அவள் அருகில் நெருங்க...

"ஹலோ பாஸ்... தேங்க்ஸ் வாய்ல சொன்னாப் போதும். போங்க... அந்த ரூம்ல போய் டிரஸ் மாத்துங்க..." என்று அவனை அனுப்பி வைக்க முயல,

"அது எல்லாம் முடியாது..." என்று அவன் சண்டைக்கு வர,

"வெற்றி... எனக்கு உங்க லேப்டாப்ல நெட் கனெக்ட் பண்ணித் தாங்க..." என்று அவள் சம்பந்தமில்லாமல் சொல்ல,

"நெட்டா... அது எதுக்கு இப்போ?" என்று அவன் கேள்வியாகக் கேட்க,

"ம்ம்... யூ டியூப்ல சாரி எப்படி கட்டணும்னு பார்க்கணும்..." என்று தயங்கியவாறே சொல்ல,

"அடி சக்கை... மையூ மேடம்க்கு சாரி கட்டத் தெரியாதா?" என்று அவன் குதூகலிக்க,

"கிண்டல் பண்ணாதீங்க வெற்றி..." என்று அவள் சிணுங்க,

"நோ ப்ராப்ளம் மை டியர் பொண்டாட்டி... நானே சாரி கட்டி விடுறேன்..." என்று அவன் இரு உள்ளங் கைகளையும் தேய்த்தவாறு அவளை நெருங்க,

அவளோ, "ஆச்சரியத்தில் உங்களுக்குக் கட்டத் தெரியுமா...?" என்று அவள் சந்தேகமாகக் கேட்க,

"தெரியாதுதான். பட் இப்போ தெரிஞ்சுக்கலாம்..." என்று அவள் கையில் இருந்த சேலையைப் பிடுங்கி அவளுக்கு உடுத்த ஆரம்பித்தான்.

சில பல செல்லச் சீண்டல்களுடன் பத்து நிமிடம் கட்ட வேண்டிய சேலையை ஒரு மணி நேரம் கட்டி விட்டான், மையூவின் காதல் கதாநாயகன்.

ஒரு வழியாக இருவரும் கிளம்பி வெளியே செல்லப் புறப்பட்டனர்.

12

ஒவ்வொரு உயிரினங்களும், ஆண்ட வனின் படைப்பும் அதன் இணையோடு இருந்தால்தான் அது முழுமை அடைகிறது. அதே போல் வெற்றியும், அவன் இணை யுடன், தன் உயிராகிப் போனவளுடன் கைகோர்த்து நடந்து வரும்போது, எப்பொழுதும் அவனிடமிருக்கும் கம்பீரத்தையும் மீறி அழகாகத் தெரிந்தான்.

அதே அழகுடன், உதட்டில் புன்னகையுடன் இரு வரும் அந்தப் பெரிய நகைக் கடையில் நுழைந்தனர்.

"மச்சான்... ஜுவல்ஸ் வாங்கவா வந்துருக்கோம்?"

"நகைக் கடையில நகை வாங்காம, பொங்கல் புளியோதரையா வாங்குவோம்..." என்று நக்கலடிக்க,

"கமான் டி.எஸ்.பி. சார்... கஞ்சி சட்டை எப்போ ருல்பி ஜஸாச்சு.... இப்படி கவுன்ட்டர் போட்டுத் தாக்கு றீங்க..." என்று அவள் அவனைப் பாராட்ட,

"போதும்... போதும். பேசாம வா..." என்று கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றான்.

"பேசாமயா... நோ நெவர். இந்த மயூரா ஒரு வாரம் சாப்பிடாமக் கூட இருப்பா. ஆனால் பேசாம மட்டும் இருக்க மாட்டா..." என்று வசனம் பேசியவள், "என்ன வாங்கப் போறோம்? சொல்லுங்க... சொல்லுங்க..." என்று அவன் தோளைச் சுரண்டினாள்.

"அடியே அராத்து... கொஞ்ச நேரம் சும்மா வாடி... வாங்கும்போது தெரிஞ்சுக்கோ..." என்று செல்லமாக மனைவியை அதட்டிக் கூட்டிச் சென்றான்.

அதற்கெல்லாம் மசியும் ஆளா நம் மயூரா... அவனை விடாமல் நச்சரித்துக் கொண்டே வர, அதற்குள் அந்தக் குறிப்பிட்ட செக்ஷனுக்கு வந்து விட்டனர்.

இவனைப் பார்த்தவுடனே அடையாளம் கண்டு கொண்ட அந்தக் கடை சிப்பந்தி அவனிடம், "என்ன பார்க்கிறீங்க சார்?" என்றார் பவ்யமாக.

"என் மனைவிக்குத் தாலியும்... கொடியும்..." என்றான்.

இத்தனை நேரம் அவனைச் சீண்டிக் கொண்டிருந்த மயூரா, இப்பொழுது மௌனம் காத்தாள்.

பக்கத்திலிருந்த மயூராவைச் சிநேகமாகப் பார்த்துப் புன்னகைத்தவர், "எத்தனை பவுன் சார்?"

"13 பவுன்ல பார்க்கணும்..." என்றதும்,

அடுத்த அந்த வயதான கடை சிப்பந்தி கேட்ட கேள்வியில் அவனுக்கு நரம்பு புடைத்தது.

"நீங்க எந்தச் சமூகம் சார்... அதுக்கேத்த மாதிரிப் பார்க்கலாம்..." என்றவரின் கேள்விக்கு வெற்றி மௌனம் காக்க...

மயூரா அவன் கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள்.

தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு, "இந்த ஊர் கோவில் அம்மனுக்கு எந்த மாதிரித் தாலி செய் வீங்களோ... அதே மாதிரிக் கொடுங்க..." என்றதும், அந்தப் பணியாளரும் மயூராவும் அவனை விழி விரித்துப் பார்த்தனர்.

வெற்றி அவளைக் கடைக்கு அழைத்து வந்ததின் காரணம்... அவன் அன்னையின் நினைவில்தான்... என்று அவள் யூகித்திருந்தாள். ஆனால் ஒரு கடவுளுக்கு நிகராகத் தன்னை நினைப்பான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"என்ன சார்... பார்த்துக்கிட்டு இருக்கீங்க... எடுத்துக் காட்டுங்க..." என்றதும், அந்தப் பணியாளர் அவன் கேட்டதைப் போலவே செய்தார்.

"அம்மு... எனக்கு கோல்டு எல்லாம் வாங்கத் தெரியாதும்மா... நீயே பார்த்து வாங்கு..." என்று பக்கத்தில் இருக்கும் மனைவி இன்னமும் தன்னையே பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டு,

அவன் குரலில் நடப்புக்கு வந்தவள், நகையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அவள் தேர்ந்தெடுத்த பின், அந்தப் பணியாளர், "மேடம், ரெண்டு லட்சத்துக்கு மேல் பர்சேஸ் பண்ணினா... கோல்டு செயின் செட் கிடைக்கும். அது அந்த செக்ஷன்ல... வாங்க. அதையும் செலக்ட் பண்ணுங்க..." என்று அவளை அழைக்க, அவள் கணவனைப் பார்த்தாள்.

"போயிட்டு வா..." என்று கண்ணசைத்து அனுப்பி விட்டு, அவன் அப்படியே அந்தக் கடையை அளந்தான்.

மயூரா நகையைத் தேர்வு செய்து கொண்டிருக்க, "ஹே மையூ..." என்று ஒரு பெண்ணின் குரலைத் தொடர்ந்து அவள் கழுத்தை அணைத்துக் கொள்ள, குரலுக்குச் சொந்தக்காரியை தெரிந்து கொண்டதில் மயூராவும் குதூகலித்தாள்.

"மீரா..." என்று அவளும் அணைத்துக் கொள்ள,

"உங்களை எல்லாம் பார்த்து எவ்வளவு நாளாச்சு...? ஐ மிஸ் யூ கய்ஸ் சோ மச்..." என்றான்.

"ஆமாடி... மிஸ் பண்றவதான் சொல்லாம கொள்ளாம ஓடிப் போவ இல்ல..." என்று அவள் இடுப்பில் கை வைத்துக் கேட்க,

"மீரா செல்லம்... நான் ஓடிப் போகலடி. ஆட்டோல போனேன்..." என்று அவள் சமயம் தெரியாமல் மொக்கையைப் போட, பல்லைக் கடித்த மீராவை, "ஓ.கே. ஓ.கே. கூல்... கூல்..." என்று சமாதானப்படுத்தினாள்.

"ஏன் மையூ... இப்படிச் செஞ்ச?" என்று அவளும் அர்ஜுனைப் போல் கேட்டு வைக்க,

"ஏன்டி... எல்லோரும் ஒரே கேள்வியைக் கேக்குறீங்க..." என்று அவள் சலித்துக் கொள்ள,

"ஆனாலும் உனக்கு ரொம்பக் கொழுப்புடி... ஓ.கே. பாஸ்ட் இஸ் பாஸ்ட்... அப்புறம் என்ன... தனியாவா வந்திருக்க? எங்கே உன் காவலன்...?" என்றாள்.

"அதோ... அக்கட கூடு..." என்று அவள் கைகாட்டிய திசையில் வெற்றி எதையோ வாங்கிக் கொண்டு திரும்ப, அருகில் வருமாறு சைகை செய்தாள்.

அவன் வந்ததும், "என்னங்க... இது மீரா. தெரியும்தானே?"

"ஓஹோ... நல்லாத் தெரியும். உங்க ஃபைவ் ஸ்டார் கேங்கல ஒரு ஸ்டார்தானே..." என,

"எஸ்... கரெக்ட் வெற்றி சார். அப்புறம்... எங்க பொண்ணு உங்களைக் கண்கலங்காம வெச்சுருக்காளா?" என்றதற்கு,

அவன், "ஆமாம்..." என்றவாறு தலையாட்டிப் புன்னகைத்தான்.

"என் புருஷனை நான் நல்லாத்தான் வச்சிருக்கேன். அது சரி. நீ என்ன தனியா வந்திருக்க... அப்பா, அம்மா வரலையா?" என்றாள்.

"வந்துருக்காங்க மையூ... அதோ பாருங்க... செக்ஷன்ல இருக்காங்க. அவங்களும் உன் மேல கோபமா இருக்காங்க மையூ. அதான் நான் மட்டும் வந்தேன்..." என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

"ஹே சில் அவுட் டி... நீயாவது என்னோட பேச வந்தல்ல... விடு. எல்லாம் சரியாயிடும்..." என்றாள்.

வெற்றி அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

"ஹைய்யோ... வெற்றி! நான் இதுக்கெல்லாம் ஃபீல் பண்ண மாட்டேன்..." என்று அசால்ட்டாகச் சொல்லி விட்டு,

"என்ன மீரா குடும்பத்தோட ஷாப்பிங்..." என்றதும், இத்தனை நேரம் மயூவை வம்பளந்து கொண்டிருந்தவள் முகத்தில் அப்படி ஒரு வெட்கம்.

"மீரா... இப்போ நீ என்ன பண்ணின? சத்தியமா வெட்கம்னு சொல்லாதடி... எனக்கு ஹார்ட் அட்டாக் வந்துடும்..." என்று அவளைக் கலாய்க்க...

"போ மயூ...." என்று சிணுங்கியவள், "எனக்கு மேரேஜ் ஃபிக்ஸாகிடுச்சு..." என்றாள், அதே வெட்கத்துடன்.

"அடி கள்ளி... யார் அந்தப் பாவப்பட்ட ஜீவன்...?" என்றான்.

"உனக்குத் திமிருடி... உனக்கே ஒரு கஞ்சி சொக்கா கிடைக்கும்போது எனக்...கு..." என்று இழுத்தவள்,

பக்கத்தில் வெற்றி நிற்பதை மறந்து விட்டு, உளறியதை நினைத்து நாக்கைக் கடித்தாள்.

"ஹா... ஹா..." என்று மயூரா பெரியதாகச் சிரிக்க... மீராவும், வெற்றியும் அவளை முறைத்தனர்.

அவர்கள் முறைப்பிற்குச் சிரிப்பை அடக்கிக் கொண்டவள்... அவன் இன்னமும் தன்னையே முறைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, அவன் கவனத்தைத் திசை திருப்ப அவன் கையில் இருந்த சின்ன டப்பாவைக் காட்டி, "என்னது வெற்றி?" என்றாள்.

கவனம் கலைந்தவன், அவள் கையில் அந்த டப்பாவைக் கொடுத்தவன், "திறந்து பாரு..." என்றான்.

அதில் வெள்ளியில் மூன்று சலங்கைகள் பதித்த மெட்டி இருக்க, "வெற்றி... சூப்பர். எனக்கா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைத்து மீண்டும் அவனிடமிருந்து ஒரு முறைப்பைப் பெற்றுக் கொண்டாள்.

"சாரி சாரி... வீட்டுக்குப் போனதும் நீங்களே போட்டு விடுங்க..." என்றாள்.

"அது என்ன வீட்டுக்குப் போனதும்... இங்கேயே போட்டு விடச் சொல்லு, மையூ..." என்று மீரா வம்பு செய்ய,

"ஹா... ஹா... அடிப் போடி. கஞ்சி சொக்கா என்ன ரொமான்ஸ் மன்னரா?" என்று அவள் காதில் சொன்னதை வெற்றி தெளிவாகக் கேட்டு விட்டான்.

அவள் கையில் இருந்த மெட்டியை வாங்கித் தயங்காமல் கீழே குனிந்து அவள் காலைப் பற்றினான்.

அவன் செயலில் பதறிய மையூ, "வெற்றி... என்ன செய்றீங்க? நான் சும்மா சொன்னேன்..." என்று அலற... அவள் குரலில் பக்கத்தில் இருந்தவர்கள் இவர்களைப் பார்க்க ஆரம்பித்தனர்.

அதை எல்லாம் காதில் வாங்காமல் அவள் போட்டிருந்த காலணிகளைக் கழற்றியவன், அவன் வாங்கிய அந்த மெட்டியை அவள் காலில் அணிவித்து, அதில் முத்தம் பதித்து, அவள் முகத்தைப் பார்க்க... அக்கடையில் கரகோஷங்கள் பெரியதாக ஒலித்தது.

அவன் செயலில் அவள் வெட்கப்பட்டு, தலை குனிய...

மீரா, "வாரே வா..." என்றாள்.

பக்கத்தில் இருந்த ஒரு தம்பதியரில் அந்த மனைவி கணவனின் தோள்களில் இடித்து, "இங்க பாருங்க... இவரு புருஷன். நீங்களும் இருக்கீங்களே.... ஒரு சேலையைக் கூடத் துவைக்கத் தெரியாமல்..." என்று நொடிக்க,

அவர்களைப் பார்த்து அனைவரும் சிரித்தனர்.

அக்கடையில் இருந்த அனைத்துக் கண்களும் இங்கு நடந்த இந்தச் சம்பவத்தைக் கேலி, கிண்டல் செய்து கொண்டிருக்க... இரு ஜோடிக் கண்கள் மட்டும் வேறு ஒரு உணர்வில் இருந்தது.

அவளுக்கு அணிவித்து விட்டு எழுந்து, அவள் தோளில் கை போட்டு நிற்க,

"செம வெற்றி சார்.... நீங்க ஒரு அந்நியன்னு நினைச்சேன். பட், உங்களுக்குள்ள இப்படி ஒரு ரெமோ இருக்கார்னு எனக்கு இப்போதானே புரியுது..." என்று கிண்டல் செய்ய,

"ஹே... ஏன்டி என் புருஷனைக் கிண்டல் பண்ற? அப்புறம் முகம் தெரியாத உன்னோட வருங்கால வுட்பியை நான் கலாய்ப்பேன்..." என்று மிரட்ட,

"ஓ.கே. ஓ.கே. சரண்டர்..." எனச் சமாதானம் அடைந்தவள், அவள் அன்னை மொபைலில் அழைக்க, "மயூ, அம்மா கூப்பிடறாங்கடா. நான் போகணும். என்னோட கல்யாணம் திடீர்னு முடிவாகிடுச்சு மயூ. அதான் உனக்கு இன்ஃபார்ம் பண்ண முடியல. இன்னும் டூ வீக்ஸ்ல மேரேஜ்டா. கண்டிப்பா ரெண்டு பேரும் வரணும் சார்..." என்றவாறு தோள் பையிலிருந்து பத்திரிக்கையை எடுத்து வெற்றியிடம் கொடுத்தாள்.

"சாரி... கடையில வெச்சு கொடுக்குறேன்னு நினைக்காதீங்க சார்... கண்டிப்பா ஒரு நாள் வீட்டுக்கு வர்றேன்..." என்று விடைபெற்றுச் சென்றாள்.

அவள் சென்றதும் வாங்கிய நகைக்குப் பில்லைக் கொடுத்து விட்டு, அவர்கள் காருக்கு வந்தனர்.

வண்டியில் ஏறியதும், "ஏன் மச்சான் திடீர்னு இப்படிப் பண்ணிட்டீங்க. எல்லாரும் உங்களைப் பற்றி என்ன நினைப்பாங்க..." என்றாள்.

"என்ன நினைப்பாங்க... நீ என் பொண்டாட்டின்னு நினைப்பாங்க. ஏன் மையூ.... நமக்கு மட்டும் சம்பிர தாயப்படி கல்யாணம் நடந்திருந்தா... நான் பல பேர் முன்னால்தான் உனக்கு மெட்டி போட்டு விட்டுருப்பேன்... நீ என் மனைவிடா..." என்று உணர்ந்து சொல்ல,

"அதுவும் சரிதான்..." என்று அமைதியாகி விட்டாள்.

"அம்மு... நீ எப்பவும் இப்படித்தானா... கலகலன்னு... எல்லாரையும் கிண்டல் பண்ணிக்கிட்டு... எதைப் பற்றியும் கவலைப்படாம ஜாலியா இருக்க. எனக்கும் உன்னை மாதிரி இருக்கணும்னு ஆசையா இருக்கும்மா..."

"ஆமாம் மச்சான்... நான் எப்பவும் இப்படித்தான். நேற்று என்பது முடிந்த கதை. நாளை என்பது தெரியாத கதை... இன்று இந்நொடி மட்டும்தான் நிஜம்... என்று எனக்குள்ள ஒரு பாலிசி வைச்சுருக்கேன். நமக்கு வாழ்க்கை ஒரு தடவைதான் வெற்றி... அதை முடிந்த மட்டும் சந்தோஷமாக அனுபவிக்கணும். நீங்க என்னோட சேர்ந்துட்டீங்க இல்ல... டோன்ட் வொர்ரி. சீக்கிரமா மாறிடுவீங்க..." என்று அவள் சொல்லியதைக் கேட்டவன் அவளையே உற்று நோக்கினான்.

மனதில் 'சில சமயம் குழந்தையைப் போல் சிரிக் கிறாள். சில சமயம் நூத்துக் கிழவி போல போதிக்கிறாள். இவள் உண்மையாகவே எனக்கு இறைவன் கொடுத்த வரம். என் வாழ்நாள் முழுவதும் இவளை என் சுவாசம் போல் சுகிப்பேன்..." என்று உறுதி எடுத்துக் கொண்டான்.

கார் அவர்கள் வீட்டிற்குச் செல்லாமல் வேறு வழியில் செல்ல... "எங்க போறீங்க?" என்றாள்.

"அமைதி... அமைதி.." என்றவாறு கோவிலுக்குள் செல்ல,

"ஓஹோ... கோவிலுக்கா... அதைச் சொல்ல வேண்டியதுதானே..." எனத் தன்னுடன் நடந்து வந்த கணவனின் கைகோர்த்து இருவரும் கோவிலினுள் சென்றனர்.

ஐயர் வந்து அர்ச்சனைக்காகப் பெயரைக் கேட்க, அவன் இருவரின் பெயரையும் சொல்லி வாங்கி வந்த தங்கத் தாலியைச் சாமி சந்நிதியில் வைத்துத் தருமாறு கேட்க,

அவர், "தாராளமாக..." என்று அவன் சொன்னதைச் செய்து அவனிடம் கொடுத்தார்.

அந்த ஐயர் திருமண மந்திரம் ஓத, இறைவனின் சந்நிதியில், கோவிலில் மங்கள இசை ஒலிக்க...

வெற்றி மயூவின் கழுத்தில் மீண்டும் ஒருமுறை தாலி அணிவித்தான்.

அந்த அர்ச்சகர் மட்டுமல்லாது, சாமி தரிசனம் செய்ய வந்த பக்தர்களும் அவர்களை நல்வார்த்தைகள் சொல்லி ஆசிர்வதித்தனர்.

தம்பதி சகிதமாக இருவரும் இறைவனைச் சேவித்து விட்டு, ஒரு இடத்தில் அமர,

வெற்றி, "அம்மு... நாம மீராவோட கல்யாண மண்டபத்துக்குப் போகலாம்டா..."

"வேண்டாம் மச்சான்..." என்று உடனே மறைத்தாள்.

"ஏன்டா... அங்க உன் ஃபிரெண்ட்ஸ்... அப்புறம்... உன் அப்பா, அம்மாவெல்லாம் வருவாங்கதானே..." என்று கடைசியாகச் சொன்னதை மட்டும் குரல் தாழ்த்திச் சொன்னான்.

"ம்ம்... இதுக்குத்தான் வெற்றி! நீங்க யார் முன்னாடியும் தலை குனிந்து நிற்கக் கூடாது. அங்கே என் அப்பா உங்களை ஏதாவது சொன்னா... என்னால தாங்க முடியாது..." என்று மறுத்தாள்.

அவள் அவனுக்காக யோசித்தது அவன் மனதை வருடினாலும், தன்னுடைய உறவிற்காக... அவளைப் பெற்று வளர்த்த பெற்றோர்களை இழக்க விடக் கூடாது. அவளை எப்படியாவது சமாளித்து, மீராவின் திருமணத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

13

பருகப் பருக தெவிட்டாத தேனாய்ச் சுவையாகச் சென்று கொண்டிருந்தது வெற்றி - மயூராவின் திருமண வாழ்க்கை.

வீட்டில் தனக்காக யார் காத்திருக்கிறார் என்று ஒரு நாளில் இருபது மணி நேரத்தை ஸ்டேஷனில் கழித்து வந்த வெற்றிக்கு, இன்று எப்பொழுது வேலைகள் முடியும்,

எப்பொழுது தன் மனைவியின் மதி முகத்தைக் காணப் போவோம் எனறு எழுந்த ஆவலை அவனால் தடுக்க முடியவில்லை. ஆனாலும் எந்த ஒரு நிமிடமும் அவனது கடமையிலிருந்து தவறவில்லை. இதற்கெல்லாம் காரணம் மயூராவே!

முதலில் எல்லாம் தன் வேலையைத் தானே பார்த்துக் கொள்ளும் வெற்றிக்கு, இந்த ஒரு மாதத்தில் அவன் குளிப்பதற்கு டவல் எடுத்துத் தருவதிலிருந்து அவன் கிளம்பும்போது கார்ச் சாவியை எடுத்துக் கொடுத்து புன்னகை முகத்துடன் வழியனுப்பும்வரை அவள் தேவைப்பட்டாள்.

ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நொடியும் அவளின் சிரிப்பாலும், பேச்சாலும், அன்பாலும் வெற்றி யின் வாழ்வில் பூக்களை மலர வைத்தாள்.

அவனது வாழ்வின் ஒவ்வொரு நொடிக்கும் அவள் இன்றியமையாதவளாக மாறிப் போனாள்.

ஆனால் வெற்றி அவள் அன்பால் கவரப்படுவதை விடுத்து, அவளது அன்பால் அடிமையாக்கப்பட்டான். அவளது காதல் அவனைப் பலவீனப்படுத்தியது என்பதை இருவருமே அறியவில்லை.

அன்று ஒரு கோவில் திருவிழாவில் பந்தோபஸ்தில் இருந்தான் வெற்றி.

காலையிலிருந்து அலைமோதிய கூட்டத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து, திருட்டு மற்றும் வேறு ஏதும்

அசம்பாவிதங்கள் நடக்காமல் இருக்கவேண்டி... போலீஸ் பாதுகாப்புப் படையினர் தீவிரக் கண்காணிப்பில் அன்று முழுவதும் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு வழியாக அனைத்தும் நல்லபடியாக முடிந்தது.

காலையிலிருந்து நின்று கொண்டிருந்தது, அவன் கால் வலியைக் கொடுக்க தளர்ந்த நடையுடன் அவன் வண்டியை எடுக்க வந்தான். அப்பொழுது அவனது மொபைலில் ரிமைண்டர் அலாரம் அடித்தது. எடுத்துப் பார்த்தவனுக்கு, அன்று மீராவின் திருமண வரவேற்பு என்று ஞாபகம் வரவே, சோர்வு மறைந்து இப்பொழுது எப்படியாவது மயூராவை அங்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று துடிப்பு எழுந்தது.

அவனுக்கு நன்றாகத் தெரியும். அவள் வர சம்மதிக்க மாட்டாளென்று. அந்த நாளுக்குப் பின் அவர்களை மீரா மீண்டும் வீட்டுக்கு வந்து முறையாக அழைத்துச் சென்றாள்.

அவளிடம் மீண்டும் அதைப் பற்றி ஒருமுறை பேசியபோது, அவன் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்காமல் வீட்டின் முன்னிருந்த அவர்களது சிறிய தோட்டத்தில் செடிக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண் டிருந்தவள்...

இவன் சொன்னதை விடுத்து, ரோஜாச் செடி புது மொட்டு விட்டிருப்பதாகச் சொல்லிக் குதூகலித்தாள்.

அவள் வர தவிர்ப்பதற்கான காணம் அவன் நன்கு அறிந்திருந்தாலும், அவள் பெற்றோர்களைச் சமாதானப் படுத்த கிடைத்த வாய்ப்பை அவன் நழுவவிட விரும்ப வில்லை. அதனால் ஏதாவது சொல்லி அழைத்துச் சென்றாக வேண்டும் என்ற எண்ணம் எழ... வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

அப்பொழுது ஒரு பாட்டி அவனின் வாகனத்துக்கு அருகில் பூ விற்றுக் கொண்டிருக்க... அவனிடம் வந்தவர், "பூ வேணுமா தம்பி... முழம் பத்து..." என்று அவன் முன் நீட்ட...

"வேண்டாம்..." என்றவாறு அவன் கியரை மாற்றிக் கிளம்ப ஆயத்தமாக,

"கடைசியா ரெண்டே முழம் மல்லிகைப் பூதான் தம்பி இருக்கு... இதை வித்து முடிச்சா நான் வீட்டுக்கு நடையைக் கட்டுவேன்... வாங்கிக்கோப்பா. வாங்கி உன் பொண்டாட்டிக்கு குடுப்பா..." என்றாள்.

தன்னவளின் நினைப்பில் அவன் சிரித்துக் கொண்டே, "சரி கொடுங்க..." என இருபது ரூபாய் கொடுத்து இலையால் அந்தப் பாட்டி சுற்றித் தந்த மல்லிகைச் சரத்தை வாங்கிக் கொண்டான்.

கணவனின் ஹார்ன் ஒலி அவர்கள் வீட்டு கேட்டின் வாசலில் கேட்கும்போதே, தோட்டத்தில் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தவள் குதித்துக் குதித்து ஓடி வந்து கேட்டைத் திறந்தாள்.

இவன் வருகையை உணர்ந்து அந்த வாண்டுகள் சிறிய கேட்டின் வழியாக அவர்கள் வீட்டுக்குள் சென்று மறைந்தார்கள். அவர்களுக்கு வெற்றி என்றால் அப்படி ஒரு பயம். அவனின் ஆஜானுபாகுவான தோற்றமும், அவனின் கடுமை மிகுந்த முகமும் எப்பொழுதும் அவர்களை மிரளச் செய்யும். இவன் இருந்தவரையில், அவன் வீட்டுப் பக்கம் பந்து விழுந்தால்கூட எடுக்க வர மாட்டார்கள்.

ஆனால் என்று மயூரா அங்கு வந்தாளோ, இந்த ஒரு மாதத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவளின் நண்பர்களாகி விட்டனர். அவள் ஏதாவது ஸ்பெஷலாகச் சமைத்தால் அது அந்தத் தெருவுக்கே பங்கிட்டுத் தரப்படும். அதேபோல் மற்றவர்கள் வீட்டில் எது செய்தாலும் இவளுக்குக் கொடுத்து விடுவார்கள். என்னதான் அனைவரும் நண்பர்களாக இருந்தாலும் இதுவரை யாரும் வெற்றியிடம் இயல்பாகப் பேசியதில்லை. அதற்கு அவன் வேலையும், கடுமை மிகுந்த அவனின் தோற்றமுமே காரணம். ஆனால் மயூரா நாள் முழுவதும் அவள் செய்த லீலைகளை அவனிடம் ஒப்பித்துவிடுவாள்.

இன்றும் அவளின் உற்சாகத்தை ரசித்தவாறே, "அம்மு... எவ்வளவோ தடவை சொல்லியிருக்கேன். இப்படிக் குதிச்சு வராதேன்னு... எங்காவது விழுந்து அடி வாங்கினாத்தான் புரியும்..." என்று அவளைச் செல்லமாக மிரட்டினான்.

"ஹா ஹா மச்சான்... அது எல்லாம் காலை யிலேயே அபி, நந்து கூட கிரிக்கெட் விளையாடும்போது

விழுந்துட்டேன்..." என்று அவள் சிரிக்க... அவனது முகம் கருத்தது.

"என்னது விழுந்தியா? என்னாச்சு... ஏதாவது அடிபட்டுதா?" என்று அவன் ஆராய, அவள் கால் முட்டியில் அவளது பாவாடையில் ரத்தமிருக்க... குனிந்து அவளைச் சோதித்தான்.

முட்டியில் மேல் தோல் உறிந்து சிராய்ப்புகள் ஏற்பட்டிருந்தது. அது சின்ன அடிதான். ஏன் இதைவிடப் பல கோரமான விபத்துக்களையும் இரத்தத்தையும் பார்த்தவன் வெற்றி. ஆனால் இன்று, இவளின் சின்னக் காயம் அவனைப் பதட்டம் கொள்ளச் செய்தது.

அப்படியே, அந்தப் புல் தரையில் அவளை அமர வைத்தவன்... அவன் வண்டியில் இருந்த ஃபர்ஸ்ட் எய்ட் கிட்டை எடுத்து வந்தான். அவள் பாவாடையை முட்டிக்கு மேல் ஏற்றியவன், முனைப்பாக அவள் காயத்திற்கு மருந்திட்டான்.

"நீ... என்ன சின்னக் குழந்தையா அம்மு.. எப்போ பாரு, அந்தப் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடிட்டு இருக்க... இப்போ பாரு. எப்படி அடி பட்டுருக்குன்னு..." என்று காயத்தில் பஞ்சை வைத்த வனுக்கு என்னமோ அவனுக்கு வலிப்பது போல் முகத்தைச் சுருக்கினான்.

துடைத்தவாறே, "வலிக்குதா அம்மு..." என்றவன் முகத்தில் அப்படி ஒரு வலி.

இத்தனை நேரம் அவன் கரிசனையையும், அவனது திட்டுக்களையும் ரசித்துக் கொண்டிருந்தவள்... அவன் முகத்தில் வலியைக் கண்டவுடன் அவனைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, "மச்சான்... இது சின்னக் காயம். இதுக்குப் போய் ஏன் இப்படி... எனக்கு வலிக்கக் கூட இல்லை. அயாம் ஆல்ரைட் பா..." என்று அவள் சொல்லியும் கூட, அவன் முகம் சமாதான மடையவில்லை.

அவன் எண்ணத்தை மாற்றும் விதமாக, "வெற்றி... எத்தனை நேரம் இப்படி வெட்ட வெளியில் நான் இப்படி உட்கார்ந்துட்டு இருக்கிறது..." என்று அவன் காதில் ரகசியம் பேச,

"ஏன்... இங்க யாரு வரப் போறா? அதான் அந்த வாலுங்க ஓடிடுச்சுங்க இல்ல..." என்று அவன் சுற்றிப் பார்க்க... வீட்டுச் சிறிய கேட் திறக்கப்பட்டிருந்தது.

"இந்தக் குட்டிக் குரங்குங்க தொல்லை தாங்க முடியலை. எப்படித் திறந்து வெச்சுட்டுப் போயிருக்குன்னு பாரு..." என்று அவர்களைத் திட்டியவாறே கேட்டை அடைக்க வந்தான்.

அப்பொழுது அவர்கள் வீட்டின் எதிரில் யாரோ இருவர் நின்று பேசிக் கொண்டிருக்க... புருவங்கள் முடிச்சிட அவர்களை நோக்கினான்.

ஆனாலும் இவனைக் கண்டு கொள்ளாமல் அவர்கள் எதையோ மும்முரமாகப் பேசிக் கொண்

டிருக்கவும்... அவர்களை விடுத்துக் கேட்டை அடைத்து விட்டு வந்தான்.

அதற்குள் தோட்டத்தில் சிதறப்பட்டிருந்த பால், பேட்டுகள் மற்றும் விளையாட்டுச் சாமான்களை எடுத்து வைத்து விட்டு வந்தாள் மயூரா. அப்பொழுதுதான் ஞாபகம் வந்தவனாக அவன் வண்டியின் டேஷ்போர்டில் இருந்த பூவை எடுத்து அவளுக்குக் கொடுத்தான்.

"அட மச்சான்... இது என்ன மல்லிகைப் பூ எல்லாம்... அல்வா வாங்கிட்டு வரலையா?" - மயூ கிண்டலடிக்க,

"உனக்குக் கொழுப்புடி... சரி. குளிச்சுட்டு ரெடியாகு. வெளியே போகணும்..."

"எங்கே போறோம்?"

"மீரா ரிசப்ஷனுக்கு..." என்றதும் அணைத்திருந்த அவன் கையை விடுத்து வீட்டின் உள்ளே சென்றாள்.

அவள் போவதையே பார்த்திருந்தவன், மனதினுள், "இவ்ளோ நாள் நீ செய்தது சாதனை இல்லைடா வெற்றி... இன்று இவ்ளை நீ அங்கு அழைத்துச் செல்வதுதான் பெரிரிரிய்ய... சாதனை...' என்று அவள் பிடிவாதத்தை அறிந்தவன், தலையை உலுக்கியவாறு உள்ளே சென்றான்.

"அம்மு... சொல்றதைக் கேளும்மா. அங்கே வர்றதுல உனக்கென்ன கஷ்டம். மீரா அன்னைக்குக் கடையில சொன்னது போதாமல் மீண்டும் ஒருமுறை நம் வீடு தேடி வந்து கூப்பிட்டாதானே. அதுவும் இல்லாம

அவள் உன்னுடைய க்ளோஸ் ஃப்ரெண்ட்னு எத்தனை தடவை சொல்லியிருக்க... அவளின் அழைப்புக்கு நாம மரியாதை கொடுக்க வேண்டாமா..." என்றதற்கு அவள் அமைதியாக இருக்கவும்,

"உனக்கு என்ன பிரச்சனை அம்மு... உங்க அப்பா, அம்மா வந்தா நமக்கென்ன? அங்க போனோமா... வாழ்த்து சொன்னோமா... வந்தமான்னு இருப்போம். சரியா..." என்று கொஞ்சவும்...

அவள், "நீங்க இப்போ சொன்னதுக்காக அங்க போகலாம். அந்த மினிஸ்டர் என்னை என்ன சொன்னாலும் நான் கண்டுக்க மாட்டேன். ஆனால் உங்களை ஏதாவது மரியாதை இல்லாம சொல்லட்டும்... அப்புறம் இருக்கு அவருக்கு..." என்று அன்று அவர் வெற்றியைப் பேசிய கோபத்தில் அவள் சொல்லிவிட்டுக் கிளம்பச் சென்றாள்.

வெற்றிக்கு அவள் தன் மேல் வைத்திருக்கும் பாசத்தைக் கண்டு பெருமிதமாக இருந்தது. யோசித்த வாறே அமர்ந்திருந்தவன், "மச்சான்... கொஞ்சம் இந்த சாரி ப்ளீட்ஸ் எடுத்துக் கொடுங்க..." என்ற அவளது குரலுக்கு உற்சாகமாகவே உள்ளே ஓடினான்.

மீராவின் விட்டு ஆட்களும் கோயம்புத்தூரில் ஒரு பெரும் புள்ளியே. அவளது தந்தைக்கும் செல்வ மணிக்கும் தொழில்ரீதியாக நட்பு ஏற்பட்டிருக்கவே அந்த விழாவிற்கு அவருக்கும் ஒரு முக்கிய வரவேற்பு வழங்கப் பட்டது.

செல்வமணியும் ராஜியும் உள்ளே நுழைந்ததும் மரியாதை நிமித்தமாகக் கூட்டம் எழுந்து நிற்க, அனை வருக்கும் ஒரு வணக்கத்தை வைத்து விட்டு, மணமக்களை வாழ்த்தி விட்டு, முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டார்.

சில நொடிகளில் கூட்டத்தில் மீண்டுமொரு முறை சலசலப்பு ஏற்பட...

திரும்பிப் பார்த்த செல்வமணிக்கு அவருக்கு அளித்த அதே மரியாதையை அங்கு அவர் மகள் மயூரா வுடன் ஜோடி சேர்ந்து வந்த வெற்றிக்கும் கொடுக்கப் படவே... அவருக்கு ஏகக்கடுப்பு உள்ளெழுந்தது.

என்னதான் மயூவின் மேல் மீராவின் பெற்றோ ருக்குக் கோபம் இருந்தாலும், வெற்றிக்கும் அவனின் பதவிக்கும் மரியாதை அளிக்கப்பட்டு அவர்களைப் புன்னகை முகத்துடனே வரவேற்றனர்.

ஆனால் ராஜிக்குச் சின்ன வயதிலிருந்து பிரிந்திடாத தன் மகளைக் கடந்த ஒரு மாதமாக அவளிடம் எந்த ஒரு தொடர்பும் இல்லாமல் பிரிந்து, இன்று அவளைக் கண்டதும் அவளிடம் பேச எழுந்த ஆவலைக் கணவனின் கடுமையான முகம் தடுக்க... மௌனமாகக் கண்ணீர் சுரந்தார்.

வந்ததும், மயூரா தன் பெற்றோர்கள் இருந்த திசைப் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

பல நாட்கள் கழித்து, அவளின் நட்பு வட்டத்தைப் பார்த்து விட, உற்சாகமாக அவர்களிடம் சென்றாள்.

இவளைக் கண்டதும் அர்ஜுன் அவளைச் சந்தோஷ மாக அணைத்துக் கொண்டான்.

"ஏன்டி... ஒரு மாசமா என்னைப் பார்க்கக் கூட உனக்கு முடியலையா?" என்று அவள் தலையில் குட்ட...

"ஏன்டா எருமை... நான்தான் உன்னை வந்து பார்க்கணுமா... நீ வந்து என்னைப் பார்த்தா குறைஞ்சா போயிடுவ..." என்று அவன் முதுகில் அடிக்க... இரு வருக்கும் சண்டை முற்றும் வேளை அங்கே நிர்மலும், ரீமாவும் வந்து அவர்கள் வாக்குவாதத்தை விலக்கினர்.

அர்ஜுனை விடுத்து அவர்களுடனும் மற்ற வகுப்புத் தோழர்களுடன் பேச அவள் சென்று விட்டாள்.

அங்கு இதை எல்லாம் உதட்டில் மெல்லிய புன்னகையுடன் வெற்றி பார்த்துக் கொண்டிருக்க...

அப்பொழுதுதான் நினைவு வந்தவனாக, அர்ஜுன்... "ஸ... சாரி சார். எப்பவும் இருப்பது போல..." இழுக்க,

"அர்ஜுன்.... அவள் இப்போதான் எனக்கு வைஃப். எனக்கு முன்னாடி உங்களுக்குத்தான் அவ ஃப்ரெண்ட். சோ டோன்ட் ஃபீல் பாட்..." என்று அவன் முதுகில் தட்டி னான்.

"தேங்க்ஸ் ஃபார் அன்டர்ஸ்டாண்டிங் சார்..." என்றவன், "சார், நானும் ஐ.பி.எஸ். எக்ஸாம் எழுத பிரிப்பேர் பண்ணிக்கிட்டு இருக்கேன்..." என்று உற்சாகத் துடன் சொல்ல,

"வெரி குட் அர்ஜுன்... நல்லாப் பண்ணுங்க. உங்களுக்கு எந்த உதவி வேணும்னாலும் என்கிட்ட கேளுங்க. நான் முடிந்தவரை ஹெல்ப் பண்றேன்..." என்று அவனுக்கு நம்பிக்கை அளித்தான்.

"கண்டிப்பா சார். தேங்க்ஸ் ஃபார் யுவர் கன்சர்ன்..." என்று புன்னகைக்க,

அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "என்னை அண்ணான்னு கூப்பிடு அர்ஜுன்... எனக்கு உன்னைப் பார்த்தால் ஏதோ நெருக்கமா இருக்கு..." என,

"டீல் அண்ணா... எனக்கும் முதலில் உங்களைப் பார்க்கும்போது அப்படித்தான் தோணுச்சு. பட், நீங்க எப்படி எடுத்துப்பீங்களோன்னு நினைச்சுத்தான் சார்னு சொன்னேன்..." என்று அவன் எண்ணங்களுக்கு வழி மொழிந்தான்.

பின் சிறிது மௌனத்திற்குப் பின், "அர்ஜுன், நான் மயூவோட அப்பாகிட்ட பேசணும்..." என்றதும்,

திகைத்த அர்ஜுன் தயங்கியவாறே, "அண்ணா, வேண்டாமே?" - மறுக்க முயன்றான்.

"இல்ல அர்ஜுன், நான் பேசியே ஆகணும். மயூவுக்காக என்பதை விட எனக்காக என்றுதான் சொல்ல வேண்டும்..." என்று அவனை வற்புறுத்த,

"இல்லை வெற்றிண்ணா! அங்கிள் இன்னமும் உங்க மேல கோபமாத்தான் இருக்காங்க. இப்போ போய் பேசுனா உங்களை ஏதாவது ஹார்ஷா சொல்லிடுவாங்க.

தென் மயூவுக்குத் தெரிந்தால் ரொம்பக் கோபப்படுவா..." என்று அவன் தோழியைப் பற்றி நன்கு அறிந்த அவன் சொல்ல...

சிரித்தவாறே, "உன் ஃப்ரெண்டைப் பற்றி நல்லாத் தெரிஞ்சு வைச்சுருக்க அர்ஜுன். பட், நான் இதைச் செய்தே ஆகணும்... என்னை மாதிரி அவளும் யாரு மில்லாமல் எல்லாரும் இருந்தும் ஆகிடக் கூடாது..." என்று கண்களில் வலியோடு சொல்ல, அவனின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட அர்ஜுன் அவனை அழைத்துக் கொண்டு செல்வமணியிடம் சென்றான்.

இவர்கள் அங்கு செல்வதை அறியாமல் மயூரா தன் நட்பு வட்டத்துடன் சேர்ந்து மணமக்களைக் கிண்டலடித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அங்கிருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அர்ஜுன் வெற்றியுடன் சென்றான்.

14

வெற்றியை அழைத்துக் கொண்டு செல்வம் இருந்த இடத்திற்குச் சென்றான் அர்ஜுன்.

அங்கே தெரிந்தவர் யாரிடமோ பேசிக் கொண்டிருந்தவரை, "அங்கிள்..." என்ற அவன் குரலில் கலைந்தவர் திரும்பிப் பார்க்க அங்கே அர்ஜுனுடன் நின்று கொண்டிருந்த வெற்றியைக் கண்டதும் அவரது பி.பி. ஏகத்துக்கு எகிறியது.

ஏற்கெனவே மயூ செய்து வைத்த வேலையிலும், இப்பொழுது தனக்கு அளித்த அதே மரியாதையை இவனுக்கும் மற்றவர்கள் அளித்ததில் கோபம் கொண்டிருந்தவர் இப்பொழுது அவன் தன் எதிரில் நிற்பதை.... அவரால் அவரின் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

இருந்தாலும்... தான் இப்பொழுது இருக்குமிடம் உணர்ந்து தன்னைச் சமாளித்துக் கொண்டு, அர்ஜுனிடம், "அர்ஜுன்... இவனை என் முன்னாலிருந்து போகச் சொல், எனக்கிருக்கும் கோபத்தில் ஏதாவது சொல்லி விடுவேன்..." - அடிக்குரலில் அவர் எச்சரிக்க,

பக்கத்திலிருந்த ராஜி, "என்னங்க... கொஞ்சம் பொறுமையாப் பேசுங்க..." - அவர் கையைப் பிடித்தார்.

அவர் கையை உதறி விட்டவர், "என்ன... பெத்த பாசமா?" என்ற அவர் குரலில் அப்படி ஒரு கடுமை, ஒன்றும் பேசாமல் அமைதியாய் நின்று கொண்டார்.

அர்ஜுனை விலக்கி விட்டு, "நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும். இங்க நின்னு சீன் கிரியேட் பண்ண வேண்டாம்னு நினைக்கிறேன். கொஞ்சம் தள்ளி நின்னு பேசலாமா?" என்று வெற்றி பொறுமையாகவே கேட்டான்.

"உன்கிட்ட பேச எனக்கு என்ன இருக்குடா. நீ என்ன தேவைக்காக அவளைக் கல்யாணம் செய்துக்கிட்டயோ, அது எப்பொழுதும் என்கிட்ட நடக்காது. யாருமில்லாத அனாதைப் பையன் நீ... என் பொண்ணை மயக்கி,

அவளை வைச்சு என் சொத்தை அடைய நினைக்கும் உன்னை எல்லாம் எவன்டா போலீஸ்ல சேர்த்தது...

"நீ இத்தனை செஞ்சும் நான் உன்னை ஏதும் பண்ணாமல் இருக்கேன்னா அதுக்குக் காரணம் நான் இன்னமும் அவளை என் பொண்ணா நினைக்கலை. என்னைக்கி என்னை விட நீதான் வேண்டுமென்று என் வீட்டு வாசல் படியைத் தாண்டினாளோ அப்போவே எனக்கிருந்த மகள் செத்துட்டா. செத்துப் போன அவளுக்காக நான் ஏன் வீணா ரிஸ்க் எடுக்கணும்..." என்று அவர் கத்த,

இதையெல்லாம் ஏற்கெனவே எதிர்பார்த்து வந்திருந்த வெற்றி அவர் தன்னைச் சொன்ன வார்த்தைகள் அவனை நோகடித்தாலும் அதை மறந்து மனைவிக்காகப் பேச நினைத்தான். அவனுக்குத் தெரியும். என்னதான் அவள் தன் முன்னால் மறைத்தாலும், அவளுக்குள் தன் பெற்றோர்கள் மனதைப் புண்படுத்திய தற்காகத் தினம் தினம் வருந்துகிறாள் என்று.

ராஜி கணவன் பேசும் வார்த்தைகளைத் தடுக்க முடியாமல் வெற்றியை இறைஞ்சும் பார்வை பார்த்தார். அந்தப் பார்வையில் இங்கிருந்து போய் விடு... என்ற கெஞ்சல் ஒளிந்திருந்தது.

அவரின் பார்வைக்குக் கண்ணை மூடித் திறந்து சமாதானம் செய்தவன் இதுவரை யாரிடமும் சென்று இவ்வாறு கெஞ்சாதவன் இன்று தன் மனைவியின் சந்தோஷத்திற்காகச் செல்வம் சொல்லும் சொற்களைப்

பொறுத்துக் கொண்டு, "சார், அவள் ஏதோ என் மேல் இருந்த நேசத்துல இந்த மாதிரித் தப்பு செய்துட்டா. எனக்கு உங்களுடைய சொத்து, ஆஸ்தி எதுவும் வேண்டாம். உங்களுடைய உறவை மட்டும்தான் எதிர்பார்க்கிறேன்..." என்ற அவனை முடிக்க விடாமல்,

"என்னடா பெரிய உறவு. யாருமில்லாத அனாதை நாய். உனக்கு உறவைப் பற்றி என்னடா தெரியும்..." என்று அவர் உச்ச டெசிபலில் கத்த, அவரின் சொல்லில் ராஜி அதிர, கோபத்துடன் வெற்றி வாயெடுக்கும் முன்,

"வார்த்தையை அளந்து பேசுங்க மிஸ்டர் செல்வமணி..." - அவரை விட அந்த மண்டபம் அதிரும் அளவில் கத்தினாள் மயூரா.

அவள் கண்களில் அத்தனைக் கோபம். பார்ப்பதற்குக் காளியம்மனைப் போல சிவந்திருந்தாள்.

வேக நடையிட்டு அவர்கள் அருகில் வந்தவள், வெற்றியின் கையைப் பிடித்துக் கொண்டு, கம்பீரமான குரலுடன், "பெத்த பாவத்துக்காகவும் நான் செஞ்ச தப்புக்காகவும் நீங்க என்னை என்ன வேணும்னாலும் சொல்லிக்கோங்க. என் கணவனைச் சொல்ல உங்களுக்கு எந்த அதிகாரமுமில்லை. அதை ஞாபகத்தில் வெச்சுக்கோங்க..." அத்தனை பேரின் முன்னால் தன் தந்தையை எதிர்த்தாள்.

"யாரைப் பார்த்து அனாதைன்னு சொன்னீங்க. இவரையா... தாய் தந்தை இல்லாதவர்கள் எல்லாம் அனாதைன்னு எவன் சொன்னது...? அவருக்கு நான்

இருக்கேன். என்னைக்கு இவர் என் கழுத்தில் தாலி கட்டினாரோ அன்றே இவருக்குச் சொந்தம், பந்தம் எல்லாமும் நான்தான். யாருக்குய்யா வேணும் உன் சொத்தும், பணமும். அதை நீயே வெச்சு கட்டிக்கிட்டு அழு. நீ சாகும்போது உனக்கு இந்தச் சொத்து வந்து கொள்ளி வைக்குதான்னு பார்க்குறேன்..."

சின்ன வயதிலிருந்து தன் நலம் பேணும் தன் தந்தையைத் தன் கணவனுக்காக அந்நொடி தூக்கி எறிந்தாள் மயூரா.

அவள் பேசியதில் கேட்டுக் கொண்டிருந்த செல்வமணியை விட மிகவும் அதிர்ந்தது வெற்றிதான். அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

"நீங்க சொன்னது போல நான் செத்துப் போனதாவே நினைச்சுக்கோங்க. குட் பை..." என்று தன்னையே சிலை போல் நின்று பார்த்துக் கொண்டிருந்த கணவனின் கையைப் பிடித்து நடந்து சென்றாள்.

அவள் நடையில் சற்றும் தளர்வில்லை. முகத்திலும் நடையிலும் அப்படி ஒரு கம்பீரம். அவளின் தைரியமான பேச்சில் அர்ஜுன் உட்பட அங்கிருந்த அனைவரும் வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

கார் பார்க்கிங் வந்த மயூ... கணவன் இன்னமும் அதே நிலையில் இருக்க அவனின் சட்டைப் பாக்கெட்டிலிருந்து வண்டி சாவியை எடுத்தாள்.

அவளின் தொடுகையில் உயிர் பெற்றவன், "மையூ..." என, ஒரு கை காட்டி அடக்கி வண்டியில் ஏறுமாறு செய்கை செய்து விட்டு இவள் டிரைவர் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

அவன் இன்னமும் ஏறாமல் அப்படியே நின்று கொண்டிருக்க.. அவள் கால் அழுத்தத்தில் ஆக்சிலரேட்டர் உறுமிக் கொண்டிருக்க... வெற்றி ஏறி அமர்ந்து கொண்டான்.

அவன் ஏறியதும் வண்டி புயல் போல் பறக்கத் துவங்கியது.

காரில் ஏறியதும் அவளிடம் அவன் விளக்கம் சொல்ல வாயைத் திறக்க... வண்டியிலிருந்த மியூசிக் சிஸ்டமை ஆன் செய்து ஒலியைக் கூட்டினாள்.

வெற்றிக்கு இவர்கள் திருமணம் நடந்தபோது, தான் எவ்வாறு நடந்து கொண்டோம் என்ற நினைப்பு வந்து, அந்த நேரத்திலும் அவன் உதட்டில் புன்னகை முளைத்து இந்த ரணகளத்திலேயும் உனக்கு ஒரு குதூகலம் கேட்குது... என்று அவன் மனம் சாடியது.

இதற்கு மேல் அவளிடம் என்ன பேசவென்று அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அவன் பார்ப்பதை அறிந்தும் அவன் பக்கம் திரும்பாமல் பார்வையை சாலையில் பதித்துக் கவனமாக வண்டியை ஓட்டினாள். அவள் வண்டியை லாவகமாக ஓட்டும் அழகை ரசித்தவாறு வந்தான்.

வீடு வந்ததும் அவனை அம்போவென விட்டு விட்டு அவர்கள் பயன்படுத்தாத இன்னொரு அறைக்குள் சென்று கதவை அடைத்தாள்.

அவள் பின்னாலே வந்தவன், அவள் கதவை நங்கென்று அடைக்கவும், "அம்மா..." என்ற அவனின் கத்தலில் பதறி வெளியே வந்தவள்...

அவன் கையை உதறிக் கொண்டு அலறவும் பாய்ந்து அவனைப் பற்றியவள்... "என்னாச்சு... என்னாச்சு வெற்றி..." என்று அவன் கையைப் பிடித்து ஆராய, ஏதும் அடிபட்டதற்கான அடையாளம் இல்லாமல் இருக்க அவனைக் குழப்பமாகப் பார்த்தாள்.

அவள் தோளை அழுத்தமாகப் பிடித்தவன் அவளைத் தங்கள் அறைக்குத் தூக்கிச் சென்று கதவை அடைத்தான்.

அவளைக் கட்டிலில் கிடத்தியவன், அவளை நகர விடாதவாறு அவள் மேல் படுத்துக் கொள்ள, அவனின் கனத்தைத் தாங்க முடியாமல் அவனை விலக்கப் போராடித் தோற்றாள்.

"அம்மு... கொஞ்சம் நான் சொல்றதைக் கேளுடி..."

"நீங்க ஏதும் என்கிட்ட சொல்ல வேண்டாம். முதல்ல என்னை விடுங்க..." என்று அலறினாள்.

அவன் அப்பொழுதும் நகராமல் அவள் முகம் நோக்கி குனிய, அவன் மூக்கைப் பல் பதியும் அளவுக்குக் கடித்தாள்.

"ஹைய்யோ... வலிக்குதுடி. ராட்சஷி..." என்று மூக்கை அவன் கன்னத்திலே தேய்த்தான்.

"விடு... விடுடா..." என்று கொஞ்சம் கொஞ்சமாக மரியாதை தேய்ந்தது.

"என்னது டாவா... சரி பரவாயில்ல... நம்ம பொண்டாட்டிதானே?" அவன் மனதில் நினைக்கும் வேளை அவள் அவனிடமிருந்து தப்பித்து கட்டிலின் மறுபுறம் வந்து விட்டாள்.

வந்தவள் வெளியே செல்ல முற்பட, அவள் சேலை அவனின் மேல் சுற்றியிருக்க... அதை எடுக்கப் போராடினாள்.

அவன் இதுதான் சமயமென்றும் அரங்கநாதர் பள்ளிகொண்டதைப் போல் அவன் தலையில் கை வைத்துப் படுத்து, "இப்போ என்ன செய்வ?" என்ற லுக் கொடுக்க, இதற்கெல்லாம் நான் அசர மாட்டேன் என்ற மயூரா சேலையை முழுவதுமாகக் கழற்றி அவன் மேலே வீசி விட்டு மற்றொரு அறைக்குச் சென்று மறைந்தாள்.

"ஐயோ... இவளைப் பற்றித் தெரிஞ்சும் இப்படி வில்லன் லுக் கொடுத்து சொதப்பிட்டியே வெற்றி..." என்று தலையில் அடித்துக் கொண்டு அவள் பின்னால் சென்றான்.

"அம்மு... ப்ளீஸ்டி. நான் நமக்காகத்தான் பேசினேன். எனக்காக நீ உன்னோட அம்மா, அப்பாவை இழக்கக் கூடாதுன்னு நினைச்சுத்தான்டா பேசினேன். அம்மு... கதவைத் திறம்மா..." என்று கதவைத் தட்ட,

அவளோ குப்புறப் படுத்துத் தலையணையை முகத்தில் வைத்துப் படுத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் உறங்கியும் விட்டாள். கொஞ்ச நேரம் நின்று பார்த்தவன் அவள் இத்தனை நேரம் அமைதியாக இருந்தால் கண்டிப்பாக உறங்கியிருப்பாள் என்று தெரிந்தவன் மற்றொரு அறைக்குச் சென்று உறங்க முயற்சி செய்தான்.

இத்தனை இரவுகள் அவளைத் தன் அணைப்பில் வைத்துக் கொண்டு உறங்கிப் பழகியவனுக்கு வெறுமையான படுக்கை கடுப்பைக் கிளப்பியது. அதே கடுப்புடன் புரண்டு புரண்டு படுத்தவனுக்குத் தூக்கம்தான் வந்த பாடாக இல்லை.

காலை ஏழு மணிக்கு உறக்கம் கலைந்த மயூரா, கண்ணைத் திறவாமலே அருகில் கணவனைத் தேட... அப்பொழுதுதான் நேற்று நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

கோபத்துடன் எழுந்தவள்... இந்த நேரம் அவன் வழக்கமான ஜாகிங் சென்றிருப்பான் என்ற எண்ணத்தில், நேற்று அவனை விட்டுச் சென்ற அதே நிலையில் அறையிலிருந்து அவளின் மிச்சத் தூக்கத்தையும் விரட்ட, கொட்டாவி விட்டவாறே வெளியே வர, அங்கே ஹால் சோபாவில் அமர்ந்திருந்த வெற்றி கொட்ட கொட்ட இவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்து ஒரு நொடி அதிர்ந்தாலும் அவன் பார்வை சென்ற இடத்தைக் கீழே குனிந்து

பார்த்தவள்... கோபத்துடன் முறைத்தவாறு அந்த அறைக்குச் சென்று குளித்து வழக்கம் போல் அவனின் சட்டையும், மிடியும் அணிந்து வெளியே வர,

வெற்றிக்கு, "என் கூடப் பேச மாட்டாளாம். ஆனால் என் சட்டையை மட்டும் போட்டுப்பாளாம்... என் அழகு ராட்சஷி..." - அவளைக் கொஞ்சியவாறு சிரித்துக் கொண்டான்.

அவனின் சிரிப்பைக் கண்டு முறைத்தவாறே, சமையலறைக்குச் செல்ல, பின்னாலே வந்த வெற்றி அவளை இடுப்போடு அணைத்துக் கொண்டு அவளுக் காக வைத்திருந்த பாலைக் கொடுத்தான்.

அவனை விலக்காமல் கொடுத்த பாலைப் பருகத் துவங்கினாள்.

"அம்மு..." என்று காதை உரசியவாறு சொல்ல, அவன் அழைப்புக்கு எந்தப் பதிலுமில்லை.

"அம்மு... பேசுடா. நீ பேசாம இருந்தா எனக்கு யாருமே இல்லாத மாதிரித் தோணுது..." என்று அவன் சொல்லி முடிக்குமுன் அவன் இதழைத் தன் இதழ்களால் மூடினாள்.

வெகுநேரம் தொடர்ந்து அம் முத்தத்திலிருந்து விடுபட்டு, "வெற்றி... இதுதான் கடைசி. இனிமேல் இது மாதிரிப் பேசுனீங்க... அப்புறம் பாருங்க..." என்று விரல் நீட்டி மிரட்டினாள்.

"தேங்க்ஸ் அம்மு..."

அவளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, நீட்டிய விரலை அவளுக்கு வலிக்காமல் கடித்தான்.

"ஏன்பா.. நான் சொல்லச் சொல்லக் கேட்காம அவர்கிட்ட பேசுனீங்க?" என்ற அவள் குரல் அடைத்துக் கொண்டது. அழுகை இப்போ வரவா, வேண்டாமா என்று முட்டிக் கொண்டு நின்றது.

அவளுக்குத் தன் கணவனை எல்லோர் முன்னிலை யிலும் தந்தை அவமானப்படுத்தியது மனம் வலித்தது.

"இல்லம்மா... நீ பண்ணினதும் தப்புதானே. எனக்காகத்தான் என்றாலும், அவர்களை விலக்கி விட்டு நீ வந்தது தவறுதானே. என்னை விட உயர்ந்த இடத்தில் இருக்கும் உன் தந்தைக்கு இது எத்தனை பெரிய கெட்ட பெயரைக் கொடுத்திருக்கும். எத்தனை பேர் அவர் முகத்துக்கு முன்னாடியும் பின்னாடியும் பேசியிருப்பாங்க.

"இதை எல்லாத்தையும் விட, இதில் உன் குணத்தைப் பற்றியும் எல்லாரும் விமர்சித்திருப்பாங்கடா அம்மு... அதைச் சரி செய்யணும்னு நினைச்சேன்டா. நம்மளால நடந்த தப்பை நாமதான் சரி செய்யணும்..." என்று கண்ணீர் வழிந்த அவள் கன்னங்களைத் துடைத்து விட்டான்.

"நீங்க இப்படி நினைக்கிறீங்க... ஆனால் உங்களை அவர் எப்படி எல்லாம் பேசினார். அவர் இந்த மாதிரி எல்லாம் பேசுவாருன்னு தெரிஞ்சுதான் நான் பேச

வேண்டாம்னு சொன்னேன். உங்களைப் பற்றியும் நல்லாத் தெரியும். அதான் மீரா ரிசப்ஷனுக்கே போக வேண்டாம்னு சொன்னேன்.

"உங்களுக்கு எதுக்குப்பா இந்த வேலை... என்னால நீங்க ஒருமுறை அவமானப்பட்டதே எனக்கு இன்னமும் கில்டியா இருக்கு... நேத்து அத்தனை பேர் முன்னாடி..." என்று மேலும் மேலும் அவளுக்குக் கண்ணீர் பெருகியது.

"முயற்சி எடுக்காமயே இருந்தா எப்படிம்மா தப்பைச் சரி பண்ண முடியும்... அவங்களுடைய கோபம் நியாயம்தானே. சரி விடு. நடந்தது நடந்து போச்சு. இனி, இதைப் பற்றிப் பேச வேண்டாம்..." என்று அப்போதைக்கு அப்பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க,

வீட்டு வாசல் மணி ஒலிக்கவும், "இருங்க... நான் பார்க்கிறேன். பக்கத்து வீட்டு அபியா இருக்கும். அவளுடைய கிராஃப்ட் இங்கயே வெச்சுட்டுப் போயிட்டா. அதை வாங்கத்தான் வந்திருப்பா..." என்று அவன் அணைப்பிலிருந்து விலகிக் கதவைத் திறக்கச் சென்றாள்.

அவள் செல்வதற்கு முன் காலிங் பெல் வேகமாக ஒலிக்க, ஏதோ தோன்ற, "அம்மு... நில்லு. நான் திறக்கிறேன்..." என்று அவள் பின்னால் வருவதற்குள் அவள் கதவைத் திறந்திருந்தாள்.

திறந்த வேகத்தில் புகைமூட்டத்துடன் பட்டாசு ஒலி அவர்கள் காதைக் கிழிக்க, தீபாவளி அன்று பட்டாசுக்குப் பயந்து வீட்டில் அவள் அறையின் கதவை அடைத்துக்

கொண்டு காதை அடைத்து அமர்ந்திருக்கும் மயூராவுக்கு இப்பொழுது அவர்கள் வீட்டின் வாசலில் பட்டாசு வெடிக்க... பயத்துடன் கணவனை இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

வெற்றி மனைவியை நெஞ்சோடு அணைத்தவன், பார்வையைச் சுழல விட்டவனுக்குப் புகைமூட்டம் குறைந்து தங்களை நோக்கி ஒரு உருவம் வருவது கண்ணில் தெரிந்தது.



புகைமூட்டத்திற்கு நடுவே தங்களை நோக்கி நடந்து வந்த உருவத்தை இனம் கண்டு கொண்ட வெற்றி, சந்தோஷமாக, "டேய் பாஸ்கரா..." எனக் கூவினான்.

நண்பனின் கூவலுக்கு ஏற்றார்போல் வேகமாக அவனைக் கட்டியணைக்க நெருங்கி வர, அங்கே நண்பன் யாரோ பெண்ணைக் கட்டிப் பிடித்திருப்பது அவனை வியப்பில் ஆழ்த்தியது.

வேறு யாரோவாக இருந்திருந்தால் அவனை வியப்படையச் செய்திருக்காது. வெற்றி இப்படி நிற்கவும் தான் அவன் தாடை தொங்க அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நண்பன் தன் அழைப்புக்குப் பதில் பேசாமல் இப்படி இடித்த புளி போல் நிற்கவும், மீண்டும்.. "டேய், பாஸ்கரா.... என்னடா இப்படி நிக்கிற! எப்படி இருக்க?" என்ற அவனின் கேள்விக்கு எந்தப் பதிலுமில்லை.

மயூராவோ இதை ஏதும் கவனிக்காமல் இன்னமும் கணவனின் அணைப்பில் தன் முகத்தை மறைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

சில நிமிடங்கள் கழித்து வெற்றியை நெருங்கிய பாஸ்கர் என்கிற பாஸ்கரமூர்த்தி ஐ.பி.எஸ். நண்பனையும், அவனை அணைத்து நிற்கும் பெண்ணையும் மேலிருந்து கீழ்வரை நோக்கினான்.

மயூரா அவனின் சட்டையை அணிந்திருக்க, அவள் காலில் மெட்டி இருக்க, அவனுக்கு எதையோ உணர்த்தினாலும், நண்பனின் குணத்தைப் பற்றி அறிந்தவன், சந்தேகமாக, "யாருடா இந்தப் பொண்ணு..." என்றான் நண்பனை மிரட்டும் பாணியில்.

"மை வைஃப்..." - சிரித்துக் கொண்டே சொன்ன நண்பனை விழிகள் தெறித்துக் கீழே விழுந்து விடும் பாவனையில் பார்த்து, "என்னது உன் வைஃபா... காட் ப்ராமிஸ்!" - சின்னப்பிள்ளைத்தனமாகக் கையை நீட்டிக் கேட்டான்.

"சத்தியமா என்னோட வைஃப்தான்டா. ஒரு நிமிஷம் இரு. அம்மு... அம்மு... இங்க பாரு. என் ஃப்ரெண்ட் வந்துருக்கான்டா... அவனுக்குக் குடிக்க காபி எடுத்துட்டு வா..." - அவளைத் தன் அணைப்பிலிருந்து விலக்க முயற்சி செய்தான்.

கணவனின் குரலில் நிகழ்காலத்துக்கு வந்தவள், முகம் நிமிர்த்தி அவனைப் பார்க்க,

"ஒண்ணுமில்லம்மா... இங்க பாரு. இவன்தான் பட்டாசைக் கொளுத்திப் போட்டிருக்கான். ஒண்ணும் பயம் இல்ல. போய் குடிக்க ஏதாவது எடுத்துட்டு வா..." - அவளைக் கிச்சனுக்குள் அனுப்பி வைத்தான்.

"வா பாஸ்கர்... உட்காரு!" என்றவனை எதுவும் சொல்லாமல் அமர்ந்து கொண்டு அமைதியாக அவனையே பார்த்திருந்தான்.

"என்னடா... இப்படி ஒரு பார்வை. நிஜமா அவள் என் வைஃப்தான். ஏன் நான் எல்லாம் கல்யாணம் பண்ணக் கூடாதா?" - உதட்டில் புன்னகையுடன் விசாரித்தான்.

"நீ கல்யாணம் பண்ணினதுதான்டா ஆச்சரியம். ட்ரெய்னிங் பீரியட்ல எப்படி விறைப்பா இருப்ப. உன்கிட்ட அந்த அசாம் பொண்ணு லவ் ப்ரொபோஸ் பண்ணினப்ப அவளை அடிக்காத குறையா விரட்டுனியே... உனக்கா கல்யாணம்? அதுவும் இந்த மாதிரி, அமைதியா, அடக்கமான ஒரு பொண்ணு... அதுதான்டா அதிசயமா இருக்கு..." என்றான்.

"நீ சொன்னது எல்லாம் சரி. ஆனால் கடைசியா சொன்ன சென்டன்ஸ் அவகிட்ட பேசின பின் பரிசீலனை பண்ணிக்கோ..." - புன்னகையுடன் சொன்னவன், "அம்மு... காபி ரெடியா?"

அவன் குரலுக்குக் கையில் ட்ரேயுடன் வந்தாள் மயூரா.

"மயூ.... ஹி இஸ் பாஸ்கரன். நாங்க ரெண்டு பேரும் ஒண்ணா ட்ரெய்னிங் பண்ணினோம். பாஸ்கர்... இவள் மயூரா. என்னோட வைஃப்..." என்று அறிமுகம் செய்து வைக்க,

பாஸ்கர் அறிமுகமாக, "ஹாய்..." என்றான்.

அவனின் ஹாயை டீலில் விட்டு விட்டு, "நீங்கதான் வீட்டுக்கு முன்னாடி பட்டாசு வெச்சதா?"

"யா... ஜஸ்ட் ஒரு சர்ப்ரைஸ்க்காக..." - அவன் கெத்தாகச் சொல்ல,

"ஹே லூசு... அறிவிருக்கா உனக்கு. இப்படித்தான் காலங்காத்தால வெடி வைப்பியா... அந்த வெடியை உன் வாயில் கொளுத்திப் போடறேன் இரு..." என்று கொந்தளிக்க...

அதற்குள் வீட்டு வாசலில், "மயூக்கா... மயூக்கா... என்ன உங்க வீட்ல பட்டாசு வெடிக்கிறீங்க..." என்ற அவள் படைத் தலைவர்கள் இவளை அழைக்க,

அவனை முறைத்தவாறு, "இரு. வந்து வெச்சுக் குறேன்..." - மிரட்டி விட்டுச் சென்றாள்.

பாஸ்கர் விளக்கெண்ணெயைக் குடித்தவன் போல் மூஞ்சி அஷ்டகோணலாகியது.

வெற்றிக்குச் சிரிப்பு பீறிட்டு வர, வாயை மூடிக் கொண்டு சிரிக்கத் துவங்கினான். அவள் திட்டியதிலிருந்து மீண்டு நண்பனின் சிரிப்பில் காண்டானவன், "டேய்ய்ய்...." என அவன் மேல் பாய்ந்தான்.

"ஹே... கூல் கூல்..." அவனைச் சமாதானப்படுத்தி அமர வைத்தவன் காதில்... "மயூக்கா. பார்த்து... கீழே விழுந்துடாதே..." - குழந்தைகளின் குரல் கேட்க,

"ஒரு நிமிஷம் இரு பாஸ்கரா..." என வேக மாக வெளியே வந்தவனுக்கு அவர்கள் வீட்டின் காம்பவுண்டில் ஸ்டூல் வைத்து ஏறிக் கொண்டிருந்த மயூ தென்பட, "அம்மு... என்ன பண்ற நீ..." என்றவாறு வேகமாக அவளை நெருங்கினான்.

ஸ்டூல் மேல் நின்றிருந்த அவள் பின்னால் தட்டி, "ஹே... இறங்குடி. என்ன குரங்கு வேலை பண்ணிக்கிட்டு இருக்க... ஏற்கெனவே நேத்து விழுந்து வாங்கிக்கிட்டது பத்தாதா... இறங்கு..." - அவள் கையைப் பிடித்து இறக்கினான்.

"மச்சான்... நந்துவோட கார்க் மரத்துல சிக்கிடுச்சு. எடுத்துத் தரச் சொன்னாங்க... அதான்..."

தன் நண்பர்களுக்கு உதவி செய்வதைத் தடுக்கிறானே என்ற ஆதங்கத்தில் மூஞ்சியைச் சுருக்கி னாள்.

"தள்ளு... நான் எடுத்துத் தர்றேன்..." என்றவன், நந்து என்கிற நந்தாவிடமிருந்து ஷட்டிலை வாங்கி, அவன் உயரத்திற்கு நின்றவாறே அதை எடுத்துக் கொடுத்தான்.

கார்க்கை எடுத்துக் கொண்ட அபிநயா, "தேங்க்ஸ்!" என்று பயந்தவாறே சொல்ல, நந்துவும் அவனிட மிருந்து பவ்யமாக ஷட்டில் பேட்டை வாங்கிக் கொண்டான்.

ஆனால் அங்கு இருவரையும் தள்ளிக் கொண்டு ஒரு உருளைக் கிழங்கு, சாரி சாரி பப்லு என்கிற பாலா வெற்றியின் முன் நின்று, "எனக்கு இவங்களை மாதிரி உங்களைப் பார்த்தால் பயம் எல்லாம் இல்ல. ஏதோ போலீசா இருக்கீங்களேனு சொல்லிப் பார்க்கிறேன். உங்களோட ஹெல்ப்புக்கு ரொம்பத் தேங்க்ஸ். ஆமா, நீங்க சிங்கமா, இல்லை சிறுத்தையா?" என்று இடுப்பில் கை வைத்துச் சொல்ல,

"அடிங்க... முளாம்பழம் சைஸ்ல இருந்துட்டு பேச்சைப் பாருங்க..." என்று அவனைப் பிடிக்க வெற்றி வர,

அவன் பின்னால் திரும்பிக் குனிந்து டான்ஸ் ஆடிவிட்டு, "மயூக்கா... நான் ஸ்கூல் போறதால அவரை விட்டுட்டுப் போறேன். நான் ஒண்ணும் பயந்து ஓடல..." என்றவாறு அவர்கள் கேட்டைத் தாண்டி ஓடியே விட்டான். அவனுடனே அபி, நந்து, சிமி, மயூவிடம் டாட்டா சொல்லி விட்டுச் சென்றனர்.

"உன்னை மாதிரியே உன்னோட ஃப்ரெண்ட்சையும் கெடுத்து வச்சுருக்க அம்மு நீ..."

"ஆமா ஆமா. அவங்களாவது என் ஃப்ரெண்ட்ஸ். நீங்கதானே என்னோட புருஷன்..." என்று வம்பளக்க...

"இந்த வாயிருக்கே..." என அவளை நெருங்கி வர,

"மச்சான்... பப்ளிக்... பப்ளிக்..." - அவனிடமிருந்து பின்னால் நகர்ந்தாள்.

இதை எல்லாம் வீட்டு வாசலின் முன் நின்றவாறு பாஸ்கர் பார்த்துக் கொண்டிருக்க... அவனைக் கண்டவுடன் சிரிப்புடன் அருகில் வந்தவன், "உள்ளே வாடா..." என்றான்.

"அம்மு, டிஃபன் ரெடி பண்ணும்மா. டயமாச்சு..." - அவளையும் அழைத்தவாறு சென்றான்.

உள்ளே சென்றதும்தான், "சொல்லு, பாஸ்கர்... நடந்த கூத்தில் சரியாப் பேச முடியலை. பார்த்து எவ்வளோ வருஷமாச்சு இல்ல..."

அவன் 'ஆமாம்...' என்பதாகத் தலையாட்டினான்.

அவனுக்கு இன்னமும் தன் நண்பனை இந்த மாதிரிப் பார்த்ததில் அப்படி ஒரு அதிர்ச்சி. அதிலிருந்து இன்னமும் மீளவில்லை.

"என்னடா ஒண்ணும் சொல்லாமல் இருக்க... அப்பா, அம்மா எப்படி இருக்காங்க? என்ன இங்கே... நீ வேறதராபாத்துலதானே இருந்த..." - நண்பனைப் பற்றி விசாரித்தான்.

"அப்பா நல்லா இருக்கார் வெற்றி. எனக்கு இங்க ஜூனியர்ஸ்ஃபர் கிடைச்சிருக்கு. இன்னிக்கு ஜாயின் பண்ணனும்..." என்றான்.

"அட... ரொம்பச் சந்தோஷம். ஏன் இதைப் பற்றி என்கிட்ட முதல்ல சொல்லல..."

"உனக்கொரு சர்ப்ரைஸ் கொடுக்கலாம்னு நினைச்சேன். பட் நீதான் எனக்குச் சர்ப்ரைஸ் கொடுத்திருக்க..." என,

அவன் மயூவைப் பற்றித்தான் சொல்கிறான் என்பதை அறிந்து கொண்டான்.

"மச்சான்... அப்புறமா பேசலாம். டிஃபன் ரெடி பண்ணிட்டேன். ஹலோ பாஸ்... போய் ரெஃப்ரெஷ் செய்துட்டு வாங்க. எல்லாரும் சாப்பிடலாம்..." என்றாள்.

அவள் சொன்னபடி இருவரும் தயாராகி யூனிஃபார்மில் வெளியே வந்தனர்.

பாஸ்கரனை யூனிஃபார்மில் பார்த்ததும் அவனை மரியாதை இல்லாமல் திட்டியது உறுத்த, "சாரி பாஸ்... எனக்குப் பட்டாசுன்னா பயம். அதான் திட்டிட்டேன்..." - அவள் மன்னிப்பைச் சொல்ல,

"ஹே... இட்ஸ் ஓ.கே. நான்தான் விளையாட்டுத்தனமா செய்துட்டேன். அயாம் சாரி டூ..." - அவனும் தன் தவறைச் சொன்னான்.

"சாரி. கேட்டது போதும். உட்காருங்க சாப்பிடலாம்..." - வெற்றி சொன்னதும் மூவரும் அமர்ந்தனர்.

இருவருக்கும் வெண்பொங்கல், சாம்பாரைப் பரிமாறி விட்டுத் தனக்கும் எடுத்துக் கொண்டு வெற்றியின் அருகில் அமர்ந்தாள் மயூரா.

"மயூ... பாஸ்கரும் நானும் ஒண்ணாத்தான் ட்ரெய்னிங் பண்ணினோம். எனக்கு இருக்கிற ஒரே ஒரு ஃபிரண்ட் இவன் மட்டும்தான். உன்னை மாதிரியே கலகலப்பானவன். கொஞ்ச நேரம் முன்னால் நடந்ததை வெச்சே தெரிஞ்சிருக்கும். இவங்க அப்பா தமிழ், அம்மா

நார்த் இந்தியன். மும்பையில அவங்க அப்பா பிசினஸ் பண்றாரு..." - பாஸ்கரனைப் பற்றிச் சின்னதாக ஒரு அறிமுகம் நடத்தினான்.

"பாஸ்... உங்களுக்கு எப்படி இவர் ஃபிரெண்ட் ஆனார்...?" என்று சந்தேகமாகக் கேட்க,

"ஹாஹா... அது ஒரு அசாம் பொண்ணுன்னால நான் இவனுக்கு ஃப்ரெண்ட் ஆயிட்டேன்..." என்று வெற்றியைப் பார்த்தவாறு கண்ணடித்து அவன் சொல்ல,

"என்ன மச்சான்... நடந்துச்சு?" - அவனைச் சந்தேகமாகப் பார்த்துச் சொல்ல,

"ஹே அம்மு... அவன் சும்மா கிண்டல் பண்றான்டா..."

"அதை நான் சொல்றேன். ஐ.பி.எஸ் ட்ரெய்னிங்ல ஒரு அசாம் பொண்ணு இவனைச் சைட் அடிச்சுது. அந்தப் பொண்ணை நான் சைட் அடிச்சேன். அவள் இவனை ப்ரொபோஸ் பண்ண, அவளை இவன் அடிக்காத குறையாக விரட்டி விட்டான். அந்தப் பொண்ணு என்னிடம் வந்து அழ... அது கடைசியில் துக்கத்தில் அண்ணா என்று என்னைக் கட்டிப் பிடித்து அழ ஆரம்பிச்சுடுச்சு. "அத்தனை நாள் தூரத்திலிருந்து பார்த்தது... அன்று அதை கிட்டப் பார்த்ததும்தான் அவளின் அழகில் நான் பீதியாகிப் போயிட்டேன். என்னை அந்தப் பேயிடமிருந்து காப்பாற்றியதற்காக நன்றி சொல்லப் போய் நாங்க ரெண்டு பேரும் ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டோம்..." என்று அவன் ஃபிளாஷ்பேக் சொல்லி முடிக்க,

மயூரா மூஞ்சியைச் சுருக்கி, "படு மொக்கையான ஃபிளாஷ்பேக்..." என்றதும், பாஸ்கரனுக்குப் பல்பு கிடைக்க, வெற்றியின் சிரிப்பைக் கண்டு அவனை முறைத்தான்.

"ஊர்ல உள்ள எல்லாத்தையும் நான் கலாய்ச்சா... என்னையவே நீ ஓட்டுறியா... ஆல் மை பேட் டைம்... ஹ்ம்ம்..." - பொங்கலை வாயில் அடைத்துக் கொண்டான்.

கலகலப்பாக காலை உணவை முடித்துக் கொண்டு இருவரும் வேலைக்குக் கிளம்பினர்.

மயூரா வழக்கம் போல் அவனுக்குக் கேட்டைத் திறந்து விட்டு வழியனுப்ப, பாஸ்கரனை ஏற்றிக் கொண்டு வண்டியை வெளியே எடுத்தான்.

மயூரா டாட்டா காட்டி விட்டு உள்ளே செல்ல, எதேச்சையாக திரும்பிய வெற்றி அவர்கள் வீட்டு வாசல் முன் யாரோ ஒருவன் யாருடனோ செல்போனில் பேசியவாறு நின்று கொண்டிருந்தான்.

அவனை இதற்கு முன் அந்தத் தெருவில் பார்த்த தில்லை.

சந்தேகம் தோன்ற, அவனைக் கையசைத்து அருகில் அழைத்தான்.

"யாரு நீங்க? ஏரியாவுக்குப் புதுசா?"

"ஆமாம் சார். இங்க கார்பெண்டர் சேதுன்னு சொல்லி யாராவது இருக்காங்களா?" - அவனிடமே விசாரிக்க,

அவனை ஒரு மாதிரிப் பார்த்தவாறு, "இந்த ஏரியாவுல கார்பெண்டரே கிடையாது. நீ எந்த ஏரியா?"

"உக்கடம் சார்."

"உன்னோட ஐ.டி. ப்ரூஃப் காட்டு."

அவன் லைசன்ஸைக் காட்ட, வாங்கிப் பார்த்து விட்டு அனுப்பி வைத்தான்.

மீண்டும் வண்டியில் ஏறியவனிடம் "யார்?" என்று பாஸ்கரன் கேட்க,

"சம் ஸ்ட்ரேஞ்சர்..." என்று அதை விடுத்து... "உனக்கு எந்த ஏரியா அசைன் பண்ணியிருக்காங்கடா..."

"தெரியல வெற்றி... ஆபீஸ் போனாத்தான் தெரியும்..." என்றதும், கமிஷனர் அலுவலகம் நோக்கி இருவரும் சென்றனர்.

"வெற்றி... நீ எப்படிடா? எனக்குத் தெரிஞ்சே ஆகணும்..." என்று மயூவைப் பற்றி விசாரிக்க,

அவன் கேள்விக்கு மனைவியின் நினைவில் உதடு தானாகப் புன்னகை பூக்க... அவளைச் சந்தித்த முதல் நாளிலிருந்து அனைத்தையும் சொல்லி முடித்தான்.

கேட்டவனுக்கு மலைப்பாக இருந்தது.

"வெற்றி... நான் இதைச் சொல்லியே ஆகணும். யு ஆர் சோ லக்கிடா. உனக்காக எல்லாத்தையும் விட்டுட்டு வந்திருக்கா. எவ்வளவு பெரிய ஜோக் சொன்னாலும்

பிரியாத உன் உதடு, இன்று காலை நான் உன்னைப் பார்த்தது முதல் இப்போ வரைக்கும் அப்படி மலர்ந்திருக்கு. இது எல்லாத்துக்கும் காரணம் உன் வைஃப்னா நீ ரொம்ப லக்கிதானே..." என நண்பனின் தோளில் கை வைத்தான்.

"தெரியும்டா... அவள் என் வாழ்வில் வந்த பிறகுதான் நான் என்னை உணர்ந்தேன். நான் தேவதையைப் பார்த்ததில்லை பாஸ்கர்... எனக்கு இவள் தேவதையாத் தெரியுறா! அவள் இந்தளவுக்கு என்னை நேசிக்க நான் தவம் பண்ணியிருக்கணும்டா... எனக்கு வாழ்க்கையை உணர்த்திக்கிட்டு இருக்கா பாஸ்கர்... அவளை நான் நல்லா வெச்சுக்கணும். வச்சுப்பேன்..." என்று உணர்ந்து சொன்னான்.

16

கமிஷனர் அலுவலகம் வந்த வெற்றியும், பாஸ்கரனும் மற்றதை மறந்து விட்டு, அன்றைய தங்கள் பணிக்குத் தயா ராகினர்.

பாஸ்கரன் என்னதான் கலகலப்பானவன் என்றாலும், அவன் வேலை என்று வந்து விட்டால் வெற்றியைப் போலவே கடமையில் கருத்தாக இருப்பான். அவனும் ஹைதராபாத்தில் அவனது பணியில் சிறந்து விளங்கி நற்பெயர்களைப் பெற்றுள்ளான்.

பாஸ்கரனை அவர்கள் மேல் அதிகாரியான கமிஷனரிடம் ரிப்போர்ட் செய்து விட்டு வருமாறு சொல்லிச் சென்றான்.

வெற்றி தனது அறைக்குச் சென்று அன்றைய கேஸ் ஃபைலைப் பார்க்கத் துவங்கினான்.

சில மணி நேரம் கழித்து அவனது அறைக்கு பாஸ்கரன் வர, தன்னையும் அவனையும் எஸ்.பி. சந்திரசேகர் பார்க்க அழைக்கிறார் என்றதும் இருவரும் அவரைக் காணச் சென்றனர்.

சீனியர் ஆபீசருக்கு, "குட் மார்னிங் சார்..." சல்யூட் அடித்து மரியாதையைச் செலுத்த,

இருவரையும் பார்த்து சிரித்தவாறே, "போதும் உட்காருங்க..." அனுமதி வழங்கினார்.

வெற்றி - மயூவின் திருமணம் முடிந்து சில நாட்கள் 'தன்னைப் பற்றி அனைத்தும் தெரிந்த இவர் எப்படி நம்பாமல் போகலாம்...' என சந்திரசேகரின் மேல் கோபமாக இருந்தான் தான்.

ஆனால் நாட்கள் செல்ல, மயூவினால் பழையதை அவன் மறந்து அவருடன் சுமூக உறவில் இருந்தான். பல நாட்கள் கழித்து, அவரைத் தனிமையில் சந்திக்க... சில கணங்கள் வெற்றி அமைதியாக இருக்கவும்,

"என்னய்யா வெற்றி... எப்படி இருக்கு உன் கல்யாண வாழ்க்கை?"

அவனைச் சீண்ட, அவரின் கிண்டலுக்குப் பார்வை யில் புன்னகையைப் பதிலாகக் கொடுத்தான்.

அவனின் பார்வைக்குச் சிரித்துக் கொண்டு, "ஓ.கே. லெட்ஸ் டாக் அபௌட் ஒர்க்..." என்றவர்,

"பாஸ்கர்... உங்களை எதுக்கு இங்க ஸ்பெஷல் ரிக்வெஸ்ட்ல வர வெச்சிருக்கோம்னு தெரியுமா?"

"நோ ஐடியா சார்..."

"ம்ம்... உங்களை இங்க வர வெச்சதே வெற்றி தான்..." எனவும்,

அவனைப் பார்க்க அவன் கண்ணை மூடித் திறந்தான்.

"ஓ.கே. லெட் மீ கம் டு த பாயிண்ட். லாஸ்ட் ஒன் மந்தா எங்களுக்கு அன்அஃபிசியலா சில கம்ப் ளைண்ட்ஸ் வந்திருக்கு. இத்தனை நாள் அதை ரொம்ப சீக்ரெட்டா வெற்றிதான் ஹேண்டில் பண்ணிக்கிட்டு இருந்தார்..." என்று சில ஃபைல்களைக் காட்டி அந்தக் கேசைப் பற்றி அவர் பேசத் துவங்க, மூவரும் ஆலோச னையில் இறங்கினர்.

அடுத்து செய்ய வேண்டிய வேலைகளைத் தெளிவாகப் பட்டியலிட்டனர்.

"இந்தக் கேஸை ரொம்ப கேர் எடுத்து டீல் பண்ண ணும். இதுல பெரிய பெரிய ஆளுங்க இன்வால்வ் ஆகியிருக்காங்கனு எக்ஸ்பெக்ட் பண்றோம். இப்போ நம்ம செய்யப் போற இந்த விசாரணை ரொம்பவே சீக்ரெட்டா இருக்கணும். புரிஞ்சுதா... எனி டவுட்ஸ்..." என்று அவர் முடித்தார்.

அதன்பின் சந்திரசேகரிடம் விடைபெற்று வெளியே வந்தனர் இருவரும். இதற்கே அவர்களுக்கு மதியமாகி விட்டது.

அறையை விட்டு வெளியே வரும்போது உள்ளே பேசியதை முற்றிலுமாக மாற்றி, "பாஸ்கர், உனக்கு எந்த ஸ்டேஷன் அலாட் பண்ணியிருக்காங்க..." என்றான் வெற்றி.

பாஸ்கரனுக்கு அது தெளிவாகப் புரிந்தது.

'இத்தனை நேரம் எஸ்.பி.யின் தனி அறைக்குள் இருவரும் இருந்திருக்கிறார்கள். தங்களுக்குள்ளேயே சில கழுகுகள், சகுனி வேலை பார்ப்பவர்களும் இருக் கிறார்கள்' என்று அவனுக்கும் நன்றாகவே தெரியும் தானே.

அவனின் கேள்விக்குப் பதில் அளித்தவாறு அலுவலகத்தை விட்டு வெளியே வந்த இருவரும், "வெற்றி... எனக்கு ரொம்பப் பசிக்குதுடா..." என்றான் பாஸ்கர், முகத்தைப் படு சீரியசாக வைத்துக் கொண்டு.

அவன் சொன்ன பாவனையில் வெற்றி சிரித்து விட்டான். "சரி வா... வீட்டுக்குப் போகலாம்."

அவனை ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிப் பயணித்தனர்.

வீட்டு வாசலில் அர்ஜுனின் பைக் நிற்க... வெற்றி, பாஸ்கரனையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

"டேய் அர்ஜு... இருடா. மச்சான் வந்துருவாரு. நீயே கேளு..." - மயூவின் குரலுக்கு,

"என்ன அர்ஜுன் கேட்கணும்..." என்று அங்கே வந்தனர் இருவரும்.

"ஒண்ணுமில்ல அண்ணா... நான் எக்ஸாம்க்கு பிரிப்பேர் பண்றதா சொன்னேனில்ல... அதான் சில புக் ரெஃபரன்ஸ் பத்திக் கேட்கலாம்னு வந்தேன்..." என்றான்.

"நீங்க பேசிட்டிருங்க. எல்லாருக்கும் லஞ்ச் எடுத்து வைக்கிறேன்..." என்றவாறு மயூ உள்ளே சென்று விட்டாள்.

"உட்காருடா பாஸ்கரா..." என்றவன், "அர்ஜுன், இவர் என் ஃப்ரெண்ட் பாஸ்கரன். ஸ்பெஷல் க்ரைம் பிராஞ்ச். பாஸ்கரா, ஹி இஸ் அர்ஜுன். மயூவோட க்ளோஸ் ஃப்ரெண்ட். இப்போ சிவில் சர்வீஸ் எக்ஸாம்க்கு பிரிப்பேர் பண்ணிக்கிட்டு இருக்காரு..."

இருவருக்கும் பரஸ்பர அறிமுகம் நடந்தேறியது.

"சொல்லு அர்ஜுன்!"

"அதான் சொன்னேனே அண்ணா..."

"அது மயூவுக்கு நீ சொன்ன காரணம அர்ஜுன். உனக்கு என்கிட்ட பேச வேற ஏதோ விஷயமிருக்கு. என்ன சொல்லு..." - அவன் எடுத்துக் கொடுக்க,

"ஆமாம் அண்ணா... நேத்து நடந்த விஷயம். எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது. அந்தச் சமயத்துல என்னால ஒண்ணும் செய்ய முடியலைன்னு ரொம்ப கில்டியா இருக்குண்ணா... அங்கிள் இந்த அளவுக்குக்

கோபப்படுவாருன்னு நான் எதிர்பார்க்கல. அயாம் ரியல்லி சாரி அபௌட் எஸ்டர்டே..." - அர்ஜுன் உண்மையான வருத்தத்துடன் சொல்ல,

"நோ அர்ஜுன்... இதுல எங்கிருந்து உன்னோட தப்பு வந்தது. இதுக்கு எதுக்கு நீ ஃபீல் பண்ற..." என்று அவன் வருத்தத்தைப் போக்கினான்.

"இதைத்தான் மச்சான்... நானும் அப்போ இருந்து சொல்லிக்கிட்டு இருக்கேன். இவன் இப்படியே உம்மனா மூஞ்சி மாதிரி உட்கார்ந்துட்டு இருக்கான்..." என்றவாறு அங்கு வந்தாள் மயூரா.

"நாங்தான் அர்ஜு... மீராவுக்குச் சாரி சொல்லணும். பாவம் அவளோட மேரேஜ் ரிசப்ஷனையே கெடுத்துட்டோம். அவளை நீ மறுபடி பார்த்தா சாரி சொல்லிடு."

"ம்ம்... ஆமா அர்ஜுன். சரி, வாங்க சாப்பிடலாம்..." என வெற்றி அழைக்க,

அர்ஜுன், "ராஜிம்மா வீட்ல உனக்கு வேலை செய்ய பத்து பேர் இருந்தாங்க. இங்க நீ சமைக்கிறியா?" என்றதும் வெற்றி மௌனமாகினான்.

சொன்னதும்தான் அர்ஜுனுக்குத் தான் உளறியது புரிந்தது. மௌனமான அந்தச் சூழ்நிலையை அவனே கலைத்தான். "ஹே முட்டக் கண்ணி... உன்னை நம்பிச் சாப்பிடலாமா?" - அவன் அவளைக் கிண்டலடிக்க...

வெற்றியின் முன்பும், பாஸ்கரின் முன்பும் தன் பட்டப் பெயரைச் சொன்ன அர்ஜுனை எரிக்கும் பார்வை

பார்த்த மயூ குழம்புக் கரண்டியை எடுத்து அவன் தலையில் அடித்தாள்.

"ஸ்ஸ்... ஆ... ஏன்டி குரங்கே அடிச்சே...?" என்று தலையைத் தடவ,

"அம்மு... என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி..." - வெற்றி அதட்ட,

"இவன் எதுக்கு என்னை முட்டக் கண்ணின்னு சொல்றான். அவனை வாயை மூடிக்கிட்டு சாப்பிடச் சொல்லுங்க..." என்றதும்,

அத்தனை நேரம் உணவில் கவனமாக இருந்த பாஸ்கரன், "மிசஸ் மயூலா... வாயை மூடிக்கிட்டு எப்படிச் சாப்பிட முடியும்?" என்ற பெரிய சந்தேகத்தைக் கேட்க,

அர்ஜுனும் மயூவும் கோரசாக, "ஹய்யோ... கத்தி போடாதீங்க பாஸ்..." என்றதும்,

பாஸ்கரன் முகம் போன போக்கைக் கண்ட வெற்றிக்குச் சிரிப்பு வந்தது.

அர்ஜுன், "இன்னமும் இந்தப் பழைய ஜோக்கை எவ்ளோ வருஷம்தான் சொல்லுவீங்க... கொஞ்சம் நியூ ட்ரெண்டுக்கு வாங்க..." - அவனைச் சீண்ட,

"ஹலோ... நாங்களும் உங்களை மாதிரித்தான் இருந்தோம். எங்க காலம் போல வருமா... இப்போதான் உங்களுக்கு ஐ-போன், டப்லெட், டோனிக் எல்லாம்... ஊர் சுத்தணும்னா உங்களுக்குத் தோன்றது மாலும் பஃப்பும்தான். எங்களோட காலேஜ் லைஃப்ல பழைய

1100-ஐ யாரும் அடிச்சுக்க முடியாது. எங்களை மாதிரி ஊரு சுத்தவும் முடியாது. வீக் எண்டு வந்தா பழைய யமஹா ஆர்.எக்ஸ் எடுத்துக்கிட்டு காடு, மேடு எல்லாம் சுத்துவோம்..." என்று பாஸ்கரன் பொங்கி எழ,

"பாஸ்... கூல் கூல். நான் சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னேன். இதுக்குப் போய் இப்படி ஆவேசப்படறீங்க... எப்பவும் ஓல்ட் இஸ் கோல்ட்தான். நான் சும்மா விளையாடினேன்."

அர்ஜுன் சமாதானக் கொடியைப் பறக்க விட, சிரிப்பும் கலாட்டாவுமாக உணவு உண்டனர்.

ஞாபகம் வந்தவனாக, "மயூ, சொல்ல மறந்தே போயிட்டேன். நமக்கு நெக்ஸ்ட் மந்த் கிராஜுவேஷன் டே வருதும்மா... உனக்குத் தெரியுமா?"

"தெரியும் அர்ஜு... ரீமா சொன்னா. பட் நான் வரலடா..."

"ஏன்." என்ற அவனின் கேள்வியில் அதிகக் கோபமிருந்தது.

"அங்க வந்தா மீண்டும் தேவையில்லாத கேள்விகள் வரும் அர்ஜு... எதுக்குத் தேவையில்லாத மனக் கஷ்டம்... சோ, நான் வரலை..." என்றான்.

"ஹே... லூசு. என்ன விளையாடறியா? நீதான் நம்ம காலேஜ் டாப்பர். அது ஞாபகம் இருக்கா இல்லையா?"

"டாப்பரா இருந்தா கண்டிப்பா வரணுமா? போடா... நான் வரலை!" என்று சமையலறைக்குள் செல்ல,

இவர்கள் உரையாடலை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த வெற்றி அர்ஜுனிடம், "அவள் வருவாள் அர்ஜுன்..." என அவளைப் பார்த்தவாறு அதைக் கட்டளையாக முடித்தான்.

அவனின் கட்டளைக்கு அடிபணிய அவள் என்ன அம்மாஞ்சி மயூவா? அவனையே ஆட்டிப் படைப்பவ ளாயிற்றே.

"வெற்றி... ஏன் எப்பவும் நான் சொல்றதைக் கேட்கக் கூடாதுன்னு இருக்கீங்க?" - அவனை மிரட்ட, அதை அவன் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

அதன்பின் அர்ஜுன் கிளம்பிவிட, வெற்றியும் பாஸ்கரனும் அலுவலகம் புறப்பட்டுச் செல்ல மயூ தனிமையில் இருந்தாள்.

இரவு வெகு நேரம் கழித்தே வீடு வந்தான் வெற்றி.

அவனுக்குக் கதவைத் திறந்து விட்டவள் முகத்தில் கோபம் தெரிந்தது. அவளின் குழந்தைத்தனமான கோபத்தை ரசித்தவாறே உடை மாற்றச் சென்றான்.

அவன் வந்ததும், "பாஸ் எங்கே...?" பாஸ்கரன் இவனுடன் வராததால் கேட்டாள்.

"அவனுக்கு அலாட் பண்ணின குவார்ட்டர்ஸ போயிட்டான். நாளைக்கு ஈவினிங் வர்றேன்னு சொல்லி

யிருக்கான்..." என்றவாறு சோபாவில் அமர்ந்திருந்த அவள் மடியில் படுத்துக் கொண்டான்.

"ஹலோ... எந்திரிங்க. நான் என்ன உங்களுக்குக் குஷன் பெட்டா? இப்படி ஜம்முனு படுத்துக்கிட்டு இருக்கீங்க?" - அவனை எழுப்ப முயற்சி செய்ய,

"நீ சொன்னாலும் சொல்லலைன்னாலும் குஷன் மாதிரித்தான்டி இருக்க. பாரு... இடுப்பெல்லாம் சதை போட்டுருச்சு..."

அவனோ இன்னமும் வாகாக அவள் இடுப்பைக் கட்டிக் கொண்டு படுத்தான்.

"இப்போ என்னோட அம்மு குட்டிக்கு என்ன கோபம்?"

"ஹ்ம்ம்.. தெரியாதா?" - அவள் முகத்தை நொடிக்க,

"ஏன்டா... காலேஜ் போறதால அங்க உனக்கென்ன பிரச்சனை? அங்கயும் உங்கப்பா வரப் போறாங்களா என்ன?"

"அதுக்கில்லை மச்சான்... ஃப்ரெண்ட்ஸ், டீச்சர்ஸ் எல்லாம் ஒரு மாதிரிப் பார்ப்பாங்க. தேவையில்லாத கேள்விகள் வரும். அதுக்குத்தான்."

"அம்மு... நான் திரும்பத் திரும்பச் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே. பாத்தியா. நீ யோசிக்காம எடுத்த முடிவால இப்படிப் பயப்பட வேண்டியதா இருக்கு. நாமளே நம்மைப் பற்றிப் பேச அவங்களுக்கொரு வாய்ப்புக் கொடுத்துட்டோம். தப்பு நம்ம பேர்ல இருக்கும்போது

வற்றதை சந்திச்சுத்தான் ஆகணும்மா... பிரச்சனை வருதுன்னு வீட்டுக்குள்ளயே பயந்து ஒடுங்கினா... அதுக்குத் தீர்வே கிடைக்காதுடா."

"மூணு வருஷம் நீ கஷ்டப்பட்டு படிச்சதுக்கு உண்டான அங்கீகாரம் கிடைக்கப் போகுது. அதை நீ ஏத்துக்க மாட்டேன்னு சொன்னா என்ன அர்த்தம்டா குட்டிம்மா..." என்ற அவன் வாதத்திற்கு அவள் ஏதும் பேசாமல் இருக்க,

"நீ இந்த மாதிரி இருக்கிறது எனக்குத்தான் அம்மு கஷ்டமா இருக்கு. என்னால நீ உன்னோட சுகத்தை இழந்துட்டதா தோணுதும்மா..."

அவனுக்கு அர்ஜுன் மதியம் சொன்னது இன்னமும் அவன் காதுகளில் ஒலித்தது.

"வெற்றி... காலையிலதானே சொன்னேன். ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க. எனக்கு இதுவரைக்கும் நீங்க சந்தோஷத்தைத்தான் கொடுத்திருக்கீங்க. உண்மை யாகச் சொல்லணும் என்றால் நான் என் அம்மா, அப்பா வுடன் இருந்ததைவிட, நண்பர்களோட இருந்ததைவிட உங்களோடதான் ரொம்பவும் சந்தோஷமா இருக்கேன். ப்ளீஸ்... இந்த மாதிரிப் பேச்சு இதுவே கடைசித் தடவையா இருக்கட்டும்..." என்று எச்சரித்தவள்,

"மத்தவங்களுக்கு வேணா நான் எடுத்தது சுயநலமான முடிவா இருக்கலாம். அங்க போனா பல கேள்விகள் எழும். அவங்க என்னைப் பற்றி என்ன

சொன்னாலும் நான் கொஞ்சம் கூடக் கவலைப்பட மாட்டேன். எனக்கு நம் காதலைப் பற்றி, யாருக்கும் விளக்கம் சொல்லிப் புரிய வைக்கணும்னு அவசிய மில்லை என்று நினைத்துத்தான் வேண்டாம் என்றேன்."

"இப்போ உங்களுக்கென்ன... நான் பட்டமளிப்பு விழாவுக்குப் போகணும். அவ்வளவுதானே. ஓ.கே. போறேன். போகலாம்..." என்றவாறு கணவனின் முடி கோதினாள்.

அவள் முடிவு செய்து விட்டாள்.

ஆனால் விதி யாரை விட்டது. அந்தக் கல்லூரி விழாவில் செல்வமணியும், வெற்றிச்செல்வனும் ஒன்றாக ஒரே மேடையில் அமருமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை யாரும் அறியார்.

"மச்சான்... சாப்பிட்டீங்களா... எனக்கு ரொம்பப் பசிக்குது..." என,

"இந்த ஒரு மாசத்துல எப்போ அம்மு உன்னை விட்டுட்டு சாப்பிட்டு இருக்கேன். வா சாப்பிடலாம்..."

அவளை அழைத்துச் சென்று தன் மடியில் அமர வைத்து உணவு ஊட்டினான்.

தெம்பாக நான்கு வாய் உண்வு உள்ளே போனதும், "ஏன் மச்சான்... நிஜமாகவே நான் குண்டாயிட்டேனா..." என்று அரிய பெரிய சந்தேகத்தைக் கேட்க,

வெற்றி சிரிப்பை அடக்கப் பெரும் பாடுபட்டான்.

"அம்மு... சான்ஸே இல்லடி. எப்படிம்மா... கொஞ்சம் எந்திரி..." என்றவன் அவளை எழுப்பி நிற்க வைத்து, ஒரு சுற்று சுற்றிப் பார்த்து, "ஆமாடா. கொஞ்சம் குண்டாயிட்டே சோ, நாளைக் காலை ஐந்தரைக்கு என்னோடவே ஜாகிங் வந்திடு..." என்றதும்,

அவள் வாயைப் பிளக்க... கடைசி கவளத்தை அவள் வாயில் அடைத்தவாறு கை கழுவச் சென்றான்.

"நோ... இது எல்லாம் அநியாயம். ஐந்தரை எனக்கு நடுராத்திரி மச்சான்... நான் எந்திரிக்க மாட்டேன்.." அவள் அடம்பிடிக்க...

"நான் எழுப்பி விடுறேன்டி செல்லம்... இப்போ வா, தூங்கப் போகலாம்..." என்றவாறு அவளைப் படுக்கையில் தள்ளினான்.

17

விடிந்தும் விடியாமல் இருந்த அக் காலை நேர வேளையில் பனிக் காற்று முகத்தில் வீச, அப் பனிக் காற்றையும் மீறி வேர்வை முத்துக்கள் முகத்தில் பூத்திருக்க... வெற்றியை மனதில் வசை பாடியபடி ஆமை போல் ஊர்ந்து வந்தாள் மயூரா.

மெல்லிய அவள் முனங்கல் அவன் காதில் விழுந்தாலும், அதைக் கண்டு கொள்ளாது, "மையூ... என்ன ஊறிட்டு வர... கம் ஃபாஸ்ட்." - அவளை விரட்டிக் கொண்டிருந்தான்.

"என்னது கம் ஃபாஸ்ட்டா... டேய் மச்சான்..."

அவள் அழைத்ததில் அந்தப் பார்க்கில் நடை பயின்று கொண்டிருந்த மற்றவர்கள் இவளை விசித்திர மாகப் பார்க்க, அதை விட அதிர்ச்சியில் வெற்றி அவளை நோக்கினான்.

"என்ன பார்க்குற... இதுக்குத்தான் போலீஸ் காரனைக் கல்யாணம் பண்ணக் கூடாதுனு சொல்றாங்க போல. நைட்தான் என்னைத் தூங்க விடாம செஞ்சீங்க. இப்போவும் ஏன் மச்சான் காலங்காத்தால இப்படி என்னை டிரில் வாங்குறீங்க... எனக்கு ஒரே தூக்கம் தூக்கமா வருது மச்சான்..."

அவள் சொன்ன அழகில் அங்கிருந்தவர்கள் சிரிக்க ஆரம்பிக்க, வெற்றிக்குக் கூச்சமாக இருந்தது.

இதற்கு மேல் இவளை இங்கு விட்டால் தன் மானத் தைக் கப்பல்... இல்லை ஃப்ளைட்டில் ஏற்றி விடுவாள் என்ற பயத்தில் அவளைக் காருக்கு அழைத்து வந்தான்.

"ஏன்டி... என் மானத்தை இப்படி வாங்குற? எல்லாரும் என்ன நினைச்சுருப்பாங்க?" - அவன் கடிய,

"ம்ம்... என்ன நினைச்சிருப்பாங்க... நைட் நமக்குக் கசமுசா நடந்ததுன்னு நினைப்பாங்க. ஒழுங்கா என்னைக் கொண்டு போய் வீட்ல விடுங்க..." - அவள் மிரட்ட...

அவள் வாயை அவன் கைகளால் மூடி, "அம்மா தாயே... இது போதும்மா... இதுக்கு மேல தாங்காது. முதல்ல நீ வண்டியில ஏறு..."

அவளைக் கையெடுத்துக் கும்பிடாத குறையாக அங்கிருந்து புறப்பட்டான்.

வண்டி சாலையில் ஓடத் தொடங்கிய அடுத்த நொடி அவன் தோள்களில் சரிந்திருந்தாள் மயூரா.

வெற்றி அன்று சொன்னபடி இப்பொழுது எல்லாம் அவளையும் இழுத்துக் கொண்டு அவனின் காலை ஓட்டத்துக்குச் சென்று விடுவான்.

முதல் நாள் அவளை எழுப்பியது இன்று நினைத்தால் கூட அவனுக்குச் சிரிப்பு வரும்.

வழக்கம் போல் அவன் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து, முகம் கழுவி, ஜாகிங் உடையணிந்து புறப்பட்டு வர, நம் மயூவோ தலையணையை இறுகக் கட்டிப் பிடித்துப் போர்வையைக் கழுத்துவரை போர்த்திப் படுத்திருந்தாள்.

சீரான அவளின் மூச்சுக் காற்று அவளின் ஆழ்ந்த உறக்கத்தைச் சொல்ல, அவன் காதல் கொண்ட மனது அவளுக்குப் பாவம் பார்த்து அவளைத் தூங்க விடு எனக் கூற, கடமை உணர்ச்சி கொண்ட மற்றொரு மனமோ அவளையும் அழைத்துக் கொண்டு காலை நேரக் காற்றில் அவளுடன் பயணிக்க ஆசைப்பட... தூங்கிக் கொண்டிருந்த அவளை எழுப்பினான்.

"அம்மு... அம்மு... எழுந்துக்கோடா. ஜாகிங் போகலாம்..." எனக் கூற, சிணுங்கியவாறு படுத்துக் கொண்டாள்.

அவன் மீண்டும் அவள் கன்னத்தைப் பற்றி எழுப்ப, அவன் எழுப்பிய கையைப் பற்றித் தன் புறம் இழுக்க, இவள் இப்படி இழுத்து வைப்பாள் என்று தெரியாத வெற்றி சுவாதீனமாக நின்றிருந்தவன் இழுத்த வேகத்தில் அவள் மேல் விழ, தலையணையை விடுத்து அவனைக் கட்டிக் கொண்டு அவன் நெஞ்சில் சாய, அவளின் மேனியின் மென்மையில் மயங்கியவன் மனது இப்படியே இருக்கச் சொல்ல... கடமை உணர்ச்சி கொண்ட மூளை அவனை ஜாகிங் செல்லத் தூண்டியது.

தன் மேல் விழுந்தவளை அப்படியே தூக்கிக் கொண்டு குளியலறை செல்ல, இதையறியா மையூ கனவு போல் கணவன் தூக்கியதில் ஒய்யாரமாக அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்தாள்.

அவளின் செய்கையில் சிரித்துக் கொண்டு அப்படியே தூக்கிய வாக்கில் ஷவருக்கு அடியில் நிறுத்தி, ஷவரைத் திறந்து விட, குளிர்ந்த நீர் மேனியில் பட, சிலிர்த்துக் கொண்டு எழுந்தவள்... நடப்பு புரிய, சில நொடிகள் பிடித்தது.

கணவன் தன்னைத் தூக்கிக் கொண்டிருப்பது புரிய, அவன் செய்த வேலையில் துள்ளிக் கீழே குதித்தவள், அவனையும் தன்னுடன் ஷவரில் நிறுத்தினாள்.

அதன்பின் அவர்கள் ஜாகிங் செல்வதற்குப் பதிலாக படுக்கைக்குத்தான் செல்ல வேண்டியதாயிற்று. அதை நினைத்தவாறு வண்டியை தங்கள் வீட்டின் முன் நிறுத்தினான்.

அதன்பின் வேகமாக அவன் ஸ்டேஷன் செல்லப் புறப்பட, மையூ அவனுக்கு உணவு தயாரிக்கச் சென்றாள்.

அவன் சீருடை அணிந்து சாப்பிடுவதற்காக டைனிங் டேபிளில் அமர, பாஸ்கர் போனில் அழைத்திருந்தான்.

எடுத்துப் பேசியவன், "நீ சொன்ன அட்ரஸ் விசாரிச்சேன் வெற்றி. அவன் பேரு வேலு. பட், அது உக்கடம் இல்லடா. அது செல்வபுரம் ஏரியா..." என்றதும் அவன் முகம் மாற,

"அப்போவே நினைச்சேன். இதோ உடனே வர்றேன் பாஸ்கரா..." என்று போனை அணைத்தவன், வெளியே செல்ல முற்பட...

"மச்சான்... எங்க போறீங்க? சாப்பிடலை..." - மயூரா அவன் பின்னாலே செல்ல,

"வேண்டாம்டா. முக்கியமான ஒரு வேலை அம்மு. மதியம் வர மாட்டேன். வெயிட் பண்ணாதே. நீ சாப்பிடு.." என்றவாறு அவன் கிளம்பிச் சென்றே விட்டான்.

பெருமூச்சை வெளியே விட்டவள்... கேட்டை மூடி விட்டு உள்ளே சென்றாள்.

அலுவலகம் செல்லாமல் நேராக பாஸ்கரன் இருக்கும் உக்கடம் போலீஸ் ஸ்டேஷன் செல்ல... அங்கே பாஸ்கரன் இவனுக்காகக் காத்திருந்தான்.

அவனைக் கண்ட வெற்றி, "ஏதாவது சொன்னானா பாஸ்கரா..." என்றவாறு லாக்-அப்பில் அடைத்து வைத்திருந்த அவனைக் காணச் சென்றான்.

கண்களில் ரௌத்திரத்துடன் தன் கை முஷ்டியை இறுக்கிக் கொண்டு, தன்னை நெருங்கி வந்த வெற்றியைக் கண்ட அந்த அவன்... பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான்.

அவனை நெருங்கி அவன் சட்டைக் காலரைப் பற்றித் தன் பக்கம் இழுத்தவன்... "எதுக்குடா... என் வீட்டு வாசலில் காவல் காத்துக்கிட்டிருந்த?" என,

"சார்... நான்தான் அன்னிக்கே சொன்னேனே சார்... கா... கார்பெண்டர் சே...து... ஆஹாஹாஹா..." என்றவாறு கன்னத்தைப் பிடித்துக் கொண்டு கீழே விழுந்தான் அவன்.

வெற்றி அடித்த வேகத்தில் அவன் உதடு கிழிந்தது.

"பொய் சொன்னே... இருக்கிற எலும்பு இடம் மாறிடும். உண்மையைச் சொல்லு..." என்றவாறு விழுந்த அவனை மீண்டும் அடிக்கக் கை ஓங்க...

"சார்... சார்... சொல்லிடுறேன் சார். சொல்லிடுறேன்..." என்று நடுங்கியவன், தயங்கியவாறு, "ஜெ...ஜெய்குமார் சார்தான் உங்களைக் கண்காணிக்கச் சொன்னார்..." என்றதும்,

"வாட்...?" என்ற வெற்றிக்கு அப்படி ஒரு அதிர்ச்சி.

ஆம். அந்த ஜெய்குமார் மயூராவைப் பெண் பார்க்க வந்த விநாயகா மில்ஸ் ஓனர்.

"டேய்... நீ ஒழுங்கா உண்மையைச் சொல்லு. பொய் சொன்ன... உன்னைக் கொன்னே போட்டுருவேன்..." என்று கர்ஜித்தவன்,

"சார்... சத்தியமா நான் உண்மையைத்தான் சொல்றேன். நான் சொல்றது எல்லாம் நூறு சதவீதம் உண்மை..." என்று அவன் அடியில் மிரண்டு சொல்ல... அவனை விட்டு விட்டு லாக்-அப்பிலிருந்து வெளியே வந்தான் வெற்றி.

"வெற்றி..." என்று பாஸ்கரன் ஏதோ சொல்ல வர,

அவனைத் தடுத்தவன், "இங்க வேண்டாம் பாஸ்கரா... வெளியே போகலாம்..."

அவனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

வண்டியில் போகப் போக பாஸ்கரன், "யாரு வெற்றி... அந்த ஜெயக்குமார்?" என்று விசாரிக்க,

"விநாயகா மில்ஸ் ஓனர். அவனோட மகனைத்தான் மயூவுக்கு அவங்கப்பா மாப்பிள்ளை பார்த்தாங்க..." என்றவன், கண்கள் சாலையில் பதிந்திருக்க... மனம் முழுவதும் சிந்தனையில் இருந்தது.

"அப்போ... அப்போ மயூவோட அப்பாவுக்கும் இந்தக் கேசுக்கும் ஏதாவது சம்மந்தம் இருக்குமா வெற்றி?" - அவன் சந்தேகத்தைச் சொல்ல,

"இருக்கலாம் பாஸ்கரா... இல்லாமல் கூட இருக்கலாம். எதையும் இப்போதே முடிவு செய்ய முடியாது. இந்தக் கேஸை எப்போ எங்கிருந்து ஆரம்பிக்கிறதுன்னு ஒரு தெளிவில்லாம இருந்தோம். இப்போ நமக்குக்

கிடைச்சது ஒரு க்ளூதான். இதை வெச்சுத்தான் மூவ் பண்ணணும்..." - அவனுக்குப் பதிலளித்தான்.

"ஹ்ம்ம்... அப்புறம் பாஸ்கர்... அந்த வேலுவை ஸ்டேஷனில் வைக்காதே. சீக்கிரமா இடம் மாத்து. நாம இவ்ளோ ரகசியமா விசாரணை பண்ணும்போதே அவங்க என்னை ஃபாலோ பண்றாங்கன்னா கண்டிப்பா நம்ம ஒவ்வொரு மூவையும் அவங்க வாட்ச் பண்ணிக்கிட்டு இருப்பாங்க..."

"ஏன் வெற்றி... இந்த வேலுவின் வாக்குமூலம் வச்சு நாம ஏன் அந்த ஜெயக்குமாரை விசாரிக்கக் கூடாது...?" எனக் கூற,

"இல்ல பாஸ்கர். நம்மகிட்ட இவன் சொன்னதை வெச்சுப் போனோம்னா நாம அவன் வீட்டுக்குப் போறதுக்குள்ள இவனை முடிச்சுடுவாங்க. நமக்கு பிராப்பரா எந்த எவிடென்சும் கிடைக்கிறவரைக்கும் எந்த ஸ்டெப்பும் எடுக்க முடியாது. இனிமேல் நாம செய்யறதை இன்னும் க்ளீனா வாட்ச் பண்ண ஆரம்பிப்பாங்க..." என்றவன் மனது வேகமாக நிறையச் சிந்திக்க ஆரம் பித்தது.

அன்றைய அவன் வேலையை முடித்துக் கொண்டு நிமிர்ந்தவனுக்கு மாலை ஒரு நான்கு மணி போல் ஒரு கால் வந்தது. எடுத்துப் பேசியவன் அந்தப் பக்கம் அவர்கள் சொன்ன செய்தியில் அவன் மனம் துள்ளிக் குதித்தது.

அழைத்தது மயூவின் காலேஜ் சேர்மன்தான். அவனைப் பட்டமளிப்பு விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தார்.

அவனின் பதவிக்கும், அவன் ஐ.பி.எஸ். தேர்வில் முதல் ஐந்தாவது ரேங்க் எடுத்திருந்தான் என்ற காரணம் மட்டுமில்லாமல், அன்று நடந்த கலவரத்தில் மாணவர்களுக்கு எந்தப் பாதிப்புமில்லாமல் காப்பாற்றிய அவன் சேவைக்கு மரியாதை கொடுத்து அழைப்பதாகத் தெரிவித்தார்.

அவர் இத்தனை காரணங்கள் சொன்னாலும் அவனுக்குத் தன் மனைவியின் விழாவில் தானும் ஒரு பங்கு வகிக்கிறோம் என்றது மட்டுமே முன் நின்றது.

"கண்டிப்பா வர்றேன் சார்..." என்று பதில் அளித்தவனுக்கு,

"தேங்க் யூ சார்... உங்களுடன் சேர்ந்து அமைச்சர் செல்வமணியும் விழாவைச் சிறப்பிக்க வருகிறார்..." என்று அவனுக்குக் கூடுதல் தகவலளிக்க... அவனின் உற்சாகம் சற்றே வடிந்தது.

செல்வமணியின் பேரைச் சொன்னதும் அவனுக்குப் பல யோசனைகள். முதலாக அவர் வருகிறார் என்று சொன்னால்... நிச்சயமாக மயூரா அவ்விழாவுக்கு வரமாட்டாள். அது மட்டுமில்லாமல் தன்னையும் போக வேண்டாமென்று தடை விதிப்பாள்.

ஆனால் அவனுக்கு இந்த விழாவுக்குக் கண்டிப் பாய் போயே தீர வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது.

அதற்கு இரண்டு காரணங்கள், ஒன்று மயூவிற்காக. மற்றொன்று செல்வமணியைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

அந்த விநாயகா மில்ஸ் ஓனருக்கும் இவருக்கும் என்ன சம்மந்தம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்றால், இதுதான் அவனுக்கு முதல் படியாக இருக்கப் போகிறது.

அதனால் மயூவிடம் தன்னையும், செல்வமணி யையும் அவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக அழைத் திருப்பதை மறைப்பதென்று முடிவு செய்தான்.

அங்கு சென்றபின் அவளுக்குத் தெரிந்தால் பின் சமாளித்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண் டான்.

இத்தனை நேரம் வேலையில் மூழ்கியிருந்த வனுக்கு மனைவியின் நினைப்பு வர, அவளுக்கு அழைத்தான்.

அடித்த இரண்டாவது ரிங்கிலேயே எடுத்தவள், "சொல்லுங்க மச்சான்..." எனக் கூற,

"அம்மு... என்னடா ஃப்ரீயா இருக்கியா என்ன? உன்னோட ஃப்ரெண்ட்ஸ் கூட விளையாடப் போகல?" இந்த நேரம் அவள் விளையாடும் நேரம் என்ற எண்ணத்தில் கேட்க,

"கூப்பிட்டாங்க மச்சான்... நான்தான் போகலை..." என்றவளின் குரலில் சோர்வு தெரிந்தது.

அவள் சோர்வைக் கண்டு கொண்டவன், "என்னாச் சுடா அம்மும்மா... குரல் ஒரு மாதிரியா இருக்கு. உடம்புக்குச் சரியில்லையா?" என்று கேட்டவனின் குரலில் சிறிது பதற்றம் தெரிந்தது.

"ம்ம்... பசிக்குது மச்சான். நைட் நீங்க ஊட்டி விட்டது..." - அவள் குரல் தேய்ந்து போனது.

"வாட்... நீ இன்னும் சாப்பிடலையா? ஏன்டி இன்னமும் சாப்பிடாமல் இருக்க?" - சிறிது கோபத்துடன் கேட்க,

"நீங்க சாப்பிட்டீங்களா?" என்றாள், அவனின் கோபத்தைக் கண்டு கொள்ளாமல்.

அவள் கேட்டதும்தான் வெற்றிக்கும் தானும் அவளுடன் நேற்று இரவு சாப்பிட்டது ஞாபகம் எழுந்தது.

நினைவு வந்ததும்தான் அவன் வயிறு, 'எனக்கு உணவு கொடு...' என்று கத்த ஆரம்பித்தது தெரிந்தது.

காலை பாஸ்கருடன் சந்திரசேகரைச் சந்தித்து விட்டுக் கோர்ட்டுக்குச் சென்றவன்... சற்று முன்னர்தான் அலுவலகம் வந்தான்.

மயூரா கேட்கும்வரை அவனுக்கும் சாப்பிடும் எண்ணம் சிறிதும் எழவில்லை.

இப்பொழுது தனக்காக இவளும் இன்னும் உணவு உண்ணாமல் காத்திருக்கிறாள் என்றதும் அவளின் அன்பு அவனை நெகிழச் செய்தது.

ஒன்றும் பேசாமல் கைபேசியை அணைத்தவன் அடுத்த பதினைந்தாவது நிமிடம் வீட்டில் இருந்தான்.

அவன் ஒன்றும் பேசாமல் போன் அணைக்கப் பட்டதும்... மயூராவிற்குத் தெரிந்து விட்டது அவன் வீட்டுக்குத்தான் வருவான் என்று. அந்த எண்ணத்தில் வாசலில் காத்திருக்க... அவன் வந்ததும் அவளைக் கண்டுகொள்ளாமல் சமையலறைக்குள் சென்றவன் பின்னாலே அவளும் சென்றாள்.

கை கழுவி விட்டு ஒரு தட்டில் உணவைப் போட்டுக் கொண்டு வர, டைனிங் டேபிள் மேல் கன்னத்தில் கை வைத்து அமர்ந்திருந்தவள்... கையைப் பிடித்துத் தன் புறம் திருப்பி உணவைப் பிசைந்து உதட்டருகில் கொண்டு சென்றான்.

அவள் வாயைத் திறக்காமல் தலையை இடம் வலமாகத் திருப்ப, "என்னடி... ஒழுங்காச் சாப்பிடு. என்கிட்ட அடி வாங்காத அம்மு..." என்று கோபத்தில் சொல்ல,

அவளோ அதே தட்டில் பிசைந்த உணவை எடுத்து அவனுக்கு ஊட்டினாள்.

அவளின் செய்கை அவனுக்கு மீண்டும் அவன் தாயை நினைவூட்ட, அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

வாய் மட்டும், "அம்மு... அம்மு..." என்ற அவள் பெயரை மட்டும் ஜெபித்துக் கொண்டிருந்தது.

நீண்ட நேரம் கழித்து அவளை விடுவித்தவன், "ஏன் அம்மு... நான் உனக்கு என்ன செஞ்சேன்... உன்னோட அன்பு என்னைக் கொல்லுதடி... இதுக்கு நான் உனக்கு என்ன செய்வேன்..." எனக் கூற,

அவளோ, "ஒண்ணும் செய்ய வேண்டாம். இப்போதைக்கு இந்தத் தட்டை எனக்குக் கொடுத்துட்டு நீங்க வேற எடுத்துக்கோங்க. எனக்கு ரொம்பப் பசிக்குது..." என்று சீரியசாகச் சொல்ல... அவன் சிரித்து விட்டான்.

செல்லமாக அவள் தலையில் குட்டியவன், "இந்த வாயிருக்கே..." என்று புன்னகைத்தவன்... அவனே அவளுக்கு ஊட்டிவிட்டான்.

"அம்மும்மா... இப்படிச் சாப்பிடாமல் இருந்தால் உடம்புக் கெட்டுப் போயிடும்டா... இதுதான் கடைசி. இனிமேல் எனக்கு வெயிட் பண்ணாம நீயே சாப்பிடணும். புரிஞ்சுதா?" எனக் கூற,

"ம்ஹூம். நீங்களும் நேத்து என்னுடன் சாப்பிட்டது தானே... உங்களுக்கு மட்டும் உடம்பு கெட்டுப் போகாதா?" எனக் கூற,

"வார்த்தைக்கு வார்த்தை வாயாடலன்னா உனக்குத் தூக்கம் வராதே. சரி... நானும் சாப்பிடுறேன்..." என்று அவளைச் செல்லமாகத் திட்டியவன் அவளுக்கு உறுதி யளிக்கவும் மறக்கவில்லை.

'நீரின்றி அமையாது உலகு' என்ற வாக்கியத்தைப் போல, மையூ இல்லாத வாழ்க்கையை வெற்றியால்

நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. மையூவும் அவனின் நினைப்புக்கு ஏற்றவாறு அவளின் அன்பையும் நேசத் தையும் மழை போல் பொழிந்தான்.

தினம் தினம் அவளின் குறும்புப் பேச்சும், செய்கையும் அதைவிட அவள் கண்களில் வழியும் காதலால் அவனைத் திக்குமுக்காடச் செய்தாள்.

இவ்வாறாக நாட்கள் கடந்து போக... மையூவின் பட்டமளிப்பு விழாவும் நெருங்கியது.

விழாவில் நடக்கப் போவதைப் பற்றித் தெரியாமல் மயூ இருக்க... வெற்றியும் வரப் போவதைச் சந்திக்கத் தயாரானான்.

18

அன்று காலை மயூரா கண் விழிக்கும் போதே வெற்றி சீருடை அணிந்து கிளம்பி விட்டான்.

கண்களைத் தேய்த்துக் கொண்டு எழுந்தவள், கணவன் வேலைக்குத் தயாராவதைப் பார்த் ததும், "ஏன் மச்சான்... இவ்ளோ சீக்கிரமா கிளம்பிட்டீங்க... நான் ஒண்ணும் செய்யலையே? என்னை எழுப்பி யிருக்கலாம் இல்ல... கொஞ்சம் இருங்க. ஏதாவது செய்து கொடுக்கிறேன்..." என்றவாறு எழ,

"ஆமாம்டா. கொஞ்சம் வேலையிருக்கு. நான் போயிட்டு பத்து மணிக்கெல்லாம் வந்துடுவேன். இன்னிக்கு உன் காலேஜ் ஃபங்ஷன் இல்ல... நீ ரெடியா இரு...

நானே வந்து அழைத்துப் போகிறேன்...” என்றதும் முகத்தைச் சுருக்கி, “கண்டிப்பா போயே ஆகணுமா மச்சான்...” எனக் கூற,

தலை வாரிக் கொண்டிருந்தவன்... இவள் புறம் திரும்பி முறைக்க... “சரி சரி. கிளம்புறேன்...” என்றவாறு படுக்கையிலிருந்து இறங்கினாள்.

“சரி அம்மு... நான் வர்றேன்...” எனக் கிளம்பி விட்டான்.

அவன் கிளம்பிச் சென்ற சில நிமிடங்களில் அர்ஜுன் அழைத்து, அவளை ரெடியாக இருக்கச் சொல்ல... “போதும் அர்ஜு... இப்போதான் உன் நொண்ணன் சொல்லிட்டுப் போயிருக்கார். நீயும் அறுக்காதே!” எனக் கடிந்தவள் சுரத்தேயின்றி கிளம்பினாள்.

சரியாக 9.15க்கு அழைத்த வெற்றி, தனக்கு இன்னமும் வேலை முடியவில்லை எனவும், அவளை அர்ஜுனுடன் போகுமாறு சொல்ல... அவளோ இதுதான் காரணம் என்று, “அப்போ சரி மச்சான்... ஒண்ணும் பிரச்சனை இல்லை. நீங்க உங்க வேலையை முடிச்சுட்டு வாங்க. நான் கொஞ்ச நேரம் தூங்கறேன்...” என முடிக்க,

“ஹே கும்பகர்ணி... எப்போ பாரு தூக்கம் தூக்கம் தான். இரு வர்றேன்...” எனச் செல்போனை அணைத்து விட்டு அர்ஜுனுக்கு அழைத்தான்.

“அர்ஜுன்... அவள் என்னுடன்தான் வரவேண்டுமென்று அடம் பிடிக்கிறாள். என்ன செய்வது... என்னோடு

வந்தால் தெரிஞ்சுடுமே... மேடை ஏறும் முன்னாலே என் முதுகில் டின் கட்டி விடுவாள். ஏதாவது ஐடியா கொடு...” எனப் பாவமாகச் சொல்ல,

“ஹாஹாஹா... அண்ணா... ஹா ஹா...” என வாய் விட்டுச் சிரித்தவன், எரிச்சலான வெற்றி, “ஹே... எதுக்கு இப்போ சிரிக்கிற? என்னைப் பார்த்தால் காமெடி பீஸ் போலவா இருக்கிறது...” எனக் கடுப்பாக,

“அண்ணா... உண்மையைச் சொன்னால் திட்டக் கூடாது. ஹாஹா... நிஜமாவே உங்களை அந்த மையூ காமெடி பீஸ் ஆக்கிட்டாண்ணா... ஊரே உங்களைப் பார்த்தால் பயப்படும். ஆ...ஆனால் நீங்கள் அந்த முட்டக் கண்ணிக்கு இப்படிப் பயப்படுறீங்களே... ஹாஹா...” என அவன் சிரிப்பை அடக்கப் பெரும் பாடுபட்டான்.

அவன் சொன்ன விதத்தில் இவனும் சிரித்து விட, “போதும்... போதும். ஏதாவது ஐடியா கொடு...”

மீண்டும் விஷயத்திற்கு வர, இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வந்தனர்.

வீட்டுக்கு வந்ததும் கேட் அருகிலேயே வண்டியை நிறுத்தி விட்டு, ஹார்ன் எழுப்ப... வெளியே வந்த மையூ அவனை உள்ளே வருமாறு சைகை செய்தாள்.

உள்ளே வந்தவன், “லேட்டாச்சு அம்மு... சீக்கிரம் கிளம்பு!”

அவளைத் துரிதப்படுத்த, சமையலறையிலிருந்து வெளிவந்தவளைக் கண்டு அவன் கண்கள் அவளை மொய்த்தது.

அடர் சிவப்புக் கலரில் நெட் சாரீ கட்டியிருந்தாள். அவள் கலருக்கு அந்தச் சேலை அவள் அழகை மேலும் எடுத்துக் காட்ட...

அவளை நெருங்கியவன் அவள் இடுப்பைப் பற்றித் தன்னை நோக்கி இழுத்தான்.

அவன் கைகள் எல்லை மீறவும், "மச்சான்... பெட் ரூம் போகலாமா..." என்றாள்.

அவளின் மயக்கத்தில் இருந்தவன், "ஓஹோ போகலாமே..." என்றவன் மூளை அவன் தலையில் குட்ட... தலையைக் குலுக்கிக் கொண்டவன், "நோ... நோ. டயமாச்சு... காலேஜ் போகணும் அம்மு..." எனப் பாவமாகச் சொல்ல,

அவன் செய்கையில் சிரித்துக் கொண்டவள், "ஹய்யோ... ஏன் மச்சான் இப்படி அவசரப்படுறீங்க? என்னமோ நீங்கதான் அங்க சீஃப் கெஸ்ட் போல... சாப்பிட்டு விட்டு மெதுவாப் போகலாம்..." என்று கூற, அவன் திருட்டு முழி முழித்து வைத்தான்.

அதைக் கண்டு கொண்ட மயூ, "என்ன மச்சான்... முகத்துல ஏதோ திருட்டுத்தனம் தெரியுது. ஏதாவது தப்பு செஞ்சு வச்சுருக்கீங்களா?" எனக் கூற,

"சே... சே... என்ன மயூ... என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுட்ட..." என,

அவனை ஒரு மார்க்கமாகப் பார்த்து விட்டு உணவை பரிமாறினாள்.

இருவரும் கிளம்பி கல்லூரி வளாகத்திற்குள் நுழைய, பார்க்கிங் அருகிலே நின்றிருந்த அர்ஜுனிடம், அவளை இறக்கி விட்டு, "அம்மு... கொஞ்சம் வேலை இருக்கு. நீ உள்ளே போ. பக்கத்துலதான்... நான் முடிச்சுட்டு வந்துடறேன்..." என்றவன், அவள் ஏதும் சொல்லும் முன் வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டான்.

"இந்த மச்சான் காலையிலிருந்தே சரியில்லைடா அர்ஜு... சரி வா. உள்ளே போகலாம்..." என அவனுடன் செல்ல,

"மயூ... பார்க்கிங் கேட் வழியாப் போகலாம். அங்கதான் மீரா, ரீனா எல்லாரும் இருக்காங்க. நாம அப்படியே ஆடிட்டோரியம் போயிடலாம்..." என்று அவளை அந்தப் பக்கம் இழுத்துச் சென்றான்.

ஏனென்றால் காலேஜ் நுழைவாயிலில் விழாவின் சிறப்பு விருந்தினரை வரவேற்கவென பெரியதாக பேனர் வைத்திருந்தனர்.

வழக்கமான அவள் திருமணத்தைப் பற்றியான விமர்சனம் துவங்க, அதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் மீராவிடம் அன்று அவள் வரவேற்பில் நடந்ததற்கு மன்னிப்பை வேண்டினாள்.

"அடியே லூசு... எனக்கு இதுல எந்தப் பிரச்சனையும் இல்லை. நீ உன் அப்பாவுடன் சுமூக உறவில் இருந்தால் எனக்கு அதில் சந்தோஷம்தான்..." என்றாள்.

"சுமூக உறவா... அது எல்லாம் கண்டிப்பா நடக்காது மீரா... அவர் எப்படி எல்லாம் வெற்றியைப் பேசினார். தப்பு செய்தது நான்தானே. எதாக இருந்தாலும் என்னிடம்தானே பேச வேண்டும். அவர் மகளாகிய என்னை என்ன வேணாலும் சொல்லிக் கொள்ளட்டும். என் கணவரைப் பற்றிப் பேச அவருக்கென்ன உரிமை இருக்கிறது. இதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்..." என முடித்துவிட, அர்ஜுனும் மீராவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அர்ஜுன் மனதில், 'அண்ணா... இன்னிக்கி உங்க முதுகு பழுக்கப் போவது உறுதி...' என நினைத்துக் கொண்டான்.

ஒரு வழியாக அவளை அழைத்துக் கொண்டு ஆடிட்டோரியம் செல்ல... அனைவரும் கூடிவிட, சிறிது நேரத்தில் மைக்கில் அனைவரும் சிறப்பு விருந்தினரை வரவேற்க எழுந்து நிற்குமாறு சொல்ல...

இரண்டாம் வரிசையில் தன் வகுப்புத் தோழர் களுடன் கருப்பு கவுனை அணிந்திருந்த மையூவும் வேண்டா வெறுப்பாக எழுந்து நிற்க... அங்கே கல்லூரி பிரின்சிபால், சேர்மன் மற்றும் சில பேராசிரியர்களுடன் சீருடை அணிந்து கம்பீர நடையிட்டு வந்த கணவனை விழி அகலாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மயூரா.

மேடை ஏறும் முன் ஆடியன்ஸ் பக்கம் திரும்பிய வெற்றி இரண்டாம் வரிசையில் சிலை போல் நின்றிருந்த

மனைவியைக் கண்டு சிரித்தவாறு முதல்வர் காட்டிய இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

அனைவரும் அமர்ந்துவிட, அப்படியே நின்றிருந்த மயூராவை அர்ஜுன் தான் கையைப் பிடித்து அமர வைத்தான். அவன் தொடுகையில் சுயநினைவு அடைந்தவள், மொபைலை எடுத்து, "ஃபிராட்..." என்ற மெசேஜை அனுப்பி வைக்க, மேடையிலிருந்து அவள் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்த வெற்றி அவளின் மெசேஜைப் பார்த்ததும்... '😊😊😊' இப்படி அனுப்பி வைக்க அவள் இன்னமும் கடுப்பானாள். ஆனால் மனதினுள் இனிய மழைச்சாரல் தூறியதை அவள் ரசித்தாள்.

தன் கணவன் கையில் தான் வாங்கப் போகும் பட்டத்தை நினைத்துப் பெருமை கொண்டாள். இந்தத் தருணத்தைத் தன் மனப் பெட்டகத்தில் பொத்தி வைக்கத் தயாரானாள்.

ஆனால் இந்த இன்பத்தை முழுதாக அனுபவிக்க முடியாமல் மீண்டும் ஆடிட்டோரியம் வாசலில் சலசலப்புக் கேட்க, கல்லூரி முதல்வரும் சேர்மனும் வரவேற்புக்கு ஓடினர்.

அங்கு வழக்கமான தன் படையுடன் செல்வமணி வந்து கொண்டிருக்க... மயூவிற்குக் கண்களில் சிவப்பேறியது. மேடையில் அமர்ந்திருந்த வெற்றியைப் பார்க்க.... அவளின் பார்வையைத் தவிர்த்து வேறு திசை நோக்கினான்.

அவள் வேகமாக அங்கிருந்து எழுந்து போக முயற்சிக்க... அர்ஜுன் அவள் கையைப் பிடித்துத் தடுத்தான். அங்கிருந்த மற்றொரு ஆசிரியரும், "மயூ... சிட் டவுன் அண்ட் பி ரெடி... உன்னைத்தான் முதல்ல கூப்பிடுவாங்க..." என்று கூற,

கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்து கொண்டாள்.

மேடையேறிய செல்வமணி அங்கு வெற்றியும் அமர்ந்திருக்க... அவருக்கு அதைவிடவும் ஆச்சரியம். முகத்தில் தோன்றிய உணர்வை மறைத்துக் கொண்டு வெற்றியின் அருகில் அமர்ந்து கொள்ள விழா இனிதே துவங்கியது.

அருகருகில் அமர்ந்து கொண்ட இருவரைப் பார்க்கும்போது மயூவின் மனதில் எங்கோ ஒரு ஓரத்தில் இனித்தாலும், அதை உணராது கணவனைத் தரக்குறைவாகப் பேசிய தந்தையை நினைக்க நினைக்க அவள் கோபம் அதிகரித்தது.

வரவேற்பு உரைகள் முடித்ததும் முதலில் காலேஜ் டாப்பருக்கு பட்டமளிப்பதாகச் சொல்ல வெற்றியும், செல்வமணியும் முன்னால் வந்து நின்றனர்.

மைக்கில் "நவ் ஐ வெல்கம் மிசஸ் மயூரா வெற்றிச்செல்வன் டு கலெக்ட் த ஓவர் ஆல் பெர்ஃபார்மர் அண்ட் த கிளாஸ் டாப்பர் அவார்ட் ஃபார் திஸ் அகாடமிக் இயர்..." என்ற அழைப்பு வர, மயூரா தயங்கித் தயங்கி மேடையேறினாள்.

அவளை அழைக்கவென அவர்கள் கூறிய பெயர் வெற்றியை நெகிழ்த்தியது. அன்று ஏதோ ஒரு அவசரத்தில் நடந்த திருமணம்... இன்று ஆயிரம் பேர் முன்னால் அங்கீகரிக்கப்பட்டதாக நினைத்துக் கொண்டான் அவன்.

முதல்வர் வெற்றியின் கையில் மெடலைக் கொடுக்க, அவளைக் கண்களால் பருகியவாறு மெடலை அணிவித்தான். அவள் காதில், "கங்க்ராட்ஸ் அம்மு..." எனக் கூற, குனிந்த தலையுடன் அதை வாங்கிக் கொண்டவள், திரும்பி செல்வமணி கொடுத்த ஷீல்டையும், டிகிரி சர்டிஃபிகேட்ஸையும் வாங்கிக் கொண்டாள்.

அதைக் கொடுத்த செல்வமணியின் முகத்திலும் உணர்ச்சியில்லை. வாங்கிய மயூராவின் முகத்திலும் துளிக்கூட உணர்ச்சியில்லை.

அவர்கள் இருவர் நடுவில் அவள் நிற்க... போட்டோகிராபர் படம் எடுக்க... அர்ஜுனும் தன்னுடைய கேமிராவில் இந்தத் தருணத்தைச் சேகரித்தான்.

மெடலை வாங்கிக் கொண்டு அவள் கீழே செல்ல முற்பட... அவள் வகுப்பு ஹெச்.ஓ.டி. "ஒரு நிமிஷம் மயூரா... தந்தையின் கையாலும், கணவனின் கையாலும் மெடல் வாங்கிய இத்தருணத்தைப் பற்றி ஏதாவது ரெண்டு வார்த்தை சொல்லுங்க..." எனக் கூற,

அவரை மனதில் திட்டியவாறு கணவனைப் பார்க்க... அவன் கண்களை மூடித் திறக்க... மைக்கைக் கையில் வாங்கியவள், "ம்ம்... குட் மார்னிங் ஆல். அ... அயாம்

வெரி ஹாப்பி அபவுட் திஸ் மொமென்ட். எனக்குக் கிடைத்த இந்த அங்கீகாரத்திற்கு என்னை விடவும் என்னைப் பெற்றவர்களை விடவும் அதிகம் சந்தோஷப்படுவது என் கணவர்தான். எங்களுக்குத் திருமணமாகி சில நாட்களே ஆனாலும் என் வாழ்வில் இன்றியமையாதவராகிய அவருக்கு இதை நான் சமர்ப்பிக்கிறேன்.." என்றவள், அவன் அணிவித்த மெடலை அவனுக்கே திருப்பி அணிவித்தாள்.

சொல்லால் உணர்த்தாத பல விஷயங்களை அவள் செயலில் உணர்த்தினாள். அவளின் செய்கை வெற்றியைப் பெருமைப்படுத்த செல்வமணிக்கு என்னவோ போல் இருந்தது.

21 வருடம் பெற்று வளர்த்து அன்பைப் பொழிந்த தங்களை விடவும், அவளுக்குப் பெரியதாக தெரியும் வெற்றியை நினைக்கும்போது அவருக்கு எழுந்த உணர்வு பெருமையா, இல்லை பொறாமையா! அவராலே பகுத்தறிய முடியவில்லை.

அவளின் உரையை முடித்துக் கொண்டு கீழே வந்தவள்... அமைதியாக அர்ஜுனிடம் சென்றமர்ந்து கொண்டாள். விழா முடியும்வரை குனிந்த தலையை அவள் நிமிர்த்தவே இல்லை.

அனைத்தும் முடிந்தபின் அனைவருக்கும் ஆடிட் டோரியம் வெளியே சிற்றுண்டி வழங்கப்பட, 'விட்டால் போதும்' என வெளியே ஓடி வந்தாள் அவள்.

வெற்றி, செல்வமணி, கல்லூரித் தலைவர்கள் அனைவரும் அங்கிருந்த சின்ன அறையில் சிற்றுண்டி அருந்திய சமயம் பார்த்து, வெற்றி செல்வமணியிடம், "சார் உங்ககிட்ட அஃபிசியலா கொஞ்சம் பேச வேண்டிய திருக்கு... நீங்க எப்போ ஃப்ரீயா இருப்பீங்க? எப்போ மீட் பண்ணலாம்?" எனப் பொறுமையாகக் கேட்க, அவன் முகத்தில் எதையும் அறிந்து கொள்ள முடியாமல்,

"எதைப் பற்றி...?" எனக் கேட்க,

"கண்டிப்பா என் வைஃபைப் பற்றிப் பேச இல்ல. வேறொரு கேஸைப் பற்றிப் பேசணும்..." எனக் கூற,

அவனின் இந்தப் பேச்சு அவரைப் பாதித்ததோ என்பதை அவன் அறியவில்லை.

அன்றைய மகளின் பேச்சு செல்வத்தைப் பெரிதும் பாதித்தது. அதை மனதில் கொண்டவர், "ம்ம்... சரி. நான் இன்னிக்குச் சாயந்திரம் சென்னை கிளம்புறேன். அடுத்த வாரம் புதன்கிழமை வந்தபின் பார்க்கலாம்..." என்று அவனுக்குப் பொறுமையாகவே பதில் உரைத்தவர், மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டார்.

அவர் ஏதாவது முகத்தில் அடித்தது போல் ஏதாவது பேசுவார் என்று நினைத்த வெற்றிக்கு அவரின் பொறுமை யான பேச்சு வியப்பைக் கொடுத்தது.

அவர் சென்ற பின்னால் வெற்றியும் கிளம்பி வெளியே வர, அங்கே ஒரு மரத்தின் அடியில் மயூரா, அர்ஜுன் மற்றும் அவர்கள் நண்பர்கள் இருக்க அங்கே விரைந்தான்.

வெற்றி அர்ஜுனிடம் சைகையால் விசாரிக்க, அவனோ தலையை மறுப்பாக ஆட்டி, "ரொம்பக் கோபமா இருக்காப்போல. யாரிடமும் பேசலை..." என அவன் காதில் முணுமுணுக்க...

பெருமூச்சை வெளியிட்டு, "மயூ..." என்றழைக்க,

கணவனின் குரலில் நிமிர்ந்தவள், "போகலாமா?" என்றாள் ஒற்றை வார்த்தையாக.

"சரி வா..." என்றவன் மற்றவர்களிடம் விடைபெற்று அவளை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். வரும் வழி எங்கும் அவள் ஒரு வார்த்தை கூடப் பேச வில்லை.

வீடு வந்தும் இதே கதையாக இருக்க... அவள் ஏதாவது திட்டுவாள், கோபப்படுவாள், சண்டை பிடிப்பாள் என நினைத்தவன்... அவளின் அமைதி அவனை வதைக்க... அவளைத் தேடிப் படுக்கையறைக்குச் சென்றவன், அவள் தோள் பற்றி, "அம்மு... ஏதாவது பேசுடா. ஏன் இப்படியிருக்க...?" எனக் கூற,

அவள் ஏதும் சொல்லாமல், அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

"அம்மு... ஏன்டா அழற? நான் உன்னைக் கஷ்டப்படுத்தியிருந்தா அயாம் சாரிம்மா. நான் உண்மையைச் சொன்னா நீ வரமாட்டேன்னு சொல்லுவ. அதான்டா சொல்லலை. அழாத குட்டிம்மா..." அவளைச் சமாதானப்படுத்தியது ஏதும் அவள் காதில் விழவில்லை.

மௌனமாகக் கண்ணீர் சிந்தியவள், சில பல நிமிடங்கள் கழித்து அழுகையை அடக்கிக் கொண்டு அவனிடமிருந்து விலகினாள்.

அவன் விலகல் அவனைப் பாதிக்க... "இப்படியே இரு அம்மு..." என மீண்டும் அவளைத் தன்னுடன் இருத்திக் கொண்டான்.

"ஏதாவது பேசு அம்மு... நான் தப்பு செய்திருந்தால் என்னைத் திட்டு. ஏன்டா மச்சான்... இப்படிச் செய்தேன்னு கேளு. ஏன் இப்படி இருக்க?" என்றான்.

தலையை மறுப்பாக அசைத்தவள், "நீங்க ஒண்ணும் தப்பு செய்யலை மச்சான்... நான்தான். எனக்காகத்தானே இது எல்லாம்... தேங்க்ஸ் மச்சான்..." என அவனை மேலும் மேலும் இறுக்கிக் கொண்டாள்.

"உனக்காக இல்ல அம்மு... எனக்காக. என் மனைவி என்று நான் பெருமைப்பட வேண்டுமென்ற சுயநலம் என்று கூட நினைத்துக் கொள். அன்னிக்கு இதே வாய்தான் உன்னால் என் மானமே போச்சென்று உன்னைத் திட்டியது. ஆனால் இன்று... உன்னால் நான் இன்னிக்குப் பெருமைப்படுறேன்டா. மேடையில் நீ செய்த செயல்.... யூ மேட் மீ சோ ப்ரௌட் டுடே. ஐ லவ் யூ அம்மு... ஐ லவ் யூ சோ மச்..." மேலும் மேலும் அவளைத் தன்னுள் புதைத்துக் கொண்டான்.

அவன் அணைப்பின் இறுக்கம் அவன் காதலைச் சொல்ல... மௌனமாக அந்த நொடியை ரசித்தாள் மயூரா.

19

வண்ணங்கள் தேவையில்லை தோழி...
உன் புன்னகை கொடு
என் பக்கங்கள் அழகாகும்!
வசந்த காலம் தேவையில்லை
உன்...
மனதில் இடம் கொடு..
நாட்கள் வசந்தம் பெறும்!
கவிதைகள் வேண்டாம் பெண்ணே...
உன் விழிப்பார்வை போதுமே
வரிகள் ஊற்றெடுக்கும்!
உன் அருகாமை போதுமே
உலகமே அழகாகிப் போகுமே!!

சூரியனின் வரவைக் கருமேகக் கூட்டங்கள் மறைத்து, சடசடவென இசையை எழுப்பி மழைச் சாரல் காற்றில் தவழ்ந்து வந்து வெற்றியின் முகத்தில் மோத, அந்தக் காலை வேளையை கண்மூடி ரசித்துக் கொண்டிருந்தான்.

இத்தனை நாட்கள் இயந்திர கதியில் நாட்களை நெட்டி முறித்துக் கொண்டிருந்தவன், இப்பொழுதெல்லாம் இயற்கையின் அழகை ரசிக்கத் துவங்கினான்.

'உலகம் இத்தனை அழகா...' என வியந்தான்.

தன் மனது இரும்பென நினைத்தவனை இல்லை... நீ இரும்பல்ல. பூவைச் சுமக்கும் கொடி. என்னைச்

சுமக்கும் உயிரென்று உணர வைத்தவள்... கண்ணை மூடி உறங்கிக் கொண்டிருக்கும் அழகை அவர்கள் அறையின் ஜன்னலில் சாய்ந்து கொண்டு கையில் தேநீர் கோப்பையுடன் ரசித்துக் கொண்டிருந்தான்.

துயில் கலைந்து மெல்ல கண் விழித்தவள்... கணவன் தன்னையே பருகும் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருக்க... உதட்டில் உறைந்த புன்னகையுடன் எழுந்தவள், "என்ன மச்சான்... இன்னிக்குக் கொசு விரட்டப் போகலையா?" என்றாள்.

அவள் தான் ஜாகிங் செல்வதைக் கிண்டலடிக்கிறாள் என்றறிந்தவன், "ம்ம்... போகணும். உனக்காகத்தான் வெயிட்டிங். எழுந்து வா. மழை நின்னு லைட்டா தூறல் போடுது. அப்படியே சின்னதா ஒரு வாக் போயிட்டு வரலாம்..." எனக் கூற,

"ஹை... உங்களுக்கும் பிடிக்குமா! எனக்கும் ரொம்பப் பிடிக்கும். மழை நின்றதும் ரோடு எல்லாம் கழுவி விட்ட மாதிரி சூப்பரா இருக்கும் மச்சா... இருங்க. 5 மினிட்ஸ்..." என்றவள், சொன்னபடியே கிளம்பி வந்தாள்.

"இந்தாடா..." என்று அவளுக்குப் பாலைக் கொடுக்க,

"வேண்டாம் மச்சான்... பால் சாப்பிட்டால் ஒரு மாதிரி இருக்கு..." என்றாள்.

"மயூவுக்குப் பால் வேண்டாமா... உனக்குப் பால் இருந்தால் சாதமே வேண்டாம் என்பாய். நெய்யையும், வெண்ணையும் பாரபட்சமின்றி சாப்பிடுவ. உனக்கு

வேண்டாமா... அதிசயம்தான் அம்மு...” எனக் கிண்டல் அடிக்க...

“கொழுப்பு மச்சான்... உங்களுக்கு...” என அவன் முதுகில் அடிக்க,

“கொழுப்பு எனக்கில்லைடி, என் குட்டி குஷ்பு உனக்குத்தான். போலீஸ்காரன் பொண்டாட்டி இப்படியா குண்டு தக்காளி போல் இருப்பது... நல்லாப் பாலும் நெய்யும் சாப்பிட்ட உடம்பென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை உன்கிட்டதான்டி பார்க்கிறேன் செல்லம்...” என அவள் குண்டுக் கன்னங்களைக் கடித்து வைக்க,

“ஹைய்யோ... போதுமே. உங்களுக்கு நான் அழகா இருக்கேன்னு பொறாமை...” என நொடித்துக் கொண்டு வெளியே சென்று விட்டான்.

அவள் பின்னாலே வந்தவன் இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டு நடந்தனர்.

சில தூரங்கள் சென்ற பின் மயூவிற்கு மேல்மூச்சு வாங்க... “மச்சா.. எனக்கு ஒரு மாதிரி இருக்கு. வீட்டுக்குப் போகலாமா?” என்றாள்.

“அம்மு... வீட்டிலிருந்து சில கிலோ மீட்டர் கூட நடக்கல. அதுக்குள்ள உனக்கென்ன மூச்சு வாங்குது. இன்னும் கொஞ்சம் நடக்கலாம்டா... இந்தக் கிளைமேட் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு...” என்றான்.

கணவனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மேலும் நடந்தாள்.

ஆனால் நடக்க நடக்க... அவள் வேகம் குறைந்து, ஒரு கட்டத்தில் முடியாமல் கணவனின் மேலே சரிந்தாள்.

அவனோ, “அம்மு... நடக்கும்போது கூட எப்படிடி தூங்குற...? ஒழுங்கா நடந்து வா!” எனக் கிண்டலடிக்க,

அந்தப் பக்கம் சென்ற பெரியவர், “தம்பி, அந்தப் பொண்ணு மயங்கி விழுதுப்பா... புடி...” என அருகில் வர, மயக்கம் என்ற வார்த்தையில் இவன் பதறித் திரும்ப... அவள் இவன் மேல் சரிந்தாள்.

ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் அந்தத் தெருமுனையில் இருந்த ஆட்டோக்காரரை அழைத்து ஹாஸ்பிடலுக்கு விரைந்தான். வரும் வழி எங்கும் சிறுபிள்ளை போல் அவள் கன்னத்தைத் தட்டி விழிக்கு மாறு சொல்ல, கேட்டுக் கொண்டிருந்த அந்த ஆட்டோக் காரருக்குப் பாவமாகத் தோன்றியது.

ஹாஸ்பிடல் வந்ததும் அவளைத் தூக்கிக் கொண்டு உள்ளே செல்ல... அங்கிருந்த செவிலிப் பெண்மணியோ... ஏதோ அவசரம் என நினைத்து, ஸ்ட்ரெச்சர் எடுத்து வர, வேறொரு செவிலியிடம் மருத்துவரை அழைத்து வருமாறு பணித்தார்.

ஸ்ட்ரெச்சரில் அவளைக் கிடத்தியவன்... “என்னாச்சுன்னு பாருங்க. சீக்கிரம்... சீக்கிரம்...” என வார்த்தைகளால் துரிதப்படுத்த,

அவனின் அவசரத்திற்கு மருத்துவரும் வேகமாக வந்து இவளைப் பரிசோதனை செய்தார்.

அவள் நாடியைப் பிடித்துப் பரிசோதனை செய்தவர், "நர்ஸ் காட்டன்ல தண்ணி கொடுங்க..." எனக் கூறி, பஞ்சை அவள் கண்ணில் தடவ அவள் விழித்துக் கொண்டாள்.

"இவ்வளவுதானா..." என வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தவன், "என்னாச்சு டாக்டர்?" என வியப்பாகக் கேட்க, மயூராவோ தான் எங்கிருக்கிறோம் என்ற ரேஞ்சில் சுற்றி உள்ளவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த மருத்துவர் இருவரையும் மாறி மாறிப் பார்த்தவர் அந்த நர்சிடம் ஏதோ சொல்ல... அவர் மயூராவை வேறொரு டாக்டரிடம் அழைத்துச் சென்றார். நடப்பதை ஏதோ மர்மப் படம் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்த வெற்றி மயூவின் பின்னாலேயே செல்ல...

அந்த நர்ஸ் அவனை வெளியே இருக்குமாறு சொல்லி விட்டுச் சென்றார்.

சிறிது நேரம் கழித்து உதட்டில் விரிந்த புன்னகையுடன் வந்த மயூராவிடம்,

"ஹே... என்னடி ஆச்சு உனக்கு? யாருமே ஏதும் சொல்ல மாட்டேங்குறாங்க... என்னைய ஏதோ மாதிரிப் பார்த்துட்டுப் போறாங்க. என்ன நடக்குது இங்க?" என்றான்.

அவள் வாயில் விரல் வைத்து, "ஷ்ஷ்ஷ்... பில்லை செட்டில் பண்ணிட்டு வீட்டுக்கு வாங்க. சொல்றேன்!" என முன்னே நடக்க, அவனும் அவள் பின்னாலே சென்றான்.

ஆட்டோவில் வரும்போதும் அவள் ஏதும் சொல்லாமல் இருக்க... வரும் வழியெங்கும் வெற்றியின்

பதட்டத்தைப் பார்த்த அந்த ஆட்டோ ஓட்டுனர், "பாவம் பாப்பா, சாரு... உனக்கு என்னமோ ஏதோன்னு பயந்து போயிட்டாரு..." என்றான்.

மயூரா அதற்கும் சிரித்து வைத்தாள்.

அவள் சிரிப்பில் மேலும் மேலும் அவனுக்குக் கடுப்பேற... வீடு வரட்டும் எனக் காத்திருந்தான்.

வீடு வந்ததும் அவள் உள்ளே சென்று விட, ஆட்டோவை அனுப்பி விட்டு வந்தவன், "ஹே... என்னாச்சுடி உனக்கு... கேட்கிறதுக்குப் பதில் சொல்லாம கெக்கபிக்கேன்னு சிரிச்சுக்கிட்டு வர... என்னைப் பார்த்தா எப்படி இருக்கு?" என்றான்.

அவன் கோபம் அவளுக்கு மேலும் சிரிப்பூட்ட, அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "அட, என் மக்கு மச்சான், உங்களை என்ன பண்றது... நான் மயங்கி விழுந்தா முகத்தில தண்ணியடிச்சு எழுப்ப வேண்டியதுதானே... இப்படியா ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணுவாங்க. நீங்க எப்படி ஐ.பி.எஸ். பாஸ் பண்ணீங்க? எனக்கு ரொம்ப டவுட்டா இருக்கு..." என அவள் சந்தேகத்தைக் கேட்க,

அதை ரசிக்காமல், "அம்மு... என்னைக் கோபப்படுத்தாதே. என்னாச்சுன்னு சொல்லு. டாக்டர் என்ன சொன்னாங்க?" எனக் கேட்க,

"ம்ம்... நீங்க டி.சி.பியிலிருந்து அப்பாவா ப்ரொமோஷன் வாங்கிட்டீங்கன்னு சொன்னாங்க..." என்று அவள் சொன்ன வார்த்தை அவனுக்குச் சரியாக

விளங்கவில்லையோ என்னவோ, "கம் அகெய்ன்... திரும்பச் சொல்லு."

இப்பொழுது மயூராவிற்குச் சிறிது வெட்கம் வந்துவிட, அதைப் புரிந்து கொண்டவன், "அம்மு... அம்மு... நிஜமாவாடா... நிஜமாவா..." என அவளை நெருங்கி இறுக்கி அணைத்துக் கொண்டான்.

"அச்சோ... மச்சான், மெதுவா வலிக்குது..." என்றாள்.

"சாரிடா... சாரி அம்மு... பட், இது உண்மையாடா... ஹய்யோ... என்னால நம்ப முடியலை அம்மு... எனக்குக் குதிக்கணும் போலிருக்கு. அயாம் சோ ஹேப்பி..." என, புன்னகையில் அவன் கண்கள் நனைந்தன.

அவன் கண்களில் கண்ணீரைக் கண்டவள், "மச்சான்... என்னாச்சு? ஏன் அழறீங்க?" என அவன் நாடியைப் பற்றிக் கேட்டவளின் கையைப் பற்றிக் கொண்டு, "எனக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா... சொல்ல வார்த்தைகள் இல்லைடா... என்... என்னால உருவான உயிர் உனக்குள்ள... இது நம் காதலின் அடையாளம் அம்மு...

"யாருக்காக இந்த வாழ்க்கையென்று வாழ்ந்த வனை உனக்காக என்று நினைக்க வைத்தாய்... இன்று... இன்று... நமக்கு... நமக்கென ஒரு உயிர் அம்மு... என்னால இந்தத் தருணத்தை மறக்கவே முடியாது. எனக்கென்று ஒரு வாழ்க்கை... எனக்கென்று ஒரு குடும்பம் கொடுத்த உனக்கு... தேங்க்ஸ்டி... தேங்க்ஸ்... எல்லாத் துக்கும்..." என அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.

"மச்சான்... எதுக்கு இப்போ இந்தத் தேங்க்ஸ் எல்லாம்... நான் உங்களுடையவள். அதான் கடவுள் உங்களிடம் என்னைச் சேர்த்து வைத்து விட்டான். இது நம் வாழ்க்கை. நம் குடும்பம். புரிஞ்சுதா!

"அப்புறம் மச்சான்... உங்ககிட்ட கொஞ்சம் பேச ணும். நீங்க இன்னிக்கு ஸ்டேஷன் போகலையா?" என்றாள்.

"ம்ம்ம்... இன்னிக்கு ஃபுல்லா உன்னோடதான். உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்..." என்றவனை,

"அப்போ உட்காருங்க..." என்றவள், அவனைத் தன் மடியில் சாய்த்தவள் அவன் முடி கோதி விட்டாள்.

"மச்சான்... நீங்க நான் மயங்கி விழுந்ததிலிருந்து என்ன செய்தீங்கன்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க..." என்றாள். அவனும் அவள் சொன்னதை யோசித்துப் பார்த்தான்.

அவன் செய்த செயல்கள் அவனுக்குச் சிரிப்பை உண்டு பண்ண... உதடு பிரித்துச் சிரித்தான்.

"ரொம்பச் சின்னப் பிள்ளைத்தனமா பண்ணிட்டேன் இல்ல, அம்மு..." என்றான்.

"ம்ம்... உங்களுக்குப் புரியுதா மச்சான்... நீங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்கன்னு..." எனச் சொல் லவும், அவனுக்கு அவன் செய்த செயல் புரிந்தாலும், மயூரா சொல்ல வருவதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"புரியுது அம்மு... பட் நீ என்ன சொல்ல வர்ற?" என்று குழப்பமாக அவளைப் பார்க்க...

"நீங்க என் விஷயத்துல ரொம்ப சென்சிடிவ்வா இருக்குற மாதிரித் தோணுது மச்சா... நீங்க இப்படி இல்லையே... உங்க நடத்தையில... நீங்க முடிவெடுப்பதில் எப்பவும் ஒரு தெளிவு இருக்கும். ஆனால் அது எல்லாம் என் விஷயத்துல குறையுற மாதிரி இருக்கு. இது சரியில்லை. நாளைக்கு எனக்கு ஏதாவது ஒண்ணு...." என அவள் ஆரம்பிக்கும் முன், அவள் வாயை அடைக்க,

"ஒரு நிமிஷம் மச்சான்... நான் முடிச்சுடறேன். எல்லாருக்கும் என்றாவது ஒரு நாள் முடிவு வரும். எனக்கும் வரும். அந்த நாள் நீங்க ஓய்ஞ்சு போய் இருக்கக் கூடாது. உங்களின் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்குப் போய்த்தான் ஆகணும், மச்சான்... உங்கள் அம்மாவின் பிரிவிற்குப் பின் நான் உங்களுக்குக் கிடைத்தேன் இல்ல... அதுபோல. உங்களின் வாழ்க்கை என்னுடன் முடிவதில்லை..." என்றாள்.

"ஏன் அம்மு... இப்படி எல்லாம் பேசுற! அப்போ நான் உன்னைக் கவனிக்கக் கூடாதுன்னு சொல்றியா? இதை ஏன் அம்மு இப்படி எடுத்துக்குற? நான் உன் மேல் வைத்திருக்கும் அக்கறைடா...

"எதுவுமே இல்லாத எனக்கு ஒரே ஒரு உறவு நீ மட்டும்தான் அம்மு. உன்னை நான் என் கண்ணுக்குள் வைத்துப் பார்க்கணும்னு நினைக்கிறது தப்பா...

"தயவு செஞ்சு இனிமேல் இப்படிப் பேசாதே அம்மு... என் வாழ்க்கையில் நீ மட்டுமாவது கடைசி வரை வரணும்..." என வேகமாக அவள் மடியிலிருந்து எழுந்து அவளை அணைத்துக் கொண்டான்.

"ஷ்ஷ்... தீ-ன்னு சொன்னால் வாய் சுடாது மச்சான்... பொறுமை. நான் அப்படிச் சொல்லலை. நீங்க அக்கறையா இருக்கிறது எதுவும் தப்பில்ல. என் விஷயத்தில் நீங்க உங்க மூளை சொல்வதை விட மனது சொல்வதைத்தான் கேட்குறீங்க. ரொம்பப் பதட்டப்படுறீங்க. அது எல்லாம் வேண்டாம்.

"எப்பவும் நாம் எந்த ஒரு விஷயம் செய்தாலும் ஒரு சில நொடிகள் யோசித்துப் பார்க்க வேண்டும். எதையும் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்ய முடியாது மச்சான்... வேகமும் அவசரமும் நமக்கு எப்பவும் பலனைக் கொடுக்காது..." என்றாள்.

அவன் ஏதோ சொல்ல வாய் எடுத்துப் பின் அமைதியாக...

அவன் கேட்க வருவதைப் புரிந்து கொண்டு, "அப்போ நீ ஏன் நம்ம கல்யாண விஷயத்துல அவசரப்பட்டேனு கேட்குறீங்களா?" என்றதற்கு... அவன் 'ஆமாம்' எனத் தலையாட்டினான்.

"மச்சான்... நீங்களே சொல்லுங்க. எனக்கு இன்னொருத்தரோட நிச்சயம் நடந்தபின் நான் உங்களை விரும்புறேன்னு சொல்லியிருந்தா... நீங்க என்னை

ஏத்துக்கிட்டு என் அப்பாவிடம் வந்து பேசியிருப்பீங்களா?" என்றாள்.

அவன் மௌனமாக இருக்கவும்...

"நான் செய்த செயலை ஒரு தடவைக்கு நூறு தடவை யோசித்து எனக்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்றதும்தான் மச்சான் செஞ்சேன்."

அவன் அமைதியாக இருக்கவும், "அம்மு... நான் உனக்கு ஏற்றவனா... உன்னைக் கைபிடிக்க நான் கஷ்டப்படாமல்... போனால் போகுது என கோழைத் தனமாக நினைத்த என்னை எப்படிடா கல்யாணம் செய்யணும்னு தோணுச்சு. நான் உன் அளவுக்கு உன்னைக் காதலிக்கலை அம்மு..." என்றான்.

"மச்சான்... திரும்பத் திரும்ப லூசு மாதிரிப் பேசாதீங்க. நீங்க என்னைத் தேடி வரலைன்னு நான் உங்களைக் குற்றம் சொல்லவில்லை. உங்க நிலைமை உங்களை அப்படி யோசிக்க வைத்திருக்கு. அது கோழையான முடிவில்லை மச்சான். எத்தனையோ காதலர்கள் தங்கள் குடும்பத்துக்காகவும், ஏன் தங்களுக்காகக் கூட அவர்கள் காதலைத் தியாகம் செய்திருக்காங்க. அதற்குப் பெயர் கோழைத்தனமில்லை. விட்டுக் கொடுத்தல்.

"நீங்க எனக்கு நல்லதுன்னு நினைச்சு உங்க காதலை விட்டுக் கொடுக்க நினைச்சிருக்கீங்க. சொல்லப் போனா என்னை விட நீங்கதான் மச்சான் என்னை அதிகமா நேசிச்சிருக்கீங்க..."

"நான் இப்படி எல்லாம் யோசிச்சுப் பார்த்ததில்லை அம்மு... நீ என் செயலை நியாயப்படுத்த நினைக்குற... நான் செய்தது தப்புதான்டா. எந்த ஒரு நிலைமையிலும் நான் உன்னை விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது..." என அவன் தவறைச் சுட்டிக் காட்ட...

அவனை முறைத்தவள், "அப்படி நீங்க இருக்க நாம என்ன பல ஆண்டுகளா காதலிச்சோம்...?" என அவன் முதல் நாள் சொன்னதைச் சொல்ல... அவன் சிரித்து விட்டான்.

"அம்மு... உன்னால மட்டும்தான் இது முடியும். நான் செய்தது சரியென... என்னையவே சமாதானம் செய்கிறாய். நீ ரொம்ப நல்லவடா..." என அவளை அணைத்துக் கொண்டான்.

"அம்மு... பாப்பா உன்னை மாதிரிக் கலரா, சப்பியா, அழகாப் பிறக்கணும்டா... என்னை மாதிரிக் கருப்பா, அசிங்கமா வேண்டாம்..." என்றான்.

அவள் சமாதானம் அவனிடம் வேலை செய்தது. அந்தப் பேச்சை விட்டு அவர்கள் குழந்தையைப் பற்றிய பேச்சிற்குத் தாவினான். அவன் இன்னமும் தான் அப்பாவாகப் போகிறோம் என்ற சந்தோஷத்திலிருந்து மீளவில்லை.

"ஹலோ... நீங்க இப்போ அசிங்கம்னு யாரு சொன்னது? நீங்க ஒண்ணும் அவ்வளவு கருப்பில்ல. மாநிறம். இதுதான் நம்ம ஊரு பசங்க கலர்... இனிமேல்

இந்த மாதிரி என் புருஷனைச் சொன்னீங்க... அப்புறம் டெய்லி நைட் சோபாவில்தான் படுக்கணும்..." என மிரட்ட,

"அச்சோ... அப்போ நான் யாருடி...?" என சண்டைக்குப் போக,

"ஹா... சி.பி.ஐ. வெச்சு இன்வெஸ்டிகேட் பண்ணுங்க. சரி... அரட்டையடிச்சது போதும். ரொம்ப லேட் டாச்சு. நான் போய்ச் சமைக்கிறேன்..." என எழப் போக,

"நீ இரு அம்மு... இனிமேல் நீ எந்த வேலையும் செய்யாதே... நான் வேலைக்கு ஆள் வைக்கிறேன்..." எனக் கூற,

"அட, என் மங்குனி அரசரே... நீங்க வேலைக்கு ஆள் வைக்கும்வரை நாம் சாப்பிட வேண்டாமா? இந்த அவசரம்தான் வேண்டாம் என்கிறது..." எனச் செல்லமாக, அவன் தலையில் குட்ட,

அசடு வழிந்தவன்... "நான் அப்படிச் சொல்லலை அம்மு... நான் சமைக்கிறேன் என்று..." எனச் சமாளிக்க,

"இதுக்குப் பெயர்தான் சமாளிச்சுபையிங்னு சொல்வாங்க மச்சான்..." என அவனை வார, "ஹிஹி..." எனச் சிரித்துக் கொண்டே உள்ளே சென்றான்.

என்னதான் மயூரா வெற்றியைத் தன் விஷயத்தில் நிதானமாக இருக்கச் சொன்னாலும், அவளின் மேல் கொண்ட அளவு கடந்த காதல் அவனின் மூளையை செயலிழக்கச் செய்தது.

நாட்கள் அவர்களுக்கு என்ன வைத்திருக்கிறதென்று பார்ப்போம்.

20

உயிரே உயிரே
உன்னைச் சுமப்பேன் உயிரே
ஒரு உயிரை என்னுள் தந்தாயே...!
என் உயிரே...
இது நேற்று கனவாய் இருந்தது
இன்று எனக்குள் உயிராய்ப் பிறந்தது
நேற்று குழந்தை போல் நீ இருந்தாய்
இன்று உன் குழந்தைக்குத் தாயாக
மாற்றி விட்டாய்
மணியே... மணியே...
என் கண்மணியே,
உன்னைத் தாங்குகிறேன்!
என் உயிர்த் துடிப்பை
உன்னால் உணருகிறேன்!
நேற்று உன்னைச் சுமக்க ஏங்கினேன்,
இன்று உன்னை வளர்க்கப் போகிறேன்!
என் இதயத் துடிப்பிலும் நீ உண்டு;
என் மூச்சுக் காற்றிலும் நீ உண்டு;
உன் தாய்க்கு மதிப்பு நீதானே!
உன்னால் பெருமை காண்பேனே!

ஒரு தாய், தன் குழந்தையைப் பத்து மாதம் வயிற்றில் சுமந்தால், அந்தத் தாயையும், பிள்ளையையும் சேர்த்துத் தந்தை அவன் நெஞ்சில் வாழ்நாள் முழுவதும் சுமப்பான் என்ற கூற்று, வெற்றியின் வாழ்க்கையில் உண்மையாகியது. அவன் கொடுத்த உயிர் அணுவை, அவள் வயிற்றில் உருவாக வளர்க்கிறாள். அதை நினைக்கும்போதே அவனை நெகிழ்ச்சியடையச் செய்தது.

கடந்து போன இந்த நான்கு நாட்களில் அவள் மெல்ல அசைந்தாலும், "என்ன வேணும் அம்மு...?" என அவளை நோக்கி வருவான். அவள் நின்றால், நடந்தால், அசைந்தால்... அனைத்திலும் அவனின் முழுக் கவனமும் அவளிடமே இருந்தது. அவன் செய்யும் அலம்பலைக் கண்டு மயூவிற்கு, "இந்தக் கொசுத் தொல்லை தாங்கலைடா சாமி..." என வாய் விட்டே புலம்புவாள்.

அதை எல்லாம் அவன் துளிக்கூட கண்டு கொள்ளவில்லை. அந்த நாளுக்குப் பின் அவளைப் பிரபல மகப்பேறு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று, முறையான பரிசோதனை செய்ய வைத்தான். மருத்துவர் சொன்னதைக் கையில் ஒரு நோட்ஸ் மட்டும்தான் இல்லை என்று மயூ புலம்பும் அளவிற்குக் கண்ணும் கருத்துமாகக் கேட்டு மனதில் பதித்தான். அவளுக்குத் தேவையானதைப் பார்த்துப் பார்த்துச் செய்து கொடுத்தான்.

என்னதான் மயூ அவனை வெளியில் கிண்டல் செய்தாலும், அவன் செயல்கள் அனைத்தையும் அவள்

ரசித்தாள். பெண்கள் இந்தச் சமயத்தில் தாயைத் தேடுவார்கள் என்பதை அறிவோம். ஆனால், வெற்றியின் அன்பும், உபசரிப்பும் அவளை, அவள் தாயைக் கூட மறக்கச் செய்தது எனலாம்.

விஷயம் அறிந்ததும் பாஸ்கர் மற்றும் அர்ஜுன், இவர்களைக் காண வந்தனர். பாஸ்கர் அவனின் வாழ்த்துக்களைச் சொல்லிச் சென்ற பின், வீட்டில் மயூராவுடன் அர்ஜுன் பேசிக் கொண்டிருக்க, வெற்றி அவனுக்குக் காபி எடுத்து வருவதாகச் சொல்லிச் சமையலறைக்குச் சென்று விட்டான்.

மௌனமாகச் சென்ற சில நிமிடங்களை அர்ஜுன் கலைத்தான். அவன் தயங்கியபடியே, "மயூ... ஒண்ணு கேட்கவா...?"

"ம்... கேளு அர்ஜு... இது என்ன, புதுசா பெர்மிஷன் எல்லாம் கேட்கிற...?" - அவனை ஊக்கப் படுத்த,

"அது வந்து... உனக்கு இந்த மாதிரிச் சமயத்துல ராஜி ஆன்ட்டி ஞாபகம் வரலையா...?" என்றான்.

"எதுக்கு அர்ஜு...?" என அவள் கேள்வியாக அவனைப் பார்க்க, "இல்லடா... உனக்கு அம்மாவோட இருக்கணும்னு தோணிச்சுன்னா சொல்லு மயூ... நான் அவங்களை அழைத்து வரேன். அவங்களுக்குச் இந்தச் செய்தி தெரியாது இல்லையா? சொன்னா ரொம்பச் சந்தோஷப்படுவாங்கடா... உன் மேல் இருக்கிற கொஞ்சம் கோபமும், அவங்களுக்குப் பேரன் வரப் போகிறான்னு

தெரிஞ்சாப் போயிடும். அழைத்து வரவா?" என அவன் ஆர்வமாகக் கேட்க,

"அர்ஜு... நான் செய்தது தப்புத்தான். இல்லை என்று சொல்லவில்லை. அதே சமயம் அவங்க எனக்காகவும், என் கணவனுக்காகவும் என்னைப் பார்க்க வரணும்டா. அவங்களுக்கு ஒரு பேரன் வரப் போகிறான் என்பதற்காக வரக்கூடாது. என் அப்பாவுக்குத் தெரியாமல் அவங்க என்னைப் பார்க்க வந்தால், அது அவர்களுக்குள் ஒரு பிரச்னையைக் கிளப்பும்.

"அது மட்டும் இல்லை... இந்த விஷயம் தெரிந்தது முதல், என்னை ஒரு நிமிடம் கூட என் அன்னையைப் பற்றி நினைக்க விடாமல், என்னைத் தங்கத் தட்டில் வைத்துத் தாங்கும் கணவர் இருக்கிறார். அது போதும்டா எனக்கு. எல்லாம் சரியாகிடும்னு நம்பலாம்..." எனப் புன்னகைக்க, அவள் குரலில் தெரிந்த உறுதியும், கணவன் மேல் கொண்ட காதல் அவள் விழிகளில் தெரிய, அதற்கு மேல் அர்ஜுனால் ஒன்றும் பேச முடியவில்லை.

ஆனால், இவர்கள் உரையாடலை, காபி எடுத்துக் கொண்டு வந்த வெற்றி தெளிவாகக் கேட்டான். கேட்டதை, கேட்காதவாறு அறையின் உள்ளே நுழைந்ததும் மயூரா அவன் தோள்களில் சாய்ந்து கொள்ள, அவள் தலையைக் கோதியவன், யோசனையில் ஆழ்ந்தான்.

அவன் எடுத்திருந்த விடுமுறை கழிந்து வேலைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தான். அன்று காலையே அவனுக்குச் செல்வமணி பி.ஏ.விடமிருந்து கால்

வந்திருந்தது. செல்வமணி, அன்று தான் சொன்னதை மறந்திருப்பார். நாம்தான் மீண்டும் அழைத்து அவரைக் காணச் செல்ல வேண்டும் என்று நினைத்தவனுக்கு, அவரிடமிருந்து அழைப்பு வர, அங்கே செல்லக் கிளம்பிக் கொண்டிருந்தான். ஆனால், மிகக் கவனமாக மயூராவிற்கு இதைத் தெரியப்படுத்தாமல் இருந்தான்.

தயாரானதும், கட்டிலில் சோர்வாகப் படுத்துக் கொண்டிருந்த மயூவை நெருங்கி, அவளைத் தன் மடியில் கிடத்தினான்.

"என்ன மச்சான்... கிளம்பிட்டீங்களா...?" என அவன் இடுப்பைக் கட்டிக் கொள்ள, "ஆமாம்டா குட்டிம்மா... உனக்கு ரொம்பவும் மயக்கம் வர்ற மாதிரி இருக்கா? எழுந்து ஏதாவது குடிம்மா. பால் தரவா? இல்லாட்டி ஜூஸ் அடிச்சுத் தரேன். நைட் கொஞ்சமாச் சாப்பிட்டது... பசி எடுக்குமேடா...!" என அவள் தலையை நீவி விட,

"எது சாப்பிட்டாலும் வயித்தைப் பிரட்டுது மச்சான். நான் அப்புறமாச் சாப்பிடுகிறேன்..." என்றாள்.

"ம்ம்... வேலைக்கு ஆள் சொல்லியிருந்தோம் இல்லையா... அவங்க இன்னிக்கு வருவாங்க. நீ பேசி, உனக்கு ஓ.கே.ன்னா அவங்களை வெச்சுப்போம். சரியா...? பார்த்து இரும்மா... நான் போன் செய்கிறேன். முடிஞ்சா மதியம் வரேன்டா..." என அவளை மென்மையாக அணைத்து, இதழ் தீண்டி விடுவித்தான்.

"ம்ம்... சரி மச்சான்... நீங்க போயிட்டு வாங்க!" என்றவாறு அவனுடனே எழ, மெல்லியதாகத் தலை சுழல, கணவனின் உதவியோடு எழுந்தாள்.

என்று மயூ வீட்டிற்கு வந்தாளோ அன்றிலிருந்து வெற்றி எப்பொழுது வெளியே கிளம்பினாலும், இவளின் இந்த மதி முகத்தைப் பார்த்து விட்டுச் செல்வது அவனுக்கொரு புதிய தெம்பைக் கொடுக்கும். எங்கே இன்று இவளின் தரிசனம் கிடைக்காதோ என்று நினைத் தவனின் மனதை நன்கு அறிந்தவள், அவனைப் புன்னகை முகத்துடனே வழி அனுப்பி வைத்தாள்.

மயூவிடமிருந்து விடைபெற்ற வெற்றி, நேராக வந்தது செல்வமணியின் வீட்டிற்கு. அவரது பி.ஏ. அவனை அங்கே வரும்படி தெரிவித்திருந்தார்.

அந்தப் பிரமாண்டமான வீட்டின் வாயிலில் வண்டியை நிறுத்தியவன், கேட்டில் ஹாரன் ஒலி எழுப்ப, இரண்டு காவலர்கள் வந்து கதவைத் திறந்து சல்யூட் அடித்தனர். அவனைப் பற்றி ஏற்கெனவே தெரிவிக்கப் பட்டிருக்க வேண்டும்... இல்லையெனில் அவனுக்கு இப்படி ஒரு வரவேற்புக் கிடைத்திருக்காது.

அவர்களைத் தொடர்ந்து வண்டியைச் செலுத் தியவன், அந்த வீட்டின் செழுமையில் வாயடைத்துப் போனான். அந்த வழியாகச் செல்லும்போது, வெளி யிலிருந்து பார்த்திருக்கிறான்தான். வெளியிலிருந்து பார்த்தவர்கள், உள்ளிருக்கும் செழுமையைப் பார்த்தால், 'இது வீடா... இல்லை அரண்மனையா...!' என்ற ஐயம் ஏற்படுவது உசிதமே.

வண்டி செல்வதற்காக, அழகிய வேலைப்பாடு களுடன் வெள்ளைக் கற்கள் கீழே பதிக்கப்பட்டிருந்தன.

இரண்டு பக்கமும் பச்சைப் பசேலென புற்கள் வளர்ந் திருக்க, எல்லைக் கோடுகள் போல் நீண்டு வளர்ந்திருந்த செடிகளை இருவர் வெட்டிச் சீர் செய்து கொண்டிருந்தனர். அழகிய பூக்களும், மரங்களும் மெல்ல அசைந்தாடி குளிர் காற்றைப் பரப்பிக் கொண்டிருந்தன.

இதைப் பார்க்கும்போது வெற்றிக்கு நிச்சயமாக விளங்கியது, இது மயூவின் கை ஜாலம்தான் என்று. அவர்கள் வீட்டில் பத்துக்குப் பத்திருக்கும் சின்ன தோட் டத்தையே அப்படிச் சீரமைக்கும் அவள், இதைப் பேணிக் காக்க இரண்டு ஆட்கள் போடுவது தவறில்லையே!

சுற்றிலும் பார்வையிட்டவாறு, அவர்கள் வீட்டு போர்டிகோவில் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கினான். வரிசையாக பென்ஸ், ஆடி, பி.எம்.டபிள்யூ. என மூன்று கார்கள் நிற்க, அவனுக்கு மலைப்பாகிப் போனது. வீட்டிற்கு வெளியே பார்த்து அசந்தவன், உள்ளே இருக்கும் வளமையைக் கண்டால் மயங்கி விழுந்தால்கூட ஆச்சரியம் இல்லை.

வேலையாட்களுக்கு ஏதோ வேலை ஏவியபடி வெளியே வந்த ராஜி, வெற்றி அங்கிருக்கவும், அவருக்கு ஒரே நேரத்தில் சந்தோஷமும் கவலையும் எழுந்தது.

சந்தோஷம், பெண்ணைக் கட்டின மாப்பிள்ளை முதல் முறை வீடு வந்திருப்பது... கவலை, இவனைப் பார்த்தால் செல்வமணி என்ன குதி குதிப்பாரோ என்று. சந்தோஷத்தை விட கவலை அதிகமிருக்க, அவனை வேகமாக நெருங்கினார்.

ராஜியை அருகில் கண்டவன், தன் மலைப் பிலிருந்து விடுபட்டு, மெல்லியதாகச் சிரிக்க முயன்றான். அவன் ஏதோ சொல்ல வாய் எடுக்கும் முன், ராஜியே "வாங்கன்னு உங்களை வரவேற்க முடியாத நிலையில் நான் இருக்கேன். அவருக்குத் தெரிஞ்சா பெரிய பிரச்சனை..." என, அவர் சங்கடத்தைப் புரிந்து கொண்டவன், கையை உயர்த்தித் தடுத்து,

"சார்தான் என்னை வரச் சொன்னார் மேடம். ஒரு கேஸ் விஷயமாப் பேசணும்... அவரைப் பார்க்க முடியுமா?" என்றான்.

அவனின் சாரும், மேடமும் ராஜியை வதைத்தது.

"அவர் உள்ளேதான் இருக்காரு... வாங்க..." என அழைத்துச் சென்றார்.

அவனை சோபாவில் அமர வைத்தவர், அவன் வேண்டாமென மறுத்தும், ராஜி அவனுக்குக் குடிக்க ஜூஸ் கொண்டு வரும்படி ஒரு வேலையாளைப் பணித்து விட்டு, இண்டர்காமில் அழைத்தார். அவர் யாருக்கு அழைக்கிறார் என்றறிந்தவன், அமைதியாக வீட்டைச் சுற்றிப் பார்வை யிட்டான். அந்த வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருட்களும் செல்வமணியின் செல்வத்தைப் பறைசாற்றியது.

இதுவே இவர் வேறொருவராக இருந்திருந்தால், இந்தச் செல்வ வளம் வெற்றியை இம்மியளவு கூடப் பாதித்திருக்காது. இது தன் மனைவி வாழ்ந்து, வளர்ந்த வீடு என்பதால், அந்த வீட்டின் ஒவ்வொரு பொருளையும்

ரசித்தான். கூடவே அவன் மனதில், இத்தனைச் செழுமையுடன் வாழ்ந்தவள், தனக்காக அனைத்தையும் தூக்கி எறிந்து விட்டு வந்திருக்கிறாள் என அவன் மனம் கர்வம் கொண்டு, அவன் முகத்தில் ஒரு வெளிச்சத்தைப் பரப்பியது. அந்த வெளிச்சத்தை மேலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்த செல்வம் தப்பாகக் கணித்தார்.

ஜூஸ் வரவும் அவனுக்கு எடுத்துக் கொடுக்க, அதை வாங்கிக் கொண்டவன், அதைக் குடிக்கும் முன்னரே, "ஏன் ராஜி... விசிட்டர் வந்தால் எங்கே உட்கார வைக்கணும்னு உனக்குத் தெரியாதா?" என்றவர், வெற்றியின் பக்கம் திரும்பி, "என்னோட அலுவலகம் வீட்டுக்கு வெளியே இருக்கு... அங்கே வர்றீங்களா, பேசலாம்..." என அவர் கை காட்ட, இதை எல்லாம் ஏற்கெனவே எதிர்பார்த்து வந்தவன், பெரியதாக முகத்தில் எந்த மாற்றத்தையும் காட்டாமல், எடுத்த ஜூஸை அப்படியே வைத்து விட்டு, அவர் பின்னால் சென்றான். ராஜிதான் மிகவும் வருத்தமாக உணர்ந்தார்.

அலுவலக அறையில் ஒரு டேபிள் போடப்பட்டிருக்க, ஒரு புறம் செல்வமணி அமர்ந்து கொள்ள, மறுபுறம் அவனை அமரச் சொன்னவர், அவன் அமர்ந்து கால் மேல் கால் போட்டு அமர்ந்ததைப் பார்த்தும் பார்க்காத வாறு, "சொல்லுங்க... என்ன கேஸ்...?" என நேரடியாக விஷயத்திற்கு வர, அவனுக்கு வசதியாகப் போனது.

"ஓ.கே... உங்களுக்கும் விநாயகா மில்ஸ் ஓனர் ஜெயகுமாருக்கும் எப்படிப் பழக்கம்னு நான்

தெரிஞ்சுக்கலாமா...?" என அவனும் நேரடியாக வந்த விஷயத்தைச் சொன்னான்.

"காரணம்...?" அவர் ஒற்றை வார்த்தையில் கேட்க, "சொல்றேன்... பட், நீங்க நான் கேட்டதுக்குப் பதில் சொன்னால் எனக்குக் கொஞ்சம் வசதியாக இருக்கும்..." என்று சொல்ல, செல்வத்திற்கு மெல்லியதாகக் கோபம் முளைத்தது.

இதுவரை அவரிடம் யாரும் இவ்வளவு தைரியமாகப் பேசியதில்லை. தான் ஒரு அமைச்சர், இவன் சாதாரண ஒரு டி.சி... இவனை விடப் பெரிய பதவியில் இருப் பவர்களே அவரிடம் பம்முவார்கள். எப்பொழுதும் கூழைக் கும்பிடு போடும் மக்களைப் பார்த்தவர், இன்று அவர் எதிரில் இப்படிக் கம்பீரமாகப் பேசும் இவனை வெறுத் தார். ஆனாலும் அவனின் தோரணை அவனுக்குப் பதில் சொல்ல வைத்தது.

"ரெண்டு வருஷம் முன்னாடி அவர் பையனுக்கு ஹோட்டல் கட்ட நிலப் பிரச்சனையின் காரணமாக என்னை வந்து சந்தித்தார். நான்தான் தீர்த்து வைத்தேன். அப்படிப் பழக்கம்..." என்றார்.

"நிலப் பிரச்சனைன்னா... எந்த மாதிரி...?" என்றான்.

இந்தக் கேள்வியில் கொதித்துப் போனவர், "என்னய்யா...! ஏதோ கேஸ் விஷயம் என்று சொன்னாய்... நானும் வரச் சொன்னால், நான் ஒரு மந்திரி என்பதை மறந்து விட்டு, ஏதோ கிரிமினலைக் கேள்வி கேட்பது போல் கேள்வி கேட்கிறாய்...?" என எகிற,

"சார்... நான் உங்க கிட்ட சாதாரணமாகத்தான் கேள்வி கேட்கிறேன். எதுக்கு இப்போ இவ்ளோ எமோஷன்?" என டேபிளில் வைத்திருந்த தண்ணீரை எடுத்துக் கொடுக்க, "எனக்கே தண்ணியா...? எந்தக் கேஸா இருந்தாலும் லீகலா பார்த்துக்கலாம். கேஸ் ஃபைல் பண்ணு... நான் பார்த்துக்கிறேன். முதல்ல இங்கிருந்து வெளியே போ..." என அவர் வாயிலைக் காட்ட,

இருக்கையில் இருந்து எழுந்தவன், "ஓ.கே. தேங்க்ஸ் ஃபார் யுவர் கோவாபரேஷன்..." என நக்கலாகக் கையை நீட்ட, அவன் தனக்குத்தான் கை நீட்டுகிறான் என்று அவனை அவமதிப்பதாக நினைத்து அவர் ஆணியடித்தது போல் நிற்க, தண்ணீரை எடுத்துப் பருகி விட்டு, அவருக்குப் பெரியதாகப் பல்பு கொடுத்து விட்டு அங்கிருந்து சென்றான்.

அவன் செயலில் மிகவும் கொதித்துப் போனவர், அவன் அலுவலக அறையை விட்டு வெளியே செல்ல நடக்கவும், "எனக்குத் தெரியும்யா... ஏதேதோ காரணம் சொல்லி... அப்படியே என் பொண்ணு பேரு சொல்லி... என்னுடன் வந்து ஒட்டிக்கிடலாம்னு கனவு காண்றியா... அது எல்லாம் ஒருகாலும் நடக்காது..." என கர்ஜிக்க, அவரை மெல்லத் திரும்பிப் பார்த்தவன், "உங்களை மாதிரி ஆட்கள் எப்போதான் திருந்துவீங்க..." என்றான்.

"என்ன நடிக்கிற! நீ உள்ளே வரும்போதே பார்த்தேனே... இந்த வீட்டை அளவிட்ட பார்வையை.... பிச்சைக்காரனுக்குப் பழைய சோறு கிடைத்தாலே காலில்

விழுவான். பிரியாணி கிடைச்சா சொல்லவா வேண்டும்..." என நக்கலடிக்க,

"அப்போ நீங்க நிறையப் பிச்சை வாங்கின அனுபவம் இருக்கும் போல..." என்ற அவரின் அதே நக்கல் குரலில் இவன் கேட்டு ஒரே வரியில் அவரின் அகங்காரத்திற்குச் சவுக்கடி கொடுத்து விட்டு வெளியே வந்தான்.

அவனின் உதாசீனம் செல்வத்தைப் பெரியதாக அவமதித்தது. கோபத்துடன் அவன் குடித்து விட்டுச் சென்ற கண்ணாடி டம்ளரைக் கீழே போட்டு உடைத்தார்.

அந்தச் சத்தம் வெற்றியின் காதையும் சென்றடைய, என்னமோ ஏதோ எனப் பரபரத்து வெளியே காத்துக் கொண்டிருந்த ராஜியின் காதையும் சென்றடைந்தது.

செல்வத்தின் கோபத்தின் அளவைத் தெரிந்த ராஜி கையைப் பிசைந்து கொண்டு நிற்க, வெற்றி அவரைக் கண்டு அவரிடத்தில் நெருங்கினான்.

அவனிடம் ஏதோ கேட்க நினைத்து, பின் அதை எப்படிக் கேட்பதென்று அறியாமல் தவித்துக் கொண்டிருந்தவரிடம், "மயூ, நல்லா இருக்கா... அவளை நீங்க எந்தளவு பார்த்துக்கிட்டீங்களோ அதே அளவு.. ஏன் அதை விடவும் நான் நல்லாப் பார்த்துப்பேன். நீங்க ஏதும் கவலைப்படாதீங்க. என்னை நம்பலாம்..." என்றவன் சில நொடி அமைதிக்குப் பின், "அவள் இப்போ ப்ரெக்னன்டா இருக்கா..." என்றதும் அந்தத் தாயின் முகம் மின்னியது.

தான் பெற்ற மகவு இன்னொரு மகவைச் சுமந்து கொண்டிருக்கிறாள் என்ற செய்தி அவரை இன்ப வெள்ளத்தில் நீந்தச் செய்ய, "நி... நிஜமாவா... மாப்பிள்ளை..." என ஆனந்தக் கண்ணீருடன் வினவ,

"ஆமாம். நாலு நாள் முன்னதான் கன்ஃபர்ம் பண்ணினோம்..." என்று கூறி விட்டு, "நான் வர்றேன்..." என நிற்காமல் வண்டியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வந்தான்.

வரும் வழி எங்கும் அவனுக்கு இரண்டு யோசனை. ஒன்று செல்வத்தைப் பற்றி... அவன் ஜெய்குமாரைப் பற்றிக் கேட்டதும் அவர் முகத்தில் தெரிந்த கோபம் அவனைச் சிந்தனைக்குள்ளாக்கியது என்றால், ராணி போன்று எல்லா வளமும் கொண்டு வளர்ந்த மயூராவைத் தன் காதல் வதைக்கிறதோ என்ற ஐயம் மனதில் எழுந்தது.

21

"சொல்லுடா வெற்றி.. செல்வமணி கிட்ட ஏதாவது டீடெய்ல்ஸ் கிடைச்சுதா?"

"சொல்றேன்டா. நீ நேரா சந்திரசேகர் சார் வீட்டுக்கு வந்துரு. நானும் அங்கதான் இப்போ வந்துகிட்டு இருக்கேன்..." என இணைப்பைத் துண்டித்தான்.

செல்வமணியின் வீட்டிலிருந்து வெளியே வந்த வெற்றி முதலில் சந்திரசேகரின் எண்ணுக்கு அழைத்து, சந்திக்க வேண்டும் எனவும், அவர் பாஸ்கரனையும்

அழைத்துக் கொண்டு நேராக அவரது வீட்டுக்கு வரச் சொன்னார்.

இருவரும் பத்து நிமிடங்களில் சேகரின் வீட்டை அடைய அவர்களை வரவேற்று, அமர வைத்த சேகர், "சொல்லு வெற்றி... என்னாச்சு..." என்றான்.

"நாம நினைச்ச மாதிரிதான் சார்... அவர் பெருசா எதுவும் பதில் கொடுக்கல. அவர் பெயர் சொல்லி விசாரித்ததும் ரொம்பக் கோபப்பட்டார்..." என்றான் வெற்றி.

"அவர் பெயரைப் பற்றிச் சொன்னால் அவருக்குக் கோபம் வருதுன்னா... கண்டிப்பா இருவருக்குள்ளும் இன்டிமேட் ரிலேசன்ஷிப் இருக்கும் போல..." - பாஸ்கரன் தன் சந்தேகத்தை வெளியிட,

"இருக்கலாம் பாஸ்கர். ஆனால் அவர் கோபப் பட்டதற்கான காரணம் நான்... பெரிய பதவியில் இருக்கும் அவரை நான் எப்படி விசாரிக்கலாம் என்ற ஈகோ பிளஸ் என்னோட கல்யாணத்தில் விளைந்த கோபம்..." என பாஸ்கரனுக்குப் பதில் உரைத்துவிட்டு, "பட் சார்... செல்வமணிக்கு ஜெய்குமாரை இரண்டு வருடமாகத் தெரியும் என்கிறார். அதுவும் ஒரு நிலப் பிரச்சனைதான்..." என சந்திரசேகரிடம் முடித்தான்.

"ஓஹோ... அந்த மர்டர் நடந்தது மூன்றரை வருடங்களுக்கு முன்னால்தானே. அநேகமாக இந்த மர்டருக்கும் செல்வத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இருக்க வாய்ப்பில்லை. ஜெய்குமார் அவரை ஒரு மந்திரியா

தனக்கு நிலப் பிரச்சனையில் உதவும்படி அணுகியிருப்பார் என்பது என் அனுமானம்.." என்றவர் தொடர்ந்து,

"உங்களோட விசாரணை ஒரு பக்கம் மட்டும் இல்லாமல் எல்லா வகையிலேயும் விசாரிச்சுப் பாருங்க. நமக்கு மட்டும் வேலிடா ஒரு எவிடென்ஸ் கிடைச்சா இதை நாம பப்ளிக்காவே ப்ரோசீட் பண்ணலாம்..." என்று இருவருக்கும் பொதுவாய் உரைத்துவிட்டு, பாஸ்கரனிடம், "அந்த வேலு ஏதாவது சொன்னானா பாஸ்கர்..." என்றான்.

"இல்லை சார்... இவன் வெறும் கையாள்தான். அவர்கள் மில்லில் வேலை பார்ப்பவன். அவனுக்கு வெற்றியின் வீட்டை நோட்டம் விட வேண்டுமென்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவனுக்கு ஏன், எதற்கு என்ற காரணம் எல்லாம் சொல்லியிருக்க மாட்டாங்கன்னு நினைக்கிறேன். பிகாஸ் நானும் அவனைப் பல வழி களில் விசாரித்து விட்டேன். அவனுக்கு ஒன்றும் தெரிய வில்லை..." என்றான்.

"ஓ.கே. இந்தக் கேஸ் முடியும்வரை அவனைப் பாதுகாப்பான இடத்தில் வெச்சுக்கோங்க. இப்போதைக்கு அவன் மட்டும்தான் நமக்குக் கிடைத்த ஒரே க்ளூ..." என்றான்.

"ஷூயர் சார். நான் கவனமாப் பார்த்துக்கிறேன்..." என பாஸ்கரன் முடிக்க,

"ஓ.கே. வேற ஏதாவது சொல்லணுமா?" என்ற சந்திரசேகரிடம்,

"நத்திங் சார். வேற தகவல் ஏதும் கிடைச்சா கண்டிப்பா உங்களைக் கான்டாக்ட் பண்றேன். நான் இப்போ கோர்ட் போகணும். நான் கிளம்பட்டுமா?" என பாஸ்கர் அனுமதி கேட்டு அவன் கிளம்பி விட்டான்.

இப்பொழுது வெற்றியும் சேகரும் மட்டுமே இருக்க, சில நிமிடங்கள் மௌனத்தில் கழிந்தது.

"எனக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கு வெற்றி. எங்கே நீயும் என்னைப் போலவே தனி மரமாக இருந்து விடுவாயோ எனப் பயந்திருந்தேன். இப்போது உனக்கும் மனைவி, குழந்தையென வாழ்வதைப் பார்க்கும் போது மனசுக்கு நிம்மதியா இருக்கு..." என மனதார அவர் சந்தோஷத்தை வெளிப்படுத்தினார்.

"ம்ம்... எப்படி எப்படியோ கஷ்டப்பட்டு அவள் என் கையைப் பிடிச்சுட்டா சார். எனக்கென்று ஒரு வாழ்க் கையைக் கொடுத்து, என்னை ரொம்பவும் சந்தோஷமா வச்சுருக்கா..." என நெகிழ்ச்சியாகக் கூறியவனைப் பார்த்து பெரிதாகச் சிரித்தவர்,

"ஆமாம் வெற்றி. என்னையவே நிறைய தில்லு முல்லு செய்ய வைத்தாள் தெரியுமா?" என்றார்.

அவன் புரியாத பார்வையைப் பார்த்தான்.

"உன் முழியைப் பார்த்தால் உனக்கு அவள் சொல்லவில்லை என்று நினைக்கிறேன்..." என்றார்.

"எதைப் பற்றி சார் சொல்றீங்க..." என்ற வெற்றியைக் கண்டு,

"ம்ம்... உன் பொண்டாட்டி பண்ணின திருகு தாளத்தைப் பற்றித்தான்..." என்றவர், இவர்கள் திருமணம் நடந்த அந்த நாளை நினைத்துச் சிரித்தார்.

அன்று ஒரு முடிவுடன் சந்திரசேகரைச் சந்திக்க வந்த மயூரா அவரின் அறைக்கு அனுமதி வாங்கி விட்டு உள்ளே சென்றாள்.

அவளை இதற்கு முன் பார்த்ததில்லை என்பதால் அவள் யாரென கேட்க,

அவளோ தான் வெற்றியின் காதலி என அறிமுகம் செய்து கொண்டாள்.

வெற்றியின் காதலி என்ற வாக்கியத்தில் அதிர்ந்த அவர், "என்னது? அவனுக்குக் காதலியா... பொய் சொல்லாதம்மா..." என அவனைப் பற்றி முழுதாக அறிந்த அவர் சொல்ல...

"ஹலோ சார்... என்ன... அவருக்குக் காதல் வரக் கூடாதா... இல்லை, காதலிதான் இருக்கக் கூடாதா?" எனக் காட்டமாகக் கேட்க, அவள் தோரணையில் வியந்தவர்,

"அது சரிதான். அதுக்கு இப்போ நான் என்னம்மா பண்ணணும்?" என அவர் பவ்யமாகக் கேட்டு வைக்க,

"ஹ்ம்ம்... இப்படி ஒரு பொறுப்பான மனிதரா கேட்கணும். எனக்கு உங்களைப் பற்றியும் தெரியும். உங்க அசிஸ்டென்ட் அந்த அயன் மேனைப் பற்றியும் தெரியும்..." என்றாள்.

"யாரும்மா அந்த அயன் மேன்?" அந்த நேரத்தில் அவர் சந்தேகத்தை வெளியிட,

"ஹையோ... உங்களுக்கெல்லாம் யார் சார் டி.எஸ்.பி. பதவி கொடுத்தது..." எனத் தலையில் அடித்துக் கொள்ள,

"ஏனம்மா... உனக்கு இப்படி ஒரு சந்தேகம்?" என்றார்.

"ம்ம்... வெற்றிதான் சார் அந்த அயன் மேன். இதுகூடத் தெரியாம... சரி விடுங்க. இதைப் பற்றி நாம் அப்புறமா டிஸ்கஸ் பண்ணிக்கலாம். இப்போ மேட்டருக்கு வருவோம்..." என்றாள்.

"வரேன்ம்மா... நீ விஷயத்தைச் சொல்லு!" என்றார்.

அவள் திட்டத்தை விளக்கத் துவங்கினாள்.

"ம்ம்... அதாவது நான் வெற்றியை ரொம்ப விரும்பறேன். அவரும் என்னை விரும்பறார். ஆனால் இதுவரைக்கும் நாங்க சொன்னதில்லை. பட், அதுக்குள்ள எங்க அப்பா செல்வமணி எனக்கு வேறொரு பையனோட நிச்சயம் பண்ணிட்டார். இங்க அப்பா இப்படிப் பண்ணினா... அந்த அயன் மேன் வந்து எங்கப்பாகிட்ட பேசுவாருன்னு நினைக்கிறீங்க..." என அவரிடம் கேட்க,

"செல்வமணி மினிஸ்டர்தானேமா..." என்றதற்கு, அவள் தலையாட்ட...

"கண்டிப்பா மாட்டான்... முதலில் அவனுக்கு அரசியல்வாதிகளைக் கண்டாலே பிடிக்காது. இதில் எப்படி... நோ சான்ஸ்!" என்றார்.

"அது எனக்கும் தெரியும். அதான் நான் ஒரு பிளான் போட்டு வைத்திருக்கிறேன்..." என்றாள்.

"என்ன பிளான்?" என்றவரிடத்தில் தான் யோசித்து வந்ததை விளக்கினாள்.

"எல்லாம் ஓ.கே.தான். பட் அவன் ரொம்பப் பாவம்மா. இதனால அவன் கேரியருக்கே ஒரு பெரிய பிளாக் மார்க் வரும்மா. இது எல்லாம் வேண்டாம்..."

இத்தனை நேரம் வெற்றிக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கப் போகும் என்ற நினைப்பில் பேச... இவள் சொன்ன பிளான் அவன் வேலையைக் கெடுக்கும்படி இருக்க, அவர் அதை ஒத்துக் கொள்ளவே இல்லை, வெற்றியின் நலம் விரும்பியான சந்திரசேகர்.

"அப்போ சரி... இதை விட உங்களுக்கு வேற ஏதாவது பெட்டர் ஐடியா இருக்கா?" என்றாள்.

அவர் "இல்லை!" எனவும்,

"அப்போ இதுக்கு ஓ.கே. சொல்லுங்க சார்..." என்று கூற,

அவளைக் கூர்மையாகப் பார்த்த அவர், "நீ ஒண்ணும் விளையாடலையே மயூரா... இது உன்னோட வாழ்க்கை மட்டுமில்லை. அவனின் வாழ்க்கையும் இருக்கு. நீ ஏதாவது விளையாட்டுக்குச் செய்யப் போய் வேற விளைவை ஏற்படுத்திடப் போகுது. உங்க அப்பாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா என்ன செய்வாரென்றே தெரியாது..." என அவள் செய்யப் போகும் செயலினால் ஏற்படும் பாதகங்களை விளக்க,

அவரை நேர்கொண்ட பார்வையுடன் பார்த்தவள், "நான் ஒண்ணும் சின்னப் பிள்ளையும் இல்லை. அவரின் மேல் கொண்ட காதல் விளையாட்டும் இல்லை. உங்களால் முடிந்தால் உதவுங்க. இல்லன்னா நான் வேற வழியில் பார்த்துக்கிறேன்..." என்று முடிக்க,

அவள் குரலில் தெரிந்த உதவி அவரைச் சம்மதிக்க வைத்தது.

"அதன்பின் நடந்த விஷயங்கள்தான் உனக்குத் தெரியுமே..." என அன்று அவர்களுக்குள் நடந்த உரையாடல்களை சேகர் சொல்லி முடிக்க,

வெற்றியின் உள் மனது, 'அட... கூட்டுக் களவாணிகளா...' என வியக்க,

அதற்குள் சந்திரசேகர், "எங்களுக்குள் நடந்த அந்த அரைமணி நேர உரையாடலில் அவள் சில சமயம் குழந்தை போல் பேசினாள். சில சமயம் குமரி போல் பேசினாள்.

"ஆனால் பேசிய அத்தனை வார்த்தைகளிலும் ஒரு தெளிவும், ஒரு தீர்க்கமும், உன் மேல் அவள் கொண்ட காதலின் அளவும் தெரிந்தது வெற்றி. உனக்காக வந்திருக்கிறாள். அவளை நீ நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும்..." என முடிக்க, அவனின் முகம் பிரகாசமுற்றது.

"கண்டிப்பா சார்... அவள்தானே என் உயிர். அவளுக்கடுத்து எங்களுக்குப் பிறக்கப் போகும் எங்கள் குழந்தை..." என்றான்.

"ம்ம்... அவளை ஒரு நாள் இங்கே அழைத்துக் கொண்டு வா வெற்றி... உங்கள் திருமணத்தன்று பார்த்தது..." என்றார்.

"அழைத்து வர்றேன் சார்... இப்போ அவளுக்குக் கொஞ்சம் உடம்பு முடியலை. இந்த வார இறுதியில் அழைத்து வர்றேன். சரி, நான் இப்போ கிளம்பட்டுமா..." என விடை பெற, அவர் அவனுக்கு வாழ்த்து சொல்லி அனுப்பி வைத்தார்.

அவரிடம் பேசியபின் வெற்றிக்கு மயூவைப் பார்க்க வேண்டும் போல் தோன்ற, வீட்டிற்குக் கிளம்பிச் சென்றான்.

வீட்டுக்கு வந்தவன், மயூராவைத் தேட அவள் சமையலறையில் ஏதோ உருட்டிக் கொண்டிருக்க, அவள் பின்னழகை ரசித்தவாறு மெல்ல அடி எடுத்து வைத்து, அவளை நெருங்கிப் பின்னால் அணைக்க, 'ஆஹ்ஹா...' என்ற அலறல் ஒலி கேட்க,

"ஹே... ஏன்டி கத்துற... நான்தான். ஏதோ புதுசா இன்னிக்கி இப்படிக் கத்துற?" என அவள் கழுத்து வளைவில் இதழ் பொருத்த...

"ஐயோ மச்சான்... விடுங்க. விடுங்கன்னா..." என அவனைத் தள்ளி நிறுத்த முயல,

"மயூக்கா... நான் கடைக்குப் போயிட்டு வர்றேன்..." என்ற இன்னொரு பெண்ணின் குரல் வெற்றியின் பின்னால் ஒலிக்க... அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அங்கே ஒரு இளம்பெண் சாதாரண சுடிதாரில் வாயை மூடிச் சிரித்துக் கொண்டே வெளியே ஓட, அவன் குழப்பமாக மயூராவைப் பார்க்க... "அவள்தான் நீங்க வேலைக்குச் சொல்லி வைத்திருந்த பெண் மச்சான்..." என்றாள்.

"இருக்கட்டும்டி. நான் உன்னைத்தானே கட்டிப் பிடித்தேன். அதுக்கேன் அந்தப் பொண்ணு இப்படி அலறுச்சு... நான் கூட ஏதோ மாத்திக் கட்டிப் பிடிச்சுட் டேனோன்னு நினைத்தேன்..." என,

"சரியான லூசு மச்சான் நீங்க... அவளே சின்னப் பொண்ணு. அதுவுமில்லாம அவள் இப்போதானே உங்களைப் பார்க்கிறாள். அதான் பயந்துட்டா..."

அவனுக்குப் பதில் கூறியவாறு அடுப்பில் எதையோ வதக்கிக் கொண்டிருந்தாள்.

"என்னைப் பார்த்தால் பயப்படும்படியா இருக்கு... இதை ஏன் நீ பண்ணிட்டு இருக்க... உனக்குத்தான் இந்த வாசம் ஒத்துக்காதில்ல..." என மனைவியைக் கடிந்தவன், பின் ஞாபகம் வந்தவனாக, "ஹே... ஒரு நிமிஷம். அடுப்பை அணைச்சுட்டு வா. ஒரு பஞ்சாயத்து இருக்கு..." என அவள் கையைப் பிடித்து டைனிங் டேபிளில் அமர வைத்தான்.

"ஹய்யோ மச்சான்... என்ன வந்ததும் வராததுமா இப்படி அலம்பல் பண்றீங்க..." என்றவாறு அவனுடன் அமர்ந்து கொண்டு, "ம்ம்... என்ன பஞ்சாயத்து?" என விசாரிக்க,

"எனக்கு என்னெல்லாம் பட்டப் பேர் வெச் சருக்க... எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்... சொல்லு... சொல்லு..." என,

"என்ன திடீர்னு... எனக்கு எப்போ எப்போ தோணுதோ அப்போ அப்போ ஒவ்வொரு பெயர்..." எனக் கெத்தாகச் சொல்ல,

"அதான் எனக்கு அன்னிக்கே தெரிஞ்சுதே. மீராகிட்ட கஞ்சி சட்டை... சந்திரசேகர் சார்கிட்ட அயன் மேன்... வேற என்ன எல்லாம்..." என அவன் கோபம் போல் கேட்டு வைக்க,

"அச்சோ... என் கருத்த மச்சானுக்குக் கோபத்தில் முகம் சிவந்துடுச்சே..." என அவன் மூக்கைப் பிடித்தாட்ட...

"ஓஹோ... இப்போ கருத்த மச்சானா... ஏன்டி ஊரு ஃபுல்லா என் மானத்தைக் கூவிக் கூவி விக்குற..." எனப் பாவமாகக் கேட்க,

"இனிமேல் கூவிக் கூவி விக்க மாட்டேன் மச்சா... ஃப்ரீயா விளம்பரம் பண்ணிடறேன். கவலைப்படாதீங்க..." எனச் சீரியசாகச் சொல்ல,

"உன்னை..." என அவளை அருகில் இழுத்து அவள் கன்னத்தை அவளுக்கு நன்றாக வலிக்கும்படி கடித்து வைத்தான்.

"ஐயோ வலிக்குது. விடுடா..." என அவனைத் தள்ளி விட்டவள்... கன்னத்தைத் தடவிப் பார்க்க... அவன் பல் தடம் நன்றாகப் பதிந்து விட்டது.

வலியில் அவள் கண்கள் லேசாகக் கலங்கியிருக்க... இவன் இங்கு துடித்து விட்டான்.

"அம்மு... ரொம்ப வலிக்குதா... அயாம் சாரிடா. நான் சும்மா விளையாட்டுக்கு... அயாம் சாரிடா குட்டிம்மா..." என அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்து, நூறு சாரிகளைச் சொல்லி விட்டான்.

"விடுங்கப்பா... எதுக்கு இவ்ளோ சாரி...! நீங்க விளையாட்டுக்குத்தானே பண்ணீங்கன்னு எனக்கும் தெரியும். அதுக்கு ஏன் இவ்ளோ பதட்டம்... நான் எத்தனை முறை சொல்லியிருக்கேன்..." என அவனைக் கண்டிக்க,

சில நொடிகள் அமைதியாக இருந்தவன், "என்னால என்னைக் கண்ட்ரோல் பண்ண முடியலை அம்மு... எனக்கு நீதான்டா எல்லாமே. இன்னிக்குக் கூட சேகர் சார் சொன்னாங்க. நீங்க ரெண்டு பேரும் போட்ட பிளான் பற்றி... உன்னை அரை மணி நேரம் பார்த்த அவரே உன்னுடைய அருமையைத் தெரிந்து கொண்டார். நீ எப்படி எல்லாம் வாழ்ந்தவ..." என இன்று அவன் அவள் வீட்டைக் கண்டு, ஏதோ சொல்ல வாயைத் திறக்க, தன் தவறை உணர்ந்து கொண்டு, "எனக்கு நீ... எனக்கு நீ என் கடைசி மூச்சுவரை வேணும் அம்மு..." என அவள் கையைப் பற்றித் தன் தோள்களில் சாய்த்துக் கொண்டான்.

அவனின் அன்பைக் கண்டு நெகிழ்ந்தவள், அவன் சொல்ல வந்ததை நல்ல காலமாக வேறு மாதிரி சிந்திக்கவில்லை.

சில நொடிகள் அப்படியே இருக்க... அந்த வேலைக்காரப் பெண் வாசல் கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தாள். அதற்கு மேல் அவனால் ஏதும் பேச முடியாமல் போக,

"மச்சான்... போய் ரெஃப்ரெஷ் பண்ணிட்டு வாங்க. சாப்பிடலாம்..." என அவனை அறைக்கு அனுப்பி வைத்தாள்.

இருவரும் சாப்பிட அமர, அந்தப் பெண் இருவருக்கும் உணவு பரிமாறினாள்.

அப்பொழுதுதான் அவளை நன்றாகப் பார்த்தான் அவன். வயது ஒரு 18 இருக்கும். மிகவும் ஏழ்மையான தோற்றத்தைக் கண்டு, தான் இன்னமும் அவளைப் பற்றி விசாரிக்காமல் இருப்பதை நினைத்து, "உன் பேர் என்னம்மா?" என்றான்.

"வள்ளி சார்!" எனப் புன்னகைத்து சொல்லி விட்டுச் சமையலறைக்குள் சென்று விட்டாள்.

"அவங்க குடும்பம், சம்பளம் பற்றி எல்லாம் பேசிட்டியா அம்மு... உனக்கு ஓ.கே.வா?" என மயூவிடம் விசாரிக்க...

"ஆச்சு மச்சா... அவளுக்கு அப்பா அம்மா யாருமில்லை. தாத்தா மட்டும் தான். படிப்பு அஞ்சாம் கிளாஸ்தானாம். நந்துவோட அம்மாதான் இவளைப் பற்றிச் சொல்லி சேர்த்து விட்டாங்க. சின்னப் பொண்ணா இருந்தா... பார்க்க ரொம்ப அப்பாவியாகவும் தெரிந்தாள்.

அதான் உடனே வேலைக்குச் சேரச் சொல்லிட்டேன். உங்களுக்கு ஓ.கே.வா?" என்றாள்.

"எனக்கென்னடா? உனக்கு ஓ.கே.ன்னா எனக்கும் ஓ.கே.தான்..." என அவன் சாப்பாட்டில் கவனம் செலுத்தினான்.

"ம்ம்... மயூ... சேகர் சார் உன்னை அழைத்து வரச் சொன்னார். இந்த வாரம் கூட்டி வர்றேன் எனச் சொல்லியிருக்கேன். உனக்கு ஓ.கேன்னா போகலாம்..." என்றான்.

"ஓஹோ. கண்டிப்பா மச்சான்... பாவம் மனுஷன். அன்னிக்கி நான் அவரை ரொம்பவும் மிரட்டிட்டேன். பயந்துட்டார் போல..." என்றாள்.

"உண்மைதான்டி... நீதான் பேட்டை ரௌடியாச்சே..." எனச் சிரிப்பும் கலகலப்புமாக உணவை உண்டனர்.

22

"சொல்லுடா அம்மு... இப்போதானே வீட்ல இருந்து வந்தேன். வள்ளி வந்துட்டாளா?"

"ம்ம்... வந்திட்டா. இன்னிக்கு செக்-அப் போகணும் மச்சான். சொல்ல மறந்துட்டேன். நீங்க எப்போ ஃப்ரீ..." என்ற மயூராவின் குரல் மிகவும் சோர்வாக ஒலித்தது.

அவள் இப்பொழுது அவளது மூன்றாம் மாதம் இறுதியில் இருந்தாள். வழக்கமாகக் கர்ப்பகாலத்தில் வரும்

உடல் உபாதைகள் அவளுக்குச் சற்று அதிகமாக இருந்தது.

பாலை விரும்பிக் குடிக்கும் அவள் இப்பொழுது அந்த வாசத்தைக் கண்டாலே வாயை மூடிக் கொண்டு குளியலறைக்கு ஓடினாள். எது உண்டாலும் அவள் உண்டு முடித்த அடுத்த நொடி வெளியே வந்துவிடும். வாந்தி எடுத்து விட்டால் அடுத்து அவளுக்குத் தலை சுற்றல் ஏற்பட்டு அப்படியே சரிவாள்.

அவளின் அவஸ்தை வெற்றிக்குப் புரிந்துதான் இருந்தது. முடிந்த மட்டும் டாக்டரின் அறிவுறுத்தலாலும், அவன் நெட்டில் படித்துத் தெரிந்து கொண்டதை வைத்து அவளுக்கு உதவுவான். என்னதான் மேல் வேலைக்கு வள்ளியை வைத்திருந்தாலும், இவன் அலுவலகம் சென்று விட்டு வந்ததும் அவன் சோர்வை மறந்து விட்டு அவளுக்குக் குடிக்கப் பழச்சாறு தயாரித்துக் கொடுத்தால் தான் அவனுக்குத் திருப்தி உண்டாகும்.

உண்மையாகச் சொல்ல வேண்டுமென்றால் அவளைத் தன் கண்மணிக்குள் வைத்துக் காத்தான்.

அவள் சோர்வைக் கண்டு இவன் வருந்தியவாறே அவள் கேள்விக்குப் பதிலளித்தான். "இன்னிக்கு முடியாது அம்மு. நான் சிட்டிக்கு வெளியே இருக்கேன். ஒரு கேஸ் இன்வெஸ்டிகேஷன் இருக்கு."

"ஓஹோ... அப்படியா. அப்போ நாளைக்கி நீங்க ஃப்ரீ ஆனதும் போய்க்கிடலாம் மச்சான்... சரி நான் வைக்கிறேன்!" என மயூரா போனை அணைக்கப் போக,

"ஹே... வேண்டாம். வேண்டாம். செக்அப் எல்லாம் கரெக்டா பண்ணிடணும். வாந்தி வேற அதிகம் வருதில்லையா... அதை டாக்டர் கிட்ட சொல்லணும். ம்ம்..." என யோசித்தவன், "சரி. ஒரு நிமிஷம் இரு. நான் திரும்பக் கால் பண்றேன்..." என அவளிடம் சொல்லிப் போனை அணைத்தவன் அர்ஜுனுக்கு அழைத்தான்.

"சொல்லுங்க அண்ணா. எப்படி இருக்கீங்க? மயூ எப்படி இருக்கா?" என அர்ஜுனின் கேள்விக்கு,

"நல்லா இருக்கேன் அர்ஜுன். மயூவுக்கு இன்று செக்அப் போகணும்ப்பா. என்னால் இன்று முடியாது. ஒரு கேஸ் விஷயமா சிட்டி அவுட்டர்ல இருக்கேன். நீ ஃப்ரீயா இருந்தா மயூவை அழைச்சுட்டுப் போயிட்டு வர்றியா?" என்றான்.

"கண்டிப்பா அண்ணா... இது என்ன கேள்வி? நான் வீட்ல சும்மாதான் இருக்கேன். அவளை ரெடியா இருக்கச் சொல்லுங்க... நானும் அவளைப் பார்த்து ரொம்ப நாளாச்சு..." என்றதும், வெற்றி மேலும் ஏதோ சொல்லி விட்டு, மீண்டும் மயூராவிற்கு அழைத்தான்.

"சொல்லுங்கப்பா..." என்றதும், "ரெடியா இருடா... உன்னை அழைத்துப் போக, அர்ஜுன் வருவான்," என்றதும்,

"ஏன் மச்சான் அவனை டிஸ்டர்ப் பண்றீங்க...? டாக்டர் உங்களை வேற கேட்பாங்களே!" என நண்பனுக் காகக் கேட்க, "நீ இதை அவன் முன்னால் சொன்னால்

உன் தலையில் குட்டுவான். நான் டாக்டருக்குப் போன் பண்ணிக் கேட்கிறேன். நீ இப்போ ஒழுங்கா ரெடியா இரு," என்று விட்டு, போனை அணைக்கவும், அவர்கள் வர வேண்டிய இடமும் வந்து சேர்ந்தது.

வண்டியை விட்டு இறங்கிய வெற்றியும், பாஸ்கரனும் அங்கே கூடியிருந்த மக்கள் கூட்டத்தை ஒதுக்கியவாறு உள்ளே சென்றனர். அங்கே மேலும் சில போலீஸ் அதிகாரிகளும் கூடியிருக்க, இருவர் கடப்பாரை யைக் கொண்டு குழி தோண்டிக் கொண்டிருந்தனர்.

வெற்றி அங்கிருந்த இன்ஸ்பெக்டரிடம் விசாரித்துக் கொண்டிருந்த வேளையில், நாசியை அருவருக்க வைக்கும் நாற்றம் அடிக்க, அனைவரும் மூக்கை மூடிக் கொண்டு, அந்தக் குழியைத் தேடிப் போக, அங்கே இரு பிணங்கள் பாதி அழுகிய நிலையில் இருந்தன.

அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியாக நோக்க, வெற்றியும், பாஸ்கரனும் அர்த்தப் பார்வையுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பின் அவன் அங்கிருந்த இன்ஸ்பெக்டரிடம், ஆம்புலன்ஸுக்குப் போன் செய்யுமாறு பணித்து விட்டு, அந்தப் பிணங்களைச் சுற்றி ஏதாவது தடயம் இருக்கிறதா என ஆராய்ச்சி செய்தான்.

மயூராவின் வீட்டின் முன் காரை நிறுத்திய அர்ஜுன், சாவியைச் சுழற்றியவாறு உள்ளே செல்ல, அவனைத் தடுத்தவாறு கதவை அடைத்து நின்ற வள்ளி, "யாரு சார் நீங்க...?" என்றாள் விசாரிக்கும் தொனியில்.

மயூராவின் வீட்டில் யாரோ புதுப் பெண்ணைப் பார்த்த அர்ஜுன், அவளின் சாயம் போன சுடிதாரும், கைகளிலும், காதுகளிலும் பிளாஸ்டிக் ஆபரணங்களும், கழுத்தில் வெள்ளை முத்துப் பாசியும் அணிந்திருந்த அவளைக் குழப்பமான பார்வையுடன் அளவிட்டான். இத்தனை ஏழ்மையான தோற்றத்திலும் அவள் அழகாகத் தான் இருந்தாள். அதனால் அவளைப் பார்த்தவுடன் அவனுக்கு விளங்கி விட்டது, அது அவர்கள் வீட்டு வேலைக்காரப் பெண் என்று. வேலைக்காரப் பெண் என்று உறுதியானதும், அவன் முகத்தில் ஒரு ஒதுக்கம் தெரிய, அவளை ஒதுக்கி விட்டு, "தள்ளி நில்லு..." என்ற வாறு வீட்டின் உள்ளே நுழைந்தான்.

"ஹலோ சார்... நான்தான் கேட்டுக்கிட்டு இருக்கேன் இல்ல... நீங்க பாட்டுக்குப் பதில் சொல்லாமப் போறீங்க...?" அவள் கேள்வியில் எரிச்சல் தெரியவும், "மயூ..." என்று ஒரு கத்தல் விட, அறையின் உள்ளே இருந்த மயூரா பதறியடித்துக் கொண்டு வெளியே வந்து, "ஹே... ஏன்டா எருமை... இப்படிக் காது கிழியும் அளவு கத்துகிறாய்...? மெதுவாய்க் கூப்பிட வேண்டியதுதானே!" என அவள் கத்த, இவனோ எதிரில் இருந்தவளை முறைத்துக் கொண்டு நின்றான்.

இருவரையும் பார்த்த மயூரா, "வள்ளி, என்னாச்சு? இங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்க...? துணி துவைக் கலையா?" என்றான்.

"துவைச்சுக்கிட்டுத்தான் இருந்தேன் அக்கா... மேலே தண்ணி தீர்ந்துடுச்சுப் போல... அதான் மோட்டார் போடலாம்னு வந்தேன். அப்போ இவர் பாட்டுக்கு உள்ளே வந்தாரா... யாரோ எவரோன்னு விசாரிச்சா... பதில் சொல்லாம முறைச்சுக்கிட்டே போறார்..." என அவனை முறைத்தவாறே பதில் சொல்ல,

"அவன் என் பிரெண்ட்தான். நீ போய் வேலையைப் பாரு..." என்று விட்டு, இன்னமும் அவளை முறைத்துக் கொண்டிருந்த அர்ஜுனை, "உட்காருடா அர்ஜு... ஏதாவது சாப்பிடுறியா?" என்றாள்.

"அது எல்லாம் ஒண்ணும் வேண்டாம். நீ ஏன் ஒரு வேலைக்காரிக்கு இப்படி நின்னு பதில் சொல்ற...?" எனக் காட்டமாகக் கேட்க,

"அர்ஜுன்... நீ இன்னமும் மாறவே இல்லையா! ஏன்டா இப்படி இருக்க...? வேலைக்காரங்களும் மனுஷங்க தான்... யாரோ ஒருவர் செய்த தப்புக்காக அனைவரையும் தவறாக நினைக்கக் கூடாது. முதல்ல உன் எண்ணத்தை மாற்று. உன் கிட்டே இது ஒண்ணுதான்டா கெட்ட பழக்கம். சரி, இரு... நான் ரிப்போர்ட்ஸ் எடுத்துட்டு வர்றேன்..." என்றவாறு உள்ளே சென்று விட்டாள்.

இவர்கள் உரையாடல் வெளியே நின்றிருந்த வள்ளிக்குத் தெளிவாகக் கேட்டது. அர்ஜுனின் பணக்காரத் தோற்றம் அவளுக்கு நன்கு புரிந்தது.

ஆனாலும் அவனின் அலட்சியப் பார்வை, அவளுக்கு ஏதோ மனதின் ஓரத்தில் வலியைக் கொடுக்க, அவன் ஒதுக்கத்தை ஒதுக்கி விட்டுத் தன் நிலையை எண்ணிக் கொண்டு வேலையைத் தொடர்ந்தாள்.

அவனைப் போன்று பணக்கார வர்க்கம், இன்னமும் வேலைக்காரர்களை சக மனிதர்களாக நடத்த முனைவ தில்லை என்ற நிதர்சனமும் விளங்கியது.

அர்ஜுனின் சிறுவயதில், ஒரு வேலைக்காரப் பெண் அவன் அன்னையின் நகையைத் திருடி விட, அன்றில் இருந்து அர்ஜுனுக்கு வேலைக்காரர்கள் என்றாலே ஒரு ஒதுக்கமும், வெறுப்பும் வந்து விட்டது. அனைவரும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள் என்ற எண்ணம் அவன் மனதில் ஆழப் பதிந்தது. அதை அவன் மாற்றவும் முயற்சி செய்ததில்லை. மயூராதான் சந்தர்ப்பம் கிடைக்கும் போது எல்லாம் அவனின் எண்ணத்தைப் பற்றித் தப்பென எடுத்துச் சொல்லுவாளே ஒழிய, அதை ஆழமாக அவனிடம் பதிவு செய்ய மாட்டாள்.

மயூரா ரெடியாகி வரவும், அவளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான். மோட்டார் போட்டு விட்டு உள்ளே நுழைந்த வள்ளியிடம், "நீ துணி துவைச்சுக் காயப் போட்டுட்டு வீட்டைத் துடைச்சு வை வள்ளி... நான் ஹாஸ்பிட்டல் போயிட்டு வந்துடறேன்..." என்றவாறு அர்ஜுனுடன் நடக்க, அர்ஜுனோ, "லாக்கர் எல்லாம் நல்லாப் பூட்டிட்டியா மயூ... பார்த்து இருந்துக்கோ, யாரையும் நம்ப முடியாது..." என வள்ளியின் காது படவே சொல்லி விட்டுச் சென்றான்.

வள்ளிக்கு வந்த கோபத்தில், அவன் சட்டையைப் பிடித்து நாலு அறை விட வேண்டுமென்று தோன்றி னாலும், அதை அவளால் செய்ய முடியாது எனத் தன் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள்.

அர்ஜுனும் மயூராவும் மருத்துவ மனை வரவும், வள்ளி உள்ளே சோதனை முடிந்து வந்ததும் அர்ஜுன் விசாரிக்க, "எல்லாம் நார்மலா இருக்குடா... ரொம்ப வாந்தி வருதுன்னு சொன்னேன்... டேப்லெட்டும், டானிக்கும் மாற்றிக் கொடுத்திருக்காங்க..." என்றாள்.

"அப்படியா...! சரி, கொடு. நான் மெடிக்கல்ல வாங்கிட்டு வர்றேன். நீ இங்கே உட்கார்ந்திரு..." என அர்ஜுன் சென்று விட, மயூராவிற்கு வெற்றியிடம் பேச வேண்டுமென்று தோன்ற, அவனுக்கு அழைத்தாள். அவன் போனில் பிஸி டோன் வர, 'ஏதும் வேலையாக இருப்பான்... பிறகு அழைக்கலாம்!' என்று அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் தன்னை நோக்கி யாரோ வருவது தெரிய, தலையை மேலே உயர்த்திப் பார்க்க, அங்கே ராஜி கண்ணீர் மல்கத் தன் மகளையே பார்த்து நின்று கொண்டிருந்தார்.

தன் அன்னையை வெகு நாட்களுக்குப் பின் சந்தித்த சந்தோஷத்தில், "அம்மா..." என்றவாறு, அமர்ந் திருந்த இடத்திலிருந்து வெடுக்கென எழுந்தவள் தோளைப் பற்றி, "மெதுவாடா... மெதுவா எழுந்திரு..." என்றாள்.

சில நேர அமைதிக்குப் பின் ராஜி, "எப்படி இருக்க மயூ..." என, பெற்றவளின் கேள்விக்கு, "நல்லா இருக் கேன்... நீ... நீங்க..." என்றாள். "ம்... ம்... இருக்கேன்..." என்ற தாயும் மகளும் அதற்கு மேல் என்ன பேசுவது, எப்படிப் பேசுவதென்று மௌனமாக நின்றிருந்தனர்.

அவர்கள் மௌனத்தைக் கலைக்கவென அங்கே வந்த அர்ஜுன், "என்ன, ஒண்ணும் பேசாம ரெண்டு பேரும் இப்படி நிக்கிறீங்க...! சரி. இங்கே பேச வேண்டாம்... வெளியே போகலாம் வாங்க..." என இருவரையும் அழைத்துக் கொண்டு மருத்துவ மனையை விட்டு வெளியே அழைத்து வந்தான்.

"சரி. எங்கே போகலாம்?" என அவன் காரை எடுக்க, "நானும் காரில்தான் வந்திருக்கேன் அர்ஜுன்... இரு, டிரைவரையும் நம் பின்னால் வரச் சொல்லிட்டு வர்றேன்..." எனத் தகவல் சொல்லி விட்டு வந்த ராஜி, அர்ஜுனின் காரில் ஏறிக் கொள்ள, அவரின் பின்னாலே மயூராவும் ஏறிக் கொண்டாள்.

"சரி. இப்போவாவது சொல்லுங்க... எங்கே போகலாம்?" என்ற அர்ஜுனின் கேள்விக்கு, "கோயிலுக்குப் போ அர்ஜு..." என்றதும், "ஏன் மயூ... என்னை உங்க வீட்டுக்கு அழைத்துப் போக மாட்டியா?" என்ற ராஜியின் குரலுக்கு,

"அழைத்துப் போவேன்மா... ஆனால், அதற்கு உங்க கணவர் அனுமதிக்க மாட்டாரில்ல...! அவரோட அனுமதி கிடைத்ததும் கண்டிப்பாக அழைத்துப் போகிறேன்!" என்ற மயூராவின் பதிலுக்கு, ராஜிக்கு மெல்லியதாகக் கோபம் முளைத்தது.

"சும்மா அவரின் மேலே குற்றம் சொல்லாத மயூ... நீ பண்ணின காரியத்திற்கு அந்த மனிதர் உன்னைக் கொஞ்சுவாரா? அன்று நீ போன செய்தியை டி.வி.யில்

பார்த்து விட்டுச் சென்ற உன் அத்தையும், சித்தியும் இது வரை நம் வீட்டுப் பக்கம் வரவில்லை. என்ன பிள்ளை பெற்று வைத்திருக்கீங்க...? என்று என் முகத்தில் உமிழாத குறையாகப் பார்த்து விட்டுச் சென்றனர் தெரியுமா! உன் அப்பாவிடம் வேண்டாம்... கடைசியாக என்னிடமாவது சொல்லி இருக்கலாம் இல்லையா! எல்லாம் நீயே முடிவு செய்து நடத்தி முடித்து விட்டாய். பண்ணுவதை எல்லாம் பண்ணி விட்டு, உனக்கு ரோஷம் வேறு பொத்துக் கொண்டு வருகிறது..." என அவர் பொரிய,

"ஆன்ட்டி... ரிலாக்ஸ்..." என்ற அர்ஜுனின் குரலுக்குச் செவி சாய்த்தார்.

அன்னையின் கேள்வியில் மயூராவிற்குச் சற்றுக் குற்றவுணர்வு எழுந்தாலும், "அம்மா... இப்போவும் சொல்றேன்... நான் செய்த காரியத்திற்கு என்னை அப்பா என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்மா... ஆனால், அவரை ஏதேனும் சொன்னால் கண்டிப்பாக என்னால் தாங்க முடியாது. அவர் என்னவர்ம்மா... நான் திருமணத்தை நடத்திய விதம் வேண்டுமானால் தவறாக இருக்கலாம்... ஆனால், நான் தேர்வு செய்தவர் தவறில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், நான் உங்களிடம் இருந்ததை விட, அவரிடம் நிரம்ப சந்தோஷமாக இருக்கிறேன். அந்த அளவிற்கு என்னை அவர் உள்ளங்கையில் வைத்துத் தாங்குகிறார் அம்மா..." என்ற மகளின் வாதம் அந்தத் தாய்க்கு நிறைவைக் கொடுத்தது.

பெண்ணைப் பெற்ற அனைத்துத் தாயும் வேண்டுவது இதுதானே! தங்களுக்குப் பின் பெற்ற மகளைக் கண்ணுக்குள் வைத்துப் பாதுகாக்க வேண்டு மென்றுதானே அவர்கள் நல்ல பையனாகத் தேடி அலைந்து திருமணம் முடித்துக் கொடுப்பது. மகளும் அவள் கணவனுடன் இணைந்து சந்தோஷமான வாழ்வை வாழ வேண்டுமென்று வேண்டாத தாயுண்டா!

வெற்றியும் மயூராவும் ஒருவரின் மேல் ஒருவர் வைத்திருக்கும் அன்பை இத்தனை நாள் அர்ஜுனின் வாய் வழியே கேட்ட ராஜி, இன்று மகளின் வாய் மொழியாகக் கேட்கவும், அவர் மிகவும் மகிழ்ந்து போனார்.

இன்று தன் மகளின் கண்களில் தெரியும் காதலும், கணவர் மேல் அவள் கொண்ட அன்பும், அன்று வெற்றியின் கண்களிலும் அவர் கண்டாரே...! இதை விட அவர்கள் இல்லற வாழ்க்கையின் சான்றாக, மகள் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறாளே... இதை விட அவருக்கு என்ன பெரியதாக வேண்டியிருக்கிறது...?

மகளின் கன்னம் வழித்த அவர், "இதைவிட எனக்கென்ன வேண்டுமடி கண்ணே! நீ சந்தோஷமான வாழ்க்கையை வாழ வேண்டுமென்றுதானே நான் கவலைப் பட்டேன். நீ நல்லா இருக்கணும்டா..." என அவள் நெற்றியில் முத்தமிட்டார்.

அன்னையின் செயல் மயூராவின் மனதில் உறுத்த, "என்னை மன்னிச்சிடுங்கம்மா... என்னோட செயல் உங்களை ரொம்பவும் காயப்படுத்தியிருக்கும்..." என உணர்ந்து சொல்ல,

"காயப்படுத்தியது என்னமோ உண்மைதான் மயூரா... ஆனால், அந்தக் காயத்திற்கு மருந்திடுவது போல் இருந்ததுடா உன் பேச்சு. நான் பெற்றிருப்பதே ஒரே ஒரு பெண். நீ சந்தோஷமாக இருந்தால் அதுவே எனக்குப் போதும் மயூ..." என அவள் தலையில் கை வைத்து உணர்ந்து சொல்ல,

"தேங்க்ஸ்மா...!" எனத் தாயைக் கட்டிக் கொண்டாள்.

இருவரின் பாசப் பரிமாற்றத்தைக் கண்டு, அர்ஜுன் கூட நெகிழ்ந்து விட்டான்.

பேசியவாறே மூவரும் கோயிலுக்கு வந்து சேர, கடவுளைத் தரிசித்து விட்டுக் கோயில் பிராகாரத்தில் அமர, அன்னைக்கும் மகளுக்கும் தனிமையைக் கொடுக்க எண்ணி, "நீங்க பேசிட்டு இருங்க ஆன்ட்டி... இதோ வந்துடறேன்..." என அர்ஜுன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

அர்ஜுன் சென்றதும், மகளின் கையைப் பற்றிக் கொண்டு, "டாக்டர் என்னடா சொன்னாங்க... எல்லாம் நார்மலா இருக்கா...?" என்றார்.

"ஆமா அம்மா... ஒண்ணும் பிரச்சனை இல்லை. மசக்கைதான்மா அதிகமா இருக்கு... அதுக்கு வேற டேப்லெட் எழுதிக் கொடுத்திருக்காங்க..." என்றாள்.

"அட லூசுப் பெண்ணே... இதுக்குப் போய் மாத்திரை சாப்பிடுவியா! வாந்தி வருவது போல் ஏதேனும் இருந்தால் புளிப்பா ஏதாவது சாப்பிடு. எலுமிச்சை, ஆரஞ்சு ஜூஸ்

அதிகம் சாப்பிடு...” என, அவள் இந்த நேரத்தில் என்னென்ன சாப்பிட வேண்டுமென்று பட்டியலிட,

“அம்மா... போதும்மா... உங்க மாப்பிள்ளை ஏற்கெனவே பத்திய உணவென்று டாக்டரிடமிருந்து ஒரு பட்டியலையே வாங்கி வந்திருக்காங்க...” என அவள் சிரிக்க,

“கேட்க ரொம்பச் சந்தோஷமாக இருக்குடா... ஹ்ம்ம்... எல்லாம் முறையாக நடந்திருந்தால், உன்னை நான் எப்படி எல்லாம் பார்த்திருப்பேன் தெரியுமா?” என அவர் வருந்த,

“விடுங்க அம்மா... நடந்தது நடந்து போச்சு! ஆமா... உங்களை அழைத்து வந்தது இந்த அர்ஜுனா? என்னிடம் ஒன்றுமே சொல்லாமல் உங்களை அழைத்து வந்திருக்கிறான் பாருங்க...” என நண்பனை நினைத்துப் பெருமை கொள்ள,

ராஜியோ தலையை மறுப்பாக அசைத்து, “அவன் அழைத்து வரலைடா... அவனிடம்தான் நீ இந்த விஷயத்தை என்னிடம் சொல்ல வேண்டாமென்று தடுத்து விட்டாயே! அவன் உன் பேச்சை மீறுவானா?” எனச் சொல்லிச் சிரிக்க,

“அப்போ உங்களுக்கு எப்படித் தெரியும்?” என அவள் கேள்வி எழுப்ப,

ராஜி, உதட்டில் உதிர்ந்த புன்னகையுடன், “மாப்பிள்ளை சொல்லித்தான்டா எனக்குத் தெரியும். என்னிடம், நீ கருவுற்றிருப்பதை முதலில் சொன்னதே

அவர்தான். இப்பொழுதும் அவர்தான் அர்ஜுனிடம் சொல்லி என்னை அங்கு வரவைத்தார்,” என்றதும், மயூராவின் மான் விழிகள் விரிந்தன.

“அவரா...! நிஜமாவாம்மா...?” என ஆச்சர்யமாகக் கேட்க,

“ஆமாம்டி முட்டக்கண்ணி...” என்றவாறு அர்ஜுன் அங்கு வர, மயூரா இருந்த ஆச்சரியத்தில், அர்ஜுன் சொன்ன முட்டக் கண்ணி கூட அவள் கருத்தில் பதிய வில்லை. அவளுக்கு இப்பொழுது எண்ணம் முழுவதிலும் கணவன்தான் இருந்தான்.

தன் சந்தோஷத்தை எண்ணி எண்ணி அவன் செய்யும் செயல்கள், அவளுக்கு அவன் மேல் உண்டான காதலை பன்மடங்கு பெருகச் செய்தது.

இப்பொழுதே கணவனைக் காண வேண்டுமென்று ஆவல் எழுந்தாலும், அது தற்பொழுது சாத்தியமில்லை என்று நினைத்துத் தன் ஆவலை அடக்கினாள்.

மகள் ஏதோ சிந்தனையில் இருக்க, அவளை உலுக்கி, “என்னாச்சுடா...?” என்றார்.

“ஒண்ணுமில்லம்மா...” எனத் தன் சிந்தனை யிலிருந்து வெளி வந்தாள்.

“சரி, மயூ... நான் கிளம்பறேன், உங்கப்பா தேடுவார். அந்த மனுஷனுக்கு இன்னமும் உங்கள் மேல் கோபம் போகல... என்னமோ ஊரில் இல்லாத மாப்பிள்ளையைப் பார்த்து விட்டவர் போல், அந்த விநாயகா மில்ஸ் ஓனர் ஜெயகுமாரைப் பற்றிப் பெருமை

பீற்றிக் கொள்வார். எல்லாம் சரியாகணும்னு ஆண்டவனை வேண்டத்தான் என்னால முடியும். உடம்பைப் பார்த்துக் கோடா... அடிக்கடி போன் பண்றேன்..." என மகளை அணைத்து விடை பெற்றார்.

அன்னையிடமிருந்து விடை பெற்று வந்த மயூரா, அர்ஜுனுடன் காரில் ஏறியதும் வெற்றிக்கு அழைக்க, அது எடுக்கப்படாமல் இருந்தது. அடித்தடித்து ஓய்ந்து போன மயூரா, முகத்தை உர்ரென்று வைத்துக் கொள்ள, அவளைப் பார்த்துச் சிரித்த அர்ஜுன், "ஹே முட்டைக் கோஸ்... என்னடி மூஞ்சியை இப்படி வெச்சிருக்கிறாய்...? அண்ணா போனை எடுக்கலையா?" எனக் கிண்டலடிக்க,

மயூராவிற்கு ரோஷம் வர, அவன் தலையில் குட்டி, "பேசாமப் போடா எருமை... அவர் வரட்டும் இன்னைக்கு..." என அவனை அடக்கி விட்டுத் தலையைச் சீட்டின் பின்னால் சாய்த்தாள்.

வீடு வந்ததும் அவள், அவனை உணவு உண்ண அழைக்க, வள்ளியிடம் உணவெடுத்த வைக்கச் சொல்லி விட்டு, மயூரா உள்ளே சென்று உடை மாற்றி வந்தாள். உணவு உண்ணும்போதும் வள்ளியும், அர்ஜுனும் ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றி முறைத்துக் கொள்ள, கணவனின் நினைப்பிலிருந்த மயூரா, இவர்களின் முறைப்பைக் கண்டு கொள்ளவில்லை.

உணவு உண்டு முடித்ததும், அவளுக்கு மாத்திரையைக் கொடுத்து விட்டு, உறங்கச் செல்லுமாறு பணித்து விட்டு அர்ஜுன் கிளம்பி விட்டான்.

மயூராவுக்குத் தூக்கம் வர மறுக்க, சற்று நேரம் டி.வி.யைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். நேரம் போனதே தெரியாமல் அவள் டி.வி. பார்க்க, வள்ளி தன் வேலையை முடித்துக் கொண்டு மாலை ஐந்து மணிக்குக் கிளம்பி விட்டாள்.

மயூராவுக்கு இப்பொழுது தனிமையாக இருக்க, மீண்டும் கணவனுக்கு முயற்சி செய்தாள். வெகு நேரம் அடித்துக் கடைசி ரிங்கில் எடுத்த வெற்றி, "சொல்லுடா அம்மு... சாரிம்மா... கொஞ்சம் பிஸியா இருந்தேன்... கவனிக்கல... சாப்பிட்டாயா? டாக்டர் என்ன சொன்னாங்க?",

இவள் பதில் சொல்லும் முன், அந்தப் பக்கம் பாஸ்கர், "வெற்றி..." என்றழைப்பது இவள் காதில் விழ, இவள் பதில் சொல்லும் முன் வெற்றி, "இரும்மா... அப்புறமா கூப்பிடுறேன்..." என அழைப்பைத் துண்டித்தான்.

மயூராவிற்குக் கோபம் கொப்பளிக்க, அவனை மனதில் வசைபாடிக் கொண்டே டி.வி. சேனலை மாற்றிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் புரிந்துதான் இருந்தது, வெற்றியின் வேலையைப் பற்றி. ஆனாலும் அவனைப் பார்க்கும் ஆவல் ஏனோ அன்று நிரம்பவே எழுந்தது.

இரவு எட்டு மணிக்கு உணவை ஏனோ தானோ வெனக் கொரித்து விட்டுப் படுக்கையில் விழுந்தாள். உடலின் சோர்வாலும், மனதின் சோர்வாலும் அவள்

சீக்கிரமாக உறங்கி விட, ஜி.ஹெச்சில் போஸ்ட் மார்ட்டம் முடிந்ததும் ரிப்போர்ட் வாங்கிக் கொண்டு வெற்றி வீட்டிற்கு வர, மணி பத்தைத் தாண்டியது.

தன்னிடம் இருந்த சாவியைக் கொண்டு கதவைத் திறந்து தங்களின் அறைக்குள் நுழைய, மயூரா படுத்திருந்த கோலத்தைக் கண்டு, அவன் பதறி அருகில் வந்தான். அவன் வர ஒரு நொடி தாமதித்திருந்தாலும், மயூரா கட்டிலின் மேலிருந்து கீழே விழுந்திருப்பாள். வழக்கம் போல அவள் உறக்கத்தில் உருண்டு, படுக்கையின் நுனியில் இருக்க, அவளை மெத்தையின் நடுவில் படுக்க வைத்து, இரு பக்கமும் தலையணையை அணைவாகக் கொடுத்து விட்டு, அவன் குளித்து உடை மாற்றி வந்தான்.

வந்தவன், சமையலறைக்குச் சென்று பாத்திரங்களைப் பார்க்க, அவள் உணவு உண்டதற்குச் சான்றிருக்க, தானும் தன் வயிற்றை நிரப்பி விட்டு அறைக்குச் சென்றான்.

அப்பொழுதும் தான் அணைவாக வைத்திருந்த தலையணையை அவள் வயிற்றில் இறுக்கி அணைத்துக் கொண்டிருக்க, வெற்றி பயந்து போய் அவளை அணுகினான். இவள் செய்யும் வேலையில் வெற்றிக்குப் பயம் பெருகியது. வயிற்றில் குழந்தை இருக்கும்போது, இன்னமும் அவள் உருண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தால், அது அவளுக்கும் நல்லதல்ல, வயிற்றில் வளரும் பிள்ளைக்கும் நல்லதல்ல என நினைத்தவன்,

அவளிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும் என்று மனதில் குறித்துக் கொண்டு, அவளைத் தன் மேலே போட்டுக் கொண்டு அணைத்தவாறு படுத்தவன், அன்று வேலையின் காரணமாகச் சீக்கிரமாக உறங்கிப் போனான்.

23

இரவு சீக்கிரமாகவே உறங்கிய மயூரா, இன்று வழக்கத்திற்கு மாறாக அதிகாலையே விழித்து விட்டாள். விழித்தவள் கண் முன்னே தன் கணவன் எந்தச் சலனமும் இல்லாமல் சீரான மூச்சை வெளியிட்டு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருப்பது தெரிய, அவனின் கம்பீரமான அழகை ரசித்துக் கொண்டிருந்தவளுக்குச் சட்டென நேற்று தான் அவனை மிகவும் தேடியதும், அவனைக் காணாமல் தான் பட்ட தவிப்பும் புரிய, அவன் கன்னத்தில் தன் பற்களை அழுத்திப் பதித்தாள்.

"ஆஹாஹாஹா..." வென்ற கூவலுடன் விழித்தவன், கன்னத்தைத் தேய்த்துக் கொண்டு, "ஏன்டி... குட்டிப் பிசாசே... காலங்காத்தால தூங்க விடாம இம்சை பண்ற..." என்றான். அவனின் கேள்விக்குப் பதிலாக, "அப்படித்தான் பண்ணுவேன்..." என அவனின் மறு கன்னத்தையும் கடித்து வைத்தாள்.

"ஐயோ... விடுடி... ராட்சசி... வலிக்குது..." என்றவாறு அவளைப் பிரித்தெடுத்தவன், "ஹே... குட்டிக் குரங்கே! உனக்கு வேணும்னா இந்த வாரம் கே.எஃப்.சி.யிலிருந்து

பக்கெட் சிக்கன் வாங்கித் தரேன்டி... என் கன்னத்தை விடு. நான் சிக்கன் இல்லை... உன் புருஷன்!" எனப் பாவமாக அவனின் இரு கன்னங்களையும் கைகளால் மறைத்தபடி சொல்லிய விதம், மயூராவிற்குச் சிரிப்பை வரவழைத்தது.

"ஹா... ஹா... அந்தப் பயம் இருக்கட்டும்!" என வில்லி போல் சிரித்தவள், பின் முந்தைய நாள் நிகழ்வுகள் அவளுக்கு நினைவில் வர, அவன் வயிற்றைக் கட்டிக் கொண்டு, "நேற்று உங்களுக்கு ரொம்ப வேலையா மச்சான்...? நான் உங்களை ரொம்ப மிஸ் பண்ணி னேன்..." என்றாள்.

வெற்றியின் முகத்தில் விளையாட்டு மறைந்து, அவள் வருத்தத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் எழ, "சாரிடா குட்டிம்மா... கொஞ்சம் வேலை அதிகம் தான்டா. நைட் நான் வந்தபோது நீ நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாய்... அதான் எழுப்பவில்லை!" என அவள் தலை வருடிச் சமாதானம் செய்ய,

அவன் சமாதானம் எதையும் காதில் வாங்காமல், "அ... அம்... அம்மாவை... தே... தேங்க்ஸ் மச்சான்..." என்கையில், அவள் குரல் அடைத்துக் கண்களில் கண்ணீர் சுரக்க, அவள் முகத்தை நிமிர்த்தி, "எதுக்கு அம்மு இந்த அழுகை? ஏன்டா... அம்மா உன்னைத் திட்டிட்டாங்களா? நீ சந்தோஷப்படுவாய் என நினைத்து நான் செய்த காரியம் உன்னைக் கஷ்டப்படுத்தி விட்டதா அம்மு...?" என அவன் முடிக்கும் முன்,

அவனைத் தடுத்து, "இல்லை மச்சான்... அம்மா என்னை ஏதும் சொல்லலை. அவங்களுக்கும் உங்களைப்

பற்றித் தெரிஞ்சிருக்கு மச்சான்... இப்படிப்பட்ட மாப்பிள் ளையைப் பற்றிக் குறை சொல்ல அவங்களுக்கு என்ன இருக்கு... நான் இந்த மாதிரி நேரத்துல என்ன சாப்பிட வேண்டும், என்ன சாப்பிடக் கூடாது என ஒரு பெரிய பட்டியலை வாசிச்சாங்க... ரொம்ப நேரம் பேசினோம் மச்சான்... எல்லாம் உங்களால்தான்... தேங்க்ஸ்பா... ஐ லவ் யூ சோ மச்..." என அவன் மார்பை நனைக்க,

"அடியே லூசு... அதான் அம்மா ஒண்ணும் சொல்லவில்லைதானே... பின் எதுக்கடி இப்படி அழுது கொண்டிருக்கிறாய்?" என அவள் கண்களைத் துடைக்க,

"விடுங்களேன்... எனக்கு அழணும்னு தோணுது... அழறேன். உங்களுக்கென்ன...?" என்றாள்.

"அப்படி எல்லாம் விட முடியாது. உன் கண்ணில் கண்ணீர் வந்தால், அது நான் உன்னைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ளவில்லை என்று அர்த்தம். இனிமேல் உனக்குத் தோன்றுகிறது என்பதற்காகக் கூட அழக் கூடாது. கண்ணைத் துடை..." என அவனின் ஒரு அதட் டலுக்குக் கண்ணீரைத் துடைத்து நாக்கைத் துருத்தி அழகு காட்டிவிட்டுப் படுக்கையிலிருந்து எழ முயல, ஞாபகம் வந்தவனாக அவள் கையைப் பிடித்து நிறுத் தியவன், "அம்மு... உனக்கு இந்தக் கட்டில் போதவில்லை யாடா...! இது கிங் சைஸ் காட்... வேண்டுமென்றால் இதைவிடப் பெரியதாகச் செய்யலாமா?" என்றான்.

இவன் ஏன் திடீரென இப்படி உளறுகிறான் எனப் பேந்தப் பேந்த விழித்தவள், "ஏன் மச்சான்... இந்தக் கட்டிலுக்கு என்ன குறைச்சல்...?" என்றாள்.

"ம்... நைட் நீ பண்ணும் அட்டகாசம் தாங்க முடியலடா..." என்று அவன் முதல் நாள் இரவு முதல் நேற்றைய இரவு வரை அவள் செய்த லீலைகளைச் சொல்லி முடிக்க, மயூராவிற்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. வெட்கத்தை மறைக்க அவனுக்குள்ளே புதைய,

"போங்க மச்சான்... முதல் நாளே சொல்லியிருக்க வேண்டியதுதானே! அந்த வீட்டில் இப்படிச் செய்து தினமும் அம்மா கிட்ட திட்டு வாங்குவேன். இங்கு வந்து நீங்கள் எதுவும் சொல்லவில்லையா... நான் திருந்திட்டேனோன்னு நினைத்தேன்..." எனச் சிணுங்க,

"ஹா... ஹா... இல்லடா... இந்த மாதிரிச் சமயத்துல கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும். அதான் சொன்னேன். இனிமேல் கொஞ்சம் கவனமாப் படுத்துக்கோ!" என்றவனுக்கு மண்டையை உருட்டி ஆட்டி, ஆமோதிப்பதாகப் பதிலளித்து விட்டுக் குளியலறைக்குள் சென்று மறைந்தாள்.

தனது குண்டான உடல் தேகத்தை வெள்ளை வேட்டி சட்டைக்குள் மறைத்துக் கொண்டு, தனது மூக்குக் கண்ணாடியைக் கைக்குட்டையால் துடைத்தவாறே சோபாவில் அமர்ந்தவரிடம், ஒரு ட்ரேயில் காபிக் கோப்பையை நீட்டிய வேலையாளிடமிருந்து அதை வாங்கிக் கொண்டவர், "அம்மா எங்கே?" என விசாரிக்க,

"அம்மா கோயிலுக்குப் போயிருக்காங்கய்யா... சொல்லச் சொன்னாங்க..." என்று முதலாளியின் கேள்விக்குப் பதிலளித்து விட்டு அந்த வேலையாள் சென்று விட, காபியைக் கோப்பையிலிருந்து ஒரு வாய் உறிஞ்சியவர், முன்னிருந்த டேபிளின் மேல் செய்தித் தாள் வீசப்பட, வீசியவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தார் ஜெயகுமார்.

தன் மகன் நவீனின் முகம் கோபத்தில் கொதிக்க, அவரோ ஆற அமர கோப்பையை டேபிள் மேல் வைத்து விட்டு, மகன் வீசிய செய்தித் தாளைப் பார்த்தவருக்கு, மாநகரச் செய்தி பகுதியில் 'பல்லடம் அருகே அழுகிய நிலையில் இரண்டு பிணங்கள் கண்டுபிடிக்கப் பட்டது. பிரேதப் பரிசோதனையில், அவர்கள் மூன்று மாதத்திற்கு முன் கொல்லப்பட்டதாகக் கணிக்கப்படுகிறது...' என்ற செய்தியை அலட்சியமாகப் பார்த்த ஜெயகுமார், அதே அலட்சியத்துடன், "அதுக்கு என்ன...?" என்றவாறு மீண்டும் காபியை உறிஞ்சத் துவங்கினார்.

"என்ன டாடி... தெரிஞ்சுதான் பேசுறீங்களா? நான் அப்போவே சொன்னேன்... இந்தக் கேஸை ஹேண்டில் பண்றது வெற்றி... இந்தச் சமயத்தில் நீங்க இன்னொரு கொலையைப் பண்ணி... பாருங்க, இப்போ அவன் தோண்டி எடுத்துட்டான். இனி கண்டிப்பா அவன் விட மாட்டான். எதையாவது பிடிச்சு நம்மகிட்ட நெருங்கிடுவான்.

"முதல்ல அவன் எங்கிருந்து ஆரம்பிப்பது எனக் குழம்பிய வேலை... அவனைக் கண்காணிக்கவென

நீங்களே ஆளைப் போட்டு, வலியப் போய் மாட்டிக் கிட்டோம். அந்த வேலு அவன் கையில் இருந்தும், அவன் நம்மை ஒன்றும் செய்யாமல் இருக்கிறான் என்றால், அவன் வேறு ஏதோ நம்மைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறான்," என்றான்.

"டேய்... நீயெல்லாம் என் பையனாடா...! இப்படித் தொடை நடுங்கியா இருக்கிறியே! இந்த மாதிரி ஆயிரம் வெற்றிகளை நான் பார்த்திருக்கிறேன்... எவனும் என்னை அசைக்க முடியாது..." என அவர் கர்வமாகச் சொல்ல,

"அப்பா... நீங்க பார்த்த ஆயிரம் வெற்றிகளைப் போல் அவன் இல்லை..." தந்தையின் கர்வத்திற்குப் பதிலளித்த நவீன்,

"அப்பா... புரிஞ்சுதான் பேசுறீங்களா? நாம மட்டும் மாட்டினோம்... இத்தனை நாள் நீங்க ஏமாத்தி வளைச்சுப் போட்ட எல்லாச் சொத்தும் ஒரு நிமிஷத்துல போயிடும். அதுக்கு முன்னாடி ஏதாவது செய்யணும்..." என்றான்.

"சரி, விடு. கமிஷனர் கிட்டப் பேசிப் பார்க்கலாம். ஒத்து வரலைன்னா அவனைப் போட்டுத் தள்ளிடலாம்," என அவர் ஏதோ காய்கறி வியாபாரம் போல் சொல்லி வைக்க, நவீனுக்கு அவரை நாலு சாத்து சாத்தினால் என்ன என்று தோன்றியதை மறைத்து,

"அப்பா... அவன் ஒரு சாதாரணப் போலீசா இருந்திருந்தாக் கூட ஏதோ சமாளிச்சிடலாம். ஏற்கெனவே அவனுக்கு டிபார்ட்மெண்ட்டில் நல்ல பெயர். அதுக்கே அவனுக்கு டிபார்ட்மெண்ட் சப்போர்ட் இருக்கு. அது

போதாதென்று இப்போ அவன் மந்திரி வீட்டு மாப்பிள்ளை... அவனுக்குச் செல்வாக்கு அதிகம். அவனை நம்மால் ஒன்றும் பண்ண முடியாது," என வெற்றியின் பலத்தைப் பற்றிச் சொல்ல,

"டேய்... அவன் மந்திரி வீட்டு மாப்பிள்ளையாக முடியாதுடா. அந்த அளவுக்கு நான் செல்வமணியை என் கைக்குள் அடக்கி வெச்சிருக்கேன். அந்தக் கவலையை விடு... அவனை நேரடியாத் தாக்க முடியலைன்னா மறைமுகமாகத் தாக்குவோம்.

"செல்வமணியின் பெண்ணை உனக்குக் கட்டி வைத்தால், இந்த மாதிரி எந்தப் பிரச்சனையும் வராது என நினைத்தேன். ஆனால், அந்த முட்டாள் பெண் நம்மை எல்லாம் முட்டாளாக்கிட்டுப் போயிட்டா... அதுக்கே அவளைச் சும்மா விடக்கூடாது... நம்ம ஆளுங்க சொன்னதைக் கேட்டேதானே! அந்த வெற்றிப் பயலுக்கு அவன் மனைவி என்றால் உயிராமே! அவளை அடித்தால் அவனுக்கு நிச்சயம் வலிக்கும்..." என, அவர் முகத்தில் குரூரத்தை வைத்துச் சொல்ல,

"அப்பா... இது எல்லாம் எனக்குச் சரின்னு தோணலை. மேலும் மேலும் தப்புப் பண்ணி வலியப் போய் மாட்டிக்காதீங்க... சொல்லிட்டேன். பின் ஏதாவது பிரச்சனை வந்தால், நீங்க என் அப்பாவே இல்லை என்று சொல்லிவிட்டுப் போயிட்டே இருப்பேன்..." என நவீன், ஜெயகுமாரின் வாரிசாகச் சொல்ல, அவனின் பதிலுக்கு அவர் உள்ளுக்குள் திகைத்தாலும்,

"நீ என் பையன்தான்னு இதுலயே நிரூபிக்கிறடா மகனே! நீ ஒன்றும் கவலைப்படாதே! நான் எல்லாத் தையும் பார்த்துக்கிறேன். நீ போய் உன் ஹோட்டல் வேலையைக் கவனி," என்றார்.

"என்னமோ பண்ணுங்க..." என்றவாறு நவீன் நகர்ந்து விட்டான்.

ஜெயக்குமார் யோசனையில் இருந்த வேளையில் அவரின் மனைவி சுஜாதா, கோயிலிலிருந்து வந்து விட்டார். ஏதோ யோசனையில் கணவர் அமர்ந்திருப் பதைப் பார்த்தவர், அவரை நெருங்கி அழைக்க, தன் கவனத்திலிருந்து மீண்டவர், "சொல்லு சுஜா... தரிசனம் எல்லாம் நல்லா இருந்ததா?" என விசாரிக்க,

"ம்ம்... இருந்ததுங்க... பிரசாதம் எடுத்துக்கோங்க..."

ஜெயக்குமார் அதைப் பவ்யமாக எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டார்.

ஜெயக்குமார் – வெளியுலகத்திற்கு அவர் தேர்ந்த தொழிலதிபர், அவர் ஒரு மில் ஓனர் என்பது மட்டுமே வெளியுலகம் அறிந்தது. ஆனால், அவருக்கு இன்னும் ஒரு தொழில் இருக்கிறது. அது, ரியல் எஸ்டேட் என்கிற பெயரில் விவசாய நிலங்களைக் கூறு போட்டுப் பிரித்துத் தவணை முறை என்ற பெயரில் கொள்ளை வட்டிக்கு மக்களிடம் விற்பவர். அதுதான் போகிறது என்று பார்த்தால், ஜெயக்குமார் ஒரு படி மேலே போய், அடித்துப் பணியவில்லை என்றால், அவர்கள் கதையையே முடிக்கும் அளவிற்குத் துணிவார்.

பார்ப்பதற்கு, இது சாதாரண நியாயமான தொழில் என்பது போல்தான் தெரியும் – அது நியாயமாகச் செய்பவர்களுக்கு. ஆனால் ஜெயக்குமார், அதற்கு அவர் நிலங்களை அல்லவா விற்க வேண்டும்...!

இவர் செய்வது எல்லாம் ஏழை மக்களிடம் அடித்துப் பிடுங்கி, அதைத் தன் பெயருக்கு மாற்றி, பண்ணை வீட்டு மனை, தனி வீட்டு மனை என ஏதேதோ பெயர் வைத்து விற்பார்.

இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களும் நம் காலம் முடிவதற்குள், நமக்கென ஒரு காணி நிலமாவது வாங்கி விட வேண்டும் என எண்ணி, வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டிச் சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து வைக்க, ஜெயக்குமார் போன்ற ஆட்கள், கவர்ச்சிகரமான விளம்பரங்களாலும், அந்தத் தள்ளுபடி, இந்தத் தள்ளுபடி என மக்களைத் தங்கள் புறம் திருப்பி, அவர்கள் பல வருடங்கள் தங்கள் இரத்தத்தால் உழைத்துச் சம்பாதித்த பணத்தை, இவர்கள் ஏ.சி. அறையில் அமர்ந்து கொண்டு, நோகாமல் அலேக்காகச் சுருட்டிக் கொள்வர்.

இவர்கள் போன்ற ஆட்கள் இன்று நெல் விளையும் நிலங்களைக் கூறு போட்டு விற்றால், தாங்களும், தங்கள் சந்ததிகளும் அரிசிக்குப் பதிலாகக் கல்லையும் மண்ணையும் தான் உண்ணப் போகிறோம் என்பதை மறந்து விட்டார்களா, இல்லை அது அவர்கள் மர மண்டைக்குள் உரைக்க வில்லையா என்பது அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

நம் இயற்கை வளங்களான நீரையும், காற்றையும் மாசுபடுத்தியது போதாதென்று, ஆற்று மணலைக் கொள்ளையடித்தும், நிலங்களை மாசுபடுத்தியும் விவசாய நிலங்களை மலடாக்குகிறோம் என்பதை என்றறிவார்?

ஜெயக்குமார் செய்யும் இந்தத் தொழில் தனக்கும், மகனுக்கும் மட்டுமே தெரியும்படி வைத்துக் கொண்டார். தன் மகனின் ஹோட்டல் கட்டும் இடத்தில் ஏதோ அரசாங்கத்துடன் பிரச்சனை வர, அப்போது நண்பரின் நண்பர் ஒருவர் மூலமாக அறிமுகமாகியவர்தான் செல்வமணி. அவருக்கு ஜெயக்குமாரின் இன்னொரு முகம் தெரியாது என்பதால், அவர் இவருக்கு உதவி செய்ய, அப்படியே அவரின் நட்பை வளர்த்துக் கொண்டு, தன் மகனுக்கு அவரின் பெண்ணைப் பேசும் அளவுக்கு நட்பாகினர்.

மயூராவை நவீனுக்குத் திருமணம் முடித்து வைத்து விட்டால், செல்வமணி முழுவதும் தன் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுவார். நாளை ஏதும் பிரச்சனை வந்தால், இவரைக் கொண்டு சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணியவரின் நினைப்பில் ஒரு கூடை மண்ணை அள்ளிப் போட்டாள் மயூரா.

அவள் போனது கூடப் பெரிய விஷயமல்ல... அவள் சென்ற இடம்தான் ஜெயக்குமாரைச் சற்றுப் பயம் கொள்ளச் செய்தது.

வெற்றியைப் பற்றி அவரும் அறிவார்.

இப்பொழுது வெற்றி, அவரைப் பற்றி ஒவ்வொரு விஷயமாகத் தோண்டித் துருவ, அவருக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தாலும், அதை வெளிக்காட்டாமல் வெற்றியை வீழ்த்த எண்ணிக் கொண்டிருக்கிறார்.

அதற்கு அவர் ஆயுதமாக எடுத்தது, வெற்றியின் உயிரான மயூராவை...!

ஜெயக்குமாரின் எண்ணம் பலிக்குமா? வெற்றி வீழ்வானா?



"மச்சான்... வர வர உங்க ஷர்ட் எனக்குப் பத்த மாட்டேங்குது..." எனப் புலம்பிய வாறு மயூரா, வெற்றிக்குக் காலை உணவைப் பரிமாறிக் கொண்டிருக்க,

"ம்ம்... எப்படிப் பத்தும்...! அதான் உன் தொப்பை வளருதில்ல... ஏற்கெனவே நீ குட்டி குஷ்பூ மாதிரி இருப்பே... இப்போ வயிற்றில் என் மகள் வேறு இருக் கிறாள்... எப்படிப் பத்தும்...?" என அவளைச் சீண்டினான்.

"அதான் வீட்டில் ஒரு வார்ட்ரோப் நிறைய உனக்கு டிரெஸ் எடுத்து வெச்சிருக்கு இல்ல... அப்புறம் எதுக்குடி என்னோடதை எடுத்துப் போட்டு அழுக்கு பண்றே?" என அவளிடம் வம்பிழுக்க,

"உங்களுக்கு இருக்கே கொழுப்பு... அது உடம்பு முழுவதும் அளவுக்கு அதிகமா இருக்கு மச்சா..." என அவனை இடுப்பில் கிள்ளி வைத்தவள்,

"எனக்கு உங்க ஷர்ட் போட்டா ரொம்ப புரொடெக்ட்டா ஃபீல் பண்றேன்... அதான்.." என உணர்ந்து சொல்ல, வெற்றி அமர்ந்திருந்தவாறு அவளை வளைத்துத் தன்னருகில் இழுத்து, அவள் இடுப்பில் இதழ் பொருத்தினான்.

அந்த உணர்வுப் பூர்வமான தருணத்தை மயூவின் செல்போன் கலைக்க, விருப்பமில்லாமல் கணவனிட மிருந்து பிரிந்து அதை எடுத்துப் பார்த்தவள், "சொல் லுங்கம்மா!"

"ஆமா... போகணும்... இன்னிக்கு ஈவினிங் அவர் அழைச்சுட்டுப் போவார்!" எனக் கணவனைப் பார்த்தவாறு பதிலுரைத்தாள்.

"ஓஹோ... அப்படியாம்மா...! எப்போ திரும்ப வருவீங்க? பதினைஞ்சு நாள் ஆகுமா? சரிம்மா... பத்திரமாப் போயிட்டு வாங்க. போனதும் கால் பண்ணுங்க..." எனப் போனைத் துண்டித்தவள்...

"அப்பா ஏதோ கட்சி விஷயமா டெல்லிக்குப் போகணுமாம்... அம்மாவையும் கூடச் சேர்த்து அழைச்சிட்டுப் போறாராம். வரப் பதினைஞ்சு நாள் ஆகும்னு சொன்னாங்க..." வெற்றியிடம் பகிர்ந்தவாறு, சாப்பிட்ட உணவுப் பாத்திரங்களை எடுத்து வைத்தாள்.

"ஓஹோ... சரிடா அம்மு... எனக்கு இன்னைக்கு முக்கியமான ஒரு கேஸ்... அதை முடிச்சுட்டு ஈவினிங் வந்து செக்-அப் அழைச்சுட்டுப் போறேன். கால்

பண்றேன்... ரெடியா இரு...!" என்றவாறு கிளம்பிச் சென்றான்.

மயூரா தற்பொழுது அவளின் ஐந்தாம் மாதம் இறுதியில் இருந்தாள். வழக்கமான வெற்றியின் அளவிலாக் காதலும், கவனிப்புடனும் இப்பொழுது அன்னையின் அன்பும் சேர்ந்து கொள்ள, மயூராவும், அவள் வயிற்றில் வளரும் பிள்ளையும் மிகவும் ஆரோக்கியத்துடன் இருந்தனர்.

வெற்றி, மயூராவிடம் இருந்து விடைபெற்றவன், நேராகச் சென்றது நீதிமன்றம்தான். வெற்றி சென்ற போது, பாஸ்கர் அங்கு ஏற்கெனவே அவனுக்காகக் காத்திருந்தான்.

"மாஜிஸ்ட்ரேட் இப்போதான் வந்தார் வெற்றி... எனக்கு வேறொரு கேஸ் ஹியரிங் இருக்குடா... நீ அவரைப் பார்த்துட்டு ஆர்டர் வாங்கு!" என்றவனிடம் விடைபெற்று நீதிபதியைக் காணச் சென்றான்.

நீதிபதியின் அறையில் அனுமதி கேட்டுச் சென்றவன், வெற்றி அவர் முன்னே ஒரு ஃபைலைக் கொடுக்க,

அதை வாங்கிப் படித்தவர், வெற்றியை யோச னையுடன் பார்த்து, அரெஸ்ட் வாரண்டில் கையெழுத்திட்டு, "யூ மே ப்ரொசீட்..." என அனுமதி வழங்கினார்.

நீதிபதியின் உத்தரவைப் பெற்றுக் கொண்டு சந்திரசேகரிடம் சொல்லிவிட்டு வெற்றியும், மற்றும் சில

காவலர்களும் நேராகச் சென்றது ஜெயக்குமாரின் வீட்டிற்கு...

வெற்றியின் வருகையை எப்படியோ அறிந்த ஜெயக்குமார், அவனைத் தடுக்க செல்வமணியை அழைத்தவர், அவரின் தனிப்பட்ட கைபேசி என்ன அணைக்கப்பட்டிருக்க, அவரின் பி.ஏ.விற்கு அழைக்க, அவர் சொன்ன செய்தி அவருக்கு ஏமாற்றம் அளித்தது. இந்தச் சமயம் என்று பார்த்து மகன் வெளிநாட்டிற்குப் பறந்திருக்க, என்ன செய்வதென்ற யோசனையில் ஆழ்ந்தார்.

செல்வமணிக்கு அழைத்த ஜெயக்குமார், ஏதேனும் வக்கீலுக்கு அழைத்திருந்தால், முன் ஜாமீனாவது கிடைத்திருக்கும்.

- ஆனால், பாவம் அதற்குள் வெற்றி அவரின் இல்லம் வந்திருக்க, தங்களின் வீட்டின் முன் போலீஸ் படை நுழைவதைக் கண்டு பயந்து போன சுஜாதா, கணவரைத் தேடி விரைந்தார்.

தான் இத்தனை நாள் மறைமுகமாகச் செய்த ஊழலும், கொலைகளும், இன்று வெளிச்சத்துக்கு வந்தால், தான் ஊரை ஏமாற்றிச் சம்பாதித்த நல்ல பெயரை ஒரு நொடியில் இழந்து விடுவோமே என நினைத்துக் கொண்டிருந்த ஜெயக்குமார், தான் ஏழை மக்களின் சொந்த உழைப்பை, காசுக்காகவும், தன் சுகபோக வாழ்க்கைக்காகவும் ஏமாற்றிப் பறித்ததைப் பற்றிச் சிறிதும் யோசித்துப் பார்க்கவில்லை.

இப்பொழுதும் தன் தவறை உணராமல், தன்னை இந்த நிலையில் நிறுத்திய வெற்றியை நினைத்து, வன்மத்தை வளர்த்துக் கொண்டிருந்தார். அவனின் நடவடிக்கைகள் அனைத்தும் புதிராக இருந்தால், அவன் ஏதும் தன்னைச் செய்து விட முடியாதென்ற மிதப்புடன் இருந்தவருக்கு, அவனின் இந்தத் திடீர் வருகையை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. வெற்றியை நினைத்துக் கொண்டிருந்தவர், மனைவி தன்னை நோக்கிப் பதட்டத்துடன் ஓடி வருவதைக் கண்டு, விஷயத்தை யூகித்தவருக்கு என்ன செய்வதென்ற யோசனைதான் ஏதும் எழவில்லை.

தான் செய்த இந்தத் திருகுதாளங்கள், இது வரை தான் கட்டிய மனைவிக்குக் கூடத் தெரிய விடவில்லையே. இன்று அனைத்து உலகத்திற்கும் அம்பலமாகப் போவதை எண்ணி அவர் ஒரு பக்கம் வருந்தினாலும், அவரின் மிருக குணம் அவரைச் சோர்வடையச் செய்யவில்லை. எதுவாக இருந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற தெனாவட்டு வர, அவனைக் காணும் நொடியை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

அவர் என்னதான் அந்த நொடியை வெறுத்தாலும், வெற்றி அவரது வீட்டுக்குள் அடி எடுத்து வைத்திருந்தான்.

ஒரு வேலையாள் வந்து ஜெயக்குமாரிடம் வெற்றியின் வருகையைச் சொல்ல, என்ன சொல்ல வேண்டும்... எப்படிப் பேச வேண்டும் என்று தனக்குள் ஒத்திகையை நடத்தி விட்டு, அவனைக் காணச் சென்றார்.

கணவனின் யோசனையை நினைத்துக் குழம்பிய சுஜாதா கையைப் பிசைந்தவாறே அவர் பின்னால் சென்றார்.

மாடிப் படிகளிலிருந்து இறங்கிய ஜெயக்குமாருக்கு, வெற்றி காக்கிச் சட்டையை அணிந்து கொண்டு, அவன் அகன்ற தோள்களில் தெரிந்த அவன் கம்பீரமும், அதையும் மீறி அவன் கண்களில் தெரிந்த வீரமும் ஜெயக்குமாரின் மனதில் சற்றே பயத்தை ஏற்படுத்தினாலும், அதைத் தனக்குள்ளே மறைத்தவாறு அவனைச் சந்தித்தார்.

"சொல்லுங்க டி.சி... என்ன விஷயம்...?" என்றவாறு சோபாவில் அமர, வெற்றி ஏதும் பேசாமல் அவர் முன்னால் ஒரு கவரை நீட்ட, அதை வாங்கிப் பார்த்தவர், "என்ன இது...?" என்று தனக்கு ஏதும் அறியாததைப் போல் கேள்வி எழுப்ப,

"என்ன விஷயம்னு சொல்லியே ஆகணுமா?" என சுஜாவையும், அவர்களையே பார்வையிட்டுக் கொண்டிருந்த வேலையாட்களையும் பார்த்து விட்டு, ஜெயக்குமாரைக் கேள்வியாக நோக்கியவன், அவரின் முகம் இருட்டடைவதைக் கண்டு ரசித்தவாறு, ஒரு நக்கல் சிரிப்பை உதிர்த்து விட்டு, "அரெஸ்ட் வாரண்ட்... உங்களைக் கைது செய்ய..." என்று அவன் முடிக்கும் முன்,

"என்னது... அரெஸ்ட்டா? எதுக்கு...? அவர் என்ன தப்பு செஞ்சார்...?" என்றவாறு சுஜா பதற,

"சுஜா..." எனக் கையை உயர்த்தித் தடுத்தவரை, "போகலாமா...?" என வெற்றி, புருவத்தைச் சுருக்கி அழைக்க, "நான் என்னோட வக்கீலுக்குப் பேசணும்..." என்றவாறு கைபேசியை எடுக்க, "சாரி... அதுக்கு எல்லாம் டைம் இல்ல... கிளம்புங்க..." என்றவாறு அவரை நெருங்க...

எங்கே மனைவியின் முன் விலங்கு மாட்டி விடுவானோ என நினைத்தவர், சோபாவில் இருந்து எழுந்து மனைவியை நோக்கி, "நீ ஒண்ணும் பயப்படாதே! ஒரு சின்ன விசாரணைதான்... நவீனுக்குப் போன் பண்ணி, உடனே வரச் சொல்லு... வக்கீலுக்கு அழைத்து ஜாமீன் வாங்கச் சொல்லு!" என ஆணைகளைப் பிறப்பித்து விட்டு வெற்றியின் பின்னால் நடக்க, வீட்டு வாசலின் முன் வந்தவரை, "வண்டியில ஏறுங்க..." என ஏவ, அவனின் ஏவலும், நக்கல் சிரிப்பும், தன்னைத் தன் சொந்த வீட்டில், கட்டிய மனைவியின் முன்பும், தன்னிடம் சம்பளம் வாங்கும் வேலையாட்களின் முன்பும், இழிவு படுத்திய அவனை, முழு வன்மத்துடன் நோக்கிய ஜெயக்குமார், "இதுக்கு எல்லாம் ரொம்ப வருத்தப்படப் போறீங்க டி.சி..." என அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் உறுமினார்.

அவரின் உறுமலுக்குச் சிறிதும் அசராமல், "வருத்தப்படும் போது கண்டிப்பாச் சொல்லி அனுப்புறேன்... இப்போ..." என வண்டியில் ஏறுமாறு கையைக் காட்டினான்.

ஜெயக்குமாரை ஸ்டேஷனுக்கு அழைத்து வரும் சமயம், வழக்கம் போல் ஸ்டேஷன் வாசலில் பத்திரிகை யாளர்கள் அவனை வழி மறைக்க, அவர்களைத் தடுத்து விட்டு ஜெயக்குமாரை செல்லில் அடைத்து விட்டுப் பொறுமையாக பத்திரிகையாளர்களிடம் வந்தவனை, ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் கேள்விகள் தாக்கத் துவங்கின.

"சார்... நம்ம ஊரில் ஒரு பெரும் புள்ளியை கைது செய்திருக்கீங்க... என்ன காரணம்?"

"இது வரைக்கும் ஜெயக்குமாருக்கு இந்த ஊரில் நல்ல பெயர் இருக்கே... நீங்க சந்தேகத்தின் பெயரில் அரெஸ்ட் பண்ணியிருக்கீங்களா...?" எனக் கேள்விகள் சரமாரியாக வர, ஒரு கை உயர்த்தி அவர்களைத் தடுத்தவன், "உங்க எல்லோருடைய கேள்விக்கும் பதில் சொல்றேன்... கொஞ்சம் பொறுமையா இருந்தா..." என்றவன்,

"வெல்...! ஊரில் பெரும் புள்ளி, மில் ஓனர் ஜெயக்குமார் நான்கு கொலைகள் செய்திருக்கிறார் என்றால் யாரும் நம்புவீர்களா? பட், தட்ஸ் தி ட்ரூத்... மூன்று வருடம் முன்னால் சிறுவாணி பக்கம் அண்ணன் தம்பி இருவரையும், ஐந்து மாதங்கள் முன் பல்லடத்தில் தோண்டி எடுக்கப்பட்ட கணவன் மனைவி இருவரையும் நில விஷயத்தில், திட்டமிட்டுக் கொலை செய்திருக்கிறார். அதற்கான ஆதாரங்கள் அனைத்தும் என்னிடம் இருக்கு..." என்றவாறு ஒரு ஃபைலை எடுத்துக் காட்ட, பத்திரிகையாளர்களுக்கு நல்ல தீனி கிடைத்து விட,

"சார்... இன்னும் கொஞ்சம் விளக்கமாச் சொல்ல முடியுமா?" எனவும்,

"ஜெயக்குமாருக்கு ஊருக்குத் தெரியாமல் இன்னுமொரு தொழில் இருக்கு... அது ரியல் எஸ்டேட் என்ற பெயரில் இல்லீகலா நிறைய மக்களிடம் நிலங் களை அடித்துப் பிடுங்கியிருக்கிறார். தர மறுத்த இந்த நால்வரையும் கொலை செய்யும் அளவுக்குச் சென் றுள்ளார். ஆறு மாதங்களுக்கு முன் எஸ்.பி. சந்திர சேகரிடம் பாதிக்கப்பட்டவர்கள் சிலர் ரகசிய கம்ப்ளெயின்ட் கொடுக்க, அதன் பெயரில் நாங்கள் விசாரணை மேற்கொண்டோம்..." என்று வெற்றி அனைத்தையும் பத்திரிகையாளர்களிடம் ஒப்புவித்தான்.

அனைத்தையும் கேட்டுக் கொண்டவர்களில் ஒருவர், "சார்... இந்த ஜெயக்குமாருக்கும், மினிஸ்டர் செல்வமணிக்கும் நல்ல நட்பிருக்கே! அப்போ அவருக்கும் இந்தக் கேஸுக்கும் ஏதேனும் தொடர்பிருக்கா? அப்படி இருந்தால், அவர் உங்க மாமனார்னு அதை மறைக்கிறீங்களா?" என்றவனைத் தீப்பார்வை பார்த்த வெற்றியை, உடனிருந்த ஒரு காவலாளி, கையைப் பிடித்து அவனைக் கட்டுப்படுத்த, தன்னைச் சமாளித்துக் கொண்டு, "மிஸ்டர்... இத்தனை விசாரணை செஞ்ச நாங்க, அதை விசாரிக்காம இருப்போமா! ஜெயக் குமாரின் இந்தத் தொழிலுக்கும், மினிஸ்டருக்கும் எந்தத் தொடர்புமில்லை. அப்படி ஏதேனும் இருந்தால், கண்டிப்பா நான் என்னோட கடமையைச் செய்வேன்..." என,

கேட்டவனுக்கு உரிய பதிலை அளித்து விட்டு, "போதும்... இதோட முடிச்சுக்கலாம்..." என்றவாறு அந்த இடத்தை விட்டு அகன்றான்.

அவன் உள்ளே வருவதைப் பார்த்த ஜெயக்குமார், தன்னை இந்த நிலையில் நிறுத்திய அவனைக் காண்கையில், கண்களில் கனல் உற்பத்தியாக, 'வெற்றி... நீ தப்புப் பண்ற... ஏன்டா என் வழியில் வந்தோம்னு நீ நினைக்கும் அளவுக்கு உன்னை அழ வைக்கிறேன்டா...' என்று மனதில் கறுவிக் கொண்டார்.

அவனின் வன்மத்தை வெற்றி அறிந்திருந்தாலும், அவன் எப்படியும் தன்னைத்தான் தாக்குவான், நாம் நம்மைத் தற்காத்துக் கொள்வோம் என்று நினைத்தவன், அவனின் வன்மம், தான் தன் உயிராக நினைத்திருக்கும் மனைவியைப் பாதிக்கும் என்று சற்றும் எதிர்பார்க்க வில்லை.

ஜெயக்குமாரின் கெட்ட நேரம், அன்று வார இறுதி என்பதால் அவருக்கு ஜாமீன் கூடக் கிடைக்கவில்லை என்பதை அவரது வக்கீல் அவரிடம் சொல்ல, மேலும் மேலும் கடுப்பாகிப் போனவர், என்ன செய்வதென்ற குழப்பத்தில் ஆழ்ந்தார். அவர் குழப்பத்திற்கு வடிகாலாக, அவர் மகன் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தான்.

என்னதான் அன்று நவீன், ஜெயக்குமாரிடம் பொரிந்தாலும், இன்று பெற்ற தந்தை சிறையில் இருப்பதைப் பார்த்த நவீனுக்கும் வெற்றியின் மேல் பழியுணர்ச்சி பெருகியது. தந்தையும் மகனும் தப்புக்கு மேல் தப்பு செய்யத் துணிந்தனர்.

இவர்கள் இருவரின் எண்ணம் அறியாமல், மேற்கொண்டு ஆக வேண்டிய அனைத்தும் முடித்து விட்டு, வெற்றி அவன் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான்.

வீட்டிற்கு வந்தவனை வாசலிலே வரவேற்ற மயூரா, அவனை நெருங்கி, "டி. வி. பார்த்தேன் மச்சான்... அந்த ஆளு இப்படிப்பட்டவனா...! இதைத் தெரியாம எங்க அப்பா..." என ஆரம்பித்தவளைத் தடுத்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றவன், "எங்கடா அம்மு... வள்ளி போயிட்டாளா...?" என்றவாறு உடையை மாற்ற,

'ஆமாம்!' என்றவாறு தலையை ஆட்டியவள், "ஏன் மச்சான்... அன்னைக்கு மட்டும் நான் அந்த மாதிரிச் செய்யலைன்னா... என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை... எப்படி எங்கப்பா அவரை நம்பினார்...?" என அவள் சொல்லி முடிக்கும் முன் அவள் கண்கள் கண்ணீரை உற்பத்தி செய்ய, அவளை நெருங்கியவன், "மயூ... இப்போ எதுக்கு இந்த அழுகை? கண்ணைத் துடைச்சிட்டுப் போய் ரெடியாகு..." என அதட்டல் போட, அவன் அதட்டலுக்குச் செவி சாய்த்து, மருத்துவ மனைக்குக் கிளம்பினாள்.

இருவரும் கிளம்பி வெளியே வரும் வரை மயூவின் முகம் தெளிவடையாமல் இருக்க, அவள் தோள் பற்றித் தன் பக்கம் திருப்பியவன், "இப்போ எதுக்குடி இப்படி மூஞ்சியை வெச்சிருக்க... என்ன குடிமுழுகிப் போச்சு உனக்கு? அதான் கடவுள் புண்ணியத்துல என்னிடம் வந்து சேர்ந்துட்ட இல்ல... பின் எதற்குப் பழையதை

நினைத்து மனசைப் போட்டுக் குழப்பிக்கிறாய்?" என அவளைக் கடிய, அவள் நடந்தவைகளை ஒதுக்கி விட்டு, அவனுடன் மருத்துவ மனை பயணப்பட்டாள்.

மருத்துவ மனை வரும் வரையிலும் அமைதியாக வந்தவள், மருத்துவரைச் சந்தித்துக் குழந்தையைப் பற்றிய பேச்சில் முன்னதை மறந்தாள்.

தாயும் சேயும் நலமாக இருப்பதாக மருத்துவர் சொல்லி அவர்களை அனுப்பி வைக்க, மனைவியை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான். குழந்தையைப் பற்றிய கதையைப் பேசியபடி வந்த மனைவியிடம், "அம்மு... இன்னைக்கு டின்னர் வெளியே சாப்பிடலாமா?" என்றான். வேகமாக மண்டையை உருட்டியவள், "ஓஹோ... போலாமே!" எனக் குதூகலித்தாள்.

இருவரும் ஒரு பிரபல உணவகத்திற்குச் சென்று உணவை ஆர்டர் கொடுத்து விட்டுக் காத்திருக்க, வெற்றியின் செல்போன் ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை ஒலித்து, இன்றைய நிகழ்வைப் பற்றிக் கேட்க, கடுப்பான மயூரா, அவனிடம் அதைப் பிடுங்கி அணைத்துப் போட்டாள்.

"ஹே... என்ன பண்றே...! ஏதேனும் முக்கியமான கால் வரும்..." என அவளிடமிருந்து அதை வாங்க முற்பட, "ஹலோ... போதும்... இவ்ளோ நாளா வேலை வேலைன்னு பிஸியா இருந்தீங்க இல்ல... இன்னைக்கு நோ கால்ஸ்... நோ வொர்க்... என்னோடதான் டைம் ஸ்பெண்ட் பண்ணணும்..." எனக் கையாட்டி அவள் சொன்ன விதத்தில் அவனுக்குச் சிரிப்பு வர,

"ஓ.கே. மேடம்..." எனச் சல்யூட்டடித்து அவளின் விருப்பத்திற்கு ஆமோதித்தவன், அவளை அருகே நெருங்கி, "அம்மு... நைட் ஓவர் டைம் பார்க்கட்டுமாடா...!" என் ரகசியக் கேள்வி கேட்க,

"நான் ரெடிதான்... இருங்க... டாக்டர் கிட்ட கேட்டுச் சொல்றேன்.." என அவனைச் சீண்ட,

"அம்மா... தாயே... அவங்க கிட்டேயும் என்னைக் காமெடி பீஸாக்கிடாதே! ஏற்கெனவே என்னை டேமேஜ் பண்ணினது பத்தாதா உனக்கு?" என அவன் பயந்து பின் வாங்க, அவனைக் கண்டு ரசித்தவள், "ம்... அந்தப் பயம் இருக்கட்டும்..." என மிரட்டும் தொனியில் சொல்ல, இருவரும் அத்தருணத்தை ரசித்தனர்.

இதுவே அவர்களின் இறுதி சந்தோஷத் தருணம் என்பதை அறியாமல்...

25

வெற்றியின் வீட்டு அழைப்பு மணியை அழுத்தி விட்டு, அவனுக்காகக் காத்திருந்தான் அர்ஜுன். இரண்டு மூன்று முறை மணியை அழுத்திப் பார்த்துப் பதில் இல்லாமல் போக, வெற்றியின் கைபேசி எண்ணை அழைத்து, அந்தப் பக்கம் எடுக்கப்படுவதற்காக அர்ஜுன் காத்திருக்க, அதற்குள் வீட்டுக் கதவு திறக்கப்பட்டது.

கதவு திறக்கப்பட்ட ஒலியில் அர்ஜுன் திரும்பிப் பார்க்க, அங்கு நின்றிருந்தவளைக் கண்டவன், அந்த

நேரத்தில் அவன் எதிர்பார்க்கவில்லை. அதுவும் அவள் முகத்தில் ஏதோ பயமும், பதட்டமும், தெள்ளத் தெளிவாகத் தெரிய, அதை ஆராய்ந்தவாறே, கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தவாறு, "நீ என்ன இந்த நேரத்துல இங்க இருக்க...? இன்னும் நீ வீட்டுக்குப் போகலையா? உனக்கு ஆறு மணியோட வேலை முடிஞ்சிடும்தானே...!" என, வியர்த்து விறுவிறுத்து நின்றிருந்த வள்ளியை வினவி னான்.

"இ... இல்லை... அ... அக்கா கொஞ்சம் வேலை சொன்னாங்க... அதைச் செஞ்சிட்டு இருந்தேன்..." என்றாள் திக்கித் திணறி.

அதே ஆராய்ச்சிப் பார்வையுடன், "மயூ எங்கே...?" என்றவாறு உள்ளே செல்ல எத்தனிக்க, அவனைத் தடுத்து, "அக்காவும், சாரும் வெளியே போயிருக்காங்க..." என்றாள்.

ஏனோ அர்ஜுனுக்கு அவள் பாவமும், பதட்டமும் ஏதோ கதை சொல்ல, "என்னாச்சு...?" என்றான்.

மடை திறந்த வெள்ளம் போல் வள்ளியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

அவள் கண்ணீரைக் கண்டவனுக்கு. உள்ளுக்குள் ஏதோ செய்தாலும் அதை மறைத்து, "இப்போ எதுக்கு இப்படி அழுதுகிட்டு இருக்க...? என்னாச்சு...? முதலில் அதைச் சொல்லு...!" என ஒரு அதட்டல் போட, அந்த அதட்டல் அவளுக்கு மேலும் கண்ணீரை வரவழைக்க,

"இப்போ என்ன நடந்துச்சுன்னு சொல்லப் போறியா இல்லையா...!" என்றான் ஒரு கூவலாக.

"தா.. தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை என அக்கா கிட்ட கொஞ்சம் ப... பணம் வாங்கலாம்னு வந்தேன். அப்போ ரெண்டு மூணு பேர் வீட்டுக்கு வந்து சாரைக் கேட்டாங்க... எனக்குத் தெரியாதுன்னு சொன்னேன். என்னை மிரட்டினாங்க... அ... அவங்களைப் பார்த்தா ஏதோ மாதிரி இருந்தது... எனக்கு ரொம்பப் பயமா இருக்கு... இதைச் சொல்ல சாருக்குப் போன் பண்ணினா, அது சுவிட்ச் ஆஃப்னு வருது... அ... அக்காவோட போனும் வீட்டிலேயே வெச்சிட்டுப் போயிட்டாங்க..." என நடந்தவைகளைத் திக்கித் திணறி ஒருவாறு சொல்லி முடித்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த அர்ஜுனுக்கும் இப்பொழுது பதட்டம் தொற்றிக் கொள்ள, அவனும் வெற்றியின் எண்ணுக்கு அழைக்க, அவனுக்கும் அதே விடையே கிடைத்தது. என்ன செய்வது எனச் சில நொடிகள் யோசித்தவன், உடனே பாஸ்கருக்கு அழைத்து, நடந்தவைகளை முழுவதுமாகச் சொல்லி முடித்தான். அர்ஜுன் சொன்னதைத் தடையில்லாமல் கேட்ட பாஸ்கர் உடனே விரைந்து செயல்பட்டான்.

"மச்சான்... எனக்கு ஐஸ்க்ரீம் சாப்பிடணும் போல இருக்கு..." என்றாள் மயூரா கணவனின் தோள் சாய்ந்து.

"அம்மு... நோ... அது எல்லாம் சாப்பிடக் கூடாது. அப்புறம் உனக்குக் குமட்டும்," என வெற்றி மறுக்க,

"குமட்டாது மச்சான்... ப்ளீஸ்... நான் ஐஸ்க்ரீம் சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சுத் தெரியுமா! ப்ளீஸ்... ப்ளீஸ்..." என்று கணவனின் கன்னத்தைப் பற்றிக் கொஞ்ச, வெற்றி அதைப் பொறுத்துக் கொள்வானா என்ன...

"சரி. இன்னைக்கு மட்டும்தான்... ஓ.கே... என்ன பிளேவர் வேணும்? ஆர்டர் பண்றேன்!" என்றவாறு ஹோட்டல் பணியாளரை அழைக்க, மயூரா தடுத்து, "ஐயோ... இங்க வேண்டாம் மச்சான்... இங்க நல்லாவே இருக்காது. நாம பூமராங் போகலாம்..." என்றாள்.

"ஹ்ம்... இன்னிக்கு ஒரு முடிவோடுதான் இருக்கடி நீ... எல்லாம் ஏற்கெனவே பிளான் பண்ணிட்டியா?" என்ற வெற்றியிடம்,

"சே... சே... இல்ல மச்சான்... இங்க வந்துதான் பிளான் பண்ணினேன்..." என்றாள் இவள் அப்பாவியாக. சிரித்தவாறே சாப்பிட்ட உணவிற்குப் பணத்தைக் கொடுத்து விட்டு இருவரும் எழ, மயூராவை அணைத்துப் பிடித்தவாறே காரைப் பார்க் செய்த இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

முழுமதி அவளது முகமாகும்
மல்லிகை அவளது மணமாகும்
மின்னல்கள் அவளது விழியாகும்
மௌனங்கள் அவளது மொழியாகும்
மார்கழி மாதத்துப் பனித்துளி அவளது குரலாகும்
மகரந்தக் காட்டில் மான்குட்டி அவளது நடையாகும்

அவளை ஒரு நாள் நான் பார்த்தேன்
இதயம் கொடு என வரம் கேட்டேன்
அதைக் கொடுத்தாள்,
உடனே எடுத்துச் சென்று விட்டாள்!

கால்தடமே பதியாத கடல்தீவு அவள்தானே
அதன் வாசனை மணலில்
பூச்செடியாக நினைத்தேன்
கேட்டதுமே மறக்காத
மெல்லிசையும் அவள்தானே
அதன் பல்லவி சரணம் புரிந்தும்
மௌனத்தில் நின்றேன்
ஒரு கரையாக அவள் இருக்க
மறுகரையாக நான் இருக்க
இடையில் தனிமை தளும்புதே நதியாய்
கானல் நீரில் மீன் பிடிக்க
கைகள் நினைத்தால் முடிந்திடுமா
நிகழ்காலம் நடுவில் வேடிக்கை பார்க்கிறதே!

அமைதியுடன் அவள் வந்தாள்
விரல்களை நான் பிடித்துக் கொண்டேன்
பல வானவில் பார்த்தே வழியில்
தொடர்ந்தது பயணம்

உறக்கம் வந்தே தலைகோத
மரத்தடியில் இளைப்பாறி
கண் திறந்தே அவளும் இல்லை கசந்தது நிமிடம்
அருகில் இருந்தாள் ஒரு நிமிடம்
தொலைவில் தெரிந்தாள் மறு நிமிடம்
கண்களில் மறையும் பொய்மான் போல ஓடுகிறாள்
அவளுக்கும் எனக்கும் நடுவினிலே
திரை ஒன்று தெரிந்தது
எதிரினிலே முகமூடி அணிந்தால்
முகங்கள் தெரிந்திடுமா!

ஸ்டீயரிங்கில் தாளம் போட்டவாறு எஃப்.எம்.மில் ஒலித்த பாடலை மெல்ல முணுமுணுத்தவாறு வெற்றி வண்டி ஓட்டிக் கொண்டிருந்தான்.

எப்பொழுதும் மயூராவுடன் இருக்கும்போது வெளியுலகத்திற்காக அணிந்த முகமூடியைக் கலைத்து, அவனின் இயல்புடன் இருப்பான் வெற்றி.

இன்றும் அதே போல அவனுக்குப் பிடித்த பாடலை முதல் முறையாக வெளிப்படையாக ரசித்து முணுமுணுத்துக் கொண்டு வர, காற்றில் பறந்து அவன் முன் நெற்றியில் தவழ்ந்து கலைந்திருந்த தலைமுடியைக் கோதியவாறு அவனின் தோள் சாய்ந்தாள் மயூரா.

அவளுக்கேனோ இன்று கணவன் கைது செய்த அந்த ஜெயக்குமாரைப் பற்றியான சிந்தனையிலேயே

இருந்தாள். அவள் உள்ளுணர்வு ஏதோ அறிவுறுத்த, ஒருவித மனக் குழப்பத்திலேயே இருந்தாள். ஆனால் அதைக் கணவன் முன் காட்டி, அவனின் சந்தோஷத்தைக் கெடுக்க அவள் விரும்பவில்லை. தன் மனதுக்குள் எழுந்த குழப்பத்தை மறைத்துக் கணவனின் தோளில் இன்னும் இன்னும் ஆழமாகப் புதைய, அவனோ, "அம்மு... நேரா வீட்டுக்கே போயிடலாமா?" என்றான்.

அவன் தோளிலிருந்து முகத்தை மட்டும் உயர்த்தி, "ஏன் மச்சான்... டயர்டா இருக்கா?" என்றாள்.

"சேச்சே... நீ இப்படி இருந்தா எனக்கு வண்டி யோட்ட முடியலடா... அப்படியே ஸ்டீயரிங்கை விட்டுட்டு உன்னைக் கட்டிக்கணும் போல இருக்கு..." என அவன் பாவமாகச் சொல்ல, "சே... போங்கப்பா...!" என அவனிட மிருந்து விலக முயல,

"ஹே... அப்படியே இருடி... நல்லாயிருக்கு..." என ஒரு கையால் அவளை வளைத்துத் தன்னருகில் இருத்திக் கொண்டான்.

பேசியவாறே இருவரும் அவள் சொன்ன ஐஸ்க்ரீம் பார்லர் வந்து சேர்ந்திருக்க, "இறங்குடா..." என அழைக்க, "நீங்க வாங்கிட்டு வாங்க மச்சான்... நான் இங்கேயே இருக்கேன்..." என வண்டியிலேயே அவள் அமர்ந்து கொள்ள,

"சரி... நீ இங்கேயே இரு... ஃபைவ் மினிட்ஸ்..." என அவளை விடுத்து, அந்தப் பெரிய ரோட்டைக் கடந்து அந்தப் பக்கமிருக்கும் கடைக்குள் சென்றான்.

சீட்டில் சாய்ந்து எதிரில் வரும் வாகனங்களைப் பார்த்துக் கொண்டிருந்த மயூராவிற்கு, வலது பக்கமிருந்து ஒரு வாகனம் வேகமாக வருவதைப் பார்த்தாள்.

அந்த வாகனம் வேகமாக எதை நோக்கிச் செல்கிறது என்று பார்த்தவளுக்கு, அங்கு கையில் பையுடன் ரோட்டைக் கடக்க நின்றிருந்த வெற்றி தென்பட, மின்னல் வேகத்தில் வண்டியை விட்டு இறங்கினாள்.

அந்த நொடியில் அவளுக்குக் கணவனை எப்படியாவது காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மனத்திலும், மூளையிலும் உரைக்க, சுற்றியிருந்த எதையும் அவள் கவனிக்கவில்லை. தான் ஐந்து மாதக் கருவை வயிற்றில் சுமக்கிறோம்... அது ஒரு வாகனம்... மிகுதியான நான்கு திசைச் சாலை... எதுவும், ஏதும் அவள் கருத்திலும் கவனத்திலும் பதியவில்லை.

இத்தனை வாகனம் நிறைந்த சாலையில் மயூரா திடீரெனத் தன்னை நோக்கி ஓடி வருவதைத் தூரத் திலிருந்து பார்த்த அவன், அவளை வரவேண்டாமெனக் கையசைத்ததை அவள் சற்றும் கவனிக்கும் நிலையில் இல்லை.

வெற்றிக்கு ஏதும் ஆகக்கூடாது என்ற ஒரே நோக்கத்துடன், "வெற்றி... வெற்றி..." என்ற கூவலுடனே அவனை நோக்கி ஓடி வர, வழியில் வந்த வாகனங்கள் வேகமாக வண்டியை நிறுத்தி அவளைத் திட்ட, அவை ஏதும் அவள் காதில் விழவில்லை.

அவள் பாதிச் சாலையைக் கடக்கும் முன், அந்த வாகனம் வெற்றியை நெருங்கியிருக்க, "மச்சாஆஆ..." என்ற கூவலுடன் நடுரோட்டில் மயங்கிச் சரிந்தாள் மயூரா. அதே சமயம் அந்த வாகனம் வெற்றியைக் கடந்து எதிர்த் திசையில் பயணித்து, அவர்களின் காரை இடித்து விட்டு நிற்காமல் சென்றிருந்தது.

கண் இமைக்கும் நொடியில் நடந்த இந்த நிகழ்வைத் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்த வெற்றியின் மனமும், மூளையும் செயலிழக்க, அப்படியே சமைந்து நின்றான்.

அதற்குள் மயூவைச் சுற்றிக் கூட்டம் கூடியிருக்க, வெற்றியின் அருகிலிருந்தவரும் அவனைக் கடந்து வேடிக்கை பார்க்க அங்கு ஓடினார். அவரின் ஓட்டத்தில் உணர்வுக்கு வந்த வெற்றி, மயூராவை நோக்கி விரைய, அவள் இருந்த கோலம் அவனை மேலும் மேலும் வதைக்கச் செய்தது.

வந்த வேகத்தில் அவள் கண்கள் மயங்க, சாலையின் நடுவிலிருந்த டிவைடரில் கால் தடுக்கி அப்படியே முன் குப்புறச் சரிந்ததில், மயூராவின் தலை யிலும் கையிலும் நல்ல காயம் ஏற்பட்டிருந்தது.

நெற்றியில் வழிந்த ரத்தத்தோடு அவள் கிடந்தது, அவன் மனதில் இரத்தத்தை வரவழைக்க, அவளை எழுப்பித் தன் மடியில் கிடத்தி, அவள் கன்னம் தட்டினான்.

"அம்மு... மயூ... மயூ... எழுந்திரு மயூ... எழுந்திருடா... ஹையோ... அம்மு... நான் என்ன

பண்ணுவேன்...!" என்ற அவனின் எந்த அழைப்புக்கும் அவளிடமிருந்து பதில் இல்லாமல் போக, அவளைத் தன் நெஞ்சோடு சேர்த்தணைத்தான்.

"அம்மு... எழுந்திருடி... ஐயோ... முடியலையே... எழுந்திரு அம்மு... உனக்கு ஒண்ணும் இல்லைதானே...! அம்மு, ரத்தம் வருதுடா..." என அவள் நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் தன் சட்டையில் துடைக்க முயல, அது துடைக்கத் துடைக்கப் பெருகியது.

அந்த நொடியில் அவன் ஒரு பெரிய பதவியில் இருக்கும் போலீஸ்காரன் என்பது ஏதும் அவன் கருத்தில் பதியவில்லை. தான் அவள் கணவன், அவள் தன் உயிர் என்பது மட்டுமே மனதில் இருக்க, மயூராவின் நெற்றியில் வழிந்த ரத்தத்தை விட, அவன் கண்ணை மறைத்துக் கண்ணீர் பெருகியதை அவன் துடைக்க முயலவில்லை.

கூட்டத்தில் ஒருவர், "யாராவது ஆம்புலன்ஸுக்குக் கூப்பிடுங்க..." என்று குரல் கொடுக்க, அந்த ஒருவனுக்கு ஆம்புலன்ஸ் அழைக்க மனது வரவில்லை.

அந்தக் குரலில் வெற்றிக்கும் நடக்க வேண்டியது தெரிய, ஆம்புலன்ஸுக்கு அழைக்கப் போனைத் தேட, அது அவன் பாக்கெட்டில் இல்லை. மயூராதான் அதை அணைத்து வண்டியில் போட்டிருந்தாளே...!

"போ... போன்... போன் கொடுங்க..." என அவன் கூட்டத்தைப் பார்த்துக் கேட்க, ஒருவர், "இருங்க சார்... நானே ஆம்புலன்ஸுக்குக் கூப்பிடுறேன்..." என்றவாறு அழைக்க, சில நிமிடங்களில் ஆம்புலன்ஸ் விரைந்து

வந்து, வெற்றியையும், மயூராவையும் ஏற்றிக் கொண்டு அது பறந்து நேராக வரதராஜனின் மருத்துவ மனையில் நின்றது.

அந்த நாளின் வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்ப வெளியே வந்த வரதராஜனுக்கு, பதட்டமாக வெற்றி ஆம்புலன்ஸிலிருந்து இறங்குவதைப் பார்த்து அவன் அருகில் வந்து, "என்னாச்சு...?" என்றவாறு பார்க்க, மயூரா அங்கு இரத்தம் வழிந்த கோலத்தில் கிழிந்த நாராகப் படுத்திருந்தாள்.

அவளை இந்த நிலையில் கண்ட அவரும், ஒரு நொடி அதிர்ந்து, பின் ஒரு மருத்துவராக அவரின் கடமையைச் செய்ய, செவிலியர்களை அழைத்து, அனைவருக்கும் வேலையை ஏவி, அவளை அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் சென்றார்.

செவிலியர்களும், டாக்டரும் அந்த அறையில் குழுமியிருக்க, வெற்றிக்கு நடப்பது அனைத்தும் கனவாக இருக்கக் கூடாதா என்று எண்ணி எண்ணி மறுகினான்.

அந்த அறையின் வாசலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு இன்னமும் கண்களில் கண்ணீர் நின்றபாடில்லை.

யாரும் கேட்பாரின்றி கலைந்த முகத்துடனும், கசங்கிய மனதுடனும் கனவில் அவளுடன் பேசிக் கொண்டிருந்தான்.

'அம்மு... வந்துருடா... என்னிடமே வந்துரு அம்மு... நீ... நீ இல்லை என்றால் நான் இந்த உலகத்தில்

வாழ்வதற்கே அர்த்தமில்லையடி... வந்துரு... என் உயிருடன் என்னிடம் வந்து விடடி...'

'ஏன்டி... ஏன் அம்மு இப்படி ஓடி வந்தாய்? ஹையோ கடவுளே... எப்படியாவது அவளை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடு...'

'அறியாத வயதில் தந்தையை இழந்தேன்... வளர்ந்த பின் அன்னையை இழந்தேன்... அனைத்தையும் இழந்து, இனி எனக்கேது வாழ்க்கை என நான் தனிமைப் பட்ட சமயம், இவளை என் கண் முன்னால் நிறுத்தி, இவளுக்காகத்தான் என்றாய்... ஆனால், இன்று அதையும் பறித்துக் கொள்ளாதே! நிச்சயமாக என்னால் அந்த இழப்பைத் தாங்க முடியாது. என்ன செய்தேனும் அவளை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடு ஆண்டவா...!' அவன் மனமுருகிக் கடவுளிடம் சரணடைய, கடவுளுக்கு இன்னமும் அவனைச் சோதித்துப் பார்க்கத் தோன்றியது போலும்...!

அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து வெளியே வந்த வரதராஜன், அங்கே சோர்ந்து அமர்ந்திருந்த வெற்றியைக் காண்கையில், அவரின் மனமும் சொல்லொணா வருத்தத்தை ஏந்தியிருந்தது.

அவரும்... 'வெற்றியும், மயூராவும் வாழ்ந்த வாழ்வைத் தன் மகன் அர்ஜுனின் வழியே அறிந்தவ ரன்றோ... வெற்றியின் புகழைத் தினமும் அவன் வீட்டில் தவறாமல் படித்து விடுவானே... இன்று கூடக் காலையில் இவன் செய்த செயலைப் பெருமையாகச் சொல்லியபடியே

இவனைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றானே...' என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

அவன் இருந்த நிலையைக் கண்டவருக்கு, காலையில் கம்பீரம் குறையாத முகத்துடன் பேட்டி கொடுத்தவன், சில மணி நேரங்களில் அதே கம்பீரம் முற்றிலும் தொலைந்து, கலைந்து, ஓய்ந்த முகத்துடன் இருப்பதைப் பார்த்தவருக்குத் தான் சொல்லப் போகும் செய்தியைக் கேட்டால் அவன் தாங்கிக் கொள்வானா என்ற சந்தேகம் கூட இப்போது எழுந்தது. இருந்தாலும், நிஜத்தைச் சொல்லியே ஆக வேண்டும் என்ற நிதர்சனம் புரிய, அவன் அருகில் சென்றார்.

தன் கண் முன்னே ஒரு உருவம் நிற்பதைக் கூடக் கவனிக்கும் நிலையில் அவன் இல்லை. கண்கள் மட்டும் விழித்திருக்க, மனமோ மயூராவிடம் பேசிக் கொண் டிருந்தது.

"வெற்றி... வெற்றி..." என வரதராஜன் அழைத் ததற்கு, அவனிடம் பதிலில்லாமல் போக, அவன் தோள் தொட்டு அழைத்தார்.

அவரின் தொடுதலில் விலுக்கென எழுந்து அமர்ந் தவன், "ம... ம... மயூ..." என அவன் உதடு அவள் பெயரை உச்சரிக்கத் தினற,

அவன் தோளைப் பற்றி அழுத்தி, "வெற்றி... ரிலாக்ஸ்.." என அவனைச் சாந்தப்படுத்த முயன்றார்.

"வெற்றி... நான் சொல்லப் போறதைக் கேட்க, கொஞ்சம் மனசைத் திடப்படுத்திக்கோங்க..." என அவர் சொல்ல, அடுத்த ஒரு சில நொடிகளில் வெற்றியின் மனது ஏகத்துக்கு எகிறியது.

"ஐயோ... சீக்கிரம் சொல்லுங்க..." என அவன் மனம் அறைகூவலிட, அதை வாய் வழியே சொல்லத் திணறினான்.

"மயூ... மயூவுக்கு..." என அவர் தயங்க,

"மயூவுக்கு... மயூவுக்கு என்னாச்சு...! சொல்லுங்க..." என அவர் கையைத் திடமாகப் பற்ற,

மூச்சை ஆழ உள்ளிழுத்து வரதராஜன், "மயூவுக்கு அபார்ஷனாயிடுச்சு..." என்று முடிப்பதற்குள் அவன் அப்படியே சுவரில் சாய்ந்து மடங்கிச் சரிந்தான்.

26

"வெற்றி... வெற்றி... நீங்க கொஞ்சம் தைரியமா இருக்கணும். நீங்களே இப்படி உடைஞ்சு போனா... மயூவை எப்படிச் சமாளிப்பீங்க?" என வரதராஜன் தளர்ந்து சரிந்த வெற்றியைத் தேற்ற முயற்சி செய்ய...

வெற்றியோ கண்களை இலக்கின்றி பதித்துக் கொண்டு மனதினில் கடவுளிடம் பேசிக் கொண்டிருந்தான்.

அவன் மனம் கடவுளிடம் சண்டையிட்டுக் கொண்டிருந்தது. தான் மயூவைத் திருப்பித் தருமாறு

கேட்டது போல் அவர் மயூவை மட்டுமே அவனிடம் திருப்பிக் கொடுத்திருந்தார்.

ஒருவேளை தான் மயூவுடன் தன் மகளுக்காகவும் மன்றாடியிருக்க வேண்டுமோ... ஐயோ என் குழந்தை... என்னால்தான் மயூ இப்படி இருக்கிறாள். என்னால்தான் நான் என் குழந்தையை இழந்தேன்... என விதி செய்த தவறுக்குத் தன்னையே நொந்து கொள்ள... அவன் மனம் வெதும்பக் கண்களில் கண்ணீர் சொறிந்தான்.

அவனின் உணர்வற்ற முகத்தைப் பார்த்து அதிர்ந்த வரதராஜன், அவனின் தோளைப் பற்றிப் பலமாக உலுக்கி, "வெற்றி... முதல்ல நீ எழுந்திரு," என அவனை இருக்கையை விட்டு எழுப்பியவர்,

"வெற்றி, நடந்தது எல்லாம் நடந்துடுச்சு. நடந்ததை நினைச்சு நீயும் வருத்தப்பட்டு மயூராவையும் வருத்தப்பட வைக்காதே. உன்னாலே இந்த விஷயத்தைத் தாங்க முடியவில்லை என்றால் மயூ இதை எப்படித் தாங்கிக் கொள்வாள்....

"எனக்குத் தெரியும். இது மிகப் பெரிய இழப்புதான். ஆனால், முதலில் உன்னைத் திடப்படுத்திக் கொள். அப்போதுதான் நீ அவளுக்கு ஆறுதலளிக்க முடியும். ஒரு பெரிய ஆபத்திலிருந்து அவள் மீண்டு வந்திருக்கிறாள். இனி நீதான் அவளை ஒரு கண்ணாடிப் பாத்திரம் போல் பார்த்துக் கொள்ள வேண்டும். புரிந்ததா!" என வரதராஜன் ஒரு மருத்துவராக அதே சமயம், தன் மகள் ஸ்தானத்தில் இருக்கும் மயூவிற்கு ஒரு தந்தையாகவும் பேசினார்.

அவர் சொன்னதில் உண்மையிருக்க... வெற்றி தன் துயரிலிருந்து மீண்டு வர முயற்சி செய்தான்.

முயன்று வரவழைத்த குரலில், "ம்... நா... நான்... நான் மயூவைப் பார்க்கணும்..." என அவனுக்கே கேட்காத குரலில் அவன் இயம்ப,

அவன் கேட்டதைப் புரிந்து கொண்டு, "இப்போதான் ஆபரேஷன் முடிஞ்சிருக்கு வெற்றி. இன்னும் கொஞ்ச நேரத்தில் தனியறைக்கு..." என அவர் முடிக்கும் முன் வெற்றியின் கண்களில் தெரிந்த கெஞ்சல் அவரை மேலே பேச விடாமல் செய்ய,

"ஓ.கே. வெற்றி. போய்ப் பார்த்துட்டு வாங்க. அவள் இப்போ மயக்கத்தில்தான் இருக்கிறாள். மயக்கம் தெளிய எப்படியும் ஆறு மணி நேரம் ஆகிவிடும்..." என அவனை அனுப்பி வைக்க வேக நடையிட்டுத் தன் உயிரைக் காண விரைந்தான்.

வேகமாகக் கதவைத் திறந்து உள்ளே சென்ற வெற்றி, அங்கு முள் பட்டு கிழிந்த ரோஜாவைப் போல் மயூரா சுருண்டு படுத்திருக்க... அவன் மனம் வாள் கொண்டு அறுத்ததைப் போல் வலித்தது.

"அம்மு..." என்ற கூவலுடன் அவளை நெருங்கினான்.

"சார்... மெதுவா சார்... பேஷண்டைத் தொந்தரவு செய்யாதீங்க!" என அங்கிருந்த ஒரு செவிலிப் பெண் அதட்டல் போட... வெற்றியின் அதரம் மூடிக்கொள்ள மௌனமாகக் கண்ணீரைப் பொழிந்தான்.

அவனின் காவல்துறை வாழ்க்கையில் இதைவிடப் பெரிய கொடுமைகளை அவன் பார்த்திருக்கிறான்தான். தங்கள் உறவை இழந்த துயரத்துடன் பல பெண்மணிகள் வயிற்றில், வாயில் அடித்துக் கொண்டு கதறி அழுததைப் பார்த்திருக்கிறான். ஆனால் அதுவே தனக்கென்று வரும்போதல்லவா இழப்பின் வலி புரிகிறது. அந்த வலியைச் சுமந்து கொண்டு மயூராவின் வயிற்றில் பதிந்திருந்த கையைப் பற்றினான். இதே வயிறு சிறிது நேரம் முன்னால் வரையிலும் தன் மகவைச் சுமந்திருந்த தல்லவா!

இயல்பிலே அழகியான மயூரா, தாய்மையின் பூரிப்பில் மேலும் அழகாகத் தெரிந்தாளே... ஆனால் எல்லாம் சில மணித்துளிகளில் முடிந்து விட்டதே...!

பல குடும்பங்களைக் காவல் காத்து வந்தவனுக்குத் தன் குடும்பத்தைத் தான் அரணாக இருந்து பாதுகாக்கத் தவறி விட்டோமே... என்பதை நினைக்க நினைக்க அவனால் நடந்தவைகளை ஜீரணிக்க முடியவில்லை.

நடந்த எல்லாவற்றிற்கும் தான்தான் முழுக் காரணம் என வெற்றி தீனமாக எண்ணிக் கொண்டான். எத்தனை கனவுகள், எத்தனை கதைகள்... தன் மகவைப் பற்றி.

"அம்மு, எனக்கு ரெண்டு பாப்பா வேணும்டி... நீயும் உங்க வீட்ல ஒரே பெண். நானும் ஒற்றை மரம். நாமும் ஒன்றுடன் நிறுத்திக் கொள்ளக் கூடாது..." என வெற்றி, அவளின் மடியில் படுத்துக் கொண்டு கொஞ்சியபோது,

"என்னது... ரெண்டு போதுமா! எனக்கு மூணு வேணும் மச்சான். மூணு பேரும் உங்களை மாதிரி..." என அவன் மூக்கைப் பிடித்தாட்டிய மயூரா,

"அம்மு... எல்லாரும் அவங்க அவங்க அம்மா மாதிரிதான் தன் குழந்தை இருக்கணும்னு நினைப்பாங்க. எனக்கு அப்படி இல்லை. எனக்கு உன்னை மாதிரித் தான்டா வேணும். உன்னோட குறும்பு, உன்னுடைய குழந்தைத் தனம், என்னுடன் நீ போடும் செல்லச் சண்டை களுடன்... உன்னுடைய அன்பும், அரவணைப்பும்... அதற்கு மேல் உன்னுடைய தைரியம்... எனக்கு நீயேதான்டா பிறக்கணும்... குமரியா உன்னை என் நெஞ்சில் சாய்க்கணும். குழந்தையா என் மகளை மடியில் கொஞ்சணும்..." என ஒரு நாள் அவள் கன்னம் பற்றி அவன் உணர்ந்து சொன்னபோது, அவள் அவனுள் முற்றிலுமாகத் தொலைந்தாளே...!

குழந்தையைத் தன் கையில் ஏந்தும் அந்நொடி யிலிருந்து அவள் தவழும் முதல் தினம் முதல் அவள் நடை பயின்று, பள்ளி சென்று, குமரியாகித் திருமணம் முடித்துக் கொடுக்கும்வரை இருவரும் எத்தனை எத்தனை கனவுகளை வளர்த்து வைத்திருந்தார்கள். எல்லாம்... எல்லாம் ஒரு நொடியில் சிதைந்ததை நினைக்க நினைக்க அவன் மனம் கனத்தது.

அவளின் வலது கையில் பெரிய கட்டு போட் டிருந்தது. இடது கையின் நரம்பில் ஊசியில் மருந்தேறிக் கொண்டிருக்க... அவளின் தலையை வருடினான்.

தலையிலும் பெரிய கட்டுகளுடன் அவள் படுத்திருக்க... அவள் விழி மலர்ந்ததும் அந்நொடிக்காகக் காத்திருந்தான் வெற்றி.

ஒவ்வொரு நொடியும் ஒரு யுகங்களாகக் கழிய... அவளை விட்டு அவன் பார்வை இங்கும் அங்கும் நகராமல், அவளிடமே பதிந்திருக்க...

அங்கிருந்த அந்தச் செவிலிப் பெண்ணுக்கே அவனைக் கண்டு பாவமாகிப் போனது.

அவனின் அந்த நிமிடமெல்லாம் மனது, "மயூ... அம்மு..." என்ற அவள் பெயரை மட்டுமே ஜெபமாக ஒலித்துக் கொண்டிருக்க...

இந்நிலைக்கு அவளைத் தள்ளியவர்களைப் பற்றி யான சிந்தனை ஏதும் எழவில்லை என்பதைவிட, அவன் மனத்திலும் மூளையிலும் பார்வையிலும் மயூரா மட்டுமே குடியிருந்தாள்.

"அப்பா... மயூவுக்கு என்னாச்சு?" என மூச்சை இழுத்து விட்டவாறே அங்கு ஓடி வந்தான் அர்ஜுன். கூடவே பாஸ்கரனும் இருந்தான்.

மயூராவிற்குச் சிகிச்சை அளித்தபின் வரதராஜன் அர்ஜுனை அழைத்து விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி வரச் செய்தார்.

இந்தச் செய்தியைச் சொல்ல செல்வமணிக்கு அழைக்க.... அவரின் எண் கிடைக்கவில்லை. சரி, ராஜிக்கு அழைத்துப் பேசலாம் என நினைத்தவருக்கு,

அந்த எண்ணும் கிடைக்காமல் போக... செல்வமணியின் பி.ஏ.விற்கு அழைக்க செல்வமணி ஏதோ விமானப் பயணம் மேற்கொண்டிருப்பதாகப் பதிலளித்தார்.

அதற்கு அவர் பயணம் முடிந்ததும் தவறாமல் தன்னைத் தொடர்பு கொள்ளும்படியும், ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டுமென்றும் சொல்லி வைக்க...

அந்த நிமிடம்தான் அர்ஜுனும், பாஸ்கரனும் அங்கு வந்து சேர்ந்திருந்தனர்.

"அவளுக்குச் சின்ன ஆக்சிடென்ட் அர்ஜுன்..." என்றவர் சிறு இடைவெளி விட்டு, "அவளுக்குக் கரு கலைஞ்சுடுச்சுப்பா..." என முடிக்க,

அர்ஜுனுக்கும் அந்தச் செய்தி மிகவும் அதிர்ச்சி யளித்தது.

"ஐயோ... அப்பா... வெற்றியும் மயூவும் எவ்வளவு எதிர்பார்ப்போட இருந்தாங்க தெரியுமா...?" எனத் தந்தை யிடம் தன் ஆதங்கத்தை வெளியிட்டவன், "அண்ணா, எங்கப்பா?" என்றான்.

அவனுக்குத் தெரியும், மயூவைத் தன் கண்ணின் இமையாகப் பார்த்திருக்கும் வெற்றிக்கு இந்தச் செய்தி பேரிடி என்பது. நிச்சயமாக மயூவின் இந்த நிலை அவனை நிலைகுலையச் செய்திருக்குமென்று.

"எமர்ஜென்சி வார்டில்தான் இருக்கார். ரொம்பவும் ஒடஞ்சுப் போயிட்டாரு, அர்ஜுன். அவர் முகமே மனதின் வலியைப் பிரதிபலிக்குது. உன்னைப் பார்த்தால் கொஞ்சம்

தெளிவாருன்னுதான் கூப்பிட்டேன். ஆமாம் எப்படி இது நடந்தது? நீ அவர் வீட்டுக்குத்தானே போன...?" என அவர் நடந்ததைப் பற்றி விசாரிக்க,

"ஆமாம்ப்பா. அண்ணா வீட்டில் அந்த ஜெயக் குமாரின் ஆட்கள் வந்து விசாரிச்சதா அவங்க வீட்டில் வேலை செய்த பொண்ணு சொல்லுச்சு. அண்ணாவோட போனும் ஸ்விட்ச் ஆஃப்னு வந்ததால் நான் பாஸிடம் சொன்னேன்.

"வெற்றி அண்ணாவோட போன் கடைசியா ஆர்.எஸ்.புரம் ஏரியாவில்தான் சுவிட்ச் ஆஃப் ஆச்சுன்னு ட்ரேஸ் பண்ணி... அங்கே போனா அங்கிருந்து இவங்க கிளம்பியிருந்தாங்க. எல்லாம் அந்த ஜெயக்குமாரும், அவர் மகன் நவீனும்தான்ப்பா..." என நடந்தவைகளைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தவன்,

"நான் இப்போ மயூவைப் பார்க்கலாமாப்பா..." என அனுமதி கேட்க,

"அவள் இப்போ எமர்ஜென்சி வார்டில் இருக்கிறாள் அர்ஜுன். இன்னும் கொஞ்ச நேரத்தில் ரூமிற்கு மாற்றிடு வோம். வெற்றி அங்கேதான் இருக்கார். அவரைக் கொஞ்சம் தேற்று அர்ஜுன்... அவரே இப்படி இருந்தால் மயூராவைத் தேற்றுவது ரொம்பக் கஷ்டம்ப்பா!" என்றார்.

"சரிப்பா. நான் பார்த்துட்டு வர்றேன்..." எனத் தந்தையிடமிருந்து விடைபெற்று மயூராவைக் காணச் சென்றான்.

அங்கே கதவில் தெரிந்த சிறு தடுப்பின் வழியே உள்ளே பார்த்தவன், முகத்தில் எந்த உணர்ச்சிகளையும் காட்டாது பார்வையை மயூவின் மேல் பதித்து, அவள் கையைத் தன் கன்னத்தில் பதித்திருந்த வெற்றிதான் கண்ணில் பட்டான்.

எத்தனை எத்தனை சாதனைகள் செய்தாலும் ஒரு ஆண் மகன் தன் தாயிடமும், தாரத்திடமும் குழந்தைதானே...!

அர்ஜுனுக்குத் தன் உயிருக்கினிய தோழிக்கும், தன்னை உண்மையாகவே சகோதரனாக நினைக்கும் வெற்றிக்கும் இப்படி ஒரு சோதனையும், வேதனையும் அளித்த அந்தக் கடவுளைத் திட்டுவதைத் தவிர வேறொன்றும் தோன்றவில்லை.

ஆனாலும் நடந்தவைகளை எண்ணி விதியையும் சதியையும் சாடிக் கொண்டிருக்காமல், நடக்கவிருப்பதைப் பார்ப்போம் என்றெண்ணி வெற்றியை அழைக்க உள்ளே சென்றான்.

செவிலிப் பெண் அர்ஜுனைக் கண்டு கொண்டவர், அவன் அருகில் வந்து, "சார்... அவரைக் கொஞ்சம் வெளியே அழைத்துச் சென்று ஆறுதல் சொல்லுங்க சார்... அப்போ இருந்து இப்படியேதான் இருக்கார்..." என வெற்றிக்காகப் பேச...

அதை ஆமோதித்த அர்ஜுன், வெற்றியின் அருகில் வந்து தோளைப் பற்றினான்.

அர்ஜுனின் தொடுதலை உணர்ந்தாலும் ஒரு நொடிகூடப் பார்வையை மயூராவை விட்டு விலக்க அவன் விரும்பவில்லை.

அதைப் புரிந்து கொண்ட அர்ஜுன், மெல்லியதான குரலில், "அண்ணா... ப்ளீஸ். நீங்க இப்படி இருப்பதை நிச்சயமாக மயூ விரும்ப மாட்டாள். அவள் விழிக்கும்போது உங்கள் முகத்தில் இத்தனை வலியைக் கண்டால் அவளுக்கு மேலும் அது வேதனையைக் கொடுக்கும். கொஞ்சம் வெளியே வந்து ஏதாவது குடிங்கண்ணா..." என்ற அர்ஜுனின் வார்த்தையில் உண்மையிருக்க... மனமே இல்லாமல் அவளிடமிருந்து விலகினான்.

அதற்குள் பாஸ்கர் குடிப்பதற்கு ஹாஸ்பிடல் கேன்டீனிலிருந்து காபி வர வைத்திருக்க... அதை அவன் கையில் திணித்தான் அர்ஜுன்.

அதை கையில் வாங்கியபோதும் அதைக் குடிக்கத் தோன்றாமல் மயூவின் ஞாபகம் வந்து இம்சை செய்தது.

ஒரு நாள் அவள் எப்பொழுதுமே பாலை மட்டுமே குடிக்கிறாள் என விளையாட்டிற்குக் காப்பியை அவளின் பாலுக்குப் பதிலாக மாற்றி வைத்து, அதை அவள் குடித்து,

"அய்ய...சீ... என்ன மச்சான்... பால் இப்படிக் கசக்குது..." என அவள் கண்ணைச் சுருக்கிச் சொன்ன விதத்தில் அவன் விழுந்து விழுந்து சிரித்தது ஞாபகம் வர, மீண்டும் அவன் கண்கள் வேதனையைச் சுமந்தது.

அந்தக் காப்பியைக் குடிக்கத் தோன்றாமல் அவன் அப்படியே வைத்திருக்க... ஒரு கட்டத்திற்கு மேல் அர்ஜுனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

ஆண் மகனுக்கும் கண்ணீர் வருமென்றாலும் வெற்றி அவன் அன்னையின் மறைவின்போது கூட இப்படி நிலைகுலைந்ததில்லை. எப்பொழுதும் ஒரு கடினத்துடனும், முகத்தில் இறுக்கத்துடனும் இருப்பவன். ஆனால் அவனே மயூராவின் விஷயத்தில் இப்படிப் பலமிழந்திருப்பான் என அவனை அறிந்த பாஸ்கரன் சற்றும் நினைத்துப் பார்க்கவில்லை.

காப்பியை மறுத்து விட்டு மீண்டும் அவளருகில் வந்து அவள் முகம் பார்த்து அமர்ந்திருக்க...

அவனுக்குள், அவள் கண் விழித்ததும்... எப்படித் துடிப்பாளோ... கதறுவாளோ... தன் சட்டையைப் பிடித்து, 'ஏன்டா என் குழந்தையை நீ காப்பாற்றவில்லை...' எனத் தன்னைக் கேள்வி கேட்பாளோ என நினைத்து, அவள் விழிக்கும் நொடிக்காகக் காத்திருந்தான் வெற்றி.

எப்படி அவளின் வேதனை நிறைந்த முகத்தைத் தான் சகித்துக் கொள்ளப் போகிறோமோ எனப் பயந்தான் அவன்.

உண்மையான பாசமிகுந்த அனைத்து நல்ல உள்ளங்களும் மயூராவின் மொட்டு விழிகள் மலரக் காத்திருந்தன. அவளும் கண் விழித்தாள். அவனின் எண்ணத்தையும், பயத்தையும் பொய்யாக்கியபடி!

சுயநினைவு அடைந்த மயூராவிற்குக் கண் விழிக்கும் முன்னே தலையில் ஏதோ பாரம் ஏற்றியது போல் வலிக்கத் துவங்க... வேதனையாக முகத்தைச் சுழித்தாள். ஆனால் அவளால் கண்ணை மட்டும் பிரித்தெடுக்க முடியாமல் மீண்டும் உறக்கத்திற்குச் செல்ல... அவளையே பார்த்துக் கொண்டிருந்த வெற்றிக்கு அவளின் மூடியிருந்த கண்களின் கருமணி அசைவும், முகத்தின் சுருக்கத்தைப் பார்த்து அருகிலிருந்த செவிலிப் பெண்ணை அழைத்தான்.

அவரும் உடனே டாக்டரிடம் தகவல் கொடுக்க... வந்து பரிசோதித்த இரவு நேர மருத்துவர் அவள் மயக்கம் தெளிந்து உறக்கத்தில் இருப்பதாகச் சொல்லவும்... வெற்றியின் மனது நிம்மதியடைந்தது.

அவளை அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து தனியறைக்கு மாற்றினர்.

அப்பொழுதும் வெற்றி அவளை விட்டு ஒரு நொடி கூட நகரவில்லை. இரவு முழுவதும் ஒரு விநாடி கூட உறங்காமலும், தாகத்திற்குத் தண்ணீரைக் கூட அருந்தாமல் இருந்த வெற்றியை யாராலும் சரிக்கட்ட முடியவில்லை.

பாஸ்கர் தான் வீட்டுக்குச் சென்று வருவதாகச் சொல்லிச் செல்ல, அர்ஜுன் வெற்றியிடம் ஏதேனும் வேண்டுமென்றால் அழைக்கும்படிச் சொல்லி விட்டுத் தன் தந்தையின் அறையில் இருந்து கொண்டான்.

விடிகாலையில் துயில் கலைந்த அர்ஜுன் வெற்றிக்குக் குடிக்க காப்பியும், சுடுதண்ணியும் எடுத்துக் கொண்டு வரும் வேளை மெல்ல கண் விழித்த மயூரா, தன் அருகில் தன் கையைப் பற்றியவாறு களையிழந்த முகத்துடன் கண்களில் கண்ணீருடன், "அம்மு..." என விளித்த கணவனை இமை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்மூடும் நொடி அவனுக்கு என்னமோ ஏதோவென்று மயங்கிச் சரிந்தவள்... இப்போது அவன் தன் கண் முன்னே உயிருடன்... ஆனால் க்ண்களில் உயிரில்லாமல் அமர்ந்திருப்பது அவளுக்கு மகிழ்ச்சியும், வருத்தத்தையும் ஒன்றாகக் கொடுத்தது.

கணவனின் நலனை அறிந்து கொண்டவள், அப்பொழுதுதான் தன்னிடம் ஏதோ குறைகிறது என்பதை நினைத்தவளுக்கு... உண்மை நெஞ்சில் வலியைக் கொடுத்தது.

ஒரு நொடிதான்... அந்த வலியைக் கண்டு கொண்ட வெற்றி, "அம்மு..." என வெடித்தான்.

"அம்மு... அம்மு... நம்ம பாப்பாடா... என்னாலதான். என்னால்தானடா உனக்கு இந்த நிலைமை... ஐயோ அம்மு... வலிக்குதாடா?" என அவள் கையை இறுக்க மாகப் பற்றிக் கொண்டு அவன் கண்ணீர் சொரிய... அவனைச் சமாதானப்படுத்த அருகில் வந்த அர்ஜுனைக் கண்களால் தடுத்த மயூரா, அவன் அழுது ஓயும்வரை காத்திருந்தாள்.

இருவரின் பாசப் போராட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுன் மௌனமாக அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் நிற்காமல் அழுது கொண்டிருக்க, "வெற்றி..." என்ற அவள் குரலில் அப்படி ஒரு அழுத்தம். அவளுக்குத் தெரியும், தனக்கு ஒரு சின்னத் தலைவலி, காய்ச்சல் என்றாலே பதறித் துடிப்பவனுக்குத் தான் இப்படிப் படுத்திருப்பது எத்தனை பெரிய வேதனையை அளிக்குமென்று அவள் புரிந்திருந்தாள்.

அந்தப் புரிதலுடன் அவள் குரல் கொடுத்த அழுத்தத்தில், தன் கண்ணீரை நிறுத்தி, "அம்மு... நம்ம பாப்பாடா. எல்லாம் முடிஞ்சுது அம்மு..." என்றான்.

மயூரா கணவனின் கண்ணை நேராகச் சந்தித்தாள்.

அவள் பார்வை வீச்சில் அப்படி ஒரு சக்தியிருக்க... அதே சக்தியைக் குரலில் கொண்டு வந்து, "வெற்றி... நமக்கு இத்துடன் வாழ்க்கை முடியலை. இன்னும் உங்களுக்கு எத்தனை குழந்தை வேணும்... நான் பெத்துத் தர்றேன். முதலில் உங்க அழுகையை நிறுத்துங்க..." என்றாள்.

அவளின் கம்பீரமான குரலும், உறுதியும் வெற்றியை அசைத்துப் பார்த்தது.

உண்மை தெரிந்ததும், அவள் கதறி அழுவாள். தன்னால்தான் இது நடந்ததென்று துடிப்பாள் என என்னென்னவோ எண்ணி வைத்த வெற்றிக்கு, மயூராவின் இந்தப் பேச்சு அவனை அசைத்துப் பார்த்தது.

எத்தனை பெரிய விஷயம்... ஒரு பெண் அவள் கருவாகத் தன் மகவை ஐந்து மாதம் தன் வயிற்றில் சுமந்து அதை இழந்திருக்கிறாள் என்றால் அது எத்தனை பெரிய துன்பம்... அதை மறந்து தன்னைச் சமாதானப் படுத்துகிறாள் என்றால் எத்தனை பெரிய மன உறுதியை அவள் கொண்டிருக்க வேண்டும்.

"அம்மு... உனக்குக் கஷ்டமா இல்லையா? எத்தனை கனவு கண்டு வைத்திருந்தோம். எல்லாமே போச்சேடா..." என அவன் வேதனையாகக் கேட்க,

"எதுக்குக் கஷ்டப்படணும்? டாக்டர் என்ன நமக்குக் குழந்தையே பிறக்கவே பிறக்காதுன்னு சொன்னாங்களா?" என அதே குரலுடன் அவள் கேட்டதற்கு, அவன் மறுப்பாகத் தலையசைக்க... "பின்ன எதுக்கு வேதனைப்படணும்? நம் கனவு ஏதும் கலையலை மச்சான்... நமக்கு நாம ஆசைப்பட்ட மாதிரியே குழந்தை பிறக்கும்..." என உறுதியாக மொழிந்தாள்.

தான் ஆணாக இருந்தும் இந்தத் துன்பத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றால் அவளால் இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஆனால் அந்த வேதனையைச் சிறிதும் முகத்தில் காட்டாமல் அவள் பேசிய விதம் அவனை அசைத்துப் பார்த்தது. தான் இரும்பு மனம் கொண்டவன் என்று நினைத்தவனுக்கு இப்பொழுது அவள்தான் இரும்பு மனுஷியாகத் தெரிந்தாள்.

அவளைக் கண் இமைக்க மறந்து பிரமிப்பாகப் பார்த்து அமர்ந்திருந்தான்.

27

மயூராவின் சிகிச்சை ஒரு வாரம் சென்றிருக்க... இன்று அவளை வீட்டுக்குச் செல்லலாம் என்றிருந்தார் வரதராஜன். இந்த ஏழு நாட்களில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது. அதில் மயூராவும், வெற்றியும் அறிந்தது ஒரு சிலதே.

முதலில், ராஜி நடந்தவைகளைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

டெல்லி விமான நிலையத்தில் இறங்கியதும் செல்வமணியின் கைபேசி உயிர்ப்பிக்கப்பட்டதும்... அவரின் பி.ஏ. அழைத்திருந்து, அன்று நடந்தவைகளை ஜெயக்குமார் வெற்றியிடம் பிடிபட்டதிலிருந்து மயூரா மருத்துவ மனையில் சேர்த்திருப்பதுவரை ஒன்று விடாமல் ஒப்பித்து விட்டார்.

அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த செல்வமணிக்கு முகம் வெவ்வேறு உணர்ச்சிகளைக் காட்ட அமைதியாக அனைத்தையும் கேட்டுவிட்டு, கைபேசியை அணைத்தவரின் உதடுகள், "மயூ..." என்ற வார்த்தைகளை உச்சரிக்காமல் வெறும் அசைவை மட்டுமே வெளிப் படுத்தியது.

அருகிலிருந்த ராஜி, அவரின் முகத்திலிருந்த வேறுபாட்டை உணர்ந்து அவரைப் பற்றி உலுக்க... அவரோ கேட்ட செய்தியை ராஜியிடம் பகிர்ந்து கொள்ள வில்லை.

செல்வத்தின் முகத்தில் இருந்தது எதுவோ தவறாகத் தெரிய, ராஜிக்குச் சிறிது சந்தேகம் எழுந்தது. அழைத்தது யாரென்று அறிந்துதான் இருந்தார்.

அதற்குள் செல்வமணியைத் தேடி அவர் கட்சி யாட்கள் அழைத்துச் செல்ல வந்திருக்க... செல்வத்தைச் சுற்றிக் கூட்டம் சேர்ந்ததில் ராஜி அவரை விட்டு நகர்ந்து பி.ஏ.விற்கு அழைத்ததில் விஷயம் முழுவதையும் அறிந்தவர் அப்படியே அதிர்ந்தார்.

கேட்ட செய்தி இடியென நெஞ்சைத் தகர்க்க... பெற்ற மகளின் வலியை உணர்ந்த அந்தத் தாய், அவளை உடனே காண வேண்டும் என மனம் பதற வேகமாகச் செல்வத்தைத் தேடி விரைந்தார். கூட்டத்தை விலக்கி, செல்வத்தைத் தனியே அழைத்து வந்தவர் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வர, தொண்டை மரத்துக் குரல் அடைத்ததைச் சரி செய்து பேச முயன்றார்.

மனைவியின் கண்களில் தெரிந்த வலி ராஜி நடந்தவைகளை அறிந்திருக்கிறாள் என்று யூகித்த செல்வமணி, மௌனம் காக்க,

முயன்று கொண்டு வந்த குரலில் ராஜி, "என்னங்க... நம்ம பொண்ணு... மயூவுக்கு..." என்பதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை.

"என்னங்க... நம்ம பொண்ணுக்கு... அவளை நான் உடனே பார்க்கணும். வாங்க சென்னைக்குத் திரும்பப் போகலாம்..." என அழைக்க,

அவரோ அவர் சொல்ல வருவதைப் புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க,

"வாங்க... உடனே திரும்பப் போகலாம்..." என அவர் கைப்பற்றி இழுக்க, செல்வமணி ஆணியடித்தது போல் அப்படியே நின்று கொண்டிருப்பது ராஜிக்குத் திகைப்பைக் கொடுத்தது.

"என்னங்க?" என ராஜி, புரியாமல் பார்க்க...

அவர் அப்போதும் பதில் சொல்லாமல் நின்று கொண்டிருக்க... இத்தனை நாட்கள் ஒரு மனைவியாக செல்வத்தின் உணர்வுக்கு மதிப்புக் கொடுத்திருந்த ராஜி, இன்று தன் மகளுக்காகக் கணவனை எதிர்த்தார். ஒரு தாயாக வெடித்தார்.

"சே... பொண்ணு அங்க பாதி உயிரா இருக்கா. இப்பவும் உங்களுக்கு உங்க கௌரவம்தான் முக்கியமா! அவள் செய்ததிலும் தப்பு இருக்கு என்பதற்காகத்தான் இத்தனை நாளா நானும் பேசாமல் இருந்தேன்.

"ஆனால் இப்போ நீங்க... நீங்கள் நல்லவன்னு நம்பி என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க நினைச்சவன்தான் இன்னைக்கு என் பொண்ணு இந்த நிலையில் இருக்கக் காரணம்... இப்போக் கூட உங்க மனசு மாறலைன்னா... சே... உங்களை எல்லாம் மனுசன்னு சொல்லிக்கவே வெட்கமா இருக்கு. நீங்க வந்தாலும், வரலை என்றாலும் நான் போய் என் பெண்ணைப் பார்க்கத்தான் போறேன்..." என்றவர், ஒரு

நிமிடம் கூடத் தாமதிக்காமல் அதே விமான நிலையத்தில் சென்னைக்கு டிக்கெட் எடுத்து அடுத்த விமானத்தில் கிளம்பி விட்டார்.

இத்தனை நடந்தும் செல்வம் ராஜியைத் தடுக்கவும் இல்லை. அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவுமில்லை.

"கார் எடுத்துட்டு வந்துட்டேன் ஆன்ட்டி... எல்லாம் ரெடியா?" என்றவாறு அங்கு வந்தான் அர்ஜுன்.

"ரெடிப்பா... போகலாம்..." என்ற ராஜி மயூராவைத் தாங்கிப் பிடிக்கச் செல்ல... அவரை நகர்த்தி வெற்றி, மயூவின் தோள் பற்றி நடத்திக் கூட்டிச் சென்றான்.

ராஜிக்கு அடிபட்டுப் படுத்துக் கிடந்த மயூராவை விடவும் அவளைக் கண் போல் பாவிக்கும் வெற்றியைக் கண்டால்தான் மிகவும் வருத்தமாக இருந்தது. அன்று தன் மகளைக் கண்ட அந்த தினம் இன்னமும் அவர் நினைவலையில் இருந்தது.

அன்று அதிகாலையிலேயே மருத்துவமனை வந்திருந்த ராஜி, மயூரா அனுமதிக்கப்பட்டிருக்கும் அறையை விசாரித்து வந்தவர், அங்கு மயூராவும், வெற்றியும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டவருக்கு அப்படி ஒரு ஆச்சரியம். தான் பெற்ற மகளா இப்படி ஒரு மனவுறுதியுடன் பேசுவது என சிலாகித்துக் கொண்டார். ஆனாலும் ஒரு பெண்ணாக அவளின் வலியை அறிந்தவர்... அவளருகில் சென்று கட்டிக் கொண்டார்.

அந்தத் தினம் முதல் வெற்றி அவளை விட்டு ஒரு நொடி கூட நகர்ந்ததில்லை. வெற்றியை இதுவரையிலும்

கம்பீரமான ஆண் மகனாகப் பார்த்தவர்... இன்று ஏழு நாட்கள் வளர்ந்த தாடியுடனும், கண்களில் உயிர்ப்பின்றி இருப்பதைப் பார்த்தவருக்கு எப்படிச் சொல்லி அவனைத் தேற்றுவது என்று வழி அறியவில்லை.

நால்வரும் கிளம்பி வெற்றியின் வீட்டிற்குச் சென்றனர்.

மயூராவை வெற்றி தங்கள் அறைக்குள் அழைத்துச் செல்ல, அறையில் இருந்தவற்றைப் பார்த்த வெற்றிக்குத் தான் காயமடைந்த புண்ணை மேலும் மேலும் கிளறுவது போல் மனதில் அப்படி ஒரு வலி. தங்களுக்குக் குழந்தை பிறக்கப் போகிறதென்று அறை முழுவதும் குழந்தைகள் படத்தை ஒட்டியிருந்தனர்.

அதற்கு மேலாக மயூரா போட்டோஷாப் என்கிற மென்பொருளை உபயோகித்து, தானும் மயூராவும் சேர்ந்திருக்கும் படத்தில் தங்கள் கையில் ஒரு குழந்தை இருப்பது போல் செய்திருந்ததை வெற்றி பெரியதாக லாமினேட் செய்து, தங்களது படுக்கைக்கு எதிரில் மாட்டியிருந்தான்.

வெற்றி இந்த ஏழு நாட்களில் எத்தனையோ மாறியிருந்தான்.

மயூரா சொன்னது போல் நடந்தவைகளை நினைத்து மருகிக் கொண்டிருக்காமல், நடப்பவை களைப் பற்றிச் சிந்திப்போம் என பழையதை மறந்து, மனதிலிருந்து துன்பத்தை ஒதுக்க முயற்சி செய்தான். அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றான்.

அவளைப் படுக்கையில் படுக்க வைத்தவன், அடிபட்டிருந்த கைக்கு ஒரு தலையணையை அணை வாகக் கொடுத்து விட்டு, "ஏதாவது சாப்பிடக் கொண்டு வரட்டா அம்மு?" என்றாள்.

அவள் வேண்டாமென மறுக்கும்போதே அர்ஜுன் கையில் சூப்புடன் வந்திருந்தான்.

"இந்தாங்க அண்ணா... ஆன்ட்டி கொடுத்து விட்டாங்க!" என வெற்றியிடம் கொடுத்தான்.

இது இந்த ஏழு நாட்களாக நடப்பதுதான். மயூராவின் வலது கை அடிபட்டிருப்பதால் வெற்றிதான் அவளுக்குத் தண்ணி முதல் உணவு வரை ஊட்டி விடுவான். ராஜி கூட ஒன்றிரண்டு முறைதான் மயூராவைக் கவனித்திருந்தார்.

அவளுக்குச் சூப்பைக் கொடுத்து விட்டு அவளைப் படுக்க வைத்தவனை, "மச்சான்... இன்னும் எத்தனை நாட்களுக்கு எனக்குச் சேவை செய்யப் போறீங்க. வேலைக்குப் போகலையா?" என மயூரா கேட்டதும்தான், வெற்றிக்கு வேலையைப் பற்றிய சிந்தனையே எழுந்தது.

அந்த நொடிதான் அவனுக்கு நடந்தவைகளும், அதற்குக் காரணமானவர்களைப் பற்றிய சிந்தனையும் எழுந்தது. இத்தனை நாட்கள் அவனின் மனமும் மூளையும் மனைவியைப் பற்றியே சிந்தித்துக் கொண் டிருக்க... இன்று அவள் கேட்டதும், அவனுக்குள் கோபத்தின் வீரியம் அதிகமாக... அவனின் கை முஷ்டி இறுக்கமாவதை வைத்து மயூரா அறிந்து கொண்டாள்.

அவனின் யோசனையை ஒரு அளவிற்கு யூகித்த மயூரா இறுகிய அவன் கையைத் தனது இடது கையால் பற்றியவள், "மச்சான்... கோபத்தில் எந்த ஒரு தவறான செயலையும் செஞ்சுடாதீங்க. எல்லாருக்கும் அவங்கவங்க செய்த பாவத்திற்கு நிச்சயமாக அந்தக் கடவுள் தண்டனை கொடுப்பார்..." என வெற்றியின் கோபத்தின் அளவைக் குறைக்க அவள் சொன்ன சமாதானங்கள் ஏதும் அவன் கருத்தில் பதியவில்லை.

அவன் கையைப் பற்றியிருந்த அவள் கையை எடுத்தவன், "நீ தூங்கி ரெஸ்ட் எடு..." என்றவன், குளியலறைக்குள் சென்று சவரம் செய்து பத்து நிமிடத்தில் வெளியே வந்தவன், அலமாரியில் இருந்த அவனின் காக்கி உடையை அணிந்ததும், இத்தனை நாட்கள் வருத்தத்தால் மறைந்த அவன் கம்பீரம் மீண்டும் வெளிப்பட்டது.

அவனின் செயல்களைப் படுக்கையில் படுத்தவாறு பார்த்துக் கொண்டிருந்த மயூராவிற்கு ஒரு பக்கம் அவன் பழையபடி நடப்புக்கு வந்தது மகிழ்ச்சி என்றால் மறுபக்கம் அவன் கோபத்தில் எதையேனும் செய்து விடுவானோ என்ற வருத்தமும் எழுந்தது.

கிளம்பித் தயாரான வெற்றி அவளின் வருத்தத்தைப் போக்கும் விதமாக அவளருகில் வந்து அவள் நெற்றியில் இதழ் ஒற்றி நகர்ந்தவன், "கவலை வேண்டாம்டா. நான் எதுவும் தவறு செய்ய மாட்டேன். ஆனால் தப்பு செய்தவருக்குக் கடவுள் தண்டனை

கொடுக்கும்வரை என்னால் பொறுத்திருக்க முடியாது. நீ எதைப் பற்றியும் சிந்திக்காமல் நல்லாத் தூங்கி ரெஸ்ட் எடு. நான் போயிட்டு சீக்கிரமே வர்றேன்..." என்று கம்பீரக் குரலில் உச்சரித்தவன்... அதே நடையுடன் சென்றான், அவனுக்குக் காத்திருக்கும் செய்தியை அறியாமல்...!

வீர நடையிட்டுச் செல்லும் வெற்றியை ஹாலில் இருந்த ராஜியும் அர்ஜுனும் பார்த்து அமர்ந்திருக்க... அவனின் வேகம் அவர்களையும் ஆச்சரியம் அடையச் செய்தது.

அவன் சென்றதும், சிறிது நேரத்தில் அர்ஜுனும் சென்றுவிட, ராஜி வீட்டு வேலைகளை முடித்து விட்டு மகளைக் காணச் செல்ல...

அவளோ மதிய உணவை முடித்துக் கொண்டு மாத்திரையின் உதவியோடு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

அன்று பிரதோஷம் என்பதால் அவள் கண் விழிப்பதற்குள் கோவிலுக்குச் சென்று வரலாம் என நினைத்தவர் உடனே கிளம்பி விட்டார்.

உறக்கத்திலிருந்து விழித்த மயூராவிற்கு வீட்டின் அமைதி யாரும் இல்லை என்றறிவிக்க... மெல்லப் படுக்கையிலிருந்து எழுந்தவள், குளியலறை சென்று விட்டு வந்து படுக்கையில் அமர்ந்தவள்... மெல்ல அந்த அறையைச் சுற்றிப் பார்க்க தன் எதிரே அவள் செய்த படம் கண்ணில் பட, அதை நோக்கி மெல்ல அடி எடுத்து வைத்தாள்.

அதை நெருங்க நெருங்க... அவள் இத்தனை நாட்கள் கணவனுக்காகத் தன் வலியை மறைத்தது அனைத்தும் வெளிவரத் துடித்தது. அந்தப் படம் செய்த அன்றைய நாள் அவளுக்கு நினைவு வர, அந்த நினைவு அன்று கொடுத்த மகிழ்ச்சியின் அளவை விட இன்று துன்பத்தைக் கொடுத்தது.

அன்று வேலை முடிந்து வீட்டுக்கு வந்த வெற்றியின் பின்னால் வந்து அவன் உயரத்திற்கு எம்பி, அவன் கண்ணைத் தன் கையால் மறைத்தவளை, "ஹே... என்னடி பண்ற?" என்ற வெற்றியை,

"ஷ்... முன்னே நடங்க..." என மயூரா அவனுக்குக் கட்டளையிட, மனைவியின் கட்டளைக்கு அடிபணிந்து முன்னே நடந்தான்.

அவனைத் தங்கள் அறைக்குள் அழைத்துச் சென்றவள், கம்ப்யூட்டர் முன்னே அவனை நிற்க வைத்து, அவள் கைகளை எடுக்க...

தன் முன்னிருந்த திரையில் தெரிந்த படத்தை விழியகலாமல் அப்படியே பார்த்து நின்று கொண் டிருந்தான்.

அதில் அவனது இடது புறத்தில் மயூரா தன் நெஞ்சில் சாய்ந்திருக்க... அவனது வலக்கையில் மயூராவின் ஜாடையில் ஒரு பெண் குழந்தை அவன் கன்னத்தில் முத்தமிட்டிருக்குமாறு அவள் செய்த படத்தில் மெய்மறந்து நின்ற அத்தருணம்... அவள் நெஞ்சில் நீங்காது.

அப்படத்தின் அருகில் நெருங்கி, அதைத் தனது இடது கையால் தடவிப் பார்த்தவளுக்குத் தன் மனதில் ஏற்பட்ட காயம் ரணமாக வலிக்க...

அடக்கி வைத்த கண்ணீர் மடை திறந்த வெள்ளம் போல் உடைப்பெடுத்தது.

"அம்மாமாஆஆஆ...." எனத் தன் அடிவயிற் றிலிருந்து கதறியவாறு அப்படியே மடிந்து சரிந்தவள்... தன் வயிற்றில் கை வைத்து கண்ணீர் வடித்தாள்.

'தான் இழந்தது அவர்களின் ரத்தமல்லவா... தங்கள் காதலின் சான்றை எவனோ ஒருவனின் சுயநலத்திற்காக இழந்தது எவ்வளவு பெரிய கொடுமை...

தங்கள் வாழ்வின் ஆதாரமென நினைத்து ஒவ்வொரு நாளும் தாங்கள் வளர்த்த கனவு இன்று கனவாகவே போனதே...' எனத் தன் நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறினாள்.

அந்த நொடி தான் கணவனுக்காகச் சொன்ன சமாதானங்கள் ஏதும் அவள் கருத்தில் இல்லை.

அந்த நொடி அவள் ஒரு தாயாகத் தான் இழந்த பிள்ளைச் செல்வம் மட்டுமே நினைப்பில் இருக்க... அந்தச் செல்வம் இல்லாததை நினைத்து அழுதாள்.

தேற்றுவாரின்றி, "அம்மா... அம்மா..." என அழுதவளின் கண்ணீரைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் அப்படியே சுவரில் சாய்ந்து, கண் மூடியவளை, யாரோ

நெஞ்சில் சாய்ப்பதை உணர்ந்து, கண் திறந்தவள் முன்னே, அவள் கணவன், "மயூ..." எனக் கட்டிக் கொள்ள,

சாய்ந்து அழ தோள் கிடைத்ததில், அவனைக் கட்டிக் கொண்டு, "மச்சான்... மச்சான்..." என அவன் சட்டை நனையும் அளவிற்கு அழுது கரைந்தாள்.

அழுதவள் அப்படியே மயங்கிச் சரிய, முன்னைப் போல பதற்றம் அடையாமல் அவளைத் தூக்கிக் கட்டிலில் கிடத்திய வெற்றி, அருகில் இருந்த தண்ணீர் கோப்பை யிலிருந்து தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் அடித் ததும், மயூரா விழித்தாள்.

மனதின் உள்ளே புதைந்த சோகத்தை வாய் விட்டு அழுது தீர்த்து விடு, என பெரியவர்கள் சொன்னது எவ்வளவு பெரிய உண்மை.

இத்தனை நாள் கணவனுக்காகத் தன்னுள் புதைத்த சோகத்தை இன்று தனிமை உணர்த்த, முடிந்தவரை வாய் விட்டு அழுது தீர்த்தாள்.

விழித்ததும் வெற்றி, தன்னைப் பார்த்துக் கொண் டிருப்பது புரிய... கண்ணைத் துடைத்துக் கொண்டு தன் அழுகையைக் கட்டுப்படுத்தித் தலையைக் குனிந்தாள்.

அந்த நேரத்திலும் அவள் செயல்கள் தனக்காக அவள் உணர்வை மறைக்கும் அவள் காதல் அவனை நெகிழச் செய்ய... அவள் அருகில் அமர்ந்து கொண்டு, அவள் கையைப் பற்றியவன், "அம்மு... அழுது தீர்த்து

விடு. எனக்காக உன் சோகத்தை ஏன்ம்மா மறைச்சுக் கஷ்டப்படுற... அழும்மா... அழுது தீர்த்துடு..." என அவளை உந்த,

"ம்ஹூம்ம்..." எனத் தலையை மறுப்பாக அசைத்துக் கண்ணீரை இடது கையால் துடைத்தாள்.

"ம்ம்... இனி நம்ம அழுதது போதும் குட்டிம்மா. அந்தக் கடவுளுக்கு நமது கண்ணீர் சென்றடைந்தது போலும். அதுதான் அவரவர் செய்த பாவத்திற்கான தண்டனையை உடனுக்குடன் கொடுத்து விட்டார்... அதுவும் உன் அப்பாவின் வழியாக..." என்றதும், மயூரா ஆச்சரியமாக வெற்றியைப் பார்த்தாள்.

28

அன்று தன் செயலாளர் சொன்ன செய்தியைக் கேட்ட செல்வமணி, தன் மகளை இந்த நிலைக்குக் கொண்டு வந்த அந்த ஜெயக்குமாரின் மேல் கொலை வெறியில் இருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். என்னதான் அவள்மீது கோபம் என்றாலும் பெற்ற மகளின் நிலையைக் கேள்விப்பட்டதும், எந்தத் தந்தைதான் பொறுத்துக் கொள்வார்?

தன்னை நம்ப வைத்து, தன் மூலமாக ஆதாயம் கண்ட அந்த ஜெயக்குமார் இன்று தான் பெற்று, கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த மகளை இப்படி ஒரு நிலையில் தள்ளிய அவனை ஏதேனும் செய்தேயாக

வேண்டுமென்று உள்ளுக்குள் கனன்று கொண்டிருக்க... அந்த நேரத்தில் ராஜி வந்து அழைத்தது, அவருக்குத் தன்னுள் மேலும் மேலும் ஜெயக்குமாரின் மேல் வன்மம் பிறக்கச் செய்தது.

மேலும் ராஜி, தான் செய்யவிருந்த முட்டாள் தனத்தைச் சுட்டிக் காட்டியது அவருக்குள் ஒரு குற்ற வுணர்வை வர வைக்க... அந்த உணர்வும் அவன் மேல் கோபமாக மாறியது.

தான் ஒரு அமைச்சராக இருந்து என்ன பயன்? இத்தனை வருட அனுபவத்தில் நல்லவன் யார், கெட்டவன் யார் என்று பிரித்தறியத் தெரியாத தன் முட்டாள் தனத்தை எண்ணி நொந்தார்.

மேலும், தன்னிடம் தன் மகளுக்காக எத்தனை எத்தனை முறை சமாதானம் செய்ய வந்த வெற்றியை அவமதித்தது... இனி எப்படித் தான் வெற்றியின் முகம் விழிப்பது என்ற எண்ணம் என அனைத்தும் அந்த நொடியில் செல்வமணியைத் தாக்க... அவர் மிகுந்த குற்றவுணர்வில் ஆழ்ந்தார்.

தங்கள் குடும்பத்தின் அமைதியையும், நிம்மதியையும் குலைத்த அந்த ஜெயக்குமாரை ஏதாவது செய்து விட்டுத்தான் தன் மகளைக் காண வேண்டுமென்று அந்த நிலையில் தனக்குள் சபதம் எடுத்துக் கொண்ட செல்வமணி ராஜி வந்து அழைத்தபோது இந்த யோசனையில்தான் இருந்தார்.

ராஜி, தன்னை விட்டுச் சென்றதும், அடுத்த விமானத்தில் சென்னை வந்தடைந்தவர்... நேராகச் சென்றது வரதராஜனைப் பார்க்க. அவரிடம் சென்று, தன் மகளின் நிலையையும், அவளை விட மோசமான நிலையில் இருந்த வெற்றியின் துன்பமும் அறிந்தபின் அவர் கண்களைத் தாண்டி நெஞ்சில் கண்ணீர் வடிந்தது.

அவளுக்கு நன்கு சிகிச்சை அளிக்குமாறு அறிவுறுத்திவிட்டு வீட்டுக்குச் சென்றவர்... விடியும்வரை காத்திருந்தார்.

விடிந்த வேளை... வேகமாகச் செயலாற்றத் துவங்கினார். முதலில் காவல்துறை மேலாளருக்கும், எஸ்.பி. சந்திரசேகரையும் அழைத்து ஜெயக்குமாரின் வழக்கைக் கேட்டறிந்தவர், பின் தன் மகளின் பெயர் வெளிவராமல் இருக்குமாறு யோசனை செய்தார். யோசனையின் முடிவில் நவீனும் ஜெயக்குமாரின் இந்தத் தொழிலுக்கும், அவன் செய்த கொலைகளுக்கும் உடந்தை என்று பாஸ்கர் அளித்த தகவலின் பெயரில் நவீனையும் கைது செய்ய வைத்தார்.

அடுத்து வந்த நாட்களில் ஜெயக்குமாருக்கு எதிராக நிறையச் சாட்சியங்களும், தடயங்களும் இருக்கவே கோர்ட் அவரையும், அவர் மகனையும் ரிமாண்டில் வைக்குமாறும், தீர்ப்பு அடுத்த பதினைந்து நாட்களில் வழங்கப் படுவதாகவும் இருந்தது.

அதுவும் செல்வமணிக்குப் போதாமல், அடுத்து வருமான வரித் துறைக்குத் தகவல் கொடுத்தவர்,

ஜெயக்குமாரின் கணக்கில் வராத பல சொத்துக்களை காட்டிக் கொடுத்தார். அவரின் மில் மட்டும் அவர் மனைவி சுஜாதாவின் பெயரில் இருக்க அது மட்டும் தப்பித்தது.

நவீன் கட்டிக் கொண்டிருந்த அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குத் தான் அளித்த அனுமதியை ரத்து செய்து, அது அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் என்று அதை உடனே இடிக்கச் செய்தார்.

இவை அனைத்தும் மயூரா மருத்துவமனையில் இருந்த இந்த ஒரு வாரத்தில் நடந்தது. இவை அனைத்தும் ஒன்று விடாமல் ஒப்பித்த வெற்றியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த மயூராவிற்கு இது பெரும் ஆச்சரியமாக இருந்தது.

"அப்பா இவ்ளோ செஞ்சிருக்காரா மச்சான்...?" என அவள் கேள்வியாகக் கேட்க,

"ஆமா, அம்மு. இதையெல்லாம் செஞ்சது உங்கப்பாதான். என்னதான் உன் அப்பா அவங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தாலும், உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய அவங்களை என்னால் எதுவும் செய்ய முடியலையே..." என்ற அவன் குரலில் அப்படி ஒரு கோபம்.

அவன் கையைப் பிடித்த மயூரா, "வேண்டாம் மச்சான்... விடுங்க. போதும். இதுவே அவங்க செஞ்ச தப்புக்குப் பெரிய தண்டனையாக் கிடைக்கும்..." என அவனைச் சமாதானப்படுத்த முயல,

"மயூ கண்ணு..." என்ற தீனமான குரல் அவர்கள் அறைவாயிலில் கேட்க, இருவரும் திரும்பிப் பார்த்தபோது, அங்கு ராஜியுடன் நின்று கொண்டிருந்த செல்வமணியைக் கண்டவர்களுக்கு அப்படி ஒரு ஆச்சரியம்.

திகைப்பிலிருந்து முதலில் வெளிவந்த வெற்றி, செல்வமணியை வரவேற்கும் விதமாக, "வா... வாங்க..." என அழைத்தபோது அவன் குரல் சற்றே தடுமாறியதை செல்வம் உணர்ந்தார்.

'ஆனால், அவனிடம் தான் கொட்டிய வார்த்தைகள் அள்ளக்கூடிய வார்த்தைகளா... அதை அவன் மன்னிப் பானா?' என்ற குற்றவுணர்ச்சி அவரைக் குடைய அவனை முகம் நிமிர்ந்து பார்க்க முடியாமல் நின்றிருந்தார்.

அவரின் உணர்வுகளை ஒரு அளவிற்கு யூகித்த வெற்றி, "பேசிட்டு இருங்க. இதோ வர்றேன்..." என அனைவருக்கும் பொதுவாக உரைத்தவாறு அங்கிருந்து நகர,

கணவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த மயூரா, "மச்சான்..." என்றழைக்க,

அவன் நின்றவாக்கிலே திரும்பி அவளைப் பார்க்க, "எங்க போறீங்க?" என அவள் அழுத்தமாகக் கேட்க, "நீங்க பேசிட்டு இருங்கம்மா... எனக்கு ஒரு சின்ன வேலையிருக்கு..." என அவன் மீண்டும் நகர்ந்து போக,

"இத்தனை நேரமில்லாத வேலை இப்போ வந்துடுச்சா... நீங்க ஏன் யாருக்காகவோ நம்ம வீட்டில்

இருந்து ஓடி ஒளியணும்?" என அவள் செல்வமணியைப் பார்த்துக் கேட்க...

"அம்மு... என்ன பேசறனு தெரிஞ்சுதான் பேச றியா..." என இப்போது வெற்றி அவளிடம் அதட்டல் போட...

"எல்லாம் தெரிஞ்சுதான் பேசுறாங்க..." என அவள் மீண்டும் செல்வமணியை முறைத்துக் கொண்டிருக்க,

"மயூ..." என்று ஆரம்பித்தவனைத் தடுத்து,

"விடுங்க மாப்பிள்ளை. என் பொண்ணு என்னைத் தானே பேசுறா. நான் உங்களைப் பேசினதுக்கு எனக்கு இது தேவைதான். நீங்க மயூ மேல் வச்சிருந்த அன்பை நான் தப்பாப் புரிஞ்சுகிட்டேன். மயூவை என்னிடமிருந்து பிரிச்சுட்டீங்கனு எனக்குள்ள ஒரு குருட்டுத்தனமான எண்ணத்தில் உங்களைத் தகாத வார்த்தையில் பேசி உங்களை ரொம்பவும் புண்படுத்திட்டேன்.

"அதுக்கு மன்னிப்பைத் தவிர உங்களிடம் வேற என்ன கேட்பது என்று தெரியலை. தயவுசெஞ்சு என்னை மன்னிச்சுடுங்க..." என அவர் வெற்றியின் புறம் திரும்பி, இரு கை உயர்த்தி மன்னிப்பை வேண்ட,

இத்தனை நேரம் அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த வெற்றி, அவர் கைகூப்பவும், வேகமாக அவர் அருகில் வந்து கை பிடித்துக் கொண்டு, "மன்னிப் பெல்லாம் வேண்டாங்க. நாங்க செஞ்சதும் தப்புதான்.

எங்க காதல் உங்களுக்கு மிகவும் மனக் கஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கும். அதுக்கு நாங்கதான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கணும்...” என அவன் தப்பு தங்கள் இருவரின் பெயரிலும் என்றது, மயூராவிற்கு மேலும் மேலும் அவனின் மேல் காதல் பெருகியது.

“உண்மையா... என் மனசிலிருந்து சொல்றேன் மாப்பிள்ளை. நானாப் பார்த்திருந்தாக் கூட மயூவிற்கு இப்படி ஒரு தங்கமான துணையைக் கொடுத்திருக்க முடியுமான்னு சந்தேகம்தான். பணத்தை மட்டுமே நினைத்துக் கொண்டு நான் ஒரு பெரிய தப்பு செய்ய இருந்தேன். அந்தக் கடவுள்தான் உங்களை என் மகளுக்குத் துணையா அனுப்பியிருக்கார்...” என செல்வமணி, நெகிழ்ந்த குரலில் சொல்ல... அவள் குரலில் தெரிந்த வருத்தம் வெற்றியைத் தாக்கியது.

“நடந்ததைப் பற்றிப் பேசி இனி ஒன்றுமாகப் போறதில்லை. விடுங்க...” என அவன் ஒரே வார்த்தையில் அவர் வருத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க...

செல்வமணி வெற்றியிடமிருந்து தன் பார்வையை மயூராவின் மேல் பதித்தார்.

அவர் பார்வைக்கு முகம் திருப்பியவள், செல்வம் அவள் அருகில் வந்தவர், “மயூ கண்ணு... நீயும் என்னை மன்னிச்சிடுடா. நான் பேசினது தப்புதான். என்னிடம் ஒரே ஒரு முறை பேசுடா கண்ணு...” என மயூராவைச் சமாதானம் செய்ய... அவர் பேசியதற்கு ஏதும் அவள் பதில் பேசவில்லை.

அவள் தனக்காகத்தான் தன்னைப் பெற்ற தந்தையையே தவிர்க்கிறாள் என்று வெற்றிக்குப் புரிந்தாலும், ஒருவர் தன் தப்பை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு வரும் சமயம், அவரின் உணர்வை மதிக்காமல் அவமதிப்பது நல்லதல்ல என நினைத்த வெற்றி, “அம்மு...” என,

அவள் அழைத்தவனைப் பார்த்தவளுக்கு அவன் கண்களில் கண்டிப்பு தெரிய, அதை உணர்ந்து கொண்டவள், செல்வமணியிடம், “நானும்தான் தப்பு செய்தேன். ஆனால் நான் செய்த தப்பிற்கு நீங்க அவரைத் தூற்றியதுதான் எனக்குக் கோபம்... இப்போ சொல்றேன் அப்பா... எனக்கு உங்களை விட, என்னைப் பெற்ற அம்மாவை விட அவர்தான் முக்கியம்... நீங்க பேசியது அதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும்...” என அவள் தன்னிலையிலிருந்து விட்டுக் கீழே வர,

இதைக் கேட்ட வெற்றிக்குத் தன் மேல் அவள் வைத்திருக்கும் அன்பைக் கண்டு மிகவும் பெருமையாக இருந்ததென்றால் மகளைப் பெற்ற அந்தத் தந்தைக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

பெற்றவர்களை விட ஒரு பெண், தன் கணவன்தான் தனக்கு முக்கியம் என்கிறாள் என்றால் எப்படிப்பட்ட சந்தோஷமான வாழ்க்கையை அவள் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். அதை அவர்தான் தன் கண் முன்னே காண்கிறாரே... ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல், மாறி மாறி மற்றவர்களுக்காகப்

பேசியது அவர்களின் காதலின் அளவைக் கணக்கிட முடியாதளவிற்குத் தெரிந்தது.

"எனக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்குடா... நீங்க ஒருவர் மேல ஒருவர் வெச்சிருக்கிற அன்பு என்னை நெகிழ வைக்குது. நீங்க ரெண்டு பேரும் நூறு வருசம் சந்தோஷமா வாழணும்மா... அதுக்கு எந்தத் தடை வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்..." என அவர் உணர்ச்சி வசப்பட,

அத்தனை நேரம் ஒரு பார்வையாளராக இவர்கள் உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த ராஜி, கணவன் தன் வசமிழப்பதை உணர்ந்து அவர் அருகில் வந்து தோளைத் தொட, தொட்ட அவர் கையைப் பற்றிய செல்வம், "ராஜி... நீயும் என்னை மன்னிச்சிடுடா. என்னோட குருட்டுத்தனத்தால் உன்னையும் படுத்தி எடுத்துட்டேன். அந்தத் துரோகி மேல நான் கொண்ட நம்பிக்கை என் கண்ணை மறைச்சிடுச்சு. அவன் அந்த அளவுக்கு என்னை நம்ப வச்சான்.

"அய்யோ... எவ்வளவு பெரிய தப்பு செய்ய இருந்தேன்..." என அவர் செய்ய இருந்த செயலின் தாக்கத்தில் அவர் உடல் ஒரு நிமிடம் இறுக,

அதை உணர்ந்து கொண்ட ராஜி, "விடுங்க. நடந்ததை மறந்துடுங்க. இனியாவது, இந்த அரசியல் எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு மகள், மருமகன், பேரன் பேத்தியோட... வாழ்க்கையை அனுபவிச்சு வாழுங்க..." என்றாள்.

அத்தனை நேரம் அதை மறந்திருந்த மயூரா, அன்னை பேரன், பேத்தி என்றதும் அவள் கண்களில் கண்ணீர் சுரக்க... அதை மற்றவர்களிடமிருந்து மறைக்க... அவள் பட்ட துன்பத்தைக் கண்டு கொண்டு அவள் கணவன் அவள் அருகில் வந்து அவளைத் தன் வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"அம்மு, நமக்கு இதோட வாழ்க்கை முடிஞ்சு போகலை. இன்னும் நாம் வாழ வேண்டிய நாட்கள் எத்தனையோ இருக்கு..." என்றவன், அவள் அருகில் குனிந்து, அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில், "நீ மட்டும் பாரேன். அடுத்த வருஷமே நமக்கொரு குட்டி பிறக்கப் போறான். அதுக்கு இப்போ இருந்தே நான் டே அண்ட் நைட் டூட்டி பார்க்க ஆரம்பிச்சுடறேன். கை மட்டும் சரியாகட்டும். அப்புறம் பாரு அய்யாவோட உழைப்பை..." என முதலில் அவள் சொன்ன வரிகளைத் திரும்பப் படித்தவன், முடிவில் அவன் பாணியில் சொல்லி முடிக்க...

"சீ... போங்க மச்சான்... அப்பா, அம்மா இருக்கும் போது பேச்சைப் பாருங்க..." என அவள் துன்பம் மறந்து செல்லமாகச் சிணுங்க, சிறுசுகளின் சரசத்தைக் கண்டு கொண்ட அந்தப் பெருசுகள் மனது இன்பத்தில் தத்தளிக்க, அந்தத் தருணத்தை மேலும் கலகலப்பாக அங்கு அர்ஜுனும், பாஸ்கரனும் வந்து சேர்ந்தனர்.

"ஹே... இங்க என்ன நடக்குது... அந்தப் பக்கம் பெருசுகளின் ரொமான்ஸ் என்றால் இந்தப் பக்கம் சிறுசுகளின் ரொமான்சா... இதை எல்லாம் பார்த்தா இந்தச்

சின்னப் பையனின் சின்ன ஹார்ட் தடுமாறுது... சேச்சே... என்னை மாதிரி இளம் வாலிபர்களின் மனசைக் கெடுக்கிறதே நீங்கதான்ப்பா..." என அர்ஜுன் அங்கு ஆஜராக,

"அடப் பாவி... நீ சின்னப் பையனா... வரும்போது தானேடா ஒரு பெண்ணைப் பார்த்து, 'பாஸ், அங்க பாருங்க. சூப்பர் ஃபிகர்!' என்று கை காட்டின..." என அர்ஜுனை பாஸ்கரன் சபையில் போட்டுக் கொடுக்க,

"அர்ஜுன்... நீ இந்த வேலையெல்லாம் பண்றியா?" என ராஜி அதிர்ச்சியாகக் கேட்க,

"ஹய்யோ அம்மா... உங்களுக்கு இவனைப் பற்றி முழுசாத் தெரியாது. இவன் உங்க முன்னாடி போடறது எல்லாம் வேஷம். ஒரு நாள் காலேஜில்..." என அவள் ஆரம்பிக்க...

"மயூயூயூ.... நோ... நம் காலேஜில் நடந்த எந்த விஷயத்தையும் வெளியே சொல்றது இல்லைனு ஒரு ஜென்டில் வுமன் அக்ரீமென்ட் போட்டிருக்கோம். மறந் துட்டியா!" என தன் வண்டவாளத்தைத் தண்டவாளத்தில் ஏற்றும் அவள் முயற்சியைத் தடுக்க,

"நோ... நோ. அந்த அக்ரீமெண்ட்டின் வேலிடிட்டி முடிஞ்சுருச்சு. அம்மா, நீங்க கேளுங்க..." என மயூ ஆரம்பிக்க,

வேகமாக அவள் அருகில் வந்து அவள் வாயை அர்ஜுன் அடைக்க,

அடைத்த கையை அவள் கடித்து வைக்க, "ஹே... டாகி. வலிக்குதுடி..." என வலியில் கத்தியவனை,

"என்னது... டாகியா! நீ அடங்க மாட்ட. அம்மா ஒரு நாள் நம்ம வீட்டுக்கு வந்தா இல்ல காயு... அவளை..." என இழுத்தவளை,

"மயூ.... மயூ சொல்லாதே. உனக்கு நான் ஒரு பெரிய போர்ன்வில்லி சாக்கி வாங்கித் தர்றேன்..." எனப் பேரம் பேசியவனிடம்,

"போடா. அதை விடப் பெரிய சாக்கி என் மச்சான் வாங்கித் தருவார்..." என நொடித்து விட்டு, அன்னையிடம் கதையைத் தொடர்ந்த மயூவின், பழைய துள்ளலைக் கண்டு கொண்டு அனைவரின் மனதும் நிறைந்திருக்க... அதே நிறைவுடன் வெற்றி பாஸ்கரை அவ்விடமிருந்து தனியே அழைத்துச் சென்றான்.

வெளியே தோட்டத்திற்கு வந்த இருவரும், சில நிமிடங்கள் நடந்த நிகழ்வுகளின் தாக்கத்தில் அமைதி காக்க... அந்த அமைதியைத் தடுத்து வெற்றியே முதலில் பேசினான்.

"பாஸ்கரா..." என ஆரம்பித்தவனை, கை உயர்த்தித் தடுத்தவன்,

"ப்ளீஸ் வெற்றி... தேங்க்ஸ் என்று ஒன்றைச் சொல்லி என்னைப் பிரிச்சிடாதே. எனக்கு உன்னைப் பற்றியும் தெரியும். அதைவிட நீ மயூ மேல் வைத் திருக்கும் அன்பும் தெரியும். ட்ரெயினிங் பீரியடில் எப்படி

இருந்தவன்டா நீ... ஒரு ஆண் கூட உன் அருகில் நெருங்கும் முன் யோசிப்பான். நான் கூட முதலில் நினைச்சிருக்கேன். நீ என்ன மனுஷனா இல்லை... உணர்ச்சிகளற்ற இரும்பான்னு...

"அதுவும் உன் அன்னையின் மறைவிற்குப் பின், உன் முகத்தில் தெரிந்த அந்த வெறுமையும், வெறுப்பும்... நான் அதைக் கண்கூடப் பார்த்திருக்கேன்டா. அப்படிப்பட்ட உன்னை உன் கூட்டுக்குள்ளிருந்து கொண்டு வந்து, எப்பவும் அவளைச் சுற்றி சந்தோஷத்தை மட்டுமே சேர்த்து வைத்திருக்கிற மயூவை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய அவங்களை நான் எப்படிடா சும்மா விட முடியும்.

"உன்னோட ஃப்ரெண்ட் என்பதற்காக மட்டுமில்லாம உண்மையான பாசத்தை எனக்கும் காட்டிய மயூவைச் சம்மந்தமே இல்லாம தண்டிச்ச அவங்களை நாம தண்டிக்க வேண்டாமா?" என அவன் கேள்வியாக முடிக்க,

தன்னைப் பற்றி முழுதாக அறிந்து கொண்ட நண்பனின் உண்மையான அன்பில் நெகிழ்ந்த வெற்றி, பேச வார்த்தைகளற்று பாஸ்கரனை அணைத்துத் தன் உணர்ச்சியை வெளிப்படுத்தினான்.

"சரி சரி. வா. போதும். அங்கே அர்ஜுனும் மயூவும் என்ன செய்றாங்கனு பார்க்கலாம். அவங்க போடும் சண்டை ரொம்ப என்டர்டெயினிங்கா இருக்கு..." எனப் பேசியவாறு அவனை உள்ளே அழைத்து வந்த பாஸ்கரனின் முன்பு வந்து நின்ற அர்ஜுன்,

"என்னது... நான் டேமேஜ் ஆகிறது உங்களுக்கு என்டர்டெயினிங்கா இருக்கா..." எனக் கோபமாக ஆரம் பித்த அர்ஜுன், "ஆண்டவா, இந்த ஸ்மால் பாயை எல்லோரும் டாய் பாயாக்குறாங்களே!" என அவன் சொன்ன விதத்தில் அனைவரும் சிரித்து விட்டனர்.

மயூவின் மலர்ந்த முகத்தைக் கண்டு கொண்ட வெற்றியின் மனதில் தனக்கு ஒன்றுமே இல்லையென்று இருந்தவனுக்கு, ஒரு அழகான குடும்பத்தைக் கொடுத்தது மட்டுமில்லாமல், தன் வாழ்வில் சந்தோஷத்தை மட்டுமே பரிசளித்த மயூராவையே கண் இமைக்காமல் பார்த்திருந்தான்.

ஏன்றரை ஆண்டுகள் கழித்து...

"அம்மு... ப்ளீஸ்டி. நீ இல்லாம வீடே வீடா இல்ல. எப்போ வருவ? அட்லீஸ்ட் ஆருவையாவது என்னிடம் அனுப்பு..." என மயூராவின் ஏழு மாத மேடிட்ட வயிற்றில் தலை வைத்துப் படுத்திருந்த வெற்றி கெஞ்சிக் கொண்டிருக்க,

"நானா மச்சான் வரமாட்டேனு சொல்றேன். பாவம் மச்சான் அம்மா... ஆரு பிறந்தப்பவும் நீங்க என்னை அம்மாகிட்ட விடலை. இந்தப் பிரசவம் இங்கதான் நடக்கணும்னு அம்மா ஸ்ட்ரிக்ட் ஆர்டர் போட்டுட்டாங்க. அப்புறம் குட்டியை எப்படி மச்சான் நீங்க தனியாச் சமாளிப்பீங்க..." என அவன் அடர்ந்த சிகையை அளந்த வாறு அவனைக் கொஞ்சிக் கொண்டிருந்தாள் மயூரா.

வெற்றி அன்று சொன்னது போல் இரவு, பகல் தீயாக வேலை செய்த பலனால் அடுத்த வருடத்திலே ஆரு என்ற ஆராதனா இருவருக்கும் பரிசாகக் கிடைத்தாள்.

ஆரு உதித்த அந்த நொடி முதல் அவள் பிறந்த அந்த நொடிவரை அவளைக் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டான் என்பதைவிட, தன் நெஞ்சில் சுமந்தான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவன் வேலை, வீடு என்று அலைவதைக் கண்டு கொண்ட ராஜி அவளைத் தான் அழைத்துச் சென்று பார்த்துக் கொள்வதாகக் கூறியபோது, வேண்டாமென மறுத்து விட்டான். அவள் வீட்டில் அவளுக்கிருந்த வசதியை விட தன் வீட்டில் அவளை வசதியாக வைத்திருந்தான்.

ஆனால் மயூராவிற்கு இரண்டாவதாக குழந்தை உதித்திருப்பதை அறிந்து கொண்ட ராஜி, அன்றே நிபந்தனை விதித்து விட்டார். அதன்படி அவளின் ஏழாம் மாதம் வளைகாப்பு முடிந்ததும் மயூவை அவர்கள் வீட்டில் கூட்டி வந்து விட்டார்.

வெற்றிக்கு இப்பொழுது கமிஷனராகப் பதவி உயர்வு கிடைத்து திருப்பூருக்கு மாற்றலாகி இருந்தான். திருப்பூருக்கும் கோவைக்கும் ஒரு மணி நேரம் பயணம் என்பதால் தினமும் மாலை எவ்வளவு வேலையிருந்தாலும் முடித்து விட்டுத் தன் மனைவி, மகளைக் காண வந்து விடுவான். மகளின் மழலைப் பேச்சைக் கேட்காமலும், மனைவியின் மதி முகத்தைப் பார்க்காமல் அவனுக்கு இரவில் கண்கள் இரண்டும் உறங்காது.

ஆனால் இதுவரை ஒரு நாள் இரவு கூட மாமனார் வீட்டில் தங்கியதில்லை. இதைக் கண்டு கொண்டு கேட்ட ராஜிக்கும் செல்வத்திற்கும் சிரிப்பை மட்டுமே பதிலாகக் கொடுத்த வெற்றியால் மயூராவைச் சமாளிக்க முடியவில்லை.

அவள் அறியாதவனா வெற்றி... அன்று அந்த நாள் இரவு அனைவரும் நிறைந்த மனதுடன் உறங்கச் சென்றுவிட, இரவின் தனிமையில் மனைவியை நெஞ்சில் தாங்கியவனின் மார்பில் தன் அடிபட்டிருந்த வலது கை விரல்களால் கோலம் போட்ட மயூரா, "ஏன் மச்சான் இன்னமும் அம்மா, அப்பாவை நீங்க ஏத்துக்கலையா?" எனக் கேட்டவளை,

கேள்வியாகப் பார்த்தவன், "அப்படியெல்லாம் ஏதுமில்லடா அம்மு... ஏன்?"

"இல்ல... இந்த ஒரு நாளில் நீங்க அவங்களை ஒரு தடவை கூட அத்தை, மாமான்னு... உரிமையா கூப்பிடலை. மச்சான்... உங்களுக்குப் பிடிக்கலைன்னா எனக்கு இந்த உறவு வேண்டாம்..." என அவள் தீர்க்கமாகச் சொல்ல,

"ஹே பைத்தியக்காரி. அப்படி எல்லாம் இல்லடா. எனக்கு இந்த மாதிரி உறவெல்லாம் சொல்லிப் பழக்க மில்லை. அதான். இனிமேல் பாரு..." என அவன் பாதி உண்மையும் பொய்யுமாகச் சொல்ல...

அதைக் கண்டு கொண்ட அவள் அவனை முறைக்க...

"சரி சரி. முறைக்காதே. எப்படித்தான் எல்லாத் தையும் கண்டுபிடிப்பியோ..." தன்னைப் பற்றி அவள் சரியாகக் கணிப்பதை நினைத்துக் கொண்டான்.

"எனக்கு உங்கப்பா பேச்சு சில சமயம் வருத்தமாக இருக்கும்டா. எங்கே நான் உரிமையாகப் பேசினால் நான் அவர் சொத்துக்கு ஆசைப்படுகிறேன்னு நினைச்சுப் பாரோன்னுதான்..." என அவன் தயங்க,

"எனக்குப் புரியுது மச்சான். அப்பா கோபத்தில் அன்று பேசிட்டாரே தவிர, அந்த வார்த்தைகள் அவர் மனதிலிருந்து வந்திருக்காது. எனக்கு அவரைப் பற்றித் தெரியும். சரி பரவாயில்ல. உங்களுக்காத் தோணும் போது அவங்களை ஏத்துக்கிட்டாப் போதும்..." என அத்துடன் அப்பேச்சை முடிக்க... அந்தப் பேச்சில் ஒன்று அவனுக்கு உரைக்க...

"ஹே... ஒரு நிமிஷம் இரு. அப்போ உனக்கு உன் அப்பாவைப் பற்றித் தெரிஞ்சும்... எனக்காக அவரை வெறுத்திருக்கியா! ஏண்டி?" என,

அதற்கு அவள் புன்னகையே உதிர்த்தாள். அந்தப் புன்னகையில் ஆயிரம் அர்த்தங்கள் ஒளிந்திருந்தது.

அன்று அவர்களுக்குள் இருந்த அதே காதல் சிறிதும் குறையாமல் ஏன் அதைவிட அதிகமாக இன்றும், இருவரும் ஒருவரோடு ஒருவர் நேசத்துடன் வாழ்ந்து கொண்டிருக்க... அவர்களின் சந்தோஷத்தின் அச்சாரம் தன் பிஞ்சுப் பாதங்களைக் கொண்டு மயூராவின் அறைக்குள் நுழைந்தது.

மகளின் வருகையை உணர்ந்து மனைவியிட மிருந்து மகளிடம் தாவி, "ஆரு குட்டி..." எனத் தூக்கி தட்டாமாலை சுற்றினான்.

அவள் பின்னாலே ஓடி வந்த ராஜியின் கையில் வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு இருக்க... அவருக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க... "ஆரு... இன்னும் ஒரு வாய் கூட வைக்கலை. ஆ வெச்சுக்கோ தங்கம்..." அவளுக்கு ஊட்ட...

"போ ஆத்தா.... னக்கு வேதாம்..." எனப் பால் வண்ண இதழ்களில் மிச்சம் மீதியிருந்த சாதம் வெற்றியின் காக்கி உடையைக் கரையாக்க,

"முத்து... அப்பாவோட சட்டை எல்லாம் பண்ணாதே. ஒழுங்கா சாப்பிடு..." என மயூரா மகளிடம் அதட்டல் போட,

"அம்மு... பிள்ளையைத் திட்டாதே..." - மனைவி யிடம் சொல்லி விட்டு, "கொடுங்க அத்தை. நான் ஊட்டுறேன்..." என அந்தக் கிண்ணத்தை வாங்கி அவளைப் பால்கனிக்கு அழைத்துச் சென்று அவன் ஊட்டத் துவங்க... அத்தனை நேரம் பாட்டியிடம் அடம் பிடித்த அந்தச் சிறு வாண்டு, இப்போது தந்தையின் தோள்களில் வாகாகச் சாய்ந்து கொண்டு உணவுண்ண,

"உன் பொண்ணு உன்னை மாதிரியே இருக்கா... உனக்கும், உன் மகளுக்கும் சாப்பாடு ஊட்டுவதற்கே என் மருமகனுக்கு நான் தனியாச் சமைச்சுப் போடணும்..." என மகிழ்ச்சியாக அங்கலாய்த்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார் ராஜி.

அன்னையின் கிண்டலுக்கு முகம் சிவந்தவள்... அவர் சென்றதும், கணவன் அருகில் சென்று நிற்க, அன்னையைக் கண்டு கொண்ட மகவு, அவளின் இடுப்பிற்குத் தாவி, "ம்மா... அங்க பாது... டார்ஸ், அங்க பாது மூன்..." என வானத்தைக் காட்ட, மகளுக்கு ஊட்டிய அதே கையில் மனைவிக்கும் ஊட்ட... மகளும், மனைவியும் சண்டை போட, இருவரையும் சமாதானப் படுத்த முயன்று அது முடியாமல் வெற்றி தலையில் கை வைக்க...

அந்த அழகான குடும்பத்தின் சந்தோஷத்தைக் கண்டு அந்த நிலவு மகள் மேலும் ஒளியைப் பொழிந் தாள்.



திரும்பிலே ஒரு இதயம்!

வெண்ணிலா சந்திரா